26

திருத்தணிகைச்
சந்நிதிமுறை

26

உ

கடவுள் துணை.

திருத்தணிகைச்
சந்நிதி முறை.

தி. கந்தப்பதேசிகர்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

உ

கணபதி துணை.

தருமசத்திர

விளம்பரம்.

இதனால் சகலமான அச்சுக்கூடத்தலைவர்களுக்கும் புத்தகவியாபாரிகளுக்கும் தெரிவிக்கும் விண்ணப்பமாவது என்னவென்றால்,

இக்கலியுகத்திற்கு கண்கண்ட தெய்வமாகிய ஸ்ரீசிவசுப்பிரமணியக்கடவுள் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்குந்திருத்தணிகையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் அனேக மடாலயங்களும், சத்திரங்களுமிருப்பினும் அடியேனும் ஒரு சிறு சத்திரங்கட்ட அவாக்கொண்டமையால் அதற்குப்போதுமான வினியோகத்திற்குத்தக்க பொருட்பலமில்லாமையாலும் அவ்வளவும் யாசகஞ் செய்யலாமென்றால் திரேகசக்தியில்லாமையாலும் அப்படி யாசித்தாலும் மனமுருகி அறத்துணைவிரும்பாக் காலமாதலாலும் பகவான் தணிகாசலக்கடவுள் தோத்திரப்பாசுரங்களடங்கிய திருத்தணிகைச் சந்நிதிமுறையென்னு[illegible]க்தி வழியை உலகமெங்கும்பரவச்செய்து அதினால் உற்பத்தியாகும் திரவியங்களைக்கொண்டே ஷ தருமத்தை நிறைவேற்ற நிச்சயித்தேனாகையால் இந்த விளம்பரத்தைக் கண்ணுறும் பக்திமான்கள் யாவரும் தத்தமது சினேகிதருக்கும் தெரிவித்து இந்த தருமபுத்தகத்தைச் சிலவாகச்செய்தால் அதனாலுண்டாகும் புண்ணியத்தை நாமெல்லோரும் அடையலாமென்பது நிச்சயம்.

சண்முகக்கடவுள் தெரிசனைக்காகவும், நட்சத்திரத்திற்காகவும் சதா தணிகைக்குவரும் அன்பர்கள் அடியார்கள் தொண்டர்கள் முதலிய என்போலிய ஏழைகளுக்கும் உபயோகமாகும்பொருட்டு சத்திரம் நியமிக்க யெத்தனித்து தருமத்திற்காகவே இப்புத்தகம் அச்சிடப்பட்டதாகையால் ஷ தருமகயிங்கரியம் நிறைவேறும்பொருட்டு தயவுசெய்து பிறர் யாரும் இந்நூலை அச்சிடாதிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

சிறுமணவூர்-முனிசாமி முதலியார்,
நெ. 12. சட்டண்ணை நாய்க்கன் தெரு,
சூளை போஸ்டாபீசு மதராஸ்.

தணிகைச் சந்நிதிமுறையின்

அட்டவணை.

பக்கம்.		பாட்டு.
க	திருத்தணிகைச்சந்நிதிமுறை	கoக
,,	விநாயகர்துதி	க
,,	காப்பு	கo
ரு	செங்கீரை	கo
எ	தாலம்	கo
கo	சப்பாணி	கo
கஉ	முத்தம்	கo
கரு	வருகை	கo
கஎ	அம்புலி	கo
உo	சிற்றில்	கo
உஉ	சிறுபறை	கo
உரு	சிறுதேர்	கo
உஅ	ஐங்கரமாலை	கoo
௩க	தயாநிதிமாலை	கoo
ரு௩	வேலாயுதசதகம்	கoஎ
சுசு	அந்தாதி	கoo
அo	கலம்பகம்	கoo
கoஉ	மயிற்பத்து	கo
கoச	சேவற்பத்து	கo
கoசு	வேற்பத்து	கo
கoஅ	சீர்பாதப்பத்து	கo
ககக	மலைப்பத்து	கo
கக௩	உலா	உஉக
,,	புராணவரலாற்றுக்கண்ணி	உஉக
கஉரு	குழாங்கள்	ருஅ
கஉஅ	பேதை...	சச
க௩க	பெதும்பை	௩அ
க௩௩	மங்கை...	ரு௩
க௩ரு	மடந்தை	சுஎ
கசக	அரிவை	௩௩
கசஉ	தெரிவை	சரு
கசரு	பேரிளம்பெண்	ருஅ



கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

முதலாவது

தணிகைப்பிள்ளைத்தமிழ்.

விநாயகக்கடவுள்.

சத்தினி பதிந்துவினை யொத்தமல பரிபாகர் தமதிதைய கூடம்தனிற்
றங்குவயி ராகமாந் தறிநாட்டி யன்பெனுந் தளையையிரு காலின்மாட்டி
மெத்தினிய ஞானநீ ராட்டிநிறை சாந்தமா மென்மல ரணிந் துயிரெனும்
வீயாதகவளங் கொடுத்திட மகிழ்ந்துண்டு விளையாடு கரியை நினைவாஞ்
சித்தினியயோகியர் நெருங்குகுகை யெங்கணுஞ் செறிதிருத் தணிகை மருவுஞ்
செவ்வே டனக்கருண கிரிநாதர் நன்னயந் தேர்ந்துமகிழ் கூர்ந்து நுவலும்
பத்தினுடனூறு யிரந்திருப் புகழமுது பருகுபன் னிருசெவியினும்
பரவுநவ ரசமொன்று மறியாத சிறியனேன் பன்னுபைந் தமிழ்தழைகவே.

காப்புப்பருவம்.

திருமால்.

நீர்தந்த வுததிமுதிர் நிலவுலகு புகழ்கின்ற நீலமல ரெந்நாளினு
நீள்சுனையின் முப்போது மலர்கின்ற கல்லார நெடுவரையில் வீற்றிருந்து
சீர்தந்த பிரணவப் பொருளையிறை வன்றிருச் செஞ்செவியி லறிவுறுத்த
தேசிகனை வாசவ னளித்தபொற் கொடிமருவு செவ்வேளை யினிதுகாக்க
கார்தந்த மேகந் தடித்திடை விடாதுறக் கதிரவனு மோர்பாலுறக்
கலைநிறையும்,வெண்மதிய மோர்பா லுறக்குலவு காட்சிநிகர் மணிவண்ணமு
மேர்கொண்டபொன்மார்பிலங்கவொருகைத்திகிரியேந்தியொரு கையில்வெண்ச
கேந்தியுல கீரேழு மனுதின மளித்துவண மேறியருள் செங்கண்மாலே. [ங்

சிவபெருமான்.

திங்களங் குழவிவிடு வெண்கதிரு மரவின்மணி தேக்குசெங் கதிருமளவிச்
செம்பொனிற் செய்தபுரி வெண்பொனிற்செய்தபுரி சேர்த்துத்திரித்தகயிறுய்க்
கங்கைதங் குஞ்செஞ் சடாடவிக் கற்றையைக் கட்டிவைத் தெனமொய்த்திடுங்
கண்ணுதற் செந்திலத மொப்பமிளி ரைம்முகக் கடவுளிணை யடிபரவுவாம்

மங்கலம் பூணவயி ராணிதன் கண்டத்து மாயைமரு கியர்கழுத்தின்
மன்னுமுயி ரகரமுதன் மருவுமங் கலமாக வளர்கடைக் கண்சிவந்து
செங்கையிலை வேலெருட்டு மலையலை யரக்கர்கிலை சிந்தியயி ராவதத்திற்
றேவருல கைப்பவனி வந்துதென் றணிகையமர் சேயைப் புரக்கவென்றே. (உ)

உமாதேவியார்.

ஆணுருவி னுலழிவி லந்தகா சூரனுக் கஞ்சியழி யுஞ்சுரரெலாம்
அபயமென வோலமிட வஞ்சலென் றவர்களொடு மன்றுபின் பக்கமருவப்
பூணரவ மாமிறைவர் கண்சாடை காட்டலும் பொற்சிலைக் கைப்பிடித்துப்
பொருதழித் தந்தகனை யிமையவர் தமைக்காத்த பூரணியை யஞ்சலிப்பாம்
தாணுநுத லின்கட்ட ழற்பொறிய தாய்க்கங்கை தங்கியிம யச்சாரல்வாழ்
சரவணப் பொய்கைதனி லாறுமக வுருவமாய்ச் சாருமறு மீன்முலைப்பால்
மாணுமலர் வாயினி னுகர்ந்துமது வார்ந்தொழுகு வனசமா மலரணையின்மேல்
வண்டுதாலாட்டவிழி துயில்கூர் திருத்தணிகை மயிலிறைவ னைக்காக்கவே. (௩)

கணபதி.

வேறு.

கோதற்ற மேருவன் னேட்டிலே கோழுற்ற வால்வளைக் கோட்டினுக்
ஆதிப்பொற் பாரதந் தீட்டிய வாபற் சகாயனைப் போற்றுவாம்
தாதைப்பொற் காறளை பூட்டியே தாழ்சித்தற் கோர்மொழி காட்டிநால்
வேதத்தி னுர்தணி கைக்குளே மேவுற்ற வேலனைக் காக்கவே. (௪)

பிரமதேவர்.

வேறு.

காய்த்தகுலைக்கதிர் வாய்த்ததினைப்புனங் காத்தகுறப்பெணின் பாற்செலாக்
காட்டின்மிகப்பசி வாட்டுதெனக்கருள் காட்டிடெனத்தனி நோக்கியே
தேய்த்தவிடைக்கொடி மாத்திரளைப்பிழி தேக்கிலையிற்கடி தூட்டவாய்
தேக்கிவினைத்திடர் நீக்குசெருத்தணி சேர்க்குமொருத்தனைக் காக்கவே
மாத்தவளத்துரு வேய்த்தவனத்தெழில் மாற்றுபனத்தியை நாக்கிலே
மாட்டியிருக்கெனும் பாட்டையுரைத்துயிர் வாய்த்தசகத்தை யுண்டாக்கினேன்
தோய்த்தயிர்க்குடம் போய்த்திருடித்தினி சூட்டரவப்பணப் பாய்க்கணே
தூக்கமிகுத்தவன் மோட்டுதரப்புழை தோற்றுமலர்ப்பர மேட்டியே. (௫)

கங்காதேவி.

வேறு.

தூயோர்சகரர்க் களற்றுநேய் தோயா துயர்நற் றுறக்கமேற்
சோராதமரத் தரைகன்வீ சூடார்சுடலைப் பொடிக்குணீர்ப்
பாயாநனையப் பொருந்தினேன் பாடார் தவமிக் கியற்றவான்
பாலாயிரன்பொற் சடைக்குள்வீழ் பாகீரதியைப் பழிச்சுவாம்

தீயார்விழியிற் பொறிக்குளோர் சேயாயுதித்துக் குளத்திலே
தேனார்கமலப் பொகுட்டின்மேல் சேராமகிழ்வுற் றுயிர்க்கெலா
மாயாவிடரைக் கொடுத்தசூர் மாவாய்மலையத் துணித்துநீள்
வானார்தணிகைப் பொருப்பிலே வாழ்வேலவனைப் புரக்கவே. (௬)

வீரபத்திரக்கடவுள்.

வேறு.

நேரில்தக்கன் சிரத்தினைவீட்டினா னேயவெச்சனை யப்படிமாட்டினா
னீழலக்கினி யைக்கரம்வாட்டினா னீள்குயிற்சிறை யற்றிடவோட்டினான்
மேருவிற்கிறை யைப்புறம்பாக்கியே வேள்வியிற்றகரைத்தினுவோர்க்கெலாம்
வீறழித்திடர் பற்பலவாக்கிய வீரபத்திரன் மெய்ப்பதம்போற்றுவாம்
காருடுத்த குவட்டுறுதேக்கினைக் காமர்பச்சிலை யைத்திருவாத்தியைக்
காழகிற்சினை யைச்சுளைவேர்ப்பலாக் காயினைத்திரை யிற்பெயர்த்தீர்த்தெழீஇச்
சாரலிற்கழை முத்தினைப்பூக்களைத் தாவில்வச்சிரத் தைக்கரிக்கோட்டினைச்
சாடியிட்டரு வித்திரளார்ப்பொடு தாழ்செருத்தணி வெற்பனைக்காக்கவே. (௭)

வைரவக்கடவுள்.

வேறு.

விராவுமதமொடு புராரிதனையிகழ் விரோதமொழிபல வாக்கினிற்சாற்றிட
வினாவுபிரணவ முனாசதுமறை விகாதமறுபொரு டேற்றிடக்கேட்டிலன்
கராவினறிவழி பிதாவினுயர்தலை கடாவுவிரலுகி ராற்பறித்தார்ப்பொடு
கனாயிரவன்முதல்வினா டர்பலிகொளுங் கபாலவயிரவர் தாட்டுணைப்போற்றுதும்
ஓராறுசிரமுடனி ராறுபுயமுட னுகாதசிறைமயி லேற்றினுக்கேற்றிடு [ன்
மூலாசனெடிவரை செலாமுனுலகினையுலாவிவலம்வரு சீர்த்தியைப்போர்த்தவ
மராவின்மலரொடுகுராவின்மலர்நறைமரு தொடைபுனைமூர்த்திநற்கார்த்திகை
வழாமலருள்குகன் கலாரகிரியுறை வலாரிமருகனை வாய்ப்புறக்காக்கவே. (௮)

தேவேந்திரன்.

வேறு.

கரியமதனம்புபட்டு விரகமதினொந்திளைத்து
கனியிதழ்மடந்தையர்க்கு மோகமாங்
கவலையுறுதுன்பொழித்து வினையிருசமங்கிடைத்து
கருதரியவின்பமுத்தி நாடியே
கமலமலருந்தியுற்ற கனலையுமறிந்தெழுப்பிக்
கடிகொளிடைபிங்கலைக்கு ளோடிமீள்
புரைவளியிரண்டடக்கி சுழுமுனையினெஞ்சிருத்திப்
புருவநடுவிந்துவுக்கு ளோமமே

புரியுமதிமண்டலத்தின் மருவுபரையின்பமுற்ற
　　பொருளினையறிந்தி யற்றும் யோகினோர்
புணர்மலமொழிந்துவெற்பின் குகையிடைவதிந்துநித்தம்
　　புகழ்தணிகைமன்குகற்கோர் காவலாம்
தருமலர்புனைந்துகற்பின் சசிதனைமணந்துசொர்க்கத்
　　தனியரசியைந்து மைக்க ணேறியே
சலமழைபொழிந்திடப்பைந் தழைபயிர்விளைந்தெவர்க்குந்
　　தகையுணவுவந்தளிக்கு நீர்மையான்
றவளமதகுஞ்சரத்தின் முதுகிடையிவர்ந்தரக்கர்
　　தலையறவெறிந்துசித்தர் பாடவே
இருடியர்கணங்கள்சுற்றச் சுரர்தலைகரங்குவிப்ப
　　விளமுலையரம்பைமெச்சி யாடவே
இருநிதிவளங்கொழிப்ப மருவலர்புறங்கொடுப்ப
　　விகலறநடந்துவெற்றி கூடவே
எழுபுவியின்மன்பதைக்கு மிடர்புரிதரும்பொருப்பி
　　னிருசிறையரிந்தவச்சிர பாணியே. (கூ)

பலதேவர்கள்.

வேறு.

வம்பவிழும்பரங் குன்றமுநந்தினை
　　வாரலைவாயுறு சீரலைவாயினும்
　　வாவிதண்டலைமனு மாவினன்குடியினும்
　　வாரகமுற்றிடு மேரகவெற்பினும்
பம்பியகுன்றுதொ றூடலினுந்திருப்
　　பழமுதிர்சோலையி னும்விளையாடிய
　　பாவலனைச்செழுஞ் சேவலனைச்சிவன்
　　பாலகனைத்தணி காசலனைத்தினம்
வெம்பியசூரியர் சந்திரர்மாதவர்
　　விண்ணவர்பண்ணமர் விஞ்சையர்கின்னரர்
　　வீறுமுருத்திரர் கூறுமருத்துவர்
　　மேதகுமோரெழு மாதர்களாதியர்
தம்பியராயுறு மொன்பதுவீரர்கள்
　　தக்கவிலக்கமெ னுங்கணநாதர்கள்
　　தள்ளரும்வெள்ளமி ராயிரம்பூதர்கள்
　　தாவிலராய்ப்புறங் காவலராவரே. (கo)

காப்புப்பருவம்-முற்றிற்று.

செங்கீரைப் பருவம்.

புகழ்பூத்தகார்த்திகையெனுஞ்செவிலிமாதர்தன்புனலாட்டிமெய்தொடைத்துப்
புவியில் வாய்நீருமிழ்ந் தணிவிரலினூற்றேய்த்து புதுநுதற் றிலதமிட்டு
மகிழ்பூத்தபூதிந் திருக்காப்பணிந்துதம் மடிமேலிருத்தி யெழில்சேர்
மணிமுலைப்பாலூட்டி மார்பணைத்துச்சிதனை மோந்துவாய்முத்தமாடி
யகழ்பூத்தசரவணப் பொய்கை யந்தொட்டின்மல ரணையிற்கிடத்தி யகல
வளியினந்தா லாட்ட வலைகயிறதாய்வளி யசைப்பத் துயின்றெழுந்து
திகழ்பூத்தவிளையாடல் பயில்செருத் தணிகையிறை செங்கீரை யாடியருளே
சேனுடரார்ச்சனைசெய் சேனுபதிக் குரிசில் செங்கீரை யாடியருளே. (௧)

மேனையெனுமாதா மகிழ்ந்தபொற்சுட்டி வெண்பிறை நுதற்கணுட
மென்முலைப்பால்கறந் தூட்டியிடுகைத் தாய் மிலைச்சுபூஞ்சுடிகையாட
வானமுறுகார்த்திகைத் தாதியர்கள் செவியிலணி மகாகுண்டலமுமாட
வாநதி யெனுஞ்செவிலி புனையுமரைமணியாட வளர்சரவணப் பொய்கையா
மானமுறுகோடா யணிந்தவயிரக்கடக மரைமலர்க்கையிலாட
வண்மைபெறுபாண்டிமாதேவி யெனுநற்ருய் வனைந்திடுசதங்கையாடத்
தேனொழுகு பைங்குவளை மலர்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேனுடரார்ச்சனைசெய் சேனுபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௨)

பூமியெனுநன்மாமி யசுரர்புரிவேதனை பொறுக்கலா தயர்துன்பெலாம்
போக்குவலெனத்திரு வுரத்திருகை வைத்தல்போற் பொற்கரநிலத்திலூன்றி
மீமிசையுறுந்தேவர் படுசிறையெலாங்களைய மேக்கெழுஞ் செய்கைமான
மென்மெலக்கந்தர மெடுத்தெடுத்தந்தா மிசைப்பசுந் தலைநிமிர்த்துத்
தோமிறவமாமுனி வருக்கிடரிழைத்தவொரு சூர்வலிதனைக்கறுவல்போற்
சுந்தரப்பொன்முடி யசைத்தசைத்துத்தண்டை சூழ்காற்சதங்கைகொஞ்சத்
தேமருவுகல்லார மலர்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேனுடரார்ச்சனைசெய் சேனுபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௩)

பொன்மலைச்சாரலி னுறுந்திருச்சரவணப் பொய்கையொருகட்டிலாகப்
பூந்தாமரைச்சேக்கை மலர்மெத்தையாகப் புனற்கரைமரங்கால்களாய்
மின்மலியுமீனின் னெருங்கிப்பரந்தவான் வெண்மலர்ப் பந்தராக
வீறுபைந்தருமலரி னிடைவிடாதொழுகுதேன் விசித்தவூசற் கயிறதாய்த்
துன்மலைசாமலையி னொலிமுழவதாய்வளைத் தொனிமிகத்தும்பிபாடத்
தோலடிப்பறவையொலி செஞ்சிலம்போசையிற் றேன்றமகிழ் கூர்ந்துதுயிலுந்
தென்மலயமாமுனிக் கருள்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேனுடரார்ச்சனைசெய் சேனுபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௪)

வெள்ளிவரையிற்குடி விழைந்தபரமன்செவியில் வீறுசங்கக்குழையினை
மென்மலர்க்கைப்பிடித் துரமேவு சிரமாலை மீதேறுசோபானமாய்த்
துள்ளிக்களித்தடி சிவப்புறமிதித்துத் துவைத்துச்சுவற்கணேறிச்
சுடர்பொற்கடுக்கைபொதி வேணியையவிழ்த்திடச் சுரநதிகுதிப்பமூழ்கிப்

பிள்ளைமதியைப்பிடித் தரவின்வாய்வைத்தவண் பிரியாதமுகிலையீர்ப்பப்
பெரிதுடனடுங்கித் தடித்தொடுபிடித்துமழை பெய்யவிளையாட்டயர்தரும்
தென்னுபுனலூறுகற் சுனைமருவுதணிகையிறை செங்கீரையாடியருளே
சேனுடரர்ச்சனைசெய் சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (ரு)

வேறு.

மழைநிகர்விழியி னருட்கடையாட மணிப்பட்டமுமாட
மார்பிலணிந்த மதாணியுமாட வரைத்தோளணியாடத்
தழைகனிவாயொழுகும்புனலாடச் சரிதொங்கியுமாடத்
தண்டைசதங்கை புலம்புபதந்திகழ் தனிநூபுரமாடக்
குழையணியும்பன் னிருசெவியாடக் குஞ்சியசைந்தாடக்
கோதறுபொன்னரை நாணரையாடக் குற்றுடைவாளாட
அழிவில்பதந்தரு தணிகையமர்ந்தவ னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திட வசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (சா)

நிறந்திகள்குஞ்சி புனைந்திடுமலரொடு நிமிர்தலையாருட
நெடுநிலமிசையெழு வரையுறழ்திணிபுய நீள்கடகமுமாட
மறந்திகழவுண ருரந்துளைபடவிடு வைவேல்வெயிலாட
மார்பில்வனைந்திடு நீபமுறுங்களி வண்டு * ததைந்தாட
சிறந்திடுசெங்கழு நீரிதழங்குலி செறிமோதிரமாடச்
செவ்வரையிற்றிகழ் வட்டுடையாடச் சேவற்கொடியாட
அறந்திகழன்பர் தொழுந்தணிகைப்பர னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திட வசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (எ)

திருமலர்வாய்தொறு நகைநிலவாடச் செந்துவரிதழாடத்
தெரிவையர்மதர்விழி யிருபுறமாடச் சிறுநுதல்வேர்வாடக்
குருமணிமேகலை புனைவட்டமாடக் குலமாமயிலாடக்
கோதறுமாதவர் பூசுரர்நெஞ்சு குழைந்துகுழைந்தாடத்
தருவயிராணிபொன் மாதெனுமாமியர் தாங்களிகூர்ந்தாடத்
தாரகையாகிய தாயருமாசை தழைந்து மகிழ்ந்தாட
அரிகமலாசனர் பணிதணிகாசல னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திட வசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (அ)

வேறு.

உமையொடுபரசிவ னுலகினைவலமுனம் வந்தாலின்றேதா
னொருகனியுதவுது மிதுபொழுதகலுதி றென்றேமுன்போதத்
தமையனெடிகல்புரி தருபிணிமுகமிசை தங்காதங்கேறிச்
சகமுழுதையுமொரு நொடியினில்வலம்வரு தந்தாய்செந்தூரா

---

* ததைதல்-நெருங்கல்.

கமையறுநிசிசர ரவிதரவயில்விடு கந்தாமந்தாரக்
கடிமலர்முடிபுனை சசிமகள்வடிவெகிர் கண்பரவுந்தோளா
சிமையமதுயரிய தணிகையிலறுமுக செங்கோசெங்கீரை
திருமகள்மருமக னெனவருகுருபர செங்கோசெங்கீரை. (கூ)

கஞ்சனிகழ்ந்து நடந்திடவங்கது கண்டேவெங்கோபக்
கனல்படுமெனமொடு மூலகினைமறைகொடு தந்தாயென்றுனி
விஞ்சியசங்கிர கம்படுமெந்திர முந்தோமென்பாயேல்
விரிபொருளேதுவது புகலுதியெனலு மயங்காநின்றுனைக்
குஞ்சியுறுந்தலை பொந்துபடும்படி கொந்தாரும்பாணிக்
குருவிரல்பொதிதர வொருமுறையறைதரு குன்றேபொன்றேய்கற்
செஞ்சிலைகொண்டவ னன்றருள்சுந்தர செங்கோசெங்கீரை
திணிமலவிருடவிர் தணிகையில்வருகுக செங்கோசெங்கீரை. (க0)

சேங்கீரைப்பருவம் முற்றிற்று.

ஆ பருவம் உ-க்கு திருவிருத்தம்-உ0.

தாலப் பருவம்.

பாயா * வேங்கை நிழற்பிணைமேற் பாயும்வேங்கையதிர்ப் பொலியாற்
‡ பறவாக் † குளவி நிழலிருந்து பறக்குஞ்சிறையெண் காற்பறவை
காயாவத்திக் கொம்பொடித்துக் கடுகும்வயமா வினைக்கவர்ந்து
காய்க்குமத்தி மிசையிரங்கக் கனிதேர்கடுவன் கற்பகத்திற்
றூய்வானரம்பைக் கெதிர்நடிப்பத் தனிவானவரான் பாலூட்டுந்
தணியாவளங் கூரிறும்பூது தழைக்குந் தணிகாசலத்திலிருந்
தாயாயுயிரைப் புரந்தளிக்கு மரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறு மழுதேதாலோ தாலேலோ. (க)

ஏலமரந்தக் கோலமகி விலவங்கம்பச் சிலைமரந்தேக்
செழிற்சந்தனங் குங்குமமரமு மெறிந்துகொளுவி வனசரர்கள்
சாலவெறுத்து வனம்புகுந்து தவஞ்செய்முனிவருதிர்சருகு
தண்ணீர்கிழங்காதிகளுண்ணும் தகைமைகாட்டு மலைச்சாரற்
கோலமகழு மளையிலராக் கொழுஞ்சுடரிபு மணிவெயிலாற்
குளிர்பூம்பொழிலி னிருணீங்கக் குறமாமகளிர் விழைந்தாடும்
ஆலம்பெருகுஞ்சுனைத்தணிகைக் கரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வாகனமேறு மழுதேதாலோ தாலேலோ. (உ)

---

* வேங்கை-ஓர்வகைமரம். † குளவி-மலைப்பச்சைமரம். ‡ காயாவத்தி-யானை.

வெள்ளிற்கனியா லடைப்பமைத்து வேர லுகுமுத்தரிசிதனை
வேடரரிந்து கொணர்ந்தளித்த வேழச்செவியா முறத்தேற்றும்
புள்ளிபடுமான் றோற்பாய்மேற் புடைத்துக்கொழித்துத் தறித்தெடுத்தும்
பொன்னங் துடிக்கட்டாழியுறும் புதுத்தேனொடும்பெய் துலையேற்றிச்
சுள்ளியகிற்சந் தனவிறகிற் சுடர்மாணிக்கத் தீ மூட்டித்
துடுப்பாமருப்பிற் றுழாவுசிறு சோறட்டெயினப்பேதையர்கை
யள்ளிவிளையாட் டயர்தணிகைக் கரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறு மமுதேதாலோ தாலேலோ. (௩)

கல்லார்சுனையிற் சுரபியினங் கறந்தபாலிற் செவ்வரம்பைக்
கனிகணழுவி விழவதனைக் கனியின்பணைவாழ் கிளியினமும்
வில்லார்வேடப் பாவையரும் விளரியிசையாழ் விஞ்சையரும்
வெற்பிற்றவஞ்செய் முனிவரும் வேழப்பிடியின் * கரிணிகளுஞ்
செல்லார்பொழில்சேர் கோடரமுஞ் சிறக்குந்தெய்வ மடந்தையருந்
தின்றுகளிப்புற் றநுதினமுந் தீராவிறும்பூதுடனுறையும்
அல்லார்நீல மலர்த்தணிகைக் கரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறுமமுதே தாலோ தாலேலோ. (௪)

வேரல்மணியின் குவையொருபால் வேழமருப்பின்குவையொருபால்
விளங்கும்வயிரக் குவையொருபால் விழையும்வைடூ ரியமொருபால்
நேரிலரவ மணியொருபால் நீலமணியின் குவையொருபால்
நிழல்சேர்பச்சைக் குவையொருபால் நிறமார்கனகக் குவையொருபால்
தேரும்புகழ்க்கல் லாரகிரி செட்டியெனப்பேர் படைத்ததனுற்
றெரிந்துவிலையாக் குறக்குவித்த சீர்மைபொருவுஞ் செருத்தணிகை
யாரலுதவும் பன்னிருகை யரசேதாலோ தாலேலோ
அழகார்மயில்வா கனமேறு மமுதே தாலோ தாலேலோ. (௫)

வேறு.

துணிபடுவெண்பிறை தவழ்முடியின்புடை சொரிமுகிலின்புனல்வார்
சுனையில்விழுந்தி தினுறுபுனலுங்கொடு தொடர்மதமுந்தியிடாத்
திணியகில்சந்தன மரமுதிர்குங்குமந் திகழ்துடியும்பெயராச்
செறிபனசங்கனி மல்வழைபைங்கழை சிறுமிளகுங்கொணரா
மணிவயிரங்கதிர் மரகதமஞ்சன மணியினொடும்புணரா
மருவுபுலன்கெழு மருவியிழிந்திடு வளமைதழைந்தெழில்கூர்
தணிகைநெடுங்கிரி யமருநெடுந்தகை தாலோ தாலேலோ
சந்தனமும்புழு கும்புனைசுந்தர தாலோ தாலேலோ. (௬)

---

* கரிணி-பெண்யானை.

வானதியுங்குளிர் தேனடைவிண்டிழி வார்மதுவுங்கரியின்
மாமதமும்புடை சூழ்சுனையின்புனல் மண்டிக்கொண்டிழியா
ஏனல்கருந்தினை சாமையிருங்குரு மிதையின்மிகப்பெருகி
யிறவுளர்முன்புரி மடைகளழிந்திட வெல்லைகடந்தோடிக்
கானமருந்தி தவழ்ந்துநிறைந்திரு கரைகளழித்தேகுங்
கம்பலையம்பார் கம்பமுறும்படி காரொலியைச்சினவா
தானமெழுந்தணி காசலவேலவ தாலோதாலேலோ
சந்தனமும்புழு கும்புனைசுந்தர தாலோதாலேலோ. (எ)

சூதக்கனியொடு பனசக்கனிபொழில் சோர்கதலிக்கனியுந்
துதைவயலிற்படு மெருவின்முளைத்தெழி றுன்னியசெந்நெலெலாம்
வேதக்கிழவரு ளத்துறுகாதல் விடக்கனகத்தினொடு
மேதினிமன்னர் விடுத்திடுதான விழுப்புனல்பூஞ்சுனைநீர்
காதற்குறவர்கள் நானத்தொடுகுடை கல்லருவிப்புதுநீர்
காலின்விழுந்தெதிர் பாயவளர்ந்தொளிர் கதிரவன்மிசையோங்குந்
தாதிற்பொலிதரு காவிக்கிரியிறை தாலோதாலேலோ
சந்தனமும்புழு கும்புனைசுந்தர தாலோதாலேலோ. (அ)

வேறு.

மருவலர்கற்பக முடியணிபொற்சசி வாழ்வீறுகாதே
மகபதிவச்சிர தரனுமுவப்புறு மூர்பாழாகாதே
யிருடிகள்சித்தர்க ளுரகரியக்கர்கள் வாணாள்போகாதே
யெழுகடல்சுற்றிய புடவியிடத்துறு வார்நோயாழாதே
பொருகரிபற்பல புரவிமிடுக்குறு காலாள்தேரோடும்
பொருதவைத்தியர் சிரமலையற்றிட வாள்கோல்வேலேவுந்
தருமலர்மொய்த்திடு பாகிரியிற்குக தாலோதாலேலோ
தணிகைமலைக்கிறை யெனவருசிற்பர தாலோதாலேலோ. (கூ)

நாலுமுகத்தவன் மாலையழித்திடு நாதாவாதாபி
நாசமுறச்செயு ஞானமுனிக்கருள் போதாநீள்பாதா
பாலின்மொழிக்கனி வாயுமைதற்பரை பாலாமாசிலா
பாவையெழிற்றெய்வ யானையணைத்திடு மார்பாகூதாளா
கோலவனத்துறு வேடர்மகட்கிசை கோவேகூர்வேலா
கூடலரைத்தெறு கோழிமயிற்கொடி வீராதேனூர்பூச்
சாலைமிகுத்துள சோலைமலைக்கிறை தாலோதாலேலோ
தாவில்செருத்தணி மேவியசிற்பர தாலோதாலேலோ. (௧0)

தாலப்பருவம்-முற்றிற்று.

ஆ பருவம் ௩-இ - திருவிருத்தம்-௩௰.

சப்பாணிப் பருவம்.

இரைத்துத்திரைத்துநுரை பொங்குகடலோரேழு மிணையறுகிடங்கதாக
விடைப்படுவரைப்பெலாந் திருவுலாப்போந்துவரு மேழ்பெருந்தெருவதாக
நிரைத்துத்தழைத்தபொழி லேழுமுய்யானமா நேமிவரைநெடியமதிலா
நீப்புறக்கடலாடு தெப்பக்குளத்தினியல் நேராகமேருவரைசூழ்
வரைப்பனைத்தும்புறக் கோயிலாத்தணிகைமலை மருவுமந்தப்புரமதாய்
மன்னுயிரெலாம்புரந் தாண்டரசுபுரிகின்ற வள்ளிதெய்வானைகணவா
தரைக்குளுயர்கும்பமுனி முடிவைத்தசெங்கைகொடு சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (க)

மலையலையையங்கையி லடக்கியிகல்வாதாவி மலையலை வயிற்றடக்கி
வண்டமிழெனும்புதிய தென்கலையுடன் பழய வடகலையைநாவடக்கி
நிலவலையமுத்தரந் தாழ்ந்துதென் றிக்கின்மே னிமிர்தலைத்தாளடக்கி
நீனிறவிடத்தினை மிடற்றடக்குங்கயிலை நிமலனையுளத்தடக்கிக்
குலவியகறுப்பநிறை மாதரெனமந்தநடை கொண்டுவளர்தென்றலெனுமோர்
குழவியைத்தன்வழி னடக்குமலயத்திலமர் குறுமுனிக்கருள்குரவனுய்த்
தலைமைபெறுவீட்டுநெறி காட்டுதணிகைக்கிறைவ சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (உ)

பொன்மலையைவெள்ளிவெற் பாக்கியுயர்வெள்ளிப்பொருப்பைநீலக்கிரியதாய்ப்
புதுக்கியிந்திரநீல வெற்பைமாணிக்கப் பொருப்பாக்கிமாணிக்கமா
மின்மலையினைப்பவள மாக்கிமரகதவெற்பை வெள்வயிரவெற்பதாக்கி
விண்ணுலகைமண்ணாக்கி மண்ணுலகைவிண்ணாக்கி விரிகதிரைமதியமாக்கி
நன்மதியினைக்கதிர தாக்கிவிண்ணவர்கடமை நானிலத்தவர்களாக்கி
நானிலத்தவர்கடமை யுரகராக்கிப்புதுமை நாட்டுவிளையாட்டயர்தருந்
தன்மவிடையேறுமர னருள்தணிகைவளர்குழவி சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (௩)

பருந்திரளுநிழல்செலும் பான்மையெனவிஞ்சையர்கள் பயிலுமியலிசைகள்பா
பாங்கருறுவேங்கையின் பனிமலர்ச்சினைமேவு பைந்தோகைகேட்டுறங்கும் [டப்
முருந்திரளுடுமுத்தமுறழ் மூரற்கொடிச்சியர்கள் முருகுவாய்வைத்தருந்தி
முருகனெதிர்சாரல்வெறியாட்டயர்தனைக்கியே முதைப்புனமிதைப்புனஞ்சூழ்
குருந்திரளுடுகொன்றைமிசை யமர்பசுங்கிளிகண்மகிழ் கூர்ந்துபூவைக்கிசைக்கு
குளிர்தணிகைவெற்பினி லிருந்துமானிடவடிவு கொண்டுபுனமெய்திவள்ளி [ங்
தருந்தினையினிடியிரந் தேற்றநீளங்கைகொடு சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (௪)

கிம்புரிப்பூணமர் மருப்பெனுமுலக்கைகொடு கேழ்நிறச்சந்தவுரலிற்
கேடில்சாதிக்காய் லவங்கமொடுகர்ப்பூரங் கிறுதக்கோலமேலம்
வம்புறுகொடிச்சியரி டித்தவாசப்பொடிகள் வாங்கியெழில்விஞ்சைமகளிர்
வளர்கதிர்க்கற்றைகால் பீதாம்பரத்தைவிலை மாற்றிடும்வள்ளிமலையிற்

கொம்புமுற்றலர்வேங்கை மராமாய்விருத்தனாய்க் குன்றவர் தமக்கொளித்துக்
குறமான்றனக்குமயல் பூட்டியெழில்காட்டியனை குமரனேநிமலவழலாங்
தம்பமுற்றவனுதவு தணிகாசலக்கடவுள் சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனி லவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (ரு)

வேறு.

உரகமுழக்கிய யொலியையடக்கிடு முழைகளுராப்பொலியவ்
வுழையினுரப்பொலி தனையுமடக்கிடு முழுவைமுழக்குகொடு
வரியினிரைப்பொலி நலியவடக்கிடும் வழுவைசிலப்பொலியவ்
வழுவைசிலப்பொலி மறையவடக்கிடும் வயவரிகர்ச்சனைகள்
சரபமதிர்ப்பொலி யரியின்மிடுக்கொலி தனையுமடக்கியிடுந்
தருவனமொய்த்திடு சரியருவித்திகழ் தணிகைமலைக்கிறையாங்
குருபரசித்திர மயில்வருதற்பர கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கரு மறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. (சு)

தவரைவளைத்திடு சவரர்வடிக்கணை தைத்திடுமெய்த்தேகந்
தனையுதறக்கணை நிகர்கருமுட்பட வெய்த்திடுமைக்கேழல்
அவிர்பிறையிற்பிறழ் வளையெயிறிற்றிட முற்கலையைப்பாயு
மதுவுமருப்புக வெதிர்புலிகொட்புற முட்டியெடுத்தேகி
யிவர்சருவிற்படு மருவிதிளைப்புன முற்றேடிக்காவி
னிழிநறவத்தொடு செழியமலர்த்தடம் வற்றுமறப்பாயுங்
குவளைதழைத்திடு தணிகைமலைக்கிறை கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கரு மறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. (எ)

கந்தரமொய்த்திடல் கண்டுவெயப்புலி குஞ்சரமெனவியவாக்
கடுகியடித்திட மழைகள்தடித்திடி கான்றிடவுளநாணி
வந்தெதிருற்றிடு கைம்மலைதன்னையு மைம்முகிலெனவிகழா
மதுநுகர்மக்களி னறிவழியச்சரி மலைமுழையுட்புகுதுஞ்
சந்திரன்வந்திட முந்துகுறத்தியர் தண்ணிழலாடியெனச்
சந்தனகுங்குமவொண்டிலதம்புனை தனியெழிலைப்பார்க்குங்
கொந்தலர்பங்கு வளைத்தணிகைக்கிறை கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கரு மறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. (அ)

வேறு.

நிரையுலகெங்கணு முலவியிறப்பொடு மிப்போது
நிகழ்வுவருஞ்செய லறிதருநற்றவ னட்போடும்
புரியுமகந்தனி லெழுதருசெச்சை மதத்தாலே
பொருதுகொடுஞ்சின முடுகியனைத்து மழித்தேகல்

கருதிமறிந்திடு சுரரபயத்தொடு முற்போதக்
கருணைபுரிந்தச வலியையடக்கி யடித்தேறுந்
தருநிகர்செங்கையி லொருமுறைகொட்டுக சப்பாணி
தணிகைநெடுங்கிரி வருமிறைகொட்டுக சப்பாணி. (௯)

வேழமுகத்தவ னோடிகலிக்கனி யைப்பேணி
மேதினிசுற்றுறு மாதிரமெட்டு நொடிப்போதில்
சூழுமயிற்பரி யேறிமணிக்கட லிற்போகிச்
சூரனையட்டுயர் வானவர்பொற்பதி யிற்கூடி
வாழவளித்தொரு வாசவன்பெற்ற மடப்பாவை
வாய்வதுவைத்தொழில் யாவுமுடித்திடு மெய்த்தேவ
தாழுமறக்கொடி நாயககொட்டுக சப்பாணி
தாவில்செருத்தணி வேலவகொட்டுக சப்பாணி. (௧௦)

சப்பாணிப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ௪-க்கு திருவிருத்தம் ௪0.

முத்தப்பருவம்.

தூங்குந்துளைக்கைப் பிறைமருப்புச் சொரிமும்மதந்தாழ் கவுளுரற்காற்
சுழலுஞ்சிறுகட் புகர்முகத்துத் தும்பிகருஞ் சம்புமுதிர்
வீங்குங்கனிகள் விழுந்தழிந்து விரிசாரருவி யொழுகிமய
வெற்பின்றவத்தா லவதரித்து விளங்குந்தெய்வப் பிடிமணந்து
தீங்கிலைந்து முகத்தேவர் சிங்கமெனவும் பெயர்படைத்துச்
செழிக்குந்திருவா லங்காட்டிற் றேவர்வணங்க நடம்புரியு
மூங்கிலளித்த முத்தமருள் முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியி லெழுஞான முளையேமுத்தந் தருகவே. (௧)

வழங்குடயமா மகம்புரிந்த மன்னன்புதல்வ ரெனுஞ்சகரர்
வானத்திறைவன் புரிந்தநெடு வஞ்சமறியா மாநிலத்தைக்
கிழங்கினகழ்மண் ணெலாமருந்திக் கீழ்ப்போய்த்தவஞ்செய் திடுமுனிபாற்
கிளரும்பரிகண் டவற்சீறக் கிளத்துமுனிவன் றவக்கனலாற்
சழங்கிமாய்ந்து நிரையமுறுந் தன்மைவினவிப் பகீரதனார்
தவமாறயுத வாண்டியற்றச் சதுமாமறையோ னுலககன்று
முழங்கிவரும்வா னதியளித்த முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியி லெழுஞான முளையேமுத்தந் தருகவே. (௨)

விதிநாவமர் வெள்ளோதிமமும் விண்டுவூரஞ்சேர் பொன்னனமு
மேவுங்கொழுங்கண்மலர்பூத்து விழையுமதியோர்க் கருட்செர்தேன்
பொதிசேதாம்ப லிதழவிழ்ந்து புரைதீர்கங்கா நதிகுலவி
பொலியும்பவள வனமடர்ந்து பொன்ருதணிமங் கலவளையின்
கதிர்வாய்ந்தைங்கைக் களிற்றினுக்குங் கவுணியனுக்குந்திரு முலைப்பால்
கறந்துகொடுத்த நேமியம்புட் கருலியுயிர்கள் பலவளித்து
முதிராநீலக் கடலளித்த முத்தே முத்தந்தருகவே
மூலாத்திரியி லெழுஞான முளையேமுத்தந் தருகவே. (௩)

விளரித்தீஞ்சொலரமகளிர் விழைந்துகுடையு மயிர்ச்சாந்தும்
விண்ணின்றிழிகார்த் திகைமடவார் விம்மிச்சுரக்குமுலைப்பாலுங்
கிளர்மைக்கருங்கணுமைகறந்த கிண்ணத்தொழுகு முலைப்பாலுங்
கேடில்கூலத்தருமலரிற் கிண்டுமளியாற் சொரிதேனுந்
தளர்விற்சங்குமீன்போதா தாராநாரை குருகுண்டு
தழைப்பத்தவஞ்செய்சரவணத்தின் றண்ணீர்மிசையா யிரமிதழ்த்தேன்
முளரிப்பூஞ்சேக்கையிற்குலவு முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையே முத்தந்தருகவே. (௪)

மெய்வாய்மூக்குக் கண்செவியின் வழிபோய்விடயங்களையருந்தி
விரவும்வினையாற்சுழல்பிறவி வேலைகடக்குங் கருத்துடையார்
ஐவாய்வேட்கை யவாவொழிந்திட் டாருதாரப்படியேறி
யாறோடாறங்குலமீதி லறியுநிமலப் பெருவெளியில்
கைவாய்மழுவுங் கறைமிடறுங் கண்ணார்நுதலும் பிறைமுடியுங்
கவினத்தோன்றுஞ் சிவனிடத்திற் கலந்தவுமையாளுடன்பிறந்த
மொய்வானறுமீனுவந்தளித்த முத்தேமுத்தந் தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையேமுத்தந் தருகவே. (௫)

வேறு.

கயிலைவெற்பும்பனிகொ ளிமயவெற்பும்புதிய கனகவெற்புங்குறைகடீர்
கடவுள்வெற்புஞ்சமர புரியின்வெற்பும்பலவு கனியும்வெற்பும்புனிதமா
மயிலைவெற்புந்தழலி னருணைவெற்பும்பொதிய மலயவெற்புங்கலைநிலா
மதியவெற்புங்கதிரி னுதயவெற்புஞ்சுருதி மறையின்வெற்புங்கொடியுரு
நியமவெற்புஞ்சுடிகை யுரகவெற்புங்களிறு நியதியர்ச்சனைபுரியவாழ்
நெடியவெற்புந்திகிரி வடிவவெற்பும்வதுவை நிகழும்வெற்பும்விடையதாஞ்
சயிலவெற்பும்பழைய குடியிருக்குங்குமர தருகமுத்தந்தருகவே
தணிகைவெற்பின்கணம ரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. (௬)

இருடியர்க்கும்பழைய வுரகருக்குந்துயரி லிமயவர்க்குங்கிரணமா
ரெரிகதிர்க்குங்குளிரு மதியினுக்கும்புவியி லெவர்களுக்கும்வழியதாய்
வரவிடுத்தங்கவர்க ளறிவழித்தஞ்சியுயிர் மடியிருட்சங்குலெனவே
மதிமயக்குங்குருகு பெயர்படைத்தண்டமுறு மலையினுட்சென்றுதுயர்கூர்

உருவுடைத்தம்பியரு முயரிலக்கம்பெயரு மொளிபெருக்குங்கணவரோ
டுயிர்படைத்தங்கணெழ மலையொடத்துப்பிமுக னுடுகணத்துஞ்சிவிழவே
தருமலர்ச்செங்கையுறு மயில்விடுக்குங்குமா தருகமுத்தந்தருகவே
தணிகைவெற்பின்கணம ரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. (எ)

மழையின்முத்துந்தவள மதியின்முத்துங்கமல மலரின்முத்துங்கரியினீள்
வளர்மருப்பின்கணொளி கிளருமுத்துங்கதலி வருகனிக்கண்பொழிநிலா
விழையுமுத்துங்குருகு தலையின்முத்துங்கமுகின் மிடையுமுத்துந்தெரிவைமார்
மிடறின்முத்துங்கிருடி யெயிறுமுத்துங்கிளையின் விளையுமுத்தும்பணையினுர்
கழையின்முத்தும்பணில முதவுமுத்துஞ்செநெலின் கதிரின்முத்தும்புனலுலா
கயலின்முத்துஞ்சலவர் முழுகுநத்தின்வயிறு கஞலுமுத்தும்புகழதாய்த்
தழையுமுத்தும்புனையு மணியுரத்தின்குமா தருகமுத்தந்தருகவே
தணிகைவெற்பின்கணம ரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. (அ)

வேறு.

தருவுஞ்சுரபியு மணியுங்கடைவிழி தத்துமருட்பார்வை
தனைநம்புறவிரு புறமுஞ்செறிதர மொய்த்தகடற்சேனை
மருவுஞ்சபைதனி லெவரும்பணிசெய வுற்றகொலுக்கூட
மணியிற்கணமொளி ரணையின்புடையர சுற்றசசிக்கோவின்
றிருவெண்கரிதரு மொருபைங்கொடிபடர் வெற்றிமணித்தோளிற்
றிகழ்சந்தனமகில் புழுகும்புனைதரு சித்ரமயிற்பாக
முருகுண்டளியின முலவுந்தணிகையின் முத்தமளித்தருளே
முதிருஞ்சுவையமு தொழுகுந்துவரிதழ் முத்தமளித்தருளே. (கூ)

உனதின்புறுகவி புகலென்றனுதின முற்றறிவித்திடவு
முயர்செந்தமிழ்சிறி தறைகின்றிலனென வொட்டுகவிப்புலவ
னனமின்றெனமது ரையிலந்தணனுர் வற்கடமுற்றிடலு
மழுதன்பொடுதொழ வறிசுந்தரனருள் பொற்கவியைச்சொலவே
யினிதன்றிதுபொரு ளெனவந்திறைதரு குட்டமடுத்திடுநோ
யிடருங்குகையுறு சிறையுந்தவிர்தரு நற்கவிசொற்றிடலு
முனிவின்றெதிர்வரு முருகன்றணிகையின் முத்தமளித்தருளே
முதிருஞ்சுவையமு தொழுகுந்துவரிதழ் முத்தமளித்தருளே. (க0)

முத்தப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ரு-க்கு திருவிருத்தம்-ரு0.

வருகைப் பருவம்.

கண்ணனுக்கனகநிற வண்ணனுந்திருநுதற் கண்ணனுமொருங்குறைதல்போற்
கருமலையிடத்துறச் செம்மலைவலத்துறக் கவினும்வெண்மலையிடையதாய்ப்
பண்ணமருநந்திநதி புடைசூழவிடையிடைப் பைஞ்சுனைவயங்கமீச்செல்
பயோதரம்வயாநலி வுறக்கொடிகடாக்கல்பல பாவையர்மருந்துவஞ்செய்
துண்ணிலவுநீர்மக வுயிர்த்திடவிலாப்புறத் தொண்கரத்தால்வருடல்போ
லோங்குமுடிமேலூன்று வெள்ளிவீழன்னமழை யொழுகுநீரருவியிழிதல்
தண்ணிலவுகல்லார மாலையணிமாண்புநிகர் தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (க)

நாவலம்பெயர்புனை பொலங்கடணிந்ததென நனையிதழ்முறுக்கவிழ்ந்து
நளிர்வண்டுஞெதொளிர் விளக்கேற்றினதென நறுமலர்கடுறுசெண்பகக்
காவிலந்தணர்புரியு மோமவங்கியினிமிர் கரும்புகைப்படலமீப்போய்
கடவுளர்க்காயுளை வளர்த்துமுகின்மேனிபொதி காட்சியாற்களிதுளும்பித்
தூவுமின்குலவுநகை வாய்நவின்றுறிமதி தோறுமும்மாரிபொழிநீர்
துன்னுதண்பணையில்வளர் செஞ்சாலியோங்குகதிர் சூரியன்பரிகடினவே
தாவிலின்புறுகுடிகள் மேவுதண்ணடைகுலவு தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (உ)

ஆசினியின்முட்புறக் கனிபழுத்தொண்புவி யதிர்ந்திடவெடித்தவிடரி
னவிர்சுளைவிரிந்துநறை பொங்குமணமெண்டிக்கு மளவுகால்வழியினோடி
மூசுவண்டினமளவி யொய்த்தனிதியின்புதையல் முன்கண்டுகவரும்வறியோர்
முறைமைகெடெரித்திடுஞ் சாரலுறுசோலைகளின் முதிர்கறிக்கொடியின்மிளகைக்
கூசுகருமிளமந்தி தின்றமுதல்கண்டுவன கோடரந்தனினடையைக்
கொண்டுவந்ததனு விடைப்பிழிந்திடலுமகிழ் கூர்ந்துவிளையாடுபணைசூழ்
தாசரதியாசிரிய னாகியுயர்வாழ்வுதரு தணிகைநாயகன் வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௩)

கானத்தையொத்தபைங் கதலியின்புலியடிய காய்க்குலையறுத்துமீப்போய்
கமுகிளம்பாளைமடல் கீறிமுப்புடையதெங் கம்பழமுதிர்த்தெழுந்து
வானத்தகட்டைப் பிளந்துமழைசிதறியுயர் மதியினூறுமானைமுட்டி
வானமீனைச்சினந் தாகாயகங்கையிடை வளர்சுறவின்முட்டகர்த்துக்
கூனத்தையொத்தகண் டத்தரம்பையர்செவிக் குழைமகரமுங்கிழித்துக்
கோளகையிடித்துப் புறங்கோத்தநீரிற் குதிக்குமிளவாளையுகளுந்
தானத்தினெடுமருவி நீராறுபாய்வயற் றணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௪)

வாட்டடங்கட்செறி யுழத்தியர்சரோருக மலர்க்களையெடுத்தருந்தி
மருமலர்க்கைக்கோப் புடன்குரவையாடுமொலி மஞ்சினொலியைப்புடைப்ப
நாட்டருஞ்சுவைகடரு தெங்குழவரைப்போர்மேனயந்திவர்ந்தேறுமுழவர்
நாவலோவென்றுகூ விளிகொளுஞ்சும்மையலை நரலையைத்தட்பவயலின்

ஈட்டருங்கட்டரள முதிர்கரும்பைத்தறித் தேந்திரத்திட்டுமெள்ளர் [தோற்
எறியுமுட்கோல்கொடு கடாவைத்தெழிக்கு மொலி யிடியொலியைமாற்றவணி
ருட்டுணைச்செஞ்சூட்ட வனமுலவுபண்ணைசூழ் தணிகைநாயகன்வருகவே
தடாமலைப்பிணியெனை யடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. (௫)

வேறு.

கன்னற்குதலைச்செங்கனிவாய்க் கலசமுலைப்பொற் கடைசியர்தங்
கருங்கண்மலரைப்பூந்தடத்திற் கமலத்தருகு முறுக்கவிழும்
நன்னர்க்குவளை யெனவறுகால் நாடிப்பெடையினெடுஞ்சுழலும்
நகைத்தண்டரளம் பொழிநிலவால் நறும்பூங்குமுதம்வாய்விரியும்
பின்னற்குழலைமேகமெனப் பெருகுங்களிமா மயிலகவும்
பிறழும்வளைக்கை கஞ்சமெனப் பிரியாதனங்களுவந்தேறும்
வன்னப்பணைசூழ் செருத்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையானுதவு முமையாள்கண் மணியேவருகவருகவே. (௬)

தென்றற்கொழுந்து தவழ்பொழிலிற் செறிபூங்குழைசேர்வழைநிழலிற்
றினையின்கதிர்தின் றருவியிழி தீந்தேனுண்டுவாய்குதட்டுங்
குன்றக்குகைவாய் மோட்டெருமை குடநேர்செருத்தலுகுதீம்பால்
கு டம்பலவுநிரப்பியிடக் குதிக்குங்கயல்க ளுண்டுமயல்
துன்றிக்கமல மிசையுறங்குந் தூநீர்மருதம்பற்பலசூழ்
சோலையுயர்விண் கற்பகப்பூஞ் சோலையெனப்பொன்மலர்களுலு
மன்றற்குவளையலர்தணிகை வாழ்வே வருகவருகவே
மலையானுதவு முமையாள்கண் மணியேவருகவருகவே. (௭)

பிறப்புமிறப்பு மெவ்வுயிர்க்கும் பிறழாதமருந்திறம்போலப்
பெருகும்புனல்பாய் வயல்கடொறும் பின்னற்கதிரின்செந்நென்முதிர்ந்
தறுப்பும்படுப்பு முழுதுபரம் படித்துவிதைத்துநடுநடவும்
அகலாதுழவர் செறிபணைசூழ்ந் தழகார்கன்னற்காடுழக்கி
யொறுக்குமதவா ரணம்பிடியோ டுலவித்திரியுஞ்சாரல்வளர்ந்
தோங்குமூங்கிற் றலையின்மயி லுலவுங்கழைக்கூத்தரின்கவி
மறப்பிலிறும்பூ துறுந்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையானுதவு முமையாள்கண் மணியேவருகவருகவே. (௮)

வேறு.

தகுவர்முடிக ளுருளவெயிறு தரளநிரையினுதிரவாய்
தடிகளுதிரமொழுகவயிறு சரியமலையை யனையதோள்
தொகுங்கைநெடிய மிடறுகழல்க டைகளிடைகடுணியவே
சுழலும்விழிகள் சிதறவலகை சுலவுகழுகுநரிகளுய்

புகுதவயிலை யெறியுமிறைவ புகிறணிகைவரையில்வாழ்
புனிதமுருகவரியின்மருக புலவர்மலர்கள் பொழியநீண்
மகுடநிரைகளசைய விசையமயிலு மசையவருகவே
மறுகுமெமது பிறவியகல வருகவருகவருகவே. (கூ)

சரணமலர்களசையவிருது தழிவுகழலுமசையவே
சகலவுலகும் விலையிலறுவைசழையு மிடையுமசையவே
யருணகிரண கடகமசைய வயிலுமசையவழிவிலா
வழகுபுயமுமசைய விருவரணையு மருமமசையவே
முரணுமகர குழைகளசைய முறுவலணியுமசையநீர்
முழுகுதணிகை வரையிலலரு முருகுகுவளையணிகொடார்
மருவுமுடிக ளசையவிசைய மயிலுமசையவருகவே
மறுகுமெமது பிறவியகல வருகவருகவருகவே. (கO)

வருகைப்பருவம் முற்றிற்று.

ஆ பருவம் சு-க்கு திருவிருத்தம்-சுO.

அம்புலிப் பருவம்.

சந்ததமுமிறைவர்விழி தோற்றிநுயிவனிறைவர் தனிநுதல்விழிப்பிறந்தான்
றூவுமொருமானைப் புணர்ந்தாயிவன்குறவர் தருமானையும்புணர்ந்தான்
நந்துகலையீரெட்டு மன்னிநுயறுபத்து நாலுகலையிவனுணர்ந்தான்
நாகமணியீசர்முடி யேறிநுயிங்கிவனு நாகமணிமுடியேறினன்
வந்தபுலவர்க்கமுத மீந்தாயிவன்புலவர் வந்திக்கவமுதமீவான்
வாலிபமறுங்குழவி யாகிநுயிவனென்றும் வாலிபக்குழவியானன்
அந்தவகைதெரிதிநீ தென்றணிகைவெற்பனொ டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (க)

பேதம்.

மேருவினையென்றுநீ வலமாகவருவையிவன் மேருதலைகீழாக்கினன்
விளம்புமுபதேசகுரு விற்பிழைத்தாயிவன் விளம்புகுருவுரைநயந்தான்
சாருவடிவழிதிநீ யிவனுமழியாதுவளர் சாருவடிவாயிருந்தான்
சந்ததமுநீங்காக் களங்கமுற்றாயிவன் சார்ந்திடுகளங்கமில்லான்
சீருடையவத்திரி விழித்தாதுவாகியென் டிக்கினுஞ்சிதறினையிவன்
சிவனுதற்கட்டழற் பொறியாய்த்தருப்பையிற் சேர்ந்துமகவுருவமானன்
யாருமுணர்கிற்கதிக மாந்தணிகைவெற்பனொ டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே (உ)

உரோகணியிடத்ததிக மோகமானுயிவனு மொளிராரல்பாலுவந்தா
னுயர்தலையுவாவினிற் கலையழிந்தாயிவனு முயர்தலையுவாவிலழியான்
சராசரவுயிர்க்குணவு நல்கிஞய்ஞானியர் தமக்கழிவில்வீடளித்தான்
றனிநாளினுக்கரச ஞகிஞயிவனமரர் தங்களுக்கரசனுனன்
இராவினிடைவானத் தெழுந்துதிரிவாயிவ னிராப்பகலிலாவிடத்தான்
இழிவிலாச்சிறுவிதி சபித்திடப்படுவையிவ னெழில்விதியினைச்சிறைசெய்தான்
அராவினுக்கஞ்சா மயிற்றணிகைவெற்பனே டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௩)

தானம்.

தக்கனிடுசாபந் தவிர்த்திடுவனரைதிரைக டாங்குமுடலுங்கூனிமே
சாய்ந்துகிழமாகிநீ சாந்துயருநீக்குவன் சகலகலையுந்தெரித்த
மிக்ககுருவில்லைப் பிழைத்தபழிநீக்கிடுவன் மெய்க்களங்கமுமறுப்பன்
வெங்கதிர்க்கஞ்சியொளி யவியாமலருளுவன் விடவரவினச்சறுப்பன்
பக்கமிருபாலுமுன் பக்கமேபோலவளர் பான்மையுமறிந்துதவுவன்
பைங்கூழினுக்கிறைமை யல்லாமலுலகுபதி ஞலினுக்கிறைமைதருவன்
அக்கதைதெரிந்துதணி கைக்கிறைவனோடமர்ந் தம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௪)

புறவிருளைநீக்கியிடு முனதுநெஞ்சகலாது புக்கவிருளைத்துரப்பன்
பொங்குமலைகடல்கண்டு மகிழுனக்கலையாத பூரணக்கடலளிப்பன்
குறைமதியமாமுனக் கருண்ஞானமோனநிலை குலவுநிறைமதியளிப்பன்
கொடியவரவுக்கஞ்சு முன்றனக்குலகங் கொடுங்கயிற்றரவாக்குவன்
மறுகமுதவுருவாகு முன்றனக்கழியாத வாய்முதமொழியீகுவன்
வானெலாமுலவிடு முனக்கரியசிற்கதன வானமுறுநிலையளிப்பன்
அறுநிபெறுவென்சொலைவி னய்த்தணிகைவெற்பனே டம்புலீயாடவாவே
அறிவாளர்சித்தமுறு மறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௫)

வேறு. தண்டம்.

சேவூருஞ்சிவனீர்மேவுஞ்சடை சேர்வாய்நன்றிதுவானாலுங்
தேனார்பைங்கழைபூவாரம்பிறை சீர்சால்வெண்குடையானாலுங்
காவாழிந்திரன்வானோர்நுங்கமுன் கால்வாய்பொங்கமிர்தானாலுங்
கானாரும்பயிரூணாகும்படி காய்வாய்தண்கதிரானாலு
நீவாவென்றிவனோதாமுன்பெதிர் நீதான்வந்திலையானாலியல்
நீள்காலின்றனையோவாயம்புய நேராகுந்துயரீவாநூல்
மாவார்பைங்கழுநீர்வாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்றுகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (௬)

தாயாயின்பருள்செய்வாவென்றலுந் தாழ்வாய்வந்திலைபோவாயேற்
ருய்வாய்வந்தலைமோதா நின்றிருள் சார்வாய்வஞ்சகஞ்சீயுந்
தேய்வாய்வெங்கயநோயால்வெங்கதிர் சேர்போதுன்கதிர்வீவாயே
தீயாரும்பணிவாயாலுண்டிடர் தீராதங்குழல்வாய்வானிற்
றூய்தாநின்குருமாலாமங்கனை சூதால்வந்தணைசோராநீள்
சோமாபெண்பழிபோமாறுஞ்சறை சூழாவண் வடிவாமாறு
மாயாதொண்கமழு நீர்வாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (எ)

வேருகுஞ்சுரர்மாயோனண்புறு வேதாவுந்தொழுதேயெகி
வீடார்தம்பதிசோமாவொண்கதை மேலோருஞ்சொலவோர்வாய்நீ
கூருமுன்வருவாயேனன்றருள் கூர்வாய்வண்புகழ்சேர்வாயே
கூசாதன்பொடுநீவாவெம்பணி கோளாரும்பகைதீர்வாயே
சீருவந்தெதிர்மாய்சூரன்செரு தீராநின்றதுமாபாவந்
தேயாநின்றதுவாழ்வீகின்றது தேனுருஞ்சுனையார்பானல்
மாருதம்புவியோர்தாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (அ)

வேறு.

வானிலுறுவோரந்தணர்கள் வாடியழுதேதுன்புறலு
மாயைதருசூரன்சிரமும் வாழுமரிமாவின்சிரமுந்
தானமுடிதோயுங்கிரியுந் தாருகனும்வீழும்படிமுன்
சாடுமயிலேவுங்கரநீ டாள்கடொழுவாரம்புவியில்
ஊனமிலராலிங்குவரோ தோடியுழல்வாய்நன்றலவே
யோதுமுன்நீவந்திலையே லூனமுறுவாயங்கதனு
லானையினமாருந்தணிகை யாடவருவாயம்புலியே
ஆறுமுகனோடிங்கொருநீ யாடவருவாயம்புலியே. (கூ)

வீடுபெறலாமன்பர்பெறு மேன்மைபெறலாஞ்செங்கதிர்முன்
வீறுபெறலாமெங்குமுழல் வேலைதவிர்வாழ்வும்பெறலா
மாடுபெறலாநொந்தழியா வாய்மைபெறலாமின்பசுக
வாரிபெறலாம்வெம்பணியின் வாதையறலாமுந்தைமுயற்
கூடுமறலாம்பெண்களவிற் கூடுபழிபாவந்தெறலாம்
கூனுமறலாம்வந்திடெனக் கூறுமுனநீவந்தனையே
லாடுமயில்சூழ்தென்றணிகை யாடவருவாயம்புலியே
ஆறுமுகனோடிங்கொருநீ யாடவருவாயம்புலியே. (கo)

அம்புலிப்பருவம்-முற்றிற்று.

ஆகப்பருவம் எ-க்கு திருவிருத்தம்-எo.

சிற்றிற்பருவம்.

அல்லிக்கமலத் தயனுவி லமருங்காயத் திரிமானு
மவனிமுழுது முடிசுமக்கு மனந்தனிரண்டா யிரநாவுஞ்
சொல்லற்கரிய புகழ்நிலவுந் தொலையாச்சூரன் றனைவென்ற
தோற்றம்படைத்தீ ரேழிலகுந் துயர்கூர்பாவ விருளகற்றுங்
கல்விக்கடலே நின்பெருமை கற்றோர்க்குதவு நற்றுணையே
காவிலரச னருள்பிடியுங் கானக்குறவர் தருபிணையுஞ்
செல்வக்கரத்தால் வருடடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணூர்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௧)

கங்கையலைமிக் குறப்புடைத்துங் கயத்தினலர்தா மரைமிதித்துங்
கானக்குறமான் புனத்துழன்றுங் கவினூர்செச்சை விலாவுதைத்தும்
மங்கையுமையாண் மடித்தலத்து மணிமேகலைக்கல் லுறத்தளர்ந்தும்
மையார்களத்தன் றிருமார்பில் வனைந்தகேழன் மருப்பலைத்துந்
திங்கடவழுங் கொடுமுடிகள் செறியுமலைக டொறுநடத்துந்
தேவர்புனைமா மணிமகுடந் தேய்க்கச்சிவந்து மாம்பையர்கள்
செங்கைவருடுஞ் சீறடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணூர்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௨)

வேறு.

கானத்திறைவா மலைக்கிறைவா கயிலைக்கிறைவா கலைக்கிறைவா
கமலத்திறைவன் செருக்கொழித்த கருணைக்கிறைவா மகத்திறைவா
வானத்திறைவா மறைக்கிறைவா மயிலுக்கிறைவா வருடைமிசை
மன்னுமிறைவா செங்கடப்ப மாலைக்கிறைவா மதிக்கிறைவா
மோனத்திறைவா மயிற்கிறைவா மொய்ம்பார்கோழிக் கொடிக்கிறைவா
முனிவர்க்கிறைவா வேதாந்த முத்திக்கிறைவா முடிவிலின்பத்
தேனக்கலர்பொற் சேவடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணூர்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௩)

வந்தித்திடுவோ முப்பொழுதும் வழுத்தியிருப்போந் திருப்புகழை
வலம்வந்திடுவோ நின்கோவில் மலருந்தருவோம் பூசனைக்குப்
பந்தித்திடுவோ மைம்பொறியும் பரமென் றுனையே நினைந்திடுவோம்
பாலும்பழமு முவந்தளிப்போம் பணிக்குமுனதே வலும்புரிவோஞ்
சந்திற்புழுகுங் கப்புரமுந் தனிக்குங்குமமுங் கலந்தணிவோஞ்
சலசத்திறையு மலையிறையுந் தண்ணந்திருப்பாற் கடலிறையுஞ்
சிந்தித்திருக்குஞ் சீறடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேணூர்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (௪)

வம்பைப்பொடித்து மான்மதத்தால் வளருமெமது முலைக்கரியை
வயங்கியொளிர்பன் னிருபுயமா மணிக்கந்திறுகப் பிணித்திடுவோம்
பம்பித்தரள முறுவனிலாப் பயிலுநினது செங்கனிவாய்ப்
பவளக்கடிகைத்துவரிதழிற் பழுக்குஞ் சுவைத்தேன் பருகிடுவோம்
நம்பித்துணையென் றொருவரையு நாடோமுனையே நாம்புணர்வோம்
நவிற்றுநினது தேவியர்பா னண்ணுந்துணைச்சே டியராவோஞ்
செம்பொற்கமலச் சேவடியாற் சிறியேஞ்சிற்றில் சிதையேலே
சேஞூர்தணிகை மலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில் சிதையேலே. (ரு)

வேறு.

துயினீங்கிக்கொடு வினைநீங்கிச்சிறை துனிநீங்கிச்சுரர் களிகூரத்
துணைநீங்கிக்கொலு வணைநீங்கித்திரி துயர்நீங்கிக்கரி யிறைவாழ
மயனீங்கிச்சுழன் மனைநீங்கிப்பழ மலநீங்கித்தவர் தவமேவ
மறநீங்கித்தினி பொறைநீங்கப்பல மதநீங்கிப்புவி மகள்வீற
வுயிர்நீங்கிப்புனை யுடைநீங்கிக்கரு குடனீங்கித்தகு வர்கண்மாய
வுரைநீங்கிப்புய வலிநீங்கிப்பிழை யுறநீங்கித்துணை வருமேவ
அயிலேந்திக்கரு மலைபோழ்ந்திட்டவ னடியேஞ்சிற்றிலை யழியேலே
அருடாங்கித்தணி கையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலை யழியேலே. (சு)

தழைபாம்புக்குழை புனைபூம்பொற்கொடி சதிராஞ்சொற்கிளி மகமாயி
சடைதாங்குத்தமி நடைதூங்கற்பிடி தனியாந்தற்பரை சதுர்வேதி
கழையாம்பொற்சிலை மலராங்குற்றிடு கரம்வாய்ந்துற்றவ ளபிராமி
கலைதேர்ந்திட்டவள் மலையான்பெற்றவள் கடுவார்ந்திட்டவள் கலியாணி
யெழிலாரும்பற்பல வுலகீன்றிட்டவ ளினிதாஞ்சிற்சுக முறுவாமி
யென்னையாண்டற்புத வருளீந்திட்டவ ளிடமாம்வித்தகன் விடையூரும்
அழலேந்திக்கொரு மகனும்புத்திர வடியேஞ்சிற்றிலை யழியேலே
அருடாங்கித்தணி கையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலை யழியேலே. (எ)

கொலையேங்கப்பழி வினையேங்கக்குடை தொடியேங்கத்தகு வர்கணீடுங்
குடியேங்கக்கழ லடியேங்கத்தழை குலமேங்கப்பெரு வரமேவும்
நிலையேங்கச்சின மொழியேங்கக்கொடு நினைவேங்கப்புய வலிதானும்
நெடிதேங்கப்புனை முடியேங்கப்படை நிறைவேங்கப்பொறை யறுமாயை
மலையேங்கக்குகை யிருளேங்கப்பொலி வளமேங்கத்தகு வியர்தாமும்
மனமேங்கப்பரி யினமேங்கக்கரி மதமேங்கப்புனல் செறிவாரி
யலையேங்கப்பொரு சிலைவாங்கற்புத னடியேஞ்சிற்றிலை யழியேலே
யருடாங்கித்தணி கையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலை யழியேலே. (அ)

வேறு.

முற்றிலின்மணல்வாரி முத்தொடுமுழுநீல
மொய்த்திடுமெகிலார முற்படுபெனிநீர்கள்
வற்புறுகிழலாடி வச்சிரமுதலான
மட்டவிழ்மலர்மாலை வைத்துறையதுகோலி

நற்றவமுனிவோரு நச்செழிலிளமாதர்
நட்பொடுமெதிர்கூடி நற்றணிகையில்வீதித்
தெற்றியில்விளையாடுஞ் சிற்றிலையழியேலே
சித்திரமயில்வீரா சிற்றிலையழியேலே. (௯)

பற்பலமணியாலும் பச்சிலைமலராலும்
பத்திகொளறைவீடு பக்கமதுறுமேடை
பொற்புறுமணிமாடம் புக்கினிதுறுகூடம்
புத்தமிர்தடுதாதை பொற்கலநிறைசாணீர்
வெற்புறுகுறமாதர் மெய்த்தணிகையில்வீதி
விற்கறிசிறுசோறு மிக்குறவிளையாடுஞ்
சிற்பனுமுளநாணுஞ் சிற்றிலையழியேலே
சித்திரமயில்வீரா சிற்றிலையழியேலே. (௰)

சிற்றிற்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் அ-க்கு திருவிருத்தம்-அ௰.

சிறுபறைப் பருவம்.

கனைகடலுடுத்தபுவி முழுவதுநொடிப்பளவில் கடிதுவலமுற்றசரணு
கமலமலரிற்குடிகொள் பிரமனையடித்துலகு கருணையினளித்தசதுரா
நனையவிழ்கடப்பமலர் குவளையொடுசெச்சைபுனை நலமலிநிகர்த்தபுயனே
நதியரவுகொக்கிறகு பிறைமதிமுடித்தசடை நயனநுதலத்தன்மகனே
வனைகழலரக்கரொடு மயல்புரிபொருப்பினையு மடியவயில்விட்டகரனே
மழையினெடுநற்றவள மதகரிமிசைக்குலவு மகபதிமகட்கினியனே
தினைவளர்புனத்தருவி யிழிதணிகைவெற்பரச சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௧)

கொலைபுரிதைத்தியர்க ளுடறலைகளற்றொழுகு குருதிகள்குடித்துநரிநாய்
குறைபடுமுடற்குநிகர் கரணமொடுசுற்றிவரு குறளிகடமைக்கறுவநீண்
மலைநிகர்பிணக்குவையி னுறுகுடர்புயத்தணியும் வயிரவர்களித்துமகிழ
மருவுகழிமுட்படையை முறைமுறைதிரித்துவய மகளெதிர்நடிக்கவழலார்
உலையுறுகுடத்தினிடை வறைபடுநசைப்பொரிய லுருகுநிணமுற்றுமயிலா
வுறுகழுதுமைக்கொடிகள் வறுமையறவெற்றியயிலொருநொடியில் விட்டமுரு
சிலைமறவர்மொய்த்துவளர் தணிகைநகருக்கரச சிறுபறைமுழக்கியருளே [கா
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௨)

குறைவறுதவத்தையுறு கொடியிடையெயிற்றியர்கள் குலவுநடைகற்பவெகினங்
குளிர்முகநிகர்ப்பவெழுசுனையிடைமுளைத்தவொரு கொடியபதம்வைத்துநிறைநீ
ருறுதவமியற்றனிகர்தருகமலமெத்தைமிசை யுறையுமவர்பொற்பினிழல்போ
லுயர்தவமியற்றிமகிழ் வொடுதழல்வளர்ப்பதென வொளிர்கனல்புடைக்கணெரி
மறுவறுகழைத்தலையின் மயிலினநடிக்கவவர் மருவுகுதலைக்குநிகராம் [யா
மறைதருகுயிற்றொகுதி முகிலினம்வரக்கடிது மவுனமுறுபெற்றிமைகுலாய்ச்
சிறுமிளகுவெற்றிலையி னொளிர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௩)

கழையினுகுமுத்தினில வொழுகுமொளியிற்குவளை கடியிதழவிழ்க்கவளையின்
சதிர்மணியினிற்குமுத முகைபுரிமுறுக்குவிரி கழனியலைதத்துபுனலி
னுழைசிறுகயற்புகுதுமளவிலெதிர்குத்தியிடைநொசிகமுகின்மொத்தகுலைமே
னுகருமுதுகொக்கின்வளை மிடறொடிதரச்சினவி நொடிவரைகுதித்தெழுவரான்
மழையகடுமுட்டிமிசை வருகதிரையெட்டியுயர் மதியமுதுகுத்துவெடிபோய்
மடநடையுடைக்கனக வனவளமுடைப்புவன மடுநடுவிலுற்றகமலச்
செழுமலர்மிசைத்துயிலு முயர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௪)

நடமிடுமயிற்றொகுதி யிசைவளர்குயிற்றொகுதி நடைபயிலனத்தொகுதிபோ
னவிலியறழைத்தினி மழலைமொழிகற்றிளைஞர் நகுநடைபடைத்துமடவார்
தடவரைமுடிக்கணிவர் தாலுறுசுவர்க்கமுறு சசியினெழிலைக்கவர்வான்
றலைமிசைநடிக்கவெழு தகைமையைநிகர்க்குமழை தனதருமலைச்சரிவிலே
படவரமுடிக்கணொளிர் மணிவெயிலெறிப்பவிருள் படுகுகைவிளக்கமெனவே
பயனுநுகரிக்கணமு மயலுறுமரிக்கணமும் பகைமையறவொத்துறைதருந்
திடமுளபொருப்பர்குடி யுறுதணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௫)

வடவரைமுகட்டிலுறு துறுவனுமகத்திறையும் வனசமலருற்றவயனும்
மதியமுமுடுக்குலமு மலர்கதிருமைக்கடலு மகிதலமுமற்றையவரும்
படவரவமெட்டினொடு கடகரிகளெட்டுமவை பயிறிசைகளெட்டுமிறினும்
பயனுறுதவத்தினிலை யழிவரியசித்தரொடு பலமுனிவர்மொய்த்தகுகைசூழ்
மடநடையெயிற்றியர்க ளியலுறுமணிக்கலவ மயின்முகில்வரக்கணிகண்மேன்
மனமகிழ்தரக்குலவி நடமிடுசெதிக்கிசைய வனசரர்கள்கொட்டுதுடியார்
திடமுறுதுகிற்கொடிக ளுயர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்க டெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. (௬)

வேறு.

தழைத்திடுதமனிய மிழைத்திடுமணிவெயிறதைத்திடு மெழுநிலைமேற்
சரித்திடுவனிதையர் முகத்தெழில்கவர்மதி தளைப்படுநுழைவழிபோய்
மழைக்குலமவர்குழல் வனப்பினைநனிகவர் மகிழ்ச்சியின்மழைபொழியும்
வருத்திடுமவரிடை யெழிற்கவர்தருமினு மதத்தொடுநொடியழியுஞ்

செழித்திடுபுரிசைகண் மிசைப்படுகொடிவரி செறித்திடவசைதரலாற்
சிறப்புறவருகதி ரிளைப்புறுதுயர்தவிர் செருத்தணிமலையிறைவா
முழைச்செவிமலையுட லடக்கரையடுசுக முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (எ)

மலைச்சருவினில்வளர் தினைக்கதிரினைநுகர் வரிக்கிளிதனையிதண்மேல்
மறத்தியரணிவிரல் சுழற்றியகவணெறி மணிக்கல்வல்லிசையொடுபோய்
புலத்துறுகடைசியர் களித்திடுகுரவையின் பொழிற்கமுகுறுகுலைமேற்
பொருக்கெனவிழமுதிர் பழத்திரள்பலவிரு புறத்துதிர் தருகனியுஞ்
செலைத்தொடுகதலியின் குலைக்கனிகளுமழி தினைத்திடுமுழவரெலாஞ்
செறித்தனுதினமுழு வயற்றலையெருவிடு செருத்தணிமலையிறைவா
முலைக்குவடசைதர மறத்தியர்நகைசெய முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (அ)

கடைப்படுபிறவியினகப்படுமிருவினை கலக்குறநிலைகுலையாக்
கறைப்படுநரகொடு துறக்கமுமுழறரு கசட்டனையருள்விழியாற்
றடைப்படுமயலினை யறுத்திகலறவொளிர் தனிக்கழனிழலிருவா
சலிப்பறுபாசுக வளக்கரிலெனதுயிர் தழைத்திடவிடுமுருகா
குடத்தினைநிகர்தன மறத்தியரியன்மயில் குறித்தனுதினமருவாக்
குறிச்சியிலுறுகணி மரத்தினிலடர்தரு குகைத்தணிமலையிறைவா
முடக்கியமணிவிரல் பிடித்திடுகுணில்கொடு முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (கூ)

தகைத்திடுபொறிவழி யுகைத்திடுபுலனொடு தடைப்படுமனநிறுவாத்
தவத்திலையனுதின முஞற்றியமுனிவரர் தமக்கெதிர்பிணிமுகமேன்
மிகுத்திடுநறைபொழி கடப்பலரணிதரு விறற்புயமசைதரவே
விணிற்செறிபிடியொடு குறக்கொடியிருபுறம் விருப்புறவருபவனே
திகைத்திடுநிருதர்கள் பகைத்தெதிர்விடுகணை சிதைத்தவர்தலையறவே
செகுத்திடுமிலையயில் பிடித்திடுமறுமுக செருத்தணிமலையிறைவா
முகிழ்த்திடுமணிவிரல் பிடித்திடுகுணில்கொடு முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிரு ளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (க0)

சிறுபறைப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் கூ-க்கு திருவிருத்தம்-கூ0.

சிறுதேர்ப் பருவம்.

அறுபதமிதிப்பமுகை விண்டுதேண்டேன்றுளி யசும்புசலசப்பொகுட்டின்
அரசிளவனஞ்சங்கு வயிறுளைந்தீன்றமணி யவிர்பெடையுயிர்த்தகருவென்
றுறுசிறையகத்துவைத் தடைகிடந்திடுவய லுடுத்தகன்னற்காடுவா
ஞேங்குகமுகைத்தீண்ட வளர்கமுகுதெங்கின்முப் புடையகனியைத்தாவிடச்
செறியிலைமுடத்தாழை யிரவியிரதந்தொடச் செழித்ததண்டைகள்புடைசூழ்
திருநந்தியாறுபுனல் பெருகுகாலூர்தொறுந் திகழ்திருத்தணிகைநாடா
சிறைதவிரவமரருறு குறைதவிர்த்தருள்குமர சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (க)

கவான்மலையில்விளையாடு வனசரர்சிறூர்விளாங் கனியுதிரவேயெறிந்த
கரிவருப்பயல்சூழ மருதமுறுதண்பலாக் கனியினைச்சாடியுழவர்
குவாலுறப்புரியுநெற் போர்மீதுவரையினூர் குழவிமதியொப்பவீழுங்
கொண்டலுருவக்களமர் தருமகார்வானேங்கு கொக்கின்முதிர்கனியுதிரவே
தவாதெடுத்தெறிசங்கு வெள்ளிலங்கனிகளைச் சாடிவனசரர்குடிசைமேற்
றவழுமுழுநிலவெனத் திகழுமதிசயமருவு தணிகையங்கிரிமுருகனே
திவாகரனிவர்ந்துவரு தேர்நாணவொளிர்மணிச் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (உ)

கொந்தூர்மலர்த்தடத் தரவிந்தமெத்தையிற் குடிகொண்டவாழ்க்கையொருவிக்
குடவயிறுளைந்தலறி வாய்விட்டரற்றநீர்க் கோடேறிவயலினூர்ந்து
முந்தூர்புனற்காலி னோடித்தவழ்ந்துழவர் முன்றிலிற்சென்றுமேதி
முதுகிற்றவழ்ந்தேறி யசலநிகர்நெற்போரின் முடிமிசைச்சென்றிறங்கிச்
சந்தூருமலையருவி நீரிலெதிரேறித் தடஞ்சுனையெலாமுழக்கித்
தவருறுமுழைக்குட் டவழ்ந்துமுத்தீன்றுவளை தங்குதென்றணிகையிறைவா
செந்தூரிருந்தவுணர் நந்தூரழித்தருக சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (ந)

சகத்திரத்தோடுவிரி கஞ்சப்பொகுட்டிலுறை சதுமுகவிரிஞ்சனெழுதுந்
தலைப்பொறியனைத்தையு முணர்ந்தசித்திரகுத்தர் சாற்றியகணக்கைவினவி
மிகப்பருத்தோங்கிவளையுங்கருங் கோட்டுமுழை மேவுபிலவாயசெங்கண்
மேதிக்கடாவைக் கடாவிமுச்சிகைமருவு வெள்வேறிரித்துமுகிலின்
வகைப்படவிருட்டுருவ மசனியுரைவாய்ந்துபிறை வாளெயிறிலங்குசண்டன்
வாராமுனென்றனைக் காத்தருடிருத்தணிகை மாமலையில்வாழுமுருகா
செகத்திலுயிர்யாவையு மளித்தவம்பிகைமதலை சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (ச)

தாருகன்றேரினை யுருட்டியரிமாமுகன் றனதுபேய்த்தேருருட்டித்
தாவிலாச்சூரனிந் திரஞாலவிரதந் தகர்ந்திடவுதைத்துருட்டி
வீரரொன்பதின்மர்தே ரொடுபடைத்தலைவர்தேர் வெவ்வேறுபுடைசூழ்தர
மேதினியெனும்பிரம னேறுதேரெங்கும் விரிந்திடுமிரண்டாயிரம்

பேரெனுந்தொகைமருவு பூதவெள்ளத்தினடு பிறழ்மணித்தேரிலேறிப்
பெயர்த்தலையெறிந்திடு கடற்றலைநிசாசரர் பிணக்குவைபடத்தொலைத்துத்
தீரவரிதாஞ்சினந் தவிர்செருத்தணிகையிறை சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (ரு)

மங்குலைத்தீண்டுகொடி மணிமாடமுடிதவழு மதியிளம்பிள்ளைமடவார்
மடிமீதுசிறுகுழவி யெனவுவந்தேறலு மகிழ்ந்துமணிமுறுவல்பூத்துப்
பங்கயமலர்க்கரத் தேந்திவாய்முத்தாடி பஞ்சணையின்மீதுசேர்த்திப்
பாலொடுபழங்கனிந் துதவிமுகமன்சொலி பரிந்துவிளையாடிவாவென்
றங்கணகலும்படி விதித்திடுவிருப்பின லநுதினங்கலைகள்வளரு
மழகியசெருத்தணிகை வரைநினைந்தவர்வினை யறுத்தருளுமாறுமுகவா
செங்கதிர்த்தேர்நாண வம்புலித்தேர்மீது சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (சு)

பேய்த்தேரைநீரெனக் கொண்டுழலுமிரலையிற் பிணித்திடுகயிற்றிலரவப்
பிராந்தியுறுமொருவனிற் சுத்திநிகழிரசிதப் பித்தடைந்திடுபேதையிற்
பூத்தேரினுறுவாழ்வு மெய்யென்றுகருதியான் பொறிவழிச்சென்றுபஞ்சப்
புலனையுமருந்தியா னெனதெனுமகந்தையாற் புன்பிறவியணுகுமலநோய்
நீத்தேர்பெறுந்திரு வடித்தாமரைப்போதி னீழறந்தானந்தமாம்
நித்தபரிபூரண சிதாகாசவெளியிலே நிலைபெறவிடுத்தமுருகா
தேய்த்தேமுடிக்கண்மதி தவழ்தணிகைவெற்பின்மேற் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (எ)

காமக்குரோதமிகு லோபமொடுமோகமுங் கருதிமதமாச்சரியமுங்
கட்டிப்பிணித்துநிரை யத்திலிடுமைம்புலக் காதலுமறத்துறந்து
தாமுற்றிடுந்துற வறத்தினிலைதவறுது தழைகானகத்தடைந்து
சரகருந்திப்பஞ்ச தழலிடையிருந்துநற் றவமியற்றிடுமாதவர்
தோமற்றசிந்தைக் கெட்டாதநின்றிருத் துணைமலர்ப்பதநீழலிற்
றுயராறவிருத்தியெனை யாண்டருள்செருத்தணி சுடர்க்கிரியமர்ந்தமுருகா
சேமித்தமறைநெறிக ளெங்கணும்விளங்கிடச் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதர வருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (அ)

வேறு.

மனத்தொடுமொழியுட லொருப்பட்டடியவர் வணக்கொடுமடிபேண
மலத்தொடுமிருவினை யகப்படுமுயிருள் வசப்படுகிராதடிச்
சினத்தொடுமயல்விழை வரித்திடுபொறிபுலன் சிதைத்தறிவினிலோவாச்
சிவத்திணையடைதர வவத்தைகள்கழிவுறு செயற்கையையெளிதியத்
தனித்தொருமயின்மிசை யிருத்தியகழலொடு தவத்தினர்புடைசூழச்
சலிப்பறவெதிர்வரு மருத்திகொளறுமுக தலத்தியர்குருநாதா
உனக்குறுவலவனு மனத்ததிசயமுற வுருட்டுகசிறுதேரே
உலப்பறுவளமலி செருத்தணிமலையவ னுருட்டுகசிறுதேரே. (கூ)

தரைத்தலைமுனிவர்க ளுரைத்திடுசுருதிக டழைத்தபணிருகாதிற்
றமிழ்க்கடலுறுவிதி தினைத்துணையறிவிலி சலிப்பறுங்கிழைவாலே
விரித்திடுபுகழ்பெறு பிளைத்தமிழொருசத விருத்தமுநனியேறும்
வெளிற்றுருவுறுகரி மிசைக்குலவியகழல் வெறிக்கணுமுறலாலே
குருப்பொலியிமையவ ரளித்திடுமமுதொடு குறத்தியர்தினைமாவுங்
குளிர்ப்புறநுகர்தரு களிப்பொடுமகிழ்பெறு குலப்புதுமலர்வாயா
வொருத்தருநிகரறு செருத்தொழில்வலகுக னுருட்டுசிறுதேரே
யுலப்பறுவளமலி செருத்தணிமலையவ னுருட்டுசிறுதேரே. (௧௦)

சிறுதேர்ப்பருவம்-முற்றிற்று.

ஆக பருவம் ௧௦-இ திருவிருத்தம் ௧௦௦.

சாலி வாகன சகாத்தமா யிரத்தெழு நூற்றொ
டேழு மாண்டிரு பத்துநா ளுனதுன் மதியிற்
கோலுங் குண்டைஞா யிற்றினிற் பிளைத்தமிழ் கொடுத்தான்
மூல வெற்பனுக் கடியனுங் கந்தப்ப முனியே.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச்சந்நிதிமுறை.

இரண்டாவது

தணிகை ஐங்கரமாலை.

கலித்துறை.

உலகத்தைத்தந்த வுமையாடரும்பிள்ளை யும்பர்க்கெல்லாந்
திலகத்தையொத்தவன் சிந்துரனென்னுந் திறலரக்கன்
கலகத்தைநீக்கிய மூஷிகவாகனன் கந்தன்முன்னோ
னலகற்றசெல்வந் தருவான்செருத்தணி யையங்கரனே. (க)

பாபச்சகாய ரிடத்தேயுறவினைப் பண்ணியென்றுஞ்
சோபச்சகாய முறுமனின்பாதத் துணையளிப்பாய்
கோபச்சகாய னெனுமாமுகவனைக் கொன்றெறிந்த
வாபச்சகாய முதல்வாசெருத்தணி யையங்கரனே. (உ)

சொன்னமுமின்பமு மேலானவாழ்வுந் தூரைத்தனமும்
இன்னமும்வேண்டும் வரங்களுந்தந் தெனையேபுரப்பாய்
கன்னலும்பாகு மவலுமெள்ளுண் டையுங்காதலுட
னன்னமுமீயு மடியரைக்காத்திடு மைங்கரனே. (ங)

மானார்கலவி மயக்கத்தினாலு மதிமயங்கி
யூனாருடலபி மானத்தினாலிங் குனைமறந்தேன்
றேனார்கமலத் திருவடிகாட்டிச் சிவமளிப்பா
யானாவறிவு தருந்தணிகாபுரி யையங்கரனே. (ச)

கல்லுமுருகுஞ்சொற் காரிகையாரின்பங் காதலித்து
வெல்லுமரசுங் குறையாதசெல்வமும் வேண்டிநின்றேன்
சொல்லும்பொருளு மெனநிறைந்தெங்கணுந் தோன்றிநிற்பா
யல்லும்பகலு மறவேனெனக்கரு ளைங்கரனே. (ரு)

மானைப்பொருவிழி மங்கையர்பார்வை வலையுட்சிக்கி
யேனையறிவு கலங்கிநின்றேனிடர் நீக்குவையோ
சேனையரக்க ரொடுமாமுகனைச் செருவில்வென்ற
வானைமுகத்தரசே தணிகாபுரி யையங்கரனே. (சு)

வண்டரொடுந்திரிந் துன்றிருப்பாத மலர்மறந்து
தொண்டருறவினை நீங்கிநின்றேன்கதி துன்னுவனோ
மிண்டரெனுமவு ணக்குழுவைத்தெறும் வித்தகனே
யண்டர்பணியுந் திருத்தணிகாபுரி யைங்கரனே. (எ)

கல்லாதபுல்லரைக் கூடியுன்பூசனை கையகன்று
பொல்லாதவீண்பழி பூண்டேன்பிழைகள் பொறுத்தருள்வாய்
வில்லாரும்பொன்மலை மேற்பாரதமுன்ன மேயெழுது
மல்லார்களத்திறை மைந்தாசெருத்தணி யைங்கரனே. (அ)

வஞ்சப்பிறப்பி லலைந்துநின்பாத மலர்துறந்து
பஞ்சப்புலன்வழி போய்த்திரிவேன்பரம் பாலிப்பையோ
கஞ்சக்கிழவன் முதலானதேவர் கருத்திலுறை
யஞ்சக்களத்திறை மைந்தாசெருத்தணி யைங்கரனே. (கூ)

நீங்காதமாயைப் பெருங்கடல்வீழ்ந்து நிலைகுலைந்து
தீங்காயிரமும் புரிவேனையாளுந் திறம்புகலா
யோங்காரத்துள்ளொளி யானவனேயன்ப ருள்ளிருக்கு
மாங்காரவேர்பறித் தாளுஞ்செருத்தணி யைங்கரனே. (க0)

உண்டத்தையே பின்னுமுண்டு முடுத்தத்தையேயுடுத்துங்
கண்டத்தையேபின்னுங் கண்டேயுழலுங் கயவனையாள்
பண்டத்தையேநிகர் சொல்லுமையாள்பெற்ற பாலகனே
அண்டத்தையாளுந் திருத்தணிகாபுரி யைங்கரனே. (கக)

மண்ணாளவேண்டினும் பாதலமாள மதித்திடினும்
விண்ணாளவேண்டினு முன்னருளேயன்றி வேறிலைகாண்
கண்ணாளனேசெழுங் கற்பகமேவெங் கயமுகனே
யண்ணாமலையருளுந் தணிகாபுரி யைங்கரனே. (க௨)

கையாற்றொழுதிலன் கண்ணாலுன்மேனியைக் கண்டறியேன்
பொய்யாமுடலெடுத் தேந்திழையார்மயல் பூண்டுநின்றேன்
மெய்யாகியதெய்வ நீயன்றிவேறில மேதினிமே
லையாதிருத்தணி காசலமேலுறை யைங்கரனே. (கங)

காணவும்வேண்டுநின் பாதாரவிந்தத்தைக் கண்டுதுதி
பேணவும்வேண்டு மொழியாதவின்பப் பெருங்கடல்யான்
பூணவும்வேண்டு முனையேவழுத்திய புண்ணியருக்
காணவந்தீர்க்குஞ் செருத்தணிமால்வரை யைங்கரனே. (கச)

இத்தனைநாளுனை யேயிரந்தாலு மிரங்கியருள்
வைத்தெனையாளும் வகையுரையாயிது வண்மையதோ
முத்தனையாய்செம் மணியனையாய்பச்சை மூங்கிறந்த
வத்தனையேவலஞ் சூழ்தணிகாசலத் தைங்கரனே. (௧௫)

உன்னையருச்சிக்கி லெல்லாத்துயரு மொழிந்துசெல்வ
மன்னுமெனுமறை வாக்கியமெய்யெனில் வந்தடுத்த
வென்னையடியரிற் கூட்டாதிருப்ப திழிதகவே
யன்னையுமையருள் செல்வாசெருத்தணி யைங்கரனே. (௧௬)

நொந்தகணைந்துனை யேநினைத்தாலுங்கண் ணோக்கருளி
வந்தகணைந்திட லென்றெனைத்தேற்றிநல் வாழ்வளிப்பாய்
கந்தகந்தோன்றிய மான்மருகாவெங் கயமுகனு
மந்தகனைத்தடிந் தாய்தணிகாபுரி யைங்கரனே. (௧௭)

நின்னருளெய்திடில் வாசவனாகுவ னீசனுமே
யுன்னருளின்றெனில் வாசவனீச னுருவெடுப்பா
னின்னதுகண்டுனை யேயடுத்தேன்வர மீந்தருள்வா
யன்னமுஞ்சொன்னமு மீதணிகாபுரி யைங்கரனே. (௧௮)

ஈகுவையோவர மீயாதிருப்பை கொலோவெனயான்
மாகவலைப்படலாமோவெனக்குநல் வாழ்வளிப்பாய்
பாகுவிலைப்படுஞ் சொல்லுமையாள்பெற்ற பாலகனே
யாகுவின்மேல்வருந் தென்றணிகாபுரி யைங்கரனே. (௧௯)

கண்டிலையோவுன் னடியேன்படுந்துயர் கண்டவரு
முண்டிலையென்றொரு சொல்லாகிலும்வந் துரைத்திலையோ
தொண்டிலனோவுனக் கெந்நாளுமன்பின் றொடர்பிலனோ
யண்டிலையோவுயிர் தோறுஞ்செருத்தணி யைங்கரனே. (௨௦)

கொன்றேயுயிர்க்கொலை செய்தாலுமென்றன் கொலைப்பழியை
யின்றேதவிர்த்துன் னருள்புரிவாயென் றிரந்துநின்றே
னன்றேபுரியினுந் தீதேபுரியினு நானிலத்தி
லன்றேயுயிர்த்துணை யாகுஞ்செருத்தணி யைங்கரனே. (௨௧)

மெய்யானதெய்வமென் றுன்பாதநெஞ்சில் விடாதிருத்திப்
பொய்யானசெல்வமும் போக்கிநின்றேனது போயிடினுஞ்
செய்யானசிந்தையி லுண்டாங்கவலையைத் தீர்த்தருள்வா
யையாநத்த னருள்தணிகாபுரி யைங்கரனே. (௨௨)

கொடுத்தவர்க்கேபின்னுஞ் செல்வங்கொடுத்தனை கும்பிட்டுன்சீர்
தொடுத்தவற்கேயருள் செய்யாதிருப்பதென் சொல்லியிடாய்
கெடுத்தவர்க்கேவருங் கேடென்பரால்மதி கெட்டவர்க
ளடுத்தவர்க்கேயருள் செய்யுஞ்செருத்தணி யைங்கரனே. (௨௩)

காலோகடுத்திட வோடிவந்தேனுனைக் கைதொழுதேன்
மாலோமனத்திற் பெரிதுடையேனுன்னை வந்தித்தென்றும்
பாலோடனமும் பருகேனிரவினிற் பாயுறங்கே
னாலோசனைசெய்ய வேண்டாஞ்செருத்தணி யைங்கரனே. (௨௪)

கத்திமுகத்தி னடிப்பவர்போலுனைக் காதலித்தோர்
பத்திமுகத்தி லெழுஞ்சுடரேயருட் பார்வையருள்
சத்திமுகத்திரு கண்மணியேசிவன் றன்மகனே
யத்திமுகத்தவனே தணிகாபுரி யைங்கரனே. (௨௫)

சாவேதனைசொல்லத் தான்முடியாது சநநமுறு
மாவேதனையுமம் மாத்திரமேயிடை மன்மதனெய்
பூவேதனைசொல்லப் போமோவறுமையிற் புக்கழுந்து
மாவேதனைதவிர்த் தாள்வாய்செருத்தணி யைங்கரனே. (௨௬)

கொம்புலவும்புழுக் கூடாமுடலங் கொடுஞ்சமர்செய்
செம்புலமாக்கித் தினந்தினம்போர்செய்யுஞ் சித்தசனார்
வம்புலவுங்கொங்கை யார்மயல்பூட்டி மயக்கியிடு
மைம்புலனென்வச மாமோசெருந்தணி யைங்கரனே. (௨௭)

வேளாக்கியமயல் யாவையும்போக்கி வினையனைத்துந்
தூளாக்கிமேல்வருந் துன்பங்கணீக்கிநின் றொண்டரை
கேளாக்கியேநமன் கிட்டாமற்றாக்கிநின் கீர்த்திசொல்லு
மாளாக்கிக்கொண்டெனை யாள்வாய்செருத்தணி யைங்கரனே. (௨௮)

தீகண்டபஞ்சென வெந்திடும்யான்புரி தீமையெல்லா
நீகண்டனையெனின் மேலானவாழ்வு நிலைபெறுமே
பாகண்டுசொல்லுமை பாலாகடல்வண்ணன் பங்கயத்தோ
னாகண்டலன்பணிந் தேத்துஞ்செருத்தணி யைங்கரனே. (௨௯)

மறுகுந்துயரொடு மைந்தரில்லாமல் வருந்தியுனைக்
குறுகுங்கொடிய விடர்களைந்தின்பங் கொடுத்தருள்வா
யிருகுந்தயிருறி யெட்டியுண்டோனுக் கெழின்மருகா
யறுகுந்திருமுடி வைப்போய்செருத்தணி யைங்கரனே. (௩௦)

கோசாரமென்பர் கொடுவினையென்பர்செய் குற்றமென்பர்
மாசாருநாளென்பர் மாமாயைதானென்பர் மற்றிவைக
டேசாருநீகடைக் கண்ணோக்களித்திடிற் சிந்திடுங்கா
ஞசாரவீன ரறியாச்செருத்தணி யைங்கரனே. (௩௧)

நிலங்காவல்வேண்டினு நேரிழைவேண்டினு நீண்டசெம்பொற்
றலங்காவல்வேண்டினுஞ் சந்ததிவேண்டினுஞ் சத்துருவின்
குலங்காதவேண்டினு முன்னையல்லாதொன்றுங் கூடரிதே
யலங்காரவேலனுக் கண்ணுசெருத்தணி யைங்கரனே. (௩௨)

வீட்டுக்கிசைந்த மனையாளுமக்களும் வேண்டியுன்சீர்ப்
பாட்டுக்கிசைந்த படியுரைத்தேன்வரம் பார்த்தளிப்பாய்
கோட்டுக்கிசைந்த கரிமுகனேசெம்பொற் கூடந்தனு
ளாட்டுக்கிசைந்தவன் மைந்தாசெருத்தணி யைங்கரனே. (௩௩)

மிடியாலுயிர்படு வேதனைதானும் வினையிரண்டான்
முடியாச்சநநமு மும்மலவாதையு முற்றுமற
வடியாச்சலதி யெனுமருட்பார்வை வழங்கிடுவா
யடியாருளத்துற் குடியாஞ்செருத்தணி யைங்கரனே. (௩௪)

கவிகாரியிந்தரி சேய்புதன்பொன்னவன் காரரவங்
குவிகாரியங்கள்பொல் லாங்குசெய்யாதன்பு கூர்ந்தளிப்பாய்
நவிகாரியாம்விழி வல்லைபையோடு நயந்திருந்து
மவிகாரியாயொளிர் தேவேசெருத்தணி யைங்கரனே. (௩௫)

தவமொருகோடி புரிந்தோர்க்கெட்டாத செந்தாமரைத்தாள்
பவமொருகோடி புரிந்தவென்னஞ்சகம் பாய்ந்திடுமோ
சிவமொளிர்காசியிற் றுண்டிவிநாயகச் செல்வனென்றே
யவமதிநீக்கிய வாழ்வேசெருத்தணி யைங்கரனே. (௩௬)

தானந்தவம்பல செய்யேனடுநிலை சார்ந்துநில்லே
னீனந்தருமப சாரங்களேசெயு மிச்சையுளே
ஞானிந்தவீண்பழி யாலழியாதிந்த நானிலத்தி
லானந்தவாழ்வளித் தாள்வாய்செருத்தணி யைங்கரனே. (௩௭)

போகாதபாவங்கள் போக்குவிப்பாயறம் பூணவைப்பாய்
சாகாதநல்வர மீந்திடுவாயன்பு சாரவைப்பாய்
மாகாதிபரும் வணங்கச்செய்வாயிந்த மண்ணிலுன்ன
லாகாதகாரிய முண்டோசெருத்தணி யைங்கரனே. (௩௮)

மாதாவுந்தந்தையு மைந்தருஞ்சுற்றமும் வாழ்வுமுன்றன்
பாதாரவிந்தமல் லாலினிவேறொரு பற்றுமிலேன்
வேதாவும்வாசவ னுந்திருமாலும் விழுந்திறைஞ்சு
மாதாரமூலத் துறைவாய்செருத்தணி யைங்கரனே. (௩௯)

சாங்காலமுமுடல் வேங்காலமுமதிற் றங்குமுயிர்
போங்காலமுமய னீங்காதெமன்கரும் போத்திலிவர்க்
தோங்காலகால மெனவரும்போதெதி ரோடிவந்தே
யாங்காலமாக்கி யருள்வாய்செருத்தணி யைங்கரனே. (௪0)

சொன்னமுந்தாநல்ல தோகையுந்தாநற் றுரைத்தனந்தா
வன்னமுந்தாபெரு வாழ்வையுந்தாசிறு மைந்தருந்தா
வின்னமுஞ்சென்ம மெடுத்தாலொருவருக் கீகையுந்தா
வன்னமுந்தாமுத்தி யுந்தாசெருத்தணி யைங்கரனே. (௪௧)

பட்டாங்குபேசும் பரமாதரிச்சையைப் பற்றறநான்
விட்டாங்குநின்கழல் சேர்வதென்றோகஞ்ச மென்மலர்ப்பூ
மொட்டாங்குவிமுலைச் சித்தியும்புத்தியு முன்பணிந்தோர்க்
கட்டாங்கயோகந் தருந்தணிகாபுரி யைங்கரனே. (௪௨)

மீயுயர்வான்சுழல் முப்புரமீது வெகுண்டிறைவன்
மாயிருஞாலத் திருத்தேரிலேறி வரும்பொழுது
நீயிருசோடச் சொடித்தாயெனக்கண்டு நின்றுதொழு
தாயிரநாமமு மோதுஞ்செருத்தணி யைங்கரனே. (௪௩)

செம்போதுநந்த வனத்துக்குநீரென்று தேவரிறை
பைம்போதினுலருச் சித்திடக்காக்கையிற் பாய்ந்துசையக்
கும்போதயமுனி கும்பத்தைச்சாய்த்திடக் கோபமகன்
றம்போதியுண்டவ னேத்துஞ்செருத்தணி யைங்கரனே. (௪௪)

மோகாவிகாரத்தின் மூழ்கிக்கிடப்பினு முண்டகத்தாள்
மாகாதல்கொண்டனன் மெய்யாகப்பேசி வரமளிப்பாய்
தேகாபிமானத்தைத் தீர்ந்தேயருச்சனை செய்பவர்மே
லாகாமியஞ்செல வொட்டாய்செருத்தணி யைங்கரனே. (௪௫)

பஞ்சலங்காரப் பதமாதர்மேல்வைத்த பார்வையைநின்
செஞ்சிலம்பார்கழற் போதில்வையாதுழல் தீவினையே
னெஞ்சிலும்வீற்றிருந் தாயடியேன்பிழை நீக்கியினி
யஞ்சலென்றுளத் தகாதோசெருத்தணி யைங்கரனே. (௪௬)

சந்தானங்கற்பகந் தண்பாரிசாதந் தடஞ்சினைசேர்
மந்தாரம்பைம்பொன் மலர்தேவதார மணிநிதியா
னொந்தாரிளைப்பற வேண்டிற்றெல்லாந்தரு நோக்கமெனு
மந்தாமரையருள் செய்வாய்செருத்தணி யையங்கரனே. (௪௭)

செம்பஞ்சியூட்டிய நூபுரத்தாண்மலர் சித்திபுத்தி
யும்பங்கிருபுடை மேவிடமூடிக ஷூர்திமிசைக்
கொம்பொன்றுமானை முகத்தொடுகாட்சி கொடுத்தளிப்பா
யம்பைந்திஞேன் மைத்துனனே செருத்தணியையங்கரனே. (௪௮)

தண்டங்கரங்கொண் டெருமைக்கடாமிசை தானிவர்ந்து
சண்டன்வரும்பொழு தஞ்சலென்றுளத் தகுமொருநீ
கண்டம்பலவித மாயிருபத்தொரு காரணத்தா
லண்டம்படைத்தழித் தாளுஞ்செருத்தணி யையங்கரனே. (௪௯)

சூலமும்பாசக் கயிறும்பிடித்தெம தூதர்வந்து
காலமும்பார்த்துக் கணக்கிட்டுயிர்வவ்வுங் காலத்திலுன்
கோலமுங்காட்டிநின் பாதாரவிந்தங் கொடுத்தருள்வா
யாலமுண்டோனருள் மைந்தாசெருத்தணி யையங்கரனே. (௫0)

நோவணங்கிளை யிருமல்குளிர்வெப்பு நோய்முடங்கூ
னுவணஞ்சேர்விக்க லாவிறவாம னயந்தளிப்பாய்
தூவணங்கூர்சங்கு முத்தந்துகிருப்புந் துன்னிடலா
லாவணமோதைக் கடலாஞ்செருத்தணி யையங்கரனே. (௫௧)

கற்பகலாத மனையாளுமக்களுங் காசினியும்
பற்பகலாயுறு மாயுளும்வேண்டிநின் பாலடைந்தேன்
வெற்பகலாவர வின்மணிராசியின் வெங்கதிரா
லற்பகலாகி யொளிர்தணிகாபுரி யையங்கரனே. (௫௨)

நம்பலனுன்றிருப் பாதாரவிந்தத்தை நாரியர்வாய்த்
தம்பலமுண்டு தடுமாறுமென்னைத் தடுத்தருள்வாய்
வம்பலங்கற்குழல் வேசையராடு மயிலினம்போ
லம்பலஞ்செற்றியி லாடுஞ்செருத்தணி யையங்கரனே. (௫௩)

பூவிரைந்தேவலஞ் செய்தாலுந்தீர்த்தங்கள் புக்கிடினும்
பாவிரைந்தோதி யுனைப்பணியார்வெம் பவமறுமோ
மாவிரைக்காந்தளங் கைநீட்டவேங்கை மலருடன்பொன்
னவிரையும்பொன் சொரிதணிகாசலத் தையங்கரனே. (௫௪)

தங்காந்தரைத்தவிர் வேசையர்போலநின் றன்னைமறந்
திங்காந்துணையென் றிமையோர்பலரையு மேத்திநைந்தேன்
செங்காந்தள்வானிற் செலுமதியைத்தொடர் தீயரவி
னங்காந்தெழுந்து மலர்தணிகாசலத் தைங்கரனே. (௫௫)

தரைப்பாற்புரந்தர னோட்டியசோலை தழைப்பமுன்னந்
திரைக்காவிரிதந்த சீர்போலருள்வெள்ளந் தேக்கியிடாய்
வரைச்சாரல்வேட மடவார்வதன மதியினைக்கண்
டரக்காம்பல்விள்ளுந் தடஞ்சூழ்செருத்தணி யைங்கரனே. (௫௬)

இந்தனத்தங்கி யெனவுயிர்தோறு மிருந்துமென்றன்
சிந்தனைக்குற்ற துயரறியாததென் செப்பிடுவாய்
சந்தனக்கோடிந் தெனுங்கலிற்றேய்க்கவிண் சார்மடவா
ரந்தனக்கோட்டி லணிதணிகாசலத் தைங்கரனே. (௫௭)

கஞ்சனைக்கண்ணனை விண்ணவர்கோனைக் கடுந்துயர்செய்
நஞ்செனத்தோன்றுசிந் தூரனைக்கொல்விற லோன்மறவேன்
றஞ்செனக்காளையர் நெஞ்சிற்புதைபொரு டன்னைமின்னா
ரஞ்சனக்கோல்கொண் டகழுஞ்செருத்தணி யைங்கரனே. (௫௮)

ஈரேழுலகும் பெயர்த்திடுமூடிகத் தேறிநின்றா
யோரேழ்பவத்துழ லென்னெஞ்சமூடிக மூர்ந்திடுவாய்
பேரேழ்முனிவ ரருள்போலத்தீர்த்தம் பெருகிநித்த
மாரேழ்சுனைக ளழகாஞ்செருத்தணி யைங்கரனே. (௫௯)

பாரத்துவாசன் மகனாய்முனிவர் பயந்தவிர்த்தாய்
பேரத்துவாசம்பந் தத்தாலுழலுமென் பித்தறுப்பாய்
நீரத்துவாமதி மண்டலமீது நிலவுவெளி
யாரத்துவாதச வந்தச்செருத்தணி யைங்கரனே. (௬௦)

நல்லவரேணியன் புத்திரனாயருள் நல்கினைவீ
டொல்லவரேணி யெனுஞானமொன்றெனக் கோதியிடாய்
வில்லவரேணியின் மேற்சரந்தூண்ட வெருண்டுதுள்ளி
யல்லவரேணியைத் தாண்டுஞ்செருத்தணி யைங்கரனே. (௬௧)

நீவலங்கோட்டினிற் பாரதந்தீட்டினை நித்தலுநான்
மேவலங்கோட்டினு மேருமுற்றாதிடம் வீடருள்வாய்
நாவலங்கோட்டுக் கனியூநல்கிவிண் ணாட்டரம்பை
யாவலங்கோட்டுஞ் செருத்தணிகாபுரி யைங்கரனே, (௬௨)

நிழல்காட்டியசிறு கட்கடைகாட்டியென் னெஞ்சிலிரு
கழல்காட்டி யுன்றிருமேனியுங் காட்டிக்கதியளிப்பாய்
தழல்காட்டியதினை மேய்ந்துசெங்காந்தளைத் தாழ்கரிக
ளழல்காட்டியதென வஞ்சுஞ்செருத்தணி யையங்கரனே. (௬௩)

நாமணக்கும்புக ழோதவுநின்னுரு நாடவுங்கண்
டேமணக்குங்கழல் போற்றவுமென்கை சிறந்தருள்வாய்
பூமணக்குந்தடஞ் சாரலில்வேங்கையைப் புல்லியெழுந்
தாமணக்கும்புகழ் மேவுஞ்செருத்தணி யையங்கரனே. (௬௪)

எரியுந்திரியு மெனவேயென்னெஞ்சத் திருப்பினுமால்
பரியும்புரியுங் கருணையென்றேயுன் பதந்தொழுவே
னரியும்பரியுமொன் றாக்கியகோன்றொண்டர் நற்பணியே
யரியுங்கரியும் புரிதணிகாபுரி யையங்கரனே. (௬௫)

தெரிக்குமடியவர்க் கொன்றுங்கொடாதவர் தேடுசெம்பொ
னெரிக்கும்பசாசுக்குங் கள்ளர்க்குங்கொள்ளைக்கு மீந்தழிவார்
கரிக்கும்புலிக்குங் கரடிக்குமானின் கணத்தினுக்கு
மரிக்கும்பகையகலுந் தணிகாசலத் தையங்கரனே. (௬௬)

செவ்விக்கணிகையர் மாலுழப்போர்நின் செயலுணரார்
கவ்விச்சருமந் தினுநாயமுதத்தைக் கண்டிடுமோ
தவ்வுற்றவெற்புகள் நீலமுப்போதலர் சத்தியத்தா
லவ்வித்தழுக்கறுக் குந்தணிகாசலத் தையங்கரனே. (௬௭)

வடியொன்றுவேற்கண் மடவார்கலவிக்கள் வாய்மடுத்தேன்
மிடியொன்றுபாவ வினைதவிர்த்தென்னுள மேவியிடாய்
துடியொன்றுசங்கரன் கைத்தலைமுத்தலைச் சூலமென
வடியொன்றுமூன்றுக மாகுஞ்செருத்தணி யையங்கரனே. (௬௮)

தமரகத்தாயென் றுனைப்பழியாதெழிற் றையலர்பாற்
கமரகத்தூற்றிய பால்போல்வறிது கழிந்ததென்னாள்
குமரகத்தாவுக்கு வெஞ்சினச்சூரெனுங் கோளரக்க
னமரகத்தாக்குஞ் செருத்தணிகாசலத் தையங்கரனே. (௬௯)

விநாயகனென்னு முனைப்பணியாமல் வெறுவியரை
யெனாயகனென்று துதித்துழல்வேன் வினையென்றறுமோ
செனாயகன்றண்சுனைக் காவிமுப்போதுஞ் செழும்பகலி
லனாயகனின்றி யலர்தணிகாசலத் தையங்கரனே. (௭௦)

கரகத்தையொத்த முலைமடவாரெழிற் காட்டிலலை
விரகத்தைநீக்கிநின் பாதாரவிந்தநல் வீடளிப்பாய்
சரபத்தைத்தாக்கிடும் வெம்புலிவேழத்தைத் தாக்குமரி
யரவத்தைக்கண்டஞ்சி யோடுஞ்செருத்தணி யைங்கரனே. (எக)

திடவியமூலக் கணபதியாமுனைச் சிந்தைசெய்யா
திடவியபூதல மானிடர்யாரையு மேத்திலைந்தேன்
றடவியவீணை யிசைகேட்டசுணங் கடங்குசந்தத்
தடவிகள்சூழ் திருத்தணிகாசலத் தைங்கரனே. (எ௨)

திங்களராவெண்ணெய் நீர்தாமரைசெச்சை சென்னிவைத்தும்
நுங்கனலாசுர வெம்மைக்கறுகு நுகர்ந்தணிந்தாய்
தங்கியசாரற் றனிவேய்நிறைமதி தாவிநிற்ற
லங்கசன்வெண்குடைக் காம்பாஞ்செருத்தணி யைங்கரனே. (எ௩)

நிலநீர்நெருப்பு வளிவான்மதியரி நீண்டவுயிர்
குலமானவெட்டுரு வாமுன்றிருவடி கூட்டியிடாய்
தலமார்திருநந்தி யாற்றினில்மூழ்கும் தவத்தினருக்
கலமார்புறப்பொழிக் குந்தணிகாபுரி யைங்கரனே. (எச)

பங்கேருகன்றரு பாவையர்செங்கடைப் பார்வைதந்துன்
கொங்கேருகவடித் தாமரைநீழற் குடியளிப்பாய்
தெங்கேருகக்கனி சிந்திடும்வாளை செறிதடஞ்சூழ்ந்
தங்கேருகங்க ளழியாச்செருத்தணி யைங்கரனே. (எரு)

விண்ணோரும்பாதல நாட்டுறைவோரு மிம்மேதினியா
மண்ணோருநீமுதற் றெய்வமென்றேயுனை வாழ்த்திடுவார்
பண்ணோருஞ்சொன்மட வாரிடைக்கஞ்சிமுன் பார்த்துமுழை
யண்ணோருங்கேசரி வாழ்தணிகாசலத் தைங்கரனே. (எசு)

தேடற்கிசைந்திடுஞ் செம்பொனுங்கல்வியுஞ் சித்தியெட்டுங்
கூடற்கிசைந்திடு முத்தியும்வேண்டிடற் கொடுப்பவனீ
பாடற்கிசைந்திடும் விஞ்சையர்வீணை பயிலிசைகேட்
டாடற்கிசைந்த மயில்செருத்தணி யைங்கரனே. (எஎ)

செவிநாசிகாத்திரங் கண்வாயெனும்பொறி சீர்கலங்கிக்
குவிநாடிமூன்றுங் குலைந்திடும்போதுனைக் கூடவருள்
புவிநாடுமம்பலங் கச்சியண்ணாமலை பூங்குடத்தை
யவிநாசியாகுஞ் செருத்தணிகாபுரி யைங்கரனே. (எஅ)

சாக்கிரஞ்சொப் பனத்தோடேசுழுத்தி தகுந்துரியந்
தாக்குமதீத மெனுமைந்தவத்தை தவிர்த்தெனையாள்
போக்கருஞ்சிந்துவைச் சிநதும்படியுயிர் போக்கிவெற்றி
யாக்கிடுமோமுக னேதணிகாபுரி யையங்கரனே. (எக)

கோங்காரரும்பு முலையார்மயக்கிற் குலைந்துமன
நீங்காப்பிறப்பி லலைவேனையாள நினைந்திடுவாய்
பாங்காருமிந்திர தீர்த்தமுப்போதும் பசுங்குவளை
யாங்காலமூன்று மலர்தணிகாசலத் தையங்கரனே. (அ0)

எரியைப்பலாலக் குவைகூட்டுமோறென் னெழுபிறப்பாம்
புரியைத்திருவருண் ஞானக்கினியிற் பொடிபடுத்தாய்
கரியைப்பிறகிட வேட்டுவெரெய்த கணையெதிர்போ
மரியைத்துளைத்தெழுந் தேகுஞ்செருத்தணி யையங்கரனே. (அக)

பாட்டைப்படித்துன் கழற்பூசைசெய்து பவமெனுமோர்
காட்டைக்கடக்கும் வகையறியேன்கடைக் கண்ணளிப்பாய்
சேட்டைக்கவிகள் விளவின்கனிகொண்டு சேண்வழிபோ
மாட்டைத்துரக்குந் திருத்தணிகாசலத் தையங்கரனே. (அஉ)

நாயைச்சிவிகையி லேற்றிவைத்தாங்கொரு நாயினுக்குத்
தாயைப்பொருவுங் கருணைசெய்தாய்நன்றி தான்மறவேன்
வேயைக்கரிவளைத் தேதழைதின்று விடக்குறியோ
ஞயைப்புடைத்துடைக் குந்தணிகாசலத் தையங்கரனே. (௯அ)

குமிழொக்குநாசி மடந்தையரல்குற் குழியில்விழுந்
துமிழ்பற்கறைத்தம் பலநுகர்வேனினி யுய்வதென்றோ
தமிழொக்குந்தீஞ்சொன் மறத்தியர்வானகத் தையலர்கை
யமுதுக்குத்தேன்விலை மாறுஞ்செருத்தணி யையங்கரனே. (அச)

சருகோட்டுஞ்சூழ்வளிக் குள்ளேசுழலுஞ் சருகெனவே
பெருகோட்டமாம்பிறப் பிற்சுழல்வேனுய்யும் பெற்றிசொல்லாய்
குருகோட்டும்வேட மடவாரிசைக்குக் குழைந்தசுண
மருகோட்டுவேங்கையை நீங்காச்செருத்தணி யையங்கரனே. (அரு)

பஞ்சாநநத்தினுக் கொப்பாமுனைவிட்டுப் பாவலர்கள்
குஞ்சானநத்தையை யொப்பாரைப்பாடிக் குறைநிரம்பார்
மஞ்சானனத்த னடிமுடிதேட மிலைத்தழலா
மஞ்சானனத்த னருள்தணிகாபுரி யையங்கரனே. (அசு)

பழியாவருஞ்சொல மங்கையர்மோகப் படிற்றொழுக்கான்
மொழியாவருந்துயர் கொண்டேற்கருளுதி முத்திநல்குங்
கொழியாவருவி யருளொழுக்காமெனக் கொண்டெவர்க்கு
மழியாவரந்தருந் தென்றணிகாசலத் தைங்கரனே. (அள)

பஞ்சனக்கண்க ளிருண்டுசெவ்வாயொடு பல்லுங்கிட்டி
நஞ்சனமேனி நமன்கையிற்சிக்கு மன்னாளிலருள்
மஞ்சனமாட்டி வரம்பெறுமாறு மருவுதல்போ
லஞ்சனமேகம் புடைசூழ்செருத்தணி யைங்கரனே. (அஅ)

வேண்டுகெயாமுன்றன் பாதாரவிந்தத்தின் மெய்ம்மையன்பு
தூண்டுகெநீயருள் வேறொன்றுவேண்டித் தொழுகிலம்யா
மீண்டுகெந்தேறு மிளம்பிறைமல்லிகை யிண்டைமுடித்
தாண்டுகெந்தோறு மழியாச்செருத்தணி யைங்கரனே. (அகூ)

நீயிருந்துந்துதி பூசைசெய்யாதுழ னீசருக்கு
வாயிருந்தாலென்ன கையிருந்தாலென்ன மாமரமே
மாயிருஞாலத்தைத் தேராக்குமீசன் வழுத்தியிடு
மாயிரநாம முடையாய்செருத்தணி யைங்கரனே. (கூ0)

சூதுங்களவு மழுக்காறும்வஞ்சமுஞ் சூழுயிரைக்
காதுங்கொலையு முடையேனையாளுங் கணக்குரையா
யோதுமரியுங் கரியும்புல்வாயு முழைப்புலியும்
யாதும்பகைமை யகறணிகாசலத் தைங்கரனே. (கூக)

மத்தமதம்பொழி வாரணம்போல மதிமயங்கிச்
சித்தமதனி லுனையிருத்தேன்றுயர் தீர்த்தருள்வாய்
சத்தம்புகலுந் தமிழ்ப்புலவோர்க்குச் செந்தாட்கிளிக
ளத்தம்புகலும் பொழில்சூழ்செருத்தணி யைங்கரனே. (கூஉ)

சவ்வாதுபூசிய வேசையராசை தனிற்சுழல்வே
னெவ்வாறுமுத்திக் கரையடைவேனினி யானுரையாய்
செல்வானகப்பிறை நின்றினிக்கோட்டொடு சேயுருவ
மவ்வாறுயானுந் திருத்தணிகாசலத் தைங்கரனே. (கூ௩)

உங்காரசத்தத்தி லொலெனதாணவ மோட்டுதற்குப்
பங்காரும்வல்லபை யோடென்றநீவரும் பண்புரையாய்
சிங்காரவேட மடவார்தினைகுத்துஞ் சேவுலக்கை
யங்காரகனுட ருக்குஞ்செருத்தணி யைங்கரனே. (கூச)

தானுக்கணிந்து தனியும்வெங்காட்டுத் தழலெனவே
நானுப்பிறந்திறந் தெய்த்தேனைக்காக்கு நயமுறையாய்
தேனுக்கியேமொய்க்கு மீயினையோட்டித் தினமும்வெற்ப
ரானுச்செந்தேன்கவ ருந்தணிகாசலத் தைங்கரனே. (௯௫)

வெட்டவெட்டத்தளிர்க் குங்காடுபோல மிகும்பிறவி
யொட்டவொட்டித்தொட ருந்தீவினையை யொழித்தருள்வாய்
வட்டமிட்டுக்களி மாமயிலாட வருமுகினீ
ரட்டவெட்டிக்கலை மான்பாய்செருத்தணி யைங்கரனே. (௯௬)

முதலைக்கிடங்கலர் முண்டகவல்லியின் முட்டுறல்போல்
குதலைக்கிளிமொழி யார்வயத்தாமென் குறைதவிர்ப்பாய்
பதலைப்பொருப்பர் கவலைக்கிழங்கொடு பாய்புலியி
னதளைத்துறவியர்க் கீயுஞ்செருத்தணி யைங்கரனே. (௯௭)

சித்திரகுத்தன் கணக்கின்படியெம தூதர்வந்து
குத்திரஞ்செய்து பிடியாமுன்வீட்டினிற் கூட்டியிடாய்
சத்திரவேள்விப் புகையாதவனெதிர் சார்பகைநீங்
கத்திரமாகி யெழுந்தணிகாபுரி யைங்கரனே. (௯௮)

மகத்திடைவந்த சனிபோலெனைத்தொடர் வல்வினையை
நுகத்திடைவந்த கதிர்போலவந்தெதிர் நூறியிடாய்
டகத்திடைவந்திடு கண்ணுயிரவனும் பங்கயனு
மகத்திடைவைத்த மலையாஞ்செருத்தணி யைங்கரனே. (௯௯)

கொடுத்தாலெனக்கு வரமுனக்கேபுகழ் கூடுமன்றி
விடுத்தாலுனக்குப் பழியாகுநான்சொல்ல வேண்டுமதோ
தொடுத்தாலும்பாட லுளநினைத்தாலுந் துயரறவந்
தடுத்தாலுமுத்தி தருந்தணிகாபுரி யைங்கரனே. (௧௦௦)

தணிகை ஐங்கரமாலை-முற்றிற்று.

ஐங்கரத்தோன்மாலை யறைந்தான்செருத்தணிகை
தங்குகுமரேசன் றருவரத்தாற்-பொங்குதமிழ்
கற்றுணர்ந்ததூய கவிராசன்கந்தப்பன்
முற்றுணர்ந்தோர் பேரவையின் முன்.

உ

கணபதிதுணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

மூன்றாவது

தணிகை தயாநிதிமாலை.

நீரணிமலர்கொண்டருச்சனைபுரியே னின்றிருத்தாள்பணிந்தறியேன்
சீரணிதமிழாலேத்தவுமறியேன் றீவினைதொலைத்தருள்புரியாய்
பூரணியுலககாரணியிமையப் பொருப்பிறையளித்தமுக்கண்ணி
யாரணிவிமலையருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (க)

நீதியுமறியேனெறிகளுமறியே னின்றிருப்புகழனுதினமு
மோதியுமறியேனாயினும்வரங்க ளுகந்தெனக்கருள்புரிந்திடுவாய்
சாதியுங்குராவும்வேங்கைகுங்குமமுஞ் சந்தனங்களுமணங்குலவு
மாதியேம்பரமனருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உ)

எண்ணிலேனுனதுசடக்கரமதனை யிருந்தவநோன்புநல்விரதம்
பண்ணிலேன்றுதிகள்படித்திலேனதிக பாவியேன்றனக்கருளுவையோ
விண்ணில்வானவர்தஞ்சிறைதனைத்தவிர்த்து வேண்டியவரங்களையளித்த
வண்ணலேதணிகைப்பதிதனிலுறையு மாறுமாமுகதயாநிதியே. (ங)

முன்செய்தீவினையோபின்செய்தீவினையோ மூண்டதுநல்குரவதனுக்
கென்செய்கேனடியேன்றுயர்களைந்துயர்வீ டெனக்கருள்செய்யுநாளுளதோ
மின்செய்நூலிடையாள்வேடர்தஞ்சிறுமி விரும்பிவாழ்தினைப்புனமதனி
லன்புசேர்கணியாய்நின்றிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ச)

காதரமனைத்துந்தொலைந்துனதடியைக் காட்டியுன்னடியரிற்கூட்டிச்
சீதரன்பிரமனறியொணாவீட்டிற் சேர்த்தியாட்கொள்ளுநாளுளதோ
பூதரமனையசிங்கமாசூரன் பொருகரிமுகனசுரேச
னாதரமனைத்துந்தொலைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ரு)

மேருவைச்சேருங்காகம்பொன்னிறமாய் விளங்கல்போலுன்னடிக்கமலச்
சாருவைச்சேருமெனையுநின்னடியார் தம்மொடுங்கூட்டியாண்டருள்வாய்
தாருவைச்சேரும்வல்லிபோலிருவர் தனம்படவிளங்குதிண்புயனே
யாருவப்புடன்வானோர்பணிதணிகை யாறுமாமுகதயாநிதியே. (சு)

சிவனடியவருக்கிடர்புரிந்தாலுந் தீவினைபலபுரிந்தாலும்
பவநெறிக்குரியபாவமேசெயினும் பஞ்சபாதகங்கள்செய்தாலுந்
தவரிலைகுலையத்தாழ்வுசெய்தாலுஞ் சமித்தெனைப்புரந்தளித்திடுவா
யவனவளதுவாயமர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭)

சிறப்பொடுபூசை புரிகிலேனெனினுஞ் சினகரம்வலம்புரியாமன்
மறப்பொடுநிலத்திற்றுட்டரோடிணங்கி வாய்மையைப்புகல்கிலேனெனினும்
பிறப்புடனிறப்பாங்கடலழுந்தாமற் பிரசமாமலர்ப்பதந்தருவா
யறப்பணிபுரிவோர்க்கருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮)

பஞ்சபாதகமேபுரிகினுமுன்னைப் பவந்தொறுந்தீமைசெய்திடினுந்
தஞ்சநீயெனவந்தடைந்திடுங்கொடியேன் றன்பிழைபொறுத்துநல்வரங்கள்
விஞ்சவேயருளியெனைப்புரந்திடலுன் மேற்பிழைசொல்பவருளரோ
அஞ்சவாகனனுக்கருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯)

மழையிலாப்பயிர்போல்வாடினேன்கருணை மழைபொழிந்தியான்முனம்புரியும்
பிழையெலாம்பொறுத்துப்பெருவரமளித்துப் பேயனேன்காணவந்தருள்வாய்
தழையெலாங்கீழாய்விண்ணில்வேரோடுஞ் சலதிமாமரந்தனைப்பிளந்த
வழகனேதணிகைமலையில்வீற்றிருக்கு மாறுமாமுகதயாநிதியே. (௧௦)

மந்தரமனையபாவமேசெயினும் வல்வினைபலபுரிந்திடினும்
பந்தனைப்பிறப்பிலழுந்தினுமுனது பங்கயப்பாதநான்மறவேன்
சுந்தரமுகுந்தன்மருகனேயடியர் துயரெலாந்தவிர்த்தசற்குருவே
யந்தரத்தவர்நின்றருச்சனைபுரியு மாறுமாமுகதயாநிதியே. (௧௧)

துக்கசாகரத்திலழுந்தியெந்நாளுந் தொலைவிலாக்கவலைநோயடைந்து
மிக்கபேறிவுகுலைந்துநான்புவியில் வீணிலேதிரிவதுமழகோ
தக்கவாழ்வருளியுலகெலாமதிக்குந் தனியனாசெனக்கருள்புரிவாய்
அக்குமாலையனீன்றருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௨)

இந்திரன்பதமுமிமையவர்பதமு மெண்டிசைக்காவலர்பதமுஞ்
சந்திரன்பதமுஞ்சூரியன்பதமுஞ் சக்கரமாயவன்பதமுங்
கந்தமாமலரோன்பதவியுமுனது கடைக்கணுதவியபதமே
யந்தவாறெனக்குமருடிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௩)

வேண்டியவரங்கள்பற்பலவுதவி வேண்டியசெல்வமுமளித்துச்
சேண்டருமுனதுபாதபங்கயத்திற் செலுத்திடுபத்தியுமருளாய்
தாண்டருசெம்பொற்புயங்கள்பன்னிரண்டுந் துதிப்பவர்பகையறுப்பவனே
யாண்டலைக்கொடியைப்பிடித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧௪)

பெரியவர்தமக்குப்பிழைபுரிந்தேனே பிறர்மனைதனைவிழைந்தேனே
குருமொழியிகழ்ந்துபழித்துரைத்தேனே கொடியமாமிடியினுன்மெலிவேன்
திருவருள்புரிந்துதீவினையகற்றிச் செல்வமுங்கல்வியுந்தருவாய்
அரியயன்பணியுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கரு)

மட்டிலாப்பாவந்தனைப்புரிந்தாலு மலரடிக்கன்பிலாதுழலுந்
துட்டரோடுறவுசெய்திருந்தாலுந் தூயநின்சந்நிதியடுத்தால்
விட்டிடாதின்னுமிருக்குமோவினை விரித்துநீயெனக்குரைத்திடுவாய்
அட்டமாசித்தியருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கசு)

வாசவன்மலரோன்வேண்டுநல்வரமும் வாழ்வுநீதந்தனைமுன்ன
நீசனேன்வேண்டும்வரமுதவாம னிற்பதுநீதியோவுரையாய்
பேசியேகலியில்வரந்தருந்தெய்வம் பிறரிலையெனவுனையடுத்தேன்
ஆசறுமுனிவர்தவஞ்செயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கஎ)

வெந்தநீரணியும்வேதியர்மறையுள் விதித்திடும்விதிவழிநடப்ப
தெந்தநாளுனது திருவடிக்கன்பா யிருப்பதுமெந்தநாளுரையாய்
இந்துசேகரனுக்கோமெனும்பொருளை யிருஞ்செவியிடைப்புகல்குரவா
வந்தமாதியுநீங்கிடுந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கஅ)

மனந்தனிலுனது திருவுருநினைக்க வாயினாலுன்புகழ்வழுத்தக்
கனந்தருதலையாலுன்கழலிறைஞ்சக் கசடனேற்கென்றருள்புரிவாய்
தனந்தருமளகைக்கதிபதிதோழன் றந்தருண்மயூரவாகனனே
யனந்தனும்பணியுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (கசு)

பாயுமாமதஞ்சேர்மதகரிபோலப் பற்பலதீங்குசெய்திடினு
நீயுமோரறிவாமங்குசமதனு னிறுத்தியாட்கொள்ளுநாளுளதோ
தாயுமாயுயிர்க்குத்தந்தையாயுலகந் தனைப்புரந்தருள்குருபரனே
யாயுமாமறைகடேடருந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உ0)

காலமேயெழுந்துன்றிருவடிநினைந்து கரமலர்பறித்துநின்பூசை
சாலவேபுரியாதுழலுநாயடியேன் றனக்கருள்புரிவதென்றுரையாய்
நீலமாமயின்மேலேறியோர்நொடியி னிலவுலகெலாம்வலம்வருவாய்
ஆலமாமிடற்றோனருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உக)

மாயிரும்புவியின்மனிதராய்ப்பிறந்து வண்டரைமதனெனப்புகழ்ந்து
போயிரந்துண்ணும்புலவர்நின்கமலப் பொன்னடிகாண்பதற்கெளிதோ
தாயிரங்காதபிள்ளைபோலடியேன் றவிப்பதுநீதியோவுரையாய்
ஆயிரங்கதிரோன்பணிதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உஉ)

சாத்திரமறிந்துன் றிருவடிக்கமலந் தன்னையுமருச்சனை புரியேன்
பாத்திரமறிந்துபிச்சையிட்டறியேன் பாவியேனுய்யுநாளுளதோ
காத்திரம்படைத்தசிங்கமாசூரன் கவிழ்ந்திடவயில்விடுத்தவனே
யாத்திரண்மேய்த்தோன்மருகனே தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உ௩)

காகமுநரியுந்தமதெனுமுடலைக் காதலித்துலகெலாமலைந்து
சோகமுந்துயரும்படைத்தநாயடியேன் றுயர்கெட வருளுநாளுளதோ
மாகமுஞ்சுரரும்வாழ்ந்திடச்சூரன் மடிந்திடவேலெறிந்தவனே
யாகமம்புகலுமுயர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உச)

நிலையிலாப்பொன்னுநிலையிலாமண்ணு நிலையிலாப்பெண்ணையுநினைந்து
கலையிலாவுணர்வோடெங்ஙனுமயங்குங் கசடனேனுய்யுநாளுளதோ
தலையிலாக்கவந்தமெண்ணிலநடிப்பத் தகுவர்தஞ்சென்னியைத்தடிந்தோய்
அலையுலாஞ்சுனைசேர்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (உரு)

திக்குவேறிலையுன் றிருவடியல்லாற் றீயனேன்குறையெலாம்புகன்று
மிக்கபேரருளைப்புரிந்திடாதிருந்தான் மெய்யருள்பொய்யெனப்படுமோ
விக்கணந்தனிலேவேண்டியவரங்க ளீந்துநல்வாழ்வுதந்தருள்வா
யக்கமீராறுபடைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உசு)

உனதுமாமலையைத்தினம்வலம்புரிந்து முபாசனைசெய்திரந்திடினு
மெனதுதீவினையைத்தடிந்தருள்புரியா திருப்பதுமுனக்கழகியதோ
சனகனேமுதலாமுனிவருங்கமலத் தவிசினோனுதிவிண்ணவரு
மனகனேயெனவாழ்த்தெடுத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உஎ)

பழியிலாவுடலும்பயமிலாமனமும் பாதகத்துடன்படாச்செயலும்
கழிவிலாவயதுங்குறைவிலாத்தனமுங் கடும்பகைதானிலாவரசு
மொழிவிலாவறமுமிழிவிலாக்கதியு முனதடிநம்பினேற்கருள்வா
யழிவிலாப்பதவியருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (உஅ)

படைக்கலஞ்சுமந்துபகைவரைத்தடிந்து பாரெலாமொருதனியாண்டு
மடைக்கலஞ்சுமந்தமகளிரைப்புணர்ந்து மைந்தரும்வாழ்வுமேசிறந்து
கொடைக்கலமிலாதுகொடுத்திடுநிதியுங் குலவுமுன்கருணையென்றறிந்துன்
அடைக்கலம்புகுந்தேனருள்புரிதணிகை யாறுமாமுகதயாநிதியே (உகூ)

காலையிலெழுந்துமஞ்சனமாடிக் கால்களால்வலஞ்செயவுச்சி
வேலையிலடியார்பசிகெடச்சமைத்து விருந்துசெய்வித்திடவந்தி
மாலையிற்றூபதீபமுமேற்றி மகிழ்ந்திடும்பேறெனக்குதவா
யாலயங்கழனிசூழ்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௩0)

குங்குமம்புனுகுசந்தனமகரு குற்குலுகற்புரமருவேர்
பைங்கருங்குவளைதண்புனல்கொடுநின் பதமலரருச்சனைபுரியும்
புங்கவரடிக்குற்றேவல்செய்தொழுகும் புண்ணியமெனக்குவந்துறுமோ
வங்குசபாசன்றம்பியாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௧)

நீதியோவுனக்குநான்வெகுநாளாய் நின்றிருச்சந்நிதியடுத்தேன்
சேதியாவையுமேசெப்பினுங்கேளாச் செவிடர்போலிருப்பதிங்கழகோ
வோதுவாயொருசொலுண்டிலையென்ன வுனக்குநானடிமையுமலவோ
வாதியேநடுவேயந்தமேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௨)

கார்த்திகைவிரதந்தனைமறந்தேனோ கந்தசஷ்டியிற்பிழைத்தேனோ
தோத்திரஞ்செய்யுந்தொழின்மறந்தேனோ துணையடிக்கன்பொழிந்தேனோ
பாத்திரங்கொண்டுபலிக்குழலாமற் பாவியேன்றுயர்களைந்திடுவா
யாத்தர்கடுணையாய்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௩)

கொடியவருறவேகொண்டிருந்தேனோ கொடுவழக்கிடைதவறினனோ
குடிமனையவள்கற்பினையழித்தேனோ குற்றங்கள்பலபுரிந்தேனோ
மிடியுறுதமியேன்றுயரெலாந்தவிர்த்து வேண்டியசெல்வநீயருள்வா
யடியவர்துணையாய்வருந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௪)

செங்கதிருலவுமுலகெலாமுலவித் திரிந்தொருசாண்வயிற்றினுக்குக்
கங்குலும்பகலுமிரையினைத்தேடுங் கயவனேனுய்யுநாளுளதோ
சங்கரன்மகனேசதுமுகன்குருவே தயித்தியர்தங்குலப்பகையே
யைங்கரன்றுணையேயுயர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௫)

நாரியர்க்கிரங்கிமதனனூல்படித்து நயம்பெறுசன்னைகள்பேசிப்
போரியல்கலவிக்கொருபெரும்புலியாம் புல்லியனுய்யுநாளுளதோ
நீரியல்கமலமலரினோன்சிரத்தி னீண்டவங்குலியினற்புடைத்தா
யாருயிர்க்குயிராய்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௬)

குமரனாய்விருத்தக்கிழவனாயுடலங் கூனொடுநரைதிரைகொண்டு
தமரெலாமிகழ்வுயிரகல்பொழுதுஞ் சரவணபவவெனாருடலங்
கமரிலேயுகும்பாலெனப்படுமவர்க்கோர் கதியுமேயிலையெனப்படுமோ
லமரெலாங்கடந்ததணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௫௭)

கருவியோர்முப்பத்தாறினாலியங்குங் காயமோடிருநிலஞ்சுவர்க்க
மருவியேதிரிந்துபிறந்திறந்துழலு மடையனேனுய்யுநாளுளதோ
குருவியோட்டியவேட்டுவக்குலமகளிர் குலவியசாரலிற்செந்தே
னருவிபாய்ந்திழிபுந்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௫௮)

மாவிருந்தினர்தம்பசிகெடவுதவும் வன்மைதந்துடல்விடும்பொழுது
பூவிருந்தவனுமாயனுங்காணாப் பொன்னடிநீழறந்தருள்வாய்
கோவினம்பயில்செந்தூர்பரங்குன்று குன்றுதோறாடல்சோலைமலை
யாவினன்குடியேரகம்பயிறணிகை யாறுமாமுகதயாநிதியே. (ஙகூ)

கெறுவியாயசந்தைபலபுரிந்திடினுங் கெண்டைவாள்விழியினர்கலவி
யுறுவியாதியினாலுனைமறந்திடினு முறுபிழைபொருத்தருள்புரிவாய்
மறுவிலாக்கற்பின்வள்ளிதெய்வானை மணந்திடுமணிவரைமார்பா
வறிவினோரறிவாயொளிர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ச0)

தேனிலங்கியசொன்மாதரார்வயிற்றிற் றிங்களீரைந்துமுட்டங்கி
நானிலந்தனிலேயினிப்பிறவாம னாயினேற்கருள்புரிந்திடுவா
யூனிலங்கியவானவர்களுமறியா யோகியர்மனத்திலேவிளங்கு
மானிலைந்தாடுமரனருடணிகை யாறுமாமுகதயாநிதியே. (சக)

மன்னவன்மகனையடுத்திடிற்பெரிய வாழ்வினையடுத்தபோதளிப்பான்
பின்னலஞ்சடையுன்பிதாவினையடுத்தாற் பெரிதுநாட்செல்லுமென்றறிந்தே
யுன்னைவந்தடுத்தேனாதலாற்செல்வ முரைத்திடுமுன்னெனக்களிப்பா
யன்னமென்னடையார்பயில்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சஉ)

பகலினுமிரவுமுண்டுடுத்துறங்கும் பயனலாதொருபயனறியேன்
புகலரும்பரமாநந்தவாரிதியிற் புகுவதெக்காலமோவுரையா
யிகலுமுப்புரங்கடழலெழச்சிரித்த விறையவனுதல்விழிபிறந்தோ
யகிலிடுந்தூபமுகினிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சங)

குருபரனெனும்பேருனக்கலாதெவர்க்குக் கூறுநான்மறைகளாதலினாற்
றிருவடிநிழலிலெனைவிடாதிருத்தத் திருவருள்புரிகுவதரிதோ
பொருகரிவதனனொடுகிரவுஞ்சம் பொடிபடவயிலெறிந்தவனே
யருவுடனுருவாயொளிர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சச)

நித்திரைதனிலுங்குத்திரம்புரியு நினைவுளேனுன்றிருவடியைப்
பத்திரம்புனல்கொண்டருச்சனைபுரிந்து பரகதியடையுநாளுளதோ
சித்திரக்கலாபமயின்மிசையேறிச் செகமெலாநொடிவலம்புரிவோ
யத்திரவிழியார்நடஞ்செயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சரு)

கணுமுதிர்கருப்பஞ்சிலையினைவளைக்குங் காமனைவென்றமாதவர்க
ணணுகிருசரணபங்கயமலரி னறவினைப்பருகுநாளுளதோ
வெணுமொருநொடியின்மேருவையணுவா யியற்றுவையிதற்குமாறுக
வணுவையேமேருவாக்கிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சசு)

மனாதியைம்பொறியுன்வழிக்கொடுநடந்து மருவுமைம்புலனுகர்ந்திடினுங்
கனாவொடுபேய்த்தேரெனப்படுமுலகைக் கண்டுமெய்யெனமயங்குறினு
மெனாதியென்றுனையேநினைத்தனுதினமு மேத்திடுஞ்செல்வமேயருள்வாய்
அனாதியேயுயிர்க்குத்துணையதாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௪௭)

வையமுற்றினும்போய்க்கங்கையேமுதலா மாநதிபலபடிந்திடினுந்
துய்யநற்றலங்கடொறுமினிதடைந்து துணைக்கையாற்றொழுதுவாழ்த்திடினுஞ்
செய்யநின்றணிகைக்கிரியினையணையார் சிவகதியடைகுவதரிதே
யையமிட்டுணுமாதவருளத்திருக்கு மாறுமாமுகதயாநிதியே. (௪௮)

முந்தைநல்வினையால்வந்துமானிடராய் முஞாநிலந்தனிலவதரித்தும்
வந்தனைபுரியாதுண்டுடுத்துழலு மக்களில்வானரப்பிறப்பே
நிந்தனையறியாநற்பிறப்பாகு நீதியொன்றறிகிலாமையினா
லந்தணர்மகஞ்செய்தணிகைமால்வரைவா ழாறுமாமுகதயாநிதியே. (௪௯)

வேரலிற்பிறந்தசெந்தழலந்த வேலைமுருக்கிடுஞ்செயல்போற்
பேருடற்பிறந்தகாமமிவ்வுடலைப் பிணிபடமுருக்குதென்செய்வேன்
சாரலிற்குறவர்கிழங்ககழ்குழியிற் றாளமோடணிகொள்வச்சிரமு
மாரவேநிரைக்குமருவிதாழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௦)

பிறந்திறந்துழலும்பெருவியாதியையும் பெரும்பசிநோய்சுடத்தளர்ந்து
நிறங்குலைந்தொருவர்பின்றிரிந்துழலு நிரப்பெனுங்குறுவியாதியையுந்
திறந்தருள்கடைக்கட்பார்வையாமருந்தாற் றீர்த்தருள்புரியுநனாளதோ
வறம்பொருளின்பம்வீடருள்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௧)

திரைகடலுடுத்தநிலத்திடையழியாச் செல்வமுங்கல்வியுமறிவு
மிரப்பவர்க்கிலையென்றுரைத்திடாதுதவு மீகையுமெனக்கருள்புரிவாய்
புரக்குமைந்தருமாநிதிமணிகவர்ந்து புலவருக்கிடுக்கணேபுரிந்த
வரக்கரையழித்தசெருத்தணிமலைவா ழாறுமாமுகதயாநிதியே. (௫௨)

பனித்துடல்வெதும்பும்படிதவம்புரிந்து பாரெலாம்வலம்புரிந்துழல்வோர்
தனித்திருந்துனதுதிருவடிநினைந்து சரவணபவவெனவுரையார்
கனிப்பழமிருப்பவிடுத்தருகிருந்த காயினைப்பறித்தருந்துவரே
யனித்தமுங்கடந்துநித்தமாந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௫௩)

விடுத்திடற்கரியபஞ்சபாதகமே விளைத்திடுமெனக்குமெய்வரங்கள்
கொடுத்திடினனையார்தடுப்பவர்புராணுங் குரைகடறன்னையார்தடுப்பார்
முடுக்கருட்டவஞ்செய்யோகியர்தமக்கு முசுக்கலையேவல்செய்தொழுகு
மடுக்கலிற்சிறந்ததிருத்தணிமலைவா ழாறுமாமுகதயாநிதியே. (௫௪)

குவிகரங்கொடுநின்றனைவலம்வரவுங் குரைகழன்மனநினைந்திடவுங்
கவியறிந்துன்சீர்பாடவுமெனக்குக் கருணைநீபுரியுநாளுளதோ
புவியிலந்தணர்களனைவரும்சாரற் புறத்திலேயணைந்தனுதினமு
மவிசொரிந்தியாகம்விளைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ருரு)

நச்சுமாமரமேயாயினுமொருவர் நானிலந்தன்னிலேவிளைந்து
வச்சமாமரமேயாயிடிற்றண்ணீர் வார்த்திடாதுலர்த்திடுமேவர்யார்
துச்சமாமாயைவினையுடலடுத்தாய் சுத்தவீடருள்புரிந்திடுவா
யச்சனேடனையாய்த்துணைசெயுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ருசு)

விலங்கலைக்கடலைவெய்யசூருரத்தை விழுங்கிடவெறிந்திடுமயிலால்
கலங்கலைப்புரியுமாணவமாயை கன்மமூன்றையுமழித்திடுவா
யுலங்கலைத்தகர்க்கும்பன்னிருபுயத்தி னும்பர்நாடிறைதருங்கழுநீ
ரலங்கலைப்புனையுமொருதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ருஎ)

முகத்திருவிழியுமூக்கிடையிருத்தி மூடிவாய்மூச்சையுட்செறித்துப்
பகைத்தவைம்பொறியுமடக்கிநெஞ்சிடையுன் பதமலரிருத்துநாளுளதோ
சகத்திருள்கடியுமுதையமால்வரைபோற் றணிகைமால்வரைமிசையடிய
ரகத்திருள்கடியுஞானசூரியனு மாறுமாமுகதயாநிதியே. (ருஅ)

நாண்டுறந்தெழில்சேர்நாரியர்கலவி நறவினையநுதினநுகர்ந்து
மாண்டிறந்துலகிலினிப்பிறந்திடினு மலரடிக்கன்பெனக்கருள்வாய்
கோண்டருமுலகநிலைகுலைந்தழிந்து குரைகடன்மேருவுமழியு
மாண்டுகப்பலவுமழிவிலாத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (ருகூ)

வெங்கொலைகளவுகாமமோடரும்பொய் விளங்கறிவகற்றுகள்ளருந்த
லிங்கொருதினமுமொழிந்திடாக்கொடியே னிடர்க்கடலேறுநாளுளதோ
பைங்கருங்குவளையநுதினமூன்று பாகசாதனன்சுனையலரு
மங்கதிசயஞ்சேரண்ணலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (சுo)

வெஞ்சிறைப்பிறவிவேதனையொழித்த மெய்த்தவர்சேருநின்பதத்தென்
னெஞ்சிறைக்குடியாய்நின்றிடும்படிக்கு நீடருள்புரியுநாளுளதோ
மஞ்சிறையளித்தமகடனக்கிறையாய் வானுலகெலாம்வலம்வருவா
யஞ்சிறைக்கோழிக்கொடியனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (சுக)

செம்புயம்பனிரெண்டிருபதமாறு திருமுகமயிலயில்சேவல்
பைம்புயற்கூந்தல்வள்ளிதெய்வானை பாகமுங்காணுநாளுளதோ
கம்புயர்பருதிகரங்கொளுமுராரி கவின்பெறுமார்பினிற்பிரியா
வம்புயமலராண்மருகனேதணிகை யாறுமாமுகதயாநிதியே. (சுஉ)

பிழைத்தவைபொறுத்தல்பெரியவர்கடனும் பேயனேன்பிழையெலாம்பொறுத்
தழைத்தருள்புரிந்துன்றாமரைமலர்த்தா டலைமிசையிருத்துநாளுளதோ [து
கழைத்தலைவளியினசைந்திடல்வரை தான் கையெடுத்தன்பரைக்கடுகி
யழைத்தருள்புரிவதெனப்படுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௩)

எவ்வுலகமுமாண்டிறந்திடாச்சூர னிருந்திமயேந்திரபுரியாந்
தெவ்வுலகத்தையழித்தநின்கருணைச் செழுங்கடைப்பார்வைதந்தருள்வா
யிவ்வுலகத்தோர்பணிந்தெழுந்தேத்து மிதுவலாலிந்திரனுறையு
மவ்வுலகத்தோர்தொழவளர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௪)

பரிகரியிரதம்பதாதிகள்சூழப் பகைவரைத்தடிந்துசெங்கோல்கொண்
டொருகுடைநிழலினுலகெலாம்புரக்க வுனதருட்பார்வைதந்தருள்வாய்
பொருகரிமுகனுக்கிளையவனாகிப் பொன்னுலகினைப்புரந்தளித்தோ
யரிகரிமுனிவர்க்கேவல்செய்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௫)

மாதிரைகடல்சூழ்மண்ணகவரைப்பின் வாய்மையைத்துறந்துசாண்வயிற்றின்
றீதிரைக்குரியபொய்ம்மையேபேசித் திரியுமென்பவமொழிந்திடுமோ
மீதிரைத்தெழுந்துவருநிசாசரரை வென்றமரர்பதியளித்தோ
யாதிக்கிறைவனருள்செருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௬)

கருக்குழிபடிந்துபிறந்திடுதுயரும் கண்கள்பஞ்சடைந்துவாய்குழறி
நெருக்கியகபத்தாலிறந்திடுதுயரு நீசனேனொழியுநாளுளதோ
தருக்களிலுதிரும்பொன்மலர்களுலித் தமனியமலையெனக்கருதி
யருக்கனுமதியும்வலம்வருந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௭)

தீர்ப்பதற்கரியவுடலபிமானந் தீர்ந்தருந்தவம்புரிந்தவரும்
பார்ப்பதற்கரியபங்கயமலர்த்தாள் பாவியேற்குண்டுகொல்கதிரோன்
றேர்பரித்திரளைவேங்கைமீதகவும் செம்முகமந்திவானீட்டி
யார்ப்பரித்தடித்துநடத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௮)

வெம்பியாய்வயிற்றிலையிருதிங்கண் மேவியிப்புவிதனிலுதித்து
நம்பியாயிழையார்கலவியிற்றிளைக்கு நாயினேற்கருளிபமுகத்தோன்
றம்பியாயடுத்தநீயிருத்தலினுற் றரணியோர்பிறவியங்கடலுக்
கம்பியாயடுத்துவளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௬௯)

வாளிகல்புரியும்வடுவெகிர்நெடுங்கண் மங்கையர்போகமேநுகர்ந்து
நாளிகந்தொருவிநரகிடைவிழாம னாயினேன்றனக்கருள்புரிவாய்
கூளிகடெரக்குந்தானவக்குழுவிற் குஞ்சரக்குழுவிரிந்தோட
வாளிகடெரக்குஞ்சாரலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௭0)

மெய்க்கினியனவேசெய்துநல்விரதம் விடுத்துழல்மடமையேன்வீட்டிற்
புக்கினிதிருக்குமடியவர்கமலப் பொன்னடிகருதுநாளுளதோ
கொக்கெனத்தினமுங்கொலைகுறித்தொழுகுங் கொடியதானவர்களைத்துணிக்க
வக்கினிகரத்திலுதித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எக)

கருடனைநிகர்க்கத்தொலைந்திடுவிடம்போற் கானகத்தினைப்புனக்குறத்தி
திருடனென்றுன்னைச்செப்புவோர்பிறவித் தீவிடமக்கணத்தறுமே
யொருகணப்பொழுதின்மதுரையர்பெருமா னுடலுறுவெப்பெலாமகற்றி
யருகரைக்கழுவிலேற்றிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எஉ)

கொங்கையங்குவடுங்கருவிழிக்கடலுங் கூந்தலங்காடுஞ்சென்றுலவி
மங்கையரல்குற்பணிவிடந்தீண்டி மயங்குமென்னுயிர்தனைப்புரப்பாய்
சங்கையொன்றில்லாப்பிரணவப்பொருளைத் தமிழ்வரைகுறுமுனிவரனுக்
கங்கையினெல்லியெனப்புகறணிகை யாறுமாமுகதயாநிதியே. (எங)

வானகம்புரக்கும்வாழ்வையும்விரும்பேன் மண்ணகவாழ்வையும்விழையேன்
கானகக்குறவர்போற்றுநின்பாத கமலமேகருதுவன்றமியேன்
போனகம்பதினுலுலகமுமாக்கும் பூவைவண்ணன்றிருமருகா
வானகந்துடியோடார்த்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எச)

கொவ்வையங்கனிவாய்மகளிரையணைத்துக் கொம்மைவெம்முலைந்தடத்தழுந்தி
நவ்வியம்பகமாங்கூற்றினுக்கிரையாய் நானழிந்தொழிகுவதழகோ
செவ்வியமறையோர்சோலைகடோறுந் தீயினுகுதிமகம்புரியு
மவ்வியகவியநுகர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எரு)

கூம்பலங்கரமுங்குழைந்திடுமனமுங் கொண்டனுதினம்வலம்புரிவோர்
தாம்பலன்பெறும்பேறரியயன்றனக்குஞ் சாற்றரிதெனமறையுரைக்கும்
பாம்பலங்காரப்பரனெனமுத்தம் பற்பலசொரிந்துவாழ்ஞெங்கு
மாம்பலஞ்சாரல்வளர்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எசு)

விடங்கலந்திடுதீம்பாலெனவுயிரை விரவுமாணவத்தினைப்போக்கி
நடங்கலந்திடுமுன்சீறடிக்கமல நன்மருந்தளித்தெனைப்புரப்பாய்
மடங்கலுங்கரியுமுழுவையுந்தவஞ்செய் மாதவர்தமக்குவானரங்க
ளடங்கலும்பணிசெய்தகமகிழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எஎ)

விடைமிசைவருநின்றந்தைதன்செவியில் விளம்பியபிரணவப்பொருளைக்
கடையனேன்செவியிற்புகன்றுநின்கமலக் கழற்றுணைநீழலென்றருள்வாய்
தடையறுகதிர்த்தேர்ச்சாரதிபரியைத் தாக்குமுட்கோல்படவேய்த்தே
னடைகிழிந்துகுதேனருவிதாழ்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எஅ)

வல்லகாத்திரஞ்சேர்மதகரியெனவே மறைநெறிகடந்துதீவினையாற்
பல்லகாத்திரமாய்ப்பிறந்திறந்துழலும் பாவியேனுய்யுநாளுளதோ
நல்லகாத்திரியாவிந்திரன்றெட்ட நறுஞ்சுனைநீலமேவுதலா
லல்லகாத்திரியாம்பெயர்பெறுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (எகூ)

நந்தினைப்பதுமநிதியினைப்பழித்த நறுங்களமுகத்தியர்கலவித்
தந்தினைப்படித்துவிடரொடுந்திரியுந் தமியனேனுய்யுநாளுளதோ
சந்தினையகிலைவேங்கைகுங்குமத்தைத் தடிந்தெறிகொளுவிவேட்டுவர்க
ளந்தினைவிதைக்குஞ்சாரலந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அ0)

மாடகத்திவவியாழ்முனியுரைப்ப வள்ளிமால்வரைப்புறத்தடைந்து
காடகக்குறமான்றனைப்புணர்வேடங் கனவிலுநனவிலுமறவே
னேடகக்கமுநீரென்றுமூன்றலர வெனக்கிலையெனத்தலையிறங்கி
யாடகக்கிரிநாணுறுந்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அக)

சமயமூவிரண்டிற்சார்ந்தவர்புகலுஞ் சமுசயப்பொருளெலாநினைந்து
கமையறுபிறப்பிலழிந்திடாதுனது கழலிணைகருதுநாளுளதோ
விமையவர்வேடர்க்கமுதமீந்திருவி னிரும்பிழிகவர்ந்தெதிர்விருந்தா
யமைவுறவிசும்பின்வளர்ந்தெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அஉ)

பொருந்திடுகேற்பின்மனைவியும்பொருளும் புதல்வருமிம்மையிலளித்துத்
திருந்துமொண்கதியையம்மையினளிக்குந் திறத்ினைக்கண்டுனையடுத்தேன்
வருந்துறுபிறப்பிலழுத்துமாணவமா மலிபெரும்பகைதடிந்தோங்கு
மருந்தவர்க்கரணமாயமர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அரு)

கூனையுந்தெரியாக்குருட்டையும்பணிவோர் கொடியவெம்பிறப்பையுநீக்கி
வானையுஞ்சிந்தாமணியையும்வேண்டும் வரத்தையுந்தருதல்கண்டடுத்தேன்
றேனையுமறையோர்க்கரசரீந்திடுபொற் றிரளுறுதானநீர்தனையும்
யானைமும்மதநீர்கொண்டிழிதணிகை யாறுமாமுகதயாநிதியே. (அச)

முன்னையெத்தவத்தோவந்துமானிடத்தின் முழுதுடறன்னையாரெனடுத்தும்
பின்னருற்றிடுதற்கரியவிப்பொழுதே பெருந்தவம்புரிந்துனைநினையேன்
றென்னிசைக்களிவண்டினங்கள்பற்பலவாந் தேனடைமொய்ப்பவாதுலர்சே
ரன்னசத்திரங்கணிகர்த்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அரு)

விரிந்திடும்பிறவிக்கடலகத்தழுந்தி வினையெனுந்திரைகளாலலைந்து
திரிந்திடுகாமச்சுறவினாலயருந் தீயனேன்றுயர்களைந்திடுவாய்
வருந்திடும்பகையைமாய்க்குமன்னவர்போல் வனசரர்விதைத்தசெந்தினையை
யரிந்திடக்கணிகளலர்ந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (அகூ)

தத்தலைக்கடலின்வேறுவேறாகுஞ் சமுசயச்சமயநூல்பலவுங்
கத்தலைவிடுத்துன்கழறலைச்சூட்டிக் கசிதலையடையுநாளுளதோ
முத்தலையேகபாதருத்திரன்போன் முத்தலைபொன்மைவெண்ணிறமா
யத்தலைமுதலொன்றாயெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௭)

வரம்பெறுமகவான்முதலியோரொருபால் வணங்கமாமுனிவரரொருபால்
சிரம்பெறுகரங்கள்கூப்புநின்னவையிற் சிறியனும்வரவருள்புரிவாய்
மரம்பயில்சாரல்வளர்க்கழைவெடித்த மணிகள்வாசவனெதிராடு
மரம்பையர்முலைமேற்றெறித்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௮)

சுந்தரந்தனக்கோநினதுதோள்வலிக்கோ சொற்கலைவல்லபந்தனக்கோ
சந்ததமெனதாருயிரெனுமடந்தை சாமிநின்கலவியேவிழைந்தாண்
மந்தரமிமையக்கயிலைநீள்கந்த மாதனங்கண்டழுக்கறுப்ப
வந்தரங்கமதாயிருந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௮௯)

குறித்தொறுகவிநீபாடெனப்பாடாக் கொள்கைநக்கீரனைவேண்டி
மறித்தொருகவிக்காயிரந்தநின்றனையான் வலுவினிற்பாடவுமிரங்காய்
கறிக்கொடிமிளகைத்தின்றிலமந்தி கலங்கிடக்கடுவன்மாங்கனியை
யறுத்துவந்தளிக்கமகிழ்திருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௦)

நெல்விளைந்திடுதண்பணைதொறுமறுப்பு நென்முதனடவுமாறுப்போற்
புல்லியம்புயனாற்பிறப்புடனிறப்புப் பொருந்துதீவினைதுலைத்திடுவாய்
எல்லியும்பகலுங்கழையுதிர்முத்த மிளநிலாக்கதிர்பரப்புதலா
லல்லியுங்குவலையொடுமலர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௧)

வேனில்வேளெனவும்விசையனேயெனவும் வீமனேயெனவுமீகில்லாப்
பாநலந்தெரியாச்சிதடரைப்புகழும் பாவலர்பவப்பிணியறுமோ
தேனிறால்வருடைபாய்தரக்கிழிந்து செங்கழுநீர்ச்சுனைநிரப்பி
யானைவீழ்குழியுநிரப்புறுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௨)

காரிருட்குழலார்கண்வலைதுடக்குஞ் சசடனேன்சிற்றறிவொழித்துன்
பேரருட்பார்வைக்கடலகத்தழுத்திப் பிரிவிலாவாழ்வெனக்களிப்பாய்
கூரிருள்படைத்தகிரவுஞ்சகிரியுட் குறுமுனிகுறுகல்போன்முனிவ
ராரிருட்குகையுட்புகுந்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௩)

கரவினிலருநூல்கற்பவருறவைக் கடிந்துமெய்த்தொண்டர்பான்மிகுமா
தரவினைமருவியுடலபிமானந் தனையொழிந்திடுநெறியருள்வா
யிரவினிற்காடிகுரும்பிதேர்ந்தளையை யிடத்தலுமுற்கைபோலெரியு
மரவின்மாமணிகண்டஞ்சிடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௪)

வாரியங்கடல்சூழ்மலர்தலையுலகில் வயிறுசாண்வளர்த்திடும்பொருட்டுப்
பாரியென்றீயாதவரையான்புகழாப் பணிவிடையெனக்கருள்புரிவாய்
வீரியம்பெறுவெம்புலியினோடிரலை வேழமோடரிபகையொருவி
யாரியம்புகல்வோர்க்கேவல்செய்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௫)

மலையெனவளருமாணவமலத்தை வளம்பெறுநின்னருட்பார்வை
யிலைமலிவேலாலெறிந்ததைப்போக்கி யெனதுயிர்தனைப்புரந்தளிப்பாய்
கொலையரிமுழக்குங்குஞ்சரமுழக்குங் குலவுமந்தணர்மறைமுழக்கு
மலைகடன்முழக்கினெதிரெழுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௬)

கமலவேதனைமுன்கற்சிறைப்படுத்துங் காங்கெயனுமுனைவணங்கா
முமலவேதனையுமொருசிறைப்படுத்தி முண்டகப்பதமெனக்களிப்பாய்
விமலவேதியர்செய்வேள்வியாகுதியில் வீசுநெற்பொரியெனச்சார
லமலவெய்முத்தஞ்சொரிதிருத்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௭)

சந்திரன்கறைபோலிந்திரன்விழிபோற் சந்தனமரத்துறுமகிபோன்
மந்திரம்பயிலுமுனதுசன்னிதியில் வருங்கொடியேனையும்புரப்பா
யிந்திரநீலமருவலாற்கருமையேந்தலாற்செவியடுத்திடலா
லந்தில்தெய்வானைவிழிநிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௮)

பிணியினாலழலாலலகையால்விலங்காற் பில்லிசூனியத்தினாற்பித்தால்
பணியினானீராற்கள்ளரான்மருவும் பருவரலகற்றியாண்டருள்வாய்
கணியினாலாரம்புடைபரந்தெழலாற் காம்பினால்வம்பினாற்காந்த
ளணியினாற்குறமான்முலைநிகர்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௯௯)

வள்ளியுந்தெய்வயானையுமிருபான் மருவிடச்செங்கைவேலேந்தி
துள்ளியமயின்மீதேறிநீயடியேன் றுணைவிழிகாணவந்தருள்வாய்
வெள்ளியங்கிரிபோனாரதன்றினமும் வீணையின்கானமாமமுத
மள்ளியஞ்செவியினிறைத்திடுந்தணிகை யாறுமாமுகதயாநிதியே. (௧00)

தணிகை தயாநிதிமாலை-முற்றிற்று.

பண்ணார்தணிகைவரைப்பாலன்றயாநிதிச்சீ
ரெண்ணாருமாலையிசைத்திட்டான்-றண்ணாருங்
காசினியெலாம்புகழுங்கந்தப்பனென்றுரைக்குந்
தேசிகனூறுகவிதேர்ந்து.

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

நான்காவது

தணிகைவேலாயுதசதகம்.

காப்பு.

மேலாந்திருத்தணிகை வேலாயுதசதக
மாலாகிநாயேன் வழுத்தவே-நாலாஞ்
சிரத்தானத்தானைமுகன் சேவிக்குமைந்து
கரத்தானத்தானைமுகன் காப்பு.

சீர்பூண்டசெந்திருநோக்கமுந் திருமான்மருமகனோக்கமும்
பேர்பூண்டசங்கரிநோக்கமும் பிரியாமலேயெனையாளுவாய்
கார்பூண்டபன்னிருகைத்தலா கருணாகராதணிகாசலா
வேர்பூண்டமும்மலகாலனே வேலாயுதாவேலாயுதா. (க)

மாண்டும்பிறந்திடுவெல்வினை வலையுட்படாவகையென்னவந்
தாண்டுங்குறையுளதேலெனக் கதையுந்தவிர்த்தருள்செய்குவாய்
தாண்டும்பரிமயில்வாகனா தணிகாசலத்துறைசண்முகா
வேண்டுங்குறமகளன்பனே வேலாயுதாவேலாயுதா. (உ)

கோணாகழிபலபேசியுங் குரவோர்களைமிகவேசியு
நாணாமனங்கையர்மோகமாய் நற்புத்திபோய்துற்புத்தியான்
மாணாதவெம்பிணியாகினேன் மாயாமலேயினியாகிலும்
வீணாள்படாவகையாளுவாய் வேலாயுதாவேலாயுதா. (ங)

பூதங்குகைதனில்வைத்திடும் போதுன்னையேபுகழ்கீரனு
ரேதந்தவிர்த்தருளும்படி யெனையாளுவாயுனைநம்பினேன்
மாதங்களாண்டுகைமாறினு மாறாமலெவ்வனமானவா
வேதம்புகழ்தணிகாசலா வேலாயுதாவேலாயுதா. (ச)

கோளேதுசொல்லினுமாதர்பாற் குறையேதுசொல்லினுமுன்னிரு
தாளேசரணெனவண்டினேன் றவிராமலேயெனையாளுவாய்
தேளேவிருச்சிகமென்றுமந் திகளஞ்சிடுந்தணிகாபுரி
வேளேசிவன்பெறுமைந்தனே வேலாயுதாவேலாயுதா. (௫)

கண்ணாடியினிழலென்ன வெங்கணுமுற்றநின்கருணைத்திற
மெண்ணாமலேயுழல்கின்றநா னினியாகிலுமுனையேதுதி
பண்ணாமலெப்படியுய்குவேன் பகராய்திருத்தணிகாசலா
விண்ணாடுகாத்தருளண்ணலே வேலாயுதாவேலாயுதா. (௬)

துதியாமலும்பணியாமலுந் துகடீருநின்பதபங்கய
மதியாமலுந்திரிகின்றவென் மனமென்றுநின்வசமாகுமோ
கதியாகுமோமெனுமந்திரங் கழறும்பொருளறியேனெனும்
விதிகாலிலேதளைபூட்டிடும் வேலாயுதாவேலாயுதா. (௭)

ஞானக்கலையுணர்வாருட னண்ணாமலுண்டுடையும்புனைந்
தூனைச்சுமந்துழல்கின்றநா னுனைநண்ணிடும்வகைகண்டிலேன்
மானுக்கொருமருகாதிரு மருகாவரிமருகாகுகா
மீனக்கொடியவன்மைத்துனா வேலாயுதாவேலாயுதா. (௮)

குருலிங்கசங்கமநிந்தைசொல் கொடியோன்மடிந்திடுமாறுபோல்
வருதுன்பம்யாவையுநீக்கிநல் வரமொன்றெனக்கருள்செய்குவாய்
தருவைந்துநீழலின்வைகுவா சவன்மாமகண்மணவாளனே
வெருவுஞ்சுரர்பயநீக்கிடும் வேலாயுதாவேலாயுதா. (௯)

கரவாகுநூல்சிலகற்றிடுங் கனவஞ்சகக்கவிவாணரை
யிரவாமலேபலஞானநூ லினிதோதிவைத்தெனையாளுவாய்
சரமாரியேபொழிசூரனார் தலைவெட்டிமாமயில்கோழியாய்
விரைவாகவேறியசெல்வனே வேலாயுதாவேலாயுதா. (௧௦)

குடல்வாதமுந்தலைநோயுடன் குருடானதுஞ்செவிடானது
முடல்கோணலுமலடானது முழல்பித்தமும்பெருவிக்கலு
முடமானதும்வலியும்பெரு மூச்சோடுகுன்மமுமூமையும்
விடமானதுங்கடிதோட்டிடும் வேலாயுதாவேலாயுதா. (௧௧)

கோடிக்குமேலுறினுந்தனங் குறையென்றுபற்பலவேலையுந்
தேடித்திரிந்துண்ணமலுஞ் சென்றேற்பவர்க்குதவாதநிர்ம்
மூடர்க்குறும்பயனென்கொலோ முருகாவரிமருகாகுகா
வேடச்சிமால்கொளுமையனே வேலாயுதாவேலாயுதா. (௧௨)

காடேகியும்மலையேறியும் கடிதாமருந்தவமாற்றியு
நாடேகியும்நதிமூழ்கியு நற்காய்கிழங்கிலைமாந்தியு
மோடேந்தியுஞ்செங்காவிதோ யுடைசூடியுஞ்சடைநீடியும்
வீடேதுணைப்பணியாரெனில் வேலாயுதாவேலாயுதா. (௧௩)

கல்லாதவருறவாவதிற் கற்றோருடன்பகைநல்லதே
யில்லாதகற்பில்லாளினு யெழில்வேசையாலுறனல்லதே
பொல்லாதவீண்பழிகொள்வதிற் பொறையாமுடல்விடனல்லதே
வெல்லாதசூரனைவென்றிடும் வேலாயுதாவேலாயுதா. (௧௪)

நாளென்செயும்வினையென்செயு நமனென்செயும்விதியென்செயுங்
கோளென்செயும்பிணியென்செயுங் குன்றயானவற்கடமென்செயு
மாளென்றுனக்கெழுதும்முறி யறியார்களோவுலகோர்கள்செவ்
வேளென்றுநான்மறையோதிடும் வேலாயுதாவேலாயுதா. (௧௫)

பொய்யாமுடன்மெய்யாமெனப் பொருடேடியுன்னருடேடிலா
ரையோகொடுவினையேமுனு ளயனார்விதித்ததுவோசொலாய்
கையாறிரண்டுடை யாய்திருக்கயிலாயநேர்தணிகாசலா
வெய்யோனெனக்கதிர்வீசிடும் வேலாயுதாவேலாயுதா. (௧௬)

தண்டேன்றிமெல்லுடல்கூனியே தள்ளாடியீளையுநீடியே
மண்டேன்றளர்ந்துரைதப்பியே மாயாமுனேநீயாளுவாய்
பண்டேன்றுழும்மலவித்திறும் பலவெம்பவம்விளைதுன்பெலாம்
விண்டேன்றுஞானியர்நெஞ்சில்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௧௭)

ஒளியாயிருசுடராயுட லுயிராயயனரியீசனு
யளியாய்மலைகடலாறுகா டகமாயணுமகமேருவாய்
வளியாயனல்புனலெண்டிசை வடிவாய்மறைமுடிவாய்பர
வெளியாயெலாப்பொருளாகிவாழ் வேலாயுதாவேலாயுதா. (௧௮)

அற்பர்க்குலாக்கவிபாடிநா னலையாமலேநலஞானமார்
சற்பத்தர்போற்றியநின்றிருந் தாளைப்புகழ்ந்திடநல்குவாய்
கற்பத்தருக்குடிவாழவுங் கருதாக்ஷதர்தாழவும்
வெற்பைத்துளைத்தெழுவிக்கிரம வேலாயுதாவேலாயுதா. (௧௯)

கலையாய்ந்துபூநீர்கொண்டுநின் கழல்பூசைசெய்தழல்சேர்தரு
முலைவாய்மெழுகெனநெஞ்சநெக் குருகாதவர்க்குறுமோகதி
யலைவாய்பழமுதிர்சோலையே ரகமாவினன்குடிபன்னகம்
விலையார்பரங்கிரிவாசனே வேலாயுதாவேலாயுதா. (௨௦)

மாறக்கரம்பலதேவரும் வசியாகருஷணமோகனம்
வீறக்கரமுச்சாடனம் வித்வேடதம்பனபேதமா
மாறக்கறந்தனையெண்ணிவீ டடையுந்திருவடியார்க்கெலாம்
வேறக்கரத்தாலாவதேன் வேலாயுதாவேலாயுதா. (௨௧)

பழிபூணினும்புகழ்பூணினும் பலபேசினும்பலகேட்பினும்
வழியேகினுந்தனிநிற்பினு மற்றொன்றுகாண்கினுமுண்கினும்
அழிவாகினுமிகவாழினு மருமாதரைப்புணர்கிற்பினும்
விழிகூரினும்மறவேனுனை வேலாயுதாவேலாயுதா. (௨௨)

மாறாதவன்புடையார்முனே மருவுந்திருப்புகழ்பாடியே
பேறானமுத்தியின்மேவினர் பேயேன்றவிர்ந்திடலாகுமோ
வாறாறுதத்துவமாகிய மயலாகியுந்திகழ்சண்முகா
வேறாரெனக்குனையன்றியே வேலாயுதாவேலாயுதா. (௨௩)

காடிக்குநீள்கந்தைக்குமோர் கவிபாடியேகனமூடரைக்
கூடிக்குலைந்தலையாமலுன் குளிர்தாமரைப்பதநல்குவாய்
நீடிக்கெலாம்வலமாகியோர் நிமிடத்தில்மாமயிலேறியே
வேடிக்கையாய்வருமையனே வேலாயுதாவேலாயுதா. (௨௪)

மட்டொன்றுகோதையர்மாயையான் மறையாகமந்தனைநிந்தைசொற்
றுட்டன்றனைநமனார்விடுந் தூதன்கொடுபோய்விட்டபின்
கட்டென்பனோபிடியென்பனோ கடியென்பனோவடியென்பனோ
வெட்டென்பனோகுத்தென்பனோ வேலாயுதாவேலாயுதா. (௨௫)

வளம்பாடுவேன்மயில்பாடுவேன் வளர்வாரணக்கொடிபாடுவேன்
றளம்பாடுவேன்கழல்பாடுவேன் றரிக்குங்கடம்பலர்பாடுவேன்
அளம்பாய்துருப்பெனுஞானமா மமுதத்தையுன்றிருவாயினால்
விளம்பாய்திருந்தணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௨௬)

காய்முற்றியகதிர்மென்றினை காக்குங்குறமகடன்புடை
போய்மூத்தர்போன்மிகவாடியே பொருமித்தினைமாவுண்டபின்
வாய்முத்தமுண்டிடவெண்ணியே மணவாளனாயடிவீழ்ந்தவா
வேய்முத்தமீன்றருண்முத்தமே வேலாயுதாவேலாயுதா. (௨௭)

பரியுங்கவிகையுநீள்பெரும் பாரும்புதல்வருமாதருங்
கரியுஞ்சிவிகையும்வித்தையுங் காலாளுமாடையுமன்னமும்
புரியுங்கனகமும்வெற்றியும் புகழுந்தருமமுமீகுவாய்
விரியுங்கடம்பணிமார்பனே வேலாயுதாவேலாயுதா. (௨௮)

மாசந்தொறும்வருகார்த்திகை வரம்வேண்டியேயுனைநம்பியித்
தேசங்களெங்கணுமுற்றபேர் சிந்தாகுலந்தனைநீக்கிநல்
வாசங்கமழ்குழலாரொடு மகவும்பெருமையுமீகுவாய்
வீசுங்கலாமயிலேறிடும் வேலாயுதாவேலாயுதா. (௨௯)

முப்போதுமுற்பலமாமலர் முப்போதுமிந்திரனார்சுனை
தப்பாதுபூத்துலகெங்கணுந் தணவாவதிசயமேவலால்
எப்போதும்விண்ணவர்மண்ணவ ரினிதேத்திநல்வரமேபெறும்
வெற்பாந்திருத்தணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௩௦)

எந்நாளுமுன்கழல்நாடவு மெந்நாளுமுன்புகழ்பாடவும்
எந்நாளுமுன்னெழினோக்கவு மெந்நாளுமுன்கதைகேட்கவும்
எந்நாளுமுன்பணிசெய்யவு மெளியேன்றனக்கருள்செய்குவாய்
மின்னாளுமைதருமைந்தனே வேலாயுதாவேலாயுதா. (௩௧)

ஆதிக்கனாதியுமாகியே யந்தத்தினந்தமுமாகியே
பாதிக்குபாதியுமாகியே பரத்துக்குமோர்பரமாகியே
சோதிக்குளேயொளியாகியே தோன்றுந்திருத்தணிகாபுரி
வீதிக்குளேமயிலூர்ந்திடும் வேலாயுதாவேலாயுதா. (௩௨)

நெடியோற்குநான்முகனார்க்கும்வா னிலையோர்க்கும்வெல்லருசூரனைப்
பொடியாக்கிவாசவனேமுதற் புலவோரையைந்தருநீழலிற்
குடியாக்கிமாதவரந்தணர் குறைநீக்கியாகமவேதநான்
மிடிபோக்கியாள்மயில்வாகனா வேலாயுதாவேலாயுதா. (௩௩)

அரவின்படநிகரல்குலா ரனுராகபோகமுநீங்கியே
யிரவும்பகலினுமுன்கழ லிணைபாடுவாரவர்நித்தரே
கிரவுஞ்சவெற்பொடுதாருகன் கிழிபட்டுவானவருய்ந்திட
விரவுஞ்சமர்புரிவீரனே வேலாயுதாவேலாயுதா. (௩௪)

சங்கோலிடும்பழனங்களுந் தனதன்படைத்திடுசெல்வமு
மிங்கோலமென்றுனைநம்பிவந் தேற்போர்க்கெலாமெளிதீகுவாய்
செங்கோல்செலுத்திடுவாசவன் சேயைச்சிறைபுரிசூரனார்
வெங்கோலழித்தருள்செல்வனே வேலாயுதாவேலாயுதா. (௩௫)

இல்லம்புவிமனைமக்கள்பொன் னிவைநம்பியுன்னிருதாளெனு
நல்லம்புயமலர்சிந்தியா நாயேன்பிறந்துழல்வேன்கொலோ
மல்லம்புயவரிமாமுகன் மடியப்பெருமுடியற்றிட
வில்லம்புதொட்டிடுகையனே வேலாயுதாவேலாயுதா. (௩௬)

தருநாரதன்புரிவேள்வியிற் றழலோங்கிடுந்தருணத்திலே
சகமியாவுநுங்கிடுமாற்றலிற் றறுகட்கனற்பொறிசிந்திட
வெகுகோபமாயெழுமேடமேல் விரைவாகவேறியமன்னவா
மிருவீரவாகுவின்முன்னவா வேலாயுதாவேலாயுதா. (ருஎ)

காதார்ந்தவேல்விழியார்செயுங் காமாந்தகாரமுநீங்கியுன்
றாதார்ந்ததாமரைமென்மலர்த் தாளென்றனுக்கருள்செய்குவாய்
நாதாந்தனேபோதாந்தனே நவிலுங்கலாயோகாந்தனே
வேதாந்தனேசித்தாந்தனே வேலாயுதாவேலாயுதா. (ருஅ)

மசானத்திறந்திடுதுன்பமு மறித்தும்பிறந்திடுதுன்பமும்
விசாரித்தருந்தவமாற்றிநல் வீடுற்றிடும்வகைகண்டிலேன்
பசாசுக்கெலாமிடமாகுவெம் பகையாளியூர்புகையாகவே
விசாகத்திலுற்பவமாய்வரும் வேலாயுதாவேலாயுதா. (ருகூ)

கலங்காவுளத்தொடுநின்முரு காற்றுப்படையுடனின்புக
ழலங்காரமுமனுபூதியு மறியாதமானிடர்தம்மினும்
பலங்காயிலைதளிர்பூத்தினும் பலகான்றிரிதருமர்க்கடம்
விலங்காய்ப்பிறந்திடனல்லதே வேலாயுதாவேலாயுதா. (ச0)

கருந்தாரைவேல்விழியார்செயுங் கலவிப்பெருமதுவுண்டுநின்
பெருந்தாமரைப்பதமர்ச்சியாப் பேயேன்பவந்தனைநீக்குவாய்
பொருந்தாரைவென்றொருவாசவன் புதல்விக்குமாப்பிளையாகிநல்
விருந்தாகிவெண்கரிமேல்வரும் வேலாயுதாவேலாயுதா. (சக)

குமராசரண்சரணென்றுனைக் கோடித்தபேர்தமைநாடியே
யெமராசன்வந்திடிலங்கவ னிருதாளுமேயறவெட்டுவார்
அமராபதிக்கிறைதேவியா மயிராணிமங்கிலியந்தரும்
விமலாதிருத்தணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (சஉ)

கரும்பாகும்விற்கணையாமலர் கடலாகுமாமுரசங்களுஞ்
சுரும்பாகுநாண்மதனூர்விடுந் துலையாதபோர்க்கடல்வெம்பியே
யரும்பாமுலைமடமாதர்பா லலையாமலேயெனையாளுவாய்
விரும்பார்கள்சென்னியைவீழ்த்திடும் வேலாயுதாவேலாயுதா. (சங)

தீண்டாதநீசர்களாயினுஞ் சேவித்தபேர்தமைவானுல
காண்டார்வணங்குவருன்கழற் கன்பற்றவிண்ணவர்நீசரே
மாண்டாரெலும்பணிசங்கரன் மைந்தாதிருத்தணிகாசலா
வேண்டாத்வருயிர்வாங்கிடும் வேலாயுதாவேலாயுதா. (சச)

அகழ்ந்தார்தமைத்தாங்கும்புவி யதுபோலிடர்புரிவோரையான்
புகழ்ந்தேபொறுத்திடுமொறுநீ புகலாய்திருத்தணிகாசலா
விகழ்ந்தார்தலையறவெட்டியே யெமனூர்விடுத்திடுசெண்முகா
மிகுந்தாருகன்வலிமாய்த்திடும் வேலாயுதாவேலாயுதா. (சரு)

மொழிபாலினுமினிமாதரார் முயங்கும்படவரவல்குலாங்
குழிவீழினுந்தனமாமலைக் கோட்டேறினும்மறவேனுனை
யழியாதமாதவரேத்திடு மமலாதிருத்தணிகாசலா
விழியாயிரமுடையான்றொழும் வேலாயுதாவேலாயுதா. (சசு)

கண்டாரெலாமிகவேசிடக் கபமீறிவாய்குழறுமுனே
தண்டாமரைப்பதநல்குவாய் தழைகானிலாயிழைபோனபின்
வண்டாரையின்புறவாலியின் வலிசிந்துமான்மருகாகுகா
விண்டாரைவேரறமாய்த்திடும் வேலாயுதாவேலாயுதா. (சஎ)

பூவாருமிந்திரநீலமுப் போதும்புனைந்திடுநின்கழ
லோவாதருச்சனைசெய்துநெஞ் சுருகும்படியருள்செய்குவாய்
தேவாதிதேவர்க்கோமெனுந் திருமந்திரம்புகல்தேசிகா
மேவார்மடிந்திடமோதிடும் வேலாயுதாவேலாயுதா. (சஅ)

பாழிக்குவேண்மதனூர்விடும் பாணத்தினாலுடல்வெம்பியே
தாழிக்குள்வைத்திடுமத்துடைத் தயிரென்னநெஞ்சலையாமலாள்
காழிக்குள்வாழ்சம்பந்தராய்க் கவிபாடநல்வழிகாட்டிடும்
வீழிக்கனினிகர்வாயனே வேலாயுதாவேலாயுதா. (சகூ)

கந்தாவுமைமைந்தாசெழுங் கடம்பாமுருகாவென்றுனைக்
கொந்தார்மலர்கொடுபூசைசெய் குணமுள்ளமானிடரீசரே
செந்தூர்பரங்கிரியேரகந் திருவாவினன்குடிவாசனே
விந்தாசலம்புரையும்புயா வேலாயுதாவேலாயுதா. (ருo)

சேந்தாநமோகுமராநமோ சேயேநமோவனவள்ளிதன்
காந்தாநமோவணிகாநமோ கந்தாநமோகடம்பாநமோ
சாந்தாநமோமுருகாநமோ தணிகாசலத்திறைவாநமோ
வேந்தாநமோவெனவோதுவேன் வேலாயுதாவேலாயுதா. (ருக)

கள்ளார்கடம்பணியுந்திருக் கழலுஞ்சதங்கையுமஞ்ஞையும்
புள்ளானகுக்குடமுந்திருப் புயமாறுமேதுணையாகுமே
நள்ளாருரங்கிழிபட்டுநோய் நரிதின்றிடும்படிசெய்குவாய்
விள்ளாதவன்புடையேனையாள் வேலாயுதாவேலாயுதா. (ருஉ)

நம்புந்திருவடியார்கண்மே னட்பாகியுட்பகைகொண்டுபோய்
வம்பும்பிணிகளுமேசெயும் வசியாகருஷணமாதியாம்
பம்பும்பசாசையுமேவினோர் பலசூனியங்களையேவினோர்
வெம்புங்குடர்த்தொடைவேய்ந்திடும் வேலாயுதாவேலாயுதா. (௫௩)

தாய்க்கும்பிதாவுக்குங்கொடா தவர்தேடிவைத்திடுகாசெலாந்
தீய்க்கும்பலபேய்க்கும்பொருஞ் செருநர்க்குநீடிருடர்க்குமாந்
தோய்க்குந்தயிருடன்மாமியார் துவர்வாயிதழமுதுண்டுகோ
மேய்க்கும்பிரான்மருகாகுகா வேலாயுதாவேலாயுதா. (௫௪)

கொட்டும்பறையுடனென்கிளை கூகாவெனவெமதூதுவர்
கட்டும்பிடித்திடுமென்றுயிர் கவராமலேயெனையாளுவாய்
முட்டுந்தகர்மிசையேறியே முடுகித்தயித்தியர்சென்னியை
வெட்டுந்திருக்கரவாளனே வேலாயுதாவேலாயுதா. (௫௫)

பெருவாதுசெய்சமயந்தொறும் பிதற்றும்பொருளருமாறுநின்
திருவாயினாலொருவான்பொருள் தெளியும்படியருள்செய்குவாய்
மருவார்சிரங்கரநாசிதோள் வாய்காதுகண்செவிபாறுண
வொருவாதரிந்திடுவீரனே வேலாயுதாவேலாயுதா. (௫௬)

அழலுக்குள்வீழ்மெழுகாமென வகைநைந்துநைந்துருகிச்சிறு
கழலுக்குமாமலரிட்டுனைக் கருதாமலேமடவார்கருங்
குழலுக்கும்வாயிதழுக்கும்வார் கொங்கைக்குமாலுறுவோரெலாம்
விழலுக்கிறைத்திடுவீணரே வேலாயுதாவேலாயுதா. (௫௭)

மண்குத்துகோட்டிமிலேறென மதமீறினுமெனையாளுவாய்
கண்குத்துகைவிரறன்னையார் களைவார்களிவ்வுலகத்திலே
யெண்குத்துவன்மீகந்தினை யிடர்க்குந்தொறுமணிசிந்திடும்
விண்குத்துநீள்தணிகாசலா வேலாயுதாவேலாயுதா. (௫௮)

இழையாகுநுண்ணிடையார்வயி றெனும்பண்ணையின்விளைவாகியே
கழையாலையிட்டதுபோலவெங் கரியோனிவாய்வரநீக்குவாய்
மழையானையென்றரிதாவியே மருளுந்திருத்தணிகாசலா
விழையாருரங்கிழிபட்டிடும் வேலாயுதாவேலாயுதா. (௫௯)

தேருக்குளஞ்சுராணிபோற் றேகத்திலாருயிர்விண்டபின்
பாருக்குளேபுதையென்பதும் படுகானிலேசுடுமென்பது
நீருக்குளேமுழுகென்பது மினையாமலின்புறலாகுமோ
மேருச்சிலையவன்மைந்தனே வேலாயுதாவேலாயுதா. (௬௦)

குறிகாட்டியந்தகனுருயிர்க் கொலைகாட்டிவந்தழையாமுனே
முறிகாட்டியேயுனதாறுமா முகங்காட்டிவந்தருள்செய்குவாய்
செறிகாட்டிலேகிளியோட்டியே தினைகாத்தமானணைபார்த்திபா
வெறியாட்டிலேமகிழ்பூத்திடும் வேலாயுதாவேலாயுதா. (சூக)

கட்டாரிவேல்விழியார்செயுங் கலவிக்கிசைந்திடுகாமனு
மொட்டாரெலாந்திறைநல்கிட வுலகாளுமன்னவருந்தழல்
பட்டாருயிர்விளிவார்களுன் பதநீழலேநிலையென்றெலாம்
விட்டார்களேவிளியாதவர் வேலாயுதாவேலாயுதா. (சூஉ)

நீறத்துவாவிரவென்னவே நீளுங்கருங்குழன்மாதர்பாற்
காறத்துவாம்பரிதன்னினுங் கடிதோடுநெஞ்சசைவற்றவ
ராறத்துவாவினையுங்கடந் தந்தத்துவாதசவுச்சியின்
வீறத்துவாதசகைத்தலா வேலாயுதாவேலாயுதா. (சூங)

பேரைத்தொலைத்துயர்தாருகன் பெருமாயவெற்பினையுந்தொலைத்
தூரைத்தொலைத்தரிமாமுக னூரமுந்தொலைத்தொழியாதவெஞ்
சூரைத்தொலைத்தெழுமாதவர் துயருந்தொலைத்தலைமோதிடும்
வீரைக்குளேமுழுகாவரும் வேலாயுதாவேலாயுதா. (சூச)

பட்டிக்கடாமிசையந்தகன் பாசங்கொடுவருமுன்னமே
வட்டிக்குவைத்திடுகாசெலாம் வறியோர்க்களிப்பவருய்குவார்
எட்டிக்கனியெனவண்டினோர்க் கீயாதலோபிகள்வேசைபால்
விட்டிற்கிசைந்திடமாய்வரே வேலாயுதாவேலாயுதா. (சூரு)

கடியாழினாரதமாமுனி கழறுமுனேதினைகாத்திடுங்
கொடியானவள்ளியின்மால்கொடு குறுகிக்கணிமரமாகியே
யிடியானசொல்வனவேடர்துஞ் சிரவின்கணேதிருடிக்கொடு
விடியாமுனேவருகள்வனே வேலாயுதாவேலாயுதா. (சூசு)

காலைக்குநண்பகலைக்குமிக் கலிகாலமற்புதமெய்தவே
மாலைக்குமிந்திரநீலமா மலர்மூன்றணிகழனல்குவாய்
ஆலைக்குள்வைத்தடுகன்னலி னமராடியப்புறமுற்றிய
வேலைக்குண்மூழ்கியகொக்கடும் வேலாயுதாவேலாயுதா. (சூஎ)

அஞ்சக்கொடுந்துயர்செய்துநின் னடியார்கண்மேல்விடுமம்பெலாம்
பஞ்சிற்படுந்தணலென்னவே படநூறிவிட்டவர்தம்மையும்
நெஞ்சைப்பிளந்துதிரத்தொடு நிணமுண்டுதீதத்தெறிவாளனே
விஞ்சைக்கிறைபணிசுந்தரா வேலாயுதாவேலாயுதா. (சூஅ)

நனவிற்புரிந்திடுகாரியம் நாடோறுசெய்பவராயினுங்
கனவிற்புரிந்திடுபொய்யெனக் காணாருனைக்காணார்களே
சினவித்தயித்தியர்சேதியைத் தெரியாரெனக்குருவின்புடை
வினவிப்பொருதிடுசெந்தில்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௬௯)

புத்தாரமுதுணுமிந்திரன் புனலாடிமந்தாரந்தரும்
தொத்தார்மலர்கொடுதொழவே துணைமாமலர்ப்பதமீகுவாய்
கொத்தார்கடம்புடனுசுசீர் குறையாமதுரஞ்சித்திர
வித்தாரவண்கவியும்புனை வேலாயுதாவேலாயுதா. (௭௰)

பிறித்தாருயிர்கொடுபோய்நமன் பெரிதானதண்டனைசெய்திட
மறித்தாக்கையிற்சேராமுனே மயிலேறிவந்தெதிர்நின்றிடாய்
பொறுத்தாற்குறையுளதோமுனுள் புலையேன்செயும்பிழைநாடியே
வெறுத்தாற்றுணைவேறில்லையே வேலாயுதாவேலாயுதா. (௭௧)

தொடையேறுசெந்தமிழ்பாடியே தொழுதுங்கொடாதவர்வாழ்தலைக்
கடையேறியிங்கிரவாமலே கழலார்ந்தசிற்றடிநல்குவாய்
மடையேறிநந்தினமூர்ந்திடும வயல்சூழ்திருத்தணிகாசலா
விடையேறியின்புறுபாலனே வேலாயுதாவேலாயுதா. (௭௨)

அழுங்குந்துயர்பலவும்புரிந் தணியாயிரத்தெட்டண்டமும்
வழங்குங்கொடுங்கோலோச்சியே வாழ்சூரபன்மாவின்புடை
முழங்குந்தயித்தியர்போரிடை முடுக்கும்படைக்கலம்யாவையும்
விழுங்குங்குறட்டிரள்சூழ்தரும் வேலாயுதாவேலாயுதா. (௭௩)

அடுத்தார்க்கெல்லாமருள்செய்பவ னறுமாமுகனெனும்வாய்மையாற்
றொடுத்தேன்பலகவியாதலிற் றுன்மார்க்கனென்றிகழாமலே
தடுத்தாட்கொளத்தகுமென்னைநீ தனியாகவிச்சகமீதிலே
விடுத்தாற்பழியுனைமேவுமே வேலாயுதாவேலாயுதா. (௭௪)

பொன்னுமலைபொடிபட்டிடப் புனலேழ்களுடைபட்டிடத்
துன்னாரெலாமசுணத்திர ளஞ்சும்படியுயிர்சோர்ந்திட
வண்ணளயன்புனையண்டமோ டருமாதிலங்கிழிபட்டிட
விண்ணொனறிந்தொலிசெய்திடும் வேலாயுதாவேலாயுதா. (௭௫)

கண்டேரைவாயெழில்மஞ்சைவாய் கவ்வும்படப்பொறிபாம்பின்வா
யுண்டேரைவாயுறுதம்பியின் றொளிர்செம்பொனுபரணந்தனை
மண்டேரைமாதரைநம்பியே மகிழ்வாருனைப்புகழாமலே
வெண்டேரைநீரெனுமாறுபோல் வேலாயுதாவேலாயுதா. (௭௬)

மாக்குன்றமுந்தொளையிட்டிட வருதாருகன்வலியற்றிடத்
தேக்குங்கடற்புனல்வற்றிடத் திகழ்மாதவத்தவமுற்றிடத்
தாக்குஞ்சுரர்சிலைபெற்றிடத் தகுவோர்கருந்தலையிற்றிட
வீக்குங்கழற்காலண்ணலே வேலாயுதாவேலாயுதா. (எஎ)

மோகந்தருமாமாயையின் முழுகிக்கிடந்தயர்கின்றவென்
சோகந்தவிர்த்திடுமாறுநின் றுணைமாமலர்ப்பதமீகுவாய்
மாகந்தமாதனம்வேள்விமா மலைவேங்கடாசலமேரகம்
மேகந்தவழ்தணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (எஅ)

நன்மைக்குநன்மையுமாகுவாய் நலமொன்றிலாப்பலதுன்பமாந்
துன்மைக்குத்துன்மையுமாகுவாய் துகடீரவெங்கணுமுற்றிடும்
வன்மைக்கும்வன்மையுமாகுவாய் வலியென்றிலாதறநுண்மையா
மென்மைக்குமென்மையுமாகுவாய் வேலாயுதாவேலாயுதா. (எகூ)

காகத்திலுற்பவமாகியேழ் கடலுண்டுகாவிரிதந்துபைந்
தாரகத்தைமுட்டியவிந்தையைத் துகள்செய்துவில்வலனுவியுண்
டேரகத்திறுபாணத்திறு னுதவுந்தமிழ்க்கிறையாயினேன்
விரகத்தைநீக்கியதேசிகா வேலாயுதாவேலாயுதா. (அ0)

நகுமோநினைத்திடுமோவுட னனிவாடுமோதுனிநீடுமோ
தகுமோமறுத்திடுமோவிதழ் தாநாணுமோமயல்பூணுமோ
புகுமோகுறிச்சியிலித்தினைப் புனமேவுமோகுறமானென
வெகுமோகமாய்வனமேசெலும் வேலாயுதாவேலாயுதா. (அக)

மண்ணப்பனல்வளிவானென வளர்பூதமைந்தினுமாரணன்
கண்ணப்படைத்திடுமிவ்வுட லுயேன்சுமந்திடலாகுமோ
வண்ணப்பதமலரீகுவாய் மயிலேறிவந்தடியேன்சொலும்
விண்ணப்பமொன்றிதுகேட்டருள் வேலாயுதாவேலாயுதா. (அஉ)

கைத்தோர்பொருளுறுகாலையே கழியாவறம்புரியாதுபொன்
வைத்தோர்செழுந்தேனீயென மடிவார்பொருள்பிறர்கொள்ளவே
பொய்த்தேவராலறியாதவெண் பொடிபூசியோர்விடைமேல்வரும்
மெய்த்தேவனீன்றருள்சண்முகா வேலாயுதாவேலாயுதா. (அங)

மாதாபிதாகுருதெய்வத மனுமக்களாகியசுற்றமும்
நீதானெனும்படியெண்ணியே நினைவார்க்கருந்துணையாகுவாய்
தாதாவரந்தனையான்செயுந் தவறும்பொறுத்தருளொன்றுமுன்
வேதாவழுத்தியசெல்வனே வேலாயுதாவேலாயுதா. (அச)

கட்சிக்குளந்தியின்மேவியே கண்டுஞ்சிவைகரையிற்செலும்
டட்சிக்குநேருடலோடுயிர் பலவுற்றுநீங்கிடநல்லதோ
குட்சிக்குளேயகிலாண்டமுங் குலவுந்திருவுருவத்தனே
வெட்சித்தொடையணிமார்பனே வேலாயுதாவேலாயுதா. (௮௫)

பசிதாகமக்கினிமந்தநீர் படர்சீதநஞ்சொடுதீவிட
மசிவாதநீள்சனியென்னுமன் னவைபன்னிரண்டுயிர்வேதனை
நசியாமலென்றனையாண்டருள் நவவீரர்முன்னவனுகவே
விசுவாசமாய்வருகாங்கெயா வேலாயுதாவேலாயுதா. (௮௬)

மதனத்தையுட்கொளுநங்கைமார் மருமத்தையாதனமுற்றெழுந்
ததனத்தைவாயமுதத்தையுண் சரசத்தைவாளகத்தைவாள்
வதனத்தையாலுதரத்தைநல் வசனத்தைமாலுறுகொச்சையேன்
விதனத்தைநீக்கிடுமெத்தனே வேலாயுதாவேலாயுதா. (௮௭)

கூம்பாதநண்பினரில்லுணுங் கூழ்காடிவானமுதாகுமால்
பாம்பாகவஞ்சனையுட்கொளும் பகையாளியில்லிடையுண்டிடுந்
தீம்பாலுமின்னமுதுஞ்சுவை செறியும்பொரிக்கறியுங்கடும்
வேம்பாய்க்கசந்திடுமென்பரே வேலாயுதாவேலாயுதா. (௮௮)

கண்பாவுகானகவேடனுய்க் கையம்புவில்லொடுமேவியே
பண்பாவுமென்பெயர்முட்டைநீ பாடாயொருகவியென்னலும்
புண்பாவுவெஞ்சுரவண்மையாற் பொய்யாமொழிப்புலவோன்சொலும்
வெண்பாவுகந்தணிமார்பனே வேலாயுதாவேலாயுதா. (௮௯)

முதிராதபேரழகானசண் முகமுங்கரம்பனிரண்டுமென்
னெதிராகவந்தருள்செய்குவா யினிதானமுத்தமிழோதிடும்
மதுராபுரிக்கிறைதென்னவன் மகனுகியுக்கிரனென்றுவாழ்
விதுராதிருத்தணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௯௦)

வானத்தினும்புவிமீதினும் மற்றெங்குநீதுணையென்றுகொள்
ஞானத்தினூலுறுவோர்க்கெலாம் நவிலொன்பதிற்குருவாகுவாய்
ஈனச்செருக்கினைநண்ணியே யெண்ணுதமானிடருக்கெலா
மீனச்சனியெனநின்றிடும் வேலாயுதாவேலாயுதா. (௯௧)

சூழ்விப்பையோபலதுன்பெலாந் தொலைவிப்பையோநிலைபெற்றிட
வாழ்விப்பையோதாழ்விப்பையோ மறித்தும்பிறப்பெனுமாழியி
னாழ்விப்பையோவகல்விப்பையோ வருளென்கொலோவறியேனையா
வேழ்விப்பொருப்பிடைவாசனே வேலாயுதாவேலாயுதா. (௯௨)

வாட்கோரைதாமரைவெங்கரா மருவுங்கிடங்கிடைவீழ்ந்தவன்
கோட்பாடுபோலுலகாசையிற் கொடியேன்விழுந்துயர்நீக்கியுன்
தாட்கேவல்செய்திடுமாறுநீ தமியேனையாண்டருள்செய்குவாய்
வேட்கோவனுயுலகந்தரும் வேலாயுதாவேலாயுதா. (௯௩)

தொகுதாரகைக்குலமெண்ணினுந் தொலையாதவெம்பிறவிக்குளே
புகுதாமலுன்னிருதாளெனும் புணைநல்கியென்றனையாண்டிடாய்
திகுதீதிமித்திமிதீயெனச் சென்றுமோமயில்மேல்வரும்
விகிர்தாதிருத்தணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௯௪)

மனைதீப்படும்பொழுதந்தமா| மனையிற்றுயில்கொளநாடல்போற்
புனையாக்கைவிட்டுயிர்நீங்கிடும் பொழுதுஞ்சகமயனீங்கிடார்
சுனைபூத்தசெங்கழுநீர்மலர்த் துகள்போர்த்தசேவடிநல்கியென்
வினைதீர்த்திடுந்தணிகாசலா வேலாயுதாவேலாயுதா. (௯௫)

தொடலாகுமோபிறர்மாதரைத் தொழலாகுமோபலதேவரை
யடலாகுமோபலசீவனை யறலாகுமோவுனதன்பினைப்
படலாகுமோமிகுதுன்பினைப் படிமீதிலிப்படியென்னைநீ
விடலாகுமோதணிகைக்குள்வாழ் வேலாயுதாவேலாயுதா. (௯௬)

நாளும்பிறந்திறவாமலே நாயேன்முனேயுனதாதிரு
தோளுங்கழுநீரும்புடைத் துணைமாதருமயில்கோழியுந்
தாளுஞ்சதங்கையுமாகவே தணிகாசலத்திடைநின்றுநீ
மீளும்படியருள்செய்குவாய் வேலாயுதாவேலாயுதா. (௯௭)

திரைசேரிருவினைமல்கிடுஞ் செநநக்கடலிடைவீழுநான்
கரைசேரவுன்னிருகான்மரக் கலமீகுவாயுனைநம்பினேன்
நரைசேர்கிழவனுமாகியே நலமார்தினைப்புனமேவிய
விரைசேர்கடம்பணிமார்பனே வேலாயுதாவேலாயுதா. (௯௮)

நீளாண்மையும்புகழும்பெரு நிலையும்பலகலையுந்திகழ்
தாளாண்மையும்பெறுவார்திருத் தணிகாசலாவெனவோதுவார்
வாளாண்மையாலுயர்சூரனுர் வலிசிந்திமன்னுயிர்கட்கெலாம்
வேளாண்மைசெய்திடுவள்ளலே வேலாயுதாவேலாயுதா. (௯௯)

ஈராறுகாதினிலோர்செவி யெளியேன்புகல்மொழிகேட்குமே
யீராறுகண்களிலோர்விழி யெளியேன்றனக்கருள்செய்யுமே
யீராறுகைதனிலோர்கர மெளியேனையஞ்சேலென்னுமே
வீராதிருத்தணிகாதிபா வேலாயுதாவேலாயுதா. (௧௦௦)

தணிகை வேலாயுதசதகம்-முற்றிற்று.

உண்மைதரும்வேலா யுதசதகப்பாநூறும்
வண்மைபெறநாளும் வழுத்துவோ-ரெண்ணமெலாஞ்
சித்திக்குஞ்சத்துருவைச் சேதிக்குஞ்சாதிக்கு
மெத்திக்குநன்மைதருமே.

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

ஐந்தாவது

தணிகை அந்தாதி.

காப்பு.

ஆறுமுடியோ னழற்கண் டனிலுதித்த
வாறுமுடியோ னரும்புகழே—வீறுந்
திருத்தணிகையந்தாதி சேவிக்குமென்றன்
கருத்திலுறை யானைமுகன் காப்பு.

திருவும் அருளுஞ் செழிக்குமின்ப வீடு
மருவுந் தணிகைவரை வாழு—முருகன்
திருப்பாத பங்கயத்தைச் சென்றிறைஞ்சி யேத்தி
விருப்பா நினைக்கமன மே. (க)

மேவித் தணிகைவரை வேந்தனிரு தாண்மலரைச்
சேவித்து நங்குறையைச் செப்பினுல்—கோவித்
திடுமோ குறையதுதீர்த் தெய்தரியவீட்டில்
விடுமோ மனமே விளம்பு. (உ)

விளம்பாய் தணிகைவரை வேலோனை யன்ப
ருளம்பாயு மின்பவுரு வானை—யளம்பாய்
தரும்பெருஞா னக்கடலிற் ருேய்ந்திடா யென்னே
இரும்பெனவென் னெஞ்சே யினைந்து. (௩)

இயலு மிசையு மெழினாடகமு
முயலுந் தமிழ்ச்செய் முனிவன்—பயிலரவ
மீந்த தணிகை யெழில்வரைமேல் வீற்றிருக்கும்
வேந்த னிருபதமே வீடு. (௪)

வீட்டை யடைவான் விரும்பினையே னன்னெஞ்சே
நாட்டி லுயர்தணிகை நாயகனைக்—காட்டிற்
குறத்தி பதம்பணியுங் கொற்றவனை நாளும்
அறத்தினொடும் பூசித் தறி. (௫)

அறியாச் சிறியே னரட்டையறுத் தென்று
மறியாச் சிறுதாண் மலரைக்—குறியாகக்
கொள்ளென்றான் றென்றணிகைக் கொற்றவனு மிக்கணமே
விள்ளென்றான் மேலை வினை. (௬)

வினையகற்றி நாயேனை மெய்யடியார் கூட்டந்
தனிலிருத்தி நாளுந் தணவா—தெனைநினைந்து
நில்லென்றான் றென்றணிகை நீலகிரி யான்பிறப்பை
வெல்லென்றா னன்பு மிகுத்து. (௭)

மிகுத்த வவுணரெனும் வேலைதனை வேலாற்
செகுத்த திருத்தணிகைத் தேவே—பகுத்தவறி
வில்லேற்குப் பேரின்ப மீந்திடுவ தென்றோநீ
சொல்லாய்நின் வாயாற் றுணிந்து. (௮)

துணிந்தேன் றணிகைவரைத் தோன்றலிரு பாதம்
பணிந்தே னவன்புகழ்வெண் பாவை—யணிந்தேன்மற்
றென்னைப் பிறப்பி லிறுத்தாமற் பேரின்பந்
தன்னைக் கொடுத்திட்டான் சார்ந்து. (௯)

சாருமடி யேன்றனக்குச் சஞ்சிதமுன் ளுமலத்தின்
வேருங் களைந்தின்ப வீடுதவ—யாருந்
தணிகா சலமென்று சாற்றவருள் செய்யும்
வணிகா மயில்மிசைநீ வா. (௧௦)

வாவா மயிலேயெம் மங்கையுயிர் நீங்காமுன்
றேவாதி தேவன் றிருத்தணிகை—யோவாம
லுற்றவனைத் தன்னிருதா ளுற்றவரைக் காத்தளிக்குங்
கொற்றவனை நீசுமந்து கொண்டு. (௧௧)

கொண்டே னவனருளைக் கூடினேன் றொண்டரொடும்
விண்டேன் பிறவியெனும் வேலைதனைக்—கண்டேன்
றடம்பலவுஞ் சூழுந் தணிகைவரை மேய
கடம்பமலர்த் தாரான் கழல். (௧௨)

கழலணியுந் தாளுங் கனகநிற மேனி
யழகு மயிலு மயிலும்—மழலை மொழி
மாத ரிருபுறமும் வாய்ந்த தணிகைவரை
நாதனையென் னெஞ்சகமே நாடு. (௧௩)

நாடுமடி யாரிடமு நங்கைகுற மானுறையுங்
காடுந் தணிகைவரைக் கல்லகமுந்—தேடும்
மறைநான்கி னீறு மறுவுநின்றாண் மஞ்ஞைக்
கிறைவாவென் சென்னிமிசை யேற்று. (௧௪)

ஏற்றுக் கொடியா னெகின்கொடியான் புள்ளரசாம்
பாற்றுக் கொடியானும் பார்த்திருப்பக்—கூற்றிற்
கொடியானைக் கோழிக் கொடியாகக் கொண்டான்
செடியார் தணிகைவரைச் சேய். (௧௫)

சேயோன் கொடியவர்க்குச் சேயோ னடியவர்க்குத்
தாயோன் றணிகைச் சைலத்தோ—னாயேனை
மாளாத பேரின்ப வாரி படிவித்தே
யாளாகக் கொண்டா னவன். (௧௬)

அவனே யனைத்துலகு மாக்கி யழிப்பா
னவனே தணிகைவரை யண்ண—லவனேயென்
சிற்றறிவைப் பேரறிவாய்ச் செய்தா னவனுக்கு
மற்றறியே னாற்றுங்கைம் மாறு. (௧௭)

கைம்மாறு வேண்டாத கார்போற் றடுத்தென்னை
யுய்ம்மாறு செய்தென் னுளம்புக்கான்—மைம்மாறாக்
கண்ணார் விரும்புங் கடம்பணியு நீள்புயத்தான்
விண்ணோர் தணிகைவரை வேந்து. (௧௮)

வேந்தன் றணிகைவரை வேலோ னெழிற்குறத்தி
காந்தன் குகன்குமரன் காங்கேயன்—சேந்த
னறுமா முகன்றெய்வ யானைமண வாள
னுறைவானென்னெஞ்சத்தி னுள். (௧௯)

உள்ளும் புறம்பு முறைந்துவினை தீர்த்திடுவான்
றெள்ளுமறை நாடரிய சீரியோன்—கள்ளுமிழு
நீலச் சுனைசேர் நெடுந்தணிகை வெற்பாளன்
கோலத்தை யேத்தினவர்க் கு. (௨௦)

குன்றம் பிளந்தவயிற் கொற்றவா நற்றவர்சேர்
மன்றம் பொதியுமயில் வாகனு—வென்றுந்
தணிகா சலத்துறையுந் தற்பரா வென்று
பணியா தவர்க்கென் பயன். (உக)

பயந்தே னிருவினைக்கும் பாழ்த்தபிற விக்கும்
வியந்தேனின் பாதார விந்த—நயந்தேன்
முருகா தணிகைவரை முன்னவா மாலின்
மருகா வென் பாரை மகிழ்ந்து. (உஉ)

மகிழ்ந்துமனை வாழ்க்கைதனின் மாய்ந்திடுமென்னெஞ்ச
நெகிழ்ந்து நினைநினைப்ப தென்றோ—புகழ்ந்தமரர்
போற்றுந் தணிகைவரைப் புண்ணியநின் வாய்திறந்தோர்
மாற்றங் கொடுத்திடுவாய் வந்து. (உங)

வந்தா ளுனைப்பிரிந்த மாதுமதன் பூங்கணையால்
வெந்தாள் பசலைமுலை மேற்கொண்டு நொந்தாளைத்
தந்தா ளணிகடப்பந் தாரதனைச் சண்முகவா
கந்தா தணிகைக்கு கா. (உச)

காக்குமரி மான்மருகா காரதனை யூர்தியென
வாக்குமரி மான்மருகா வாறுமுகா—நோக்கரிய
பன்னிரண்டு தோளா பகர்தணிகை வெற்பாவுன்
றன்னிரண்டு தாளெனக்குத் தா. (உரு)

தாதார் கடம்பணியுஞ் சண்முகா நற்றணிகை
நாதா குறத்திவள்ளி நாயகா—வேதாவைக்
குட்டிச் சிறைவைத்த கோமளா வந்தருளென்
றிட்டிக்கு நேரே தினம். (உசு)

தினமுந் தணிகைச் செழுங்கிரியு மன்பர்
மனமுங் குடிகொண்டு வாழ்வோன்—கனகநிற
வள்ளியோ னுன்மறைகள் வாழ்த்துமலர்த் தாளுடைய
தெள்ளியோன் றன்புகழே செப்பு. (உஎ)

செப்பு முடியிற் சிறுபிறையுங் கோரளவு
மப்புந் தரித்தோ னருள்குமரா—விப்புவியி
னல்லோர் தொழுந்தணிகை நாயகா நின்புகழைக்
கல்லாதார்க் குண்டோ கதி. (உஅ)

கதிசெயலே வாயே ரகம்பறங்குன் றன்பர்
துதிசெய் பழமுதிருஞ் சோலை—யதிசெயஞ்செய்
நற்குன்று தோறூட னல்லாவி னன்குடியு
நிற்குந் தணிகைநிம லன். (உகூ)

நிமலன் கமல நிகர்விழியீ ராற
னமல னமலமறுத் தாண்டான்—விமலன்
கருணா கரன்றணிகைக் காங்கேயன்செவ் வேலன்
சரணம் புயமனமே சாற்று. (௩0)

சாற்றுந் தணிகைவரைச் சண்முகனை யன்பருளந்
தோற்றுமுடி யாறுடைய சுந்தரனைப்—போற்றுகிலா
யென்னோ கலகவிழி யேந்திழையார் மால்கொண்டா
யன்னோவென் னெஞ்சே யழிந்து. (௩க)

அழிந்து பிறந்துழலு மாக்கைதருந் துன்ப
மொழிந்து நினையுறுவ துண்டோ—வழிந்து
மதுவொழுகுங் கல்லார மார்பா தணிகைப்
பதியுறையுஞ் சேயே பகர். (௩உ)

பகரா யொருவசனம் பாவியே னுய்ய
நிகராரு மில்லாத நித்தா—நகராந்
தணிகைவரை மீதுறையுந் தற்பரா வைவே
லணிகையக லாதவம ரா. (௩௩)

அமரா பதிகாத் தவுணரெலா மாளச்
சமராடி யேதணிகை சாருங்—குமரா
குறிஞ்சிக் கிறைவாநின் கோலத்தைக் காட்டாய்
பிறந்திறக்க மாட்டேன் பிரிந்து. (௩௪)

பிரியே னுனையான் பிரிந்தோர் கணமுந்
தரியே னுடல்பிரிந்து சாவேன்—கரியோன்
மருகா தணிகைவரை மன்னு வடிவேன்
முருகா வருவாயென் முன். (௩௫)

முன்னு மிருபுறமு மூதறிவி லாச்சிறியேன்
பின்னுந் துணையாகிப் பேசுமே—பன்னுமறை
நாலுமெழுந் தோலமிடு நற்றணிகை மால்வரையின்
மேலுறையுங் காங்கெயன்கை வேல். (௩௬)

வேலா குமரா விசாகா வுமையளித்த
பாலா தணிகைவரைப் பார்த்திபா—தோலாத
தாருகனைக் காய்ந்தருளுஞ் சண்முகா வென்றிருகண்
ணீருகநெஞ் சேயுருகி நில். (கூஎ)

நில்லாம லோடியுழ னெஞ்சே தணிகைவரை
செல்லா யறுமுகனைச் சேவியாய்—பொல்லாத
தீயேன் குறைகளையச் செப்பாயிம் மாத்திரஞ்செய்
யாயே லிறந்திடுவன் யான். (கூஅ)

யானும் பிரிந்திருக்க கில்லேன் றணிகைவரை
யானுமெனை நீங்கியமர் கிற்றிலான்—கானவரை
போலுமவன் றோளழகும் பொற்சதங்கை தண்டையணி
காலழகும் வேலழகுங் கண்டு. (கூகூ)

கண்டாள் தணிகைவரைக் காவலனைக் கண்டுமையல்
கொண்டா ளவன்பெயரே கூறுவாள்—வண்டேறுந்
தாதேய் கடம்பமலர்த் தாரதனைக் கைக்கொண்டாள்
மாதேயான் பெற்றசிறு மான். (சo)

மானேயஞ் சேறணிகை மால்வரைவா ழுங்குமரன்
றானேயங் கொண்டுநினைச் சாருமே—தூநீருந்
தண்மலருங் கொண்டவனற் றண்மலரை யர்ச்சனைசெய்
கண்மலர்நீர் சோரக் கசிந்து. (சக)

கசிந்து மனமுருகிக் கண்ணீர் பெருகி
யொசித்த வுடற்புளக முற்றே—யிசைந்துநினைப்
போற்று துழலும் புலையனே னுய்வகையென்
சாற்றாய் தணிகா சலா. (சஉ)

தணிகா சலந்துறையுஞ் சண்முகா வென்று
பணிகா சலந்தவிரப் பாடு—துணிவாகச்
சிந்தித் திடுமனமே செந்நாவே நன்னெஞ்சே
வந்துற் றிடும் பெரிய வாழ்வு. (சங)

வாழ்ந்துனருந் தென்றணிகை மால்வரையைக் கண்டுமுடி
தாழ்த்துனருந் தீவினையைத் தாழ்த்துனரே—கேழ்த்தமயிற்
செய்யோ னமரர் சிறைமீட்ட மூவிலைவேற்
கையோன் றிருப்புகழைக் கற்று. (சச)

கற்றவரைக் கைக்கொண்ட கண்ணுதலோன் சேய்புகழைக்
கற்றவரைச் சேராயெங் கன்னெஞ்சே—மற்றவன்வா
ழோங்கற் றணிகைதனை யோர்கணமுன் னுய்பிறவி
நீங்கக் கசிந்துருகி நின்று. (சரு)

நின்ற பொழுதுமவ ணீங்கி நெடுந்தூரஞ்
சென்ற பொழுதுந் திருத்தணிகைக்—குன்றுறையுங்
கோமானை நெஞ்சிற் குடியேற்றி னேன்குறத்தி
பூமானுக் கேயடிமை பூண்டு. (சசு)

பூண்டிலையே நற்றணிகைப் புண்ணியனு ருக்கடிமை
மாண்டிலைநீ யென்பெறுவான் வாழுதியோ—கோண்டவழு
மென்னெஞ்சே வன்னெஞ்சே யேதுரைத்தா லுங்கேளாக்
கன்னெஞ்சே யித்தரையின் கண். (சஎ)

கண்ணு றிரண்டுமொளிர் கைத்தலமோ ராறிரண்டும்
பண்ணுர் பதமிரண்டும் பாவையர்மா—னண்ணும்
வதனமொரு மூவிரண்டும் வண்டா மரையே
முதிர்தணிகை வாழ்முருகற் கு. (சஅ)

முருகன் குகன்குமரன் முன்னவனஞ் சேய்தன்
னுருவங் கவர்ந்தானென் றோர்ந்தே—மருவமரும்
பூங்கணையி னானைப் பொடியாக்கிற் றால்விமலன்
நீங்கணையா நெற்றிவிழித் தீ. (சகூ)

தீங்கவிதை செந்தமிழாற் செய்தணியும் பாவலரைத்
தாங்குவன்யா னென்றெவருந் தாமறிதற்—கோங்குமுரு
காற்றுப்படையியம்பு மப்புலவ னைப்புரந்தான்
சாற்றுந் தணிகையர சன். (ருo)

அரசன் றணிகை யறுமுகற்கு நெஞ்சே
யுரைசெ யொருசொலுனை யுள்ளிக்—கரைசெய்
விழிநீர் பொழிவானை மேவாயேற் றுஞ்சும்
பழிசாரு முன்னையெனப் பார்த்து. (ருக)

பாரோர் புகழ்தணிகைப் பண்ணவனுர் செய்பரிசங்
காரே யறிகுவர் தற்புதமுன்—னீர்மேவு
கொக்கை மயினுயர் கோழியுமா கக்கொண்டான்
மிக்கதிர் வேலதனை விட்டு. (ருஉ)

விட்டா யிலைமயிலை வேட்டணிகை யாற்கடிமைப்
பட்டா யிலையெனது பாழ்நெஞ்சே—கெட்டாய்கேண்
மாதெற் கிருந்துநமை வந்தழைக்குந் தண்டதரன்
றூதற்கென் செய்வதுதான் சொல். (ருங)

சொல்லுவதெ லாந்தணிகைத் தோன்ற திருப்புகழைப்
புல்லுவதெ லாமவன்றன் பொற்கழலைக்—கல்லுவது
மேலைப் பிறந்துழலும் வெய்யவினைக் காதரமா
மூலத்தை நெஞ்சே முனிந்து. (ருச)

முனிநா ரதன்மொழிய மொய்குழலாள் வள்ளி
தனியே தினைகாக்குஞ் சாரற்—புனமேவுஞ்
செங்கமலத் தாடா திருத்தணிகை வெற்பாவென்
பங்கமலந் தீரப் பரிந்து. (ருரு)

பரிமா மயிலாடு பண்ணவர்கோன் வெள்ளைக்
கரிமாவு மூர்த்தணிகைக் கந்த—னரிமான்
வதனன் கரிவதனன் மானவேற் சூரன்
சிதறவுயிர் போக்கினான் சென்று. (ருசு)

செல்லு முகிலே திருத்தணிகை வெற்பினிற்போய்
நில்லும் அறுமுகன்றா ணேர்பட்டுச்—சொல்லும்
அடியேன் பகிர்துயர மத்தனையு மின்னே
பொடியாகிப் போகும் பொருட்டு. (ருஎ)

பொருள்சேரும் பொன்னுலகப் பூவை யிடமாய்
மருவூர் குறமான் வலமா—வருள்சேரு
நீயு முயர்தணிகை நின்றுமெவ னோகொடியேன்
வாயுமுனை வாழ்த்தாத வாறு. (ருஅ)

வாழ்த்தாத வாறுரிய வாயு மவனடியிற்
றாழ்த்தாத் தலையுமவன் றன்னுருவை—யாழ்த்தா
மனமு மெனக்குவிதி வைத்தான் றணிகைப்
புனிதன் றிருக்கோயில் புக்கு. (ருகூ)

புக்க துயராம் பொருந்தா விழியிமைகண்
மிக்ககன வேள்கணைகண் மேனியெலா—முக்கட்
பரம னருள்தணிகைப் பாலகன்மால் கொண்டாங்
கிரவும் பகலுமிவட் கு. (சுo)

இவளுமத னம்பா லிர்ங்கவுண்மா வுண்ட
கவள விளவின் கனிபோற்—றவளுங்
குமரா வறுமுகவா குன்ருர் தணிகை
யமரா குகாவென் றழைத்து. (சுக)

அழைத்துநமன் றூதுவர்க ளாங்குகொடு போமுன்
றழைத்த திருவருளைத் தாராய்—புழைக்கை
மதவா ரணந்திரியும் வண்டணிகை மேலா
யுதவா ரணவா வுவந்து. (சுஉ)

உவந்து ககனமிசை யூர்வெண் மதியே
யிவர்ந்து தணிகைவரை யிற்போய்ச்—சிவந்தகழற்
பைந்தோகை மேலான் படிவமுனந் தீண்டியென்றன்
செந்தோளை நின்கரத்தாற் றீண்டு. (சுங)

தீண்டற் கரிய திருமேனிப் பூச்சுமல
மாண்டற் குரியதிரு வெண்ணீறு—மீண்டெனக்குத்
தந்தா னவனடியிற் ருழ்ந்துதரித் துட்கொண்டேன்
கொந்தார் தணிகைவரைக் கோ. (சுச)

கோட்டமரும் பைங்கிளியே கூருய் தணிகைவரைக்
கோட்டமரு நங்கள் குமரேசன்—ருட்டுணைக்க
ணன்பா மருணகிரி நாத னறைந்தபுக
ழின்பாயென் கைவந் திருந்து. (சுரு)

இருந்தாந் தணிகை யிளையா னடிக்கீழ்ப்
பொருந்தா மினிப்பிறவிப்—புக்குவருந்தா
முருந்தா நகையாரை முன்னின் றெடுத்த
வருந்தா யெனநெஞ் சடுத்து. (சுசு)

அடுக்கிய வண்டங்க ளாயிரத்தோ டெட்டுந்
தொடுக்கு மரசுடைய சூர்மே—லெடுத்தெறிந்த
சத்தி தனக்குத் தணிகையா யென்வினையைக்
கொத்தியெறி யென்ருருசொற் கூறு. (சுஎ)

கூறு முகங்களெலாங் கோணைபெறு நற்றணிகை
யாறு முகவ னடிதொழயாஞ்—சேறுங்
கொதிக்கு மெமதூ கொடுவினைகா ணீவீ
ரிதற்குமுனஞ் சென்மி னெழுந்து. (சுஅ)

எழுந்து புடைபரந் தீர்க்குமிடை போகா
தழுந்து மணிமுலையா ராசை—யொழிந்துமுனஞ்
சொற்கந் தனைப்புரந்த தூயவனைத் தென்றணிகை
நற்கந் தனைமனமே நம்பு. (சுகூ)

நம்பிச் சரவணத்தி னற்றீர்த்த மாடியெழுந்
தம்பொற் றணிகை யறுமுகவன்—செம்பொற்
றிருவா லயத்தைவலஞ் செய்வேற்கு முண்டோ
கருவா லலையுங் கடன். (எ0)

கடந்தா ரெழுபிறப்புங் காழ்மலங்கண் மூன்று
மிடந்தார் வினையிரண்டு மிற்றார்—தடஞ்சாரல்
வேழந் திரியும் வியன்றணிகை வெற்பனடி
தாழு மடியவர்க டாம். (எக)

தாமே சராசரங்க டம்மைப் படைத்தழிப்பார்
தாமே யனைத்துலகுந் தாங்குவார்—தாமே
தணிகைவரை மீதுறையுஞ் சண்முகவ ரென்றோர்
கணிகவினை வார்மால் கடிந்து. (எ௨)

கடியார் பொழின்மாங் கனிகோதி யங்கட்
குடியாகி வாழுங் குயிலே—யடியா
ருளத்திற் சிறந்த வுயர்தணிகை யானைக்
குளத்திற் பிறந்தானைக் கூவு. (எ௩)

கூவிற் குளத்திற் குழந்தையுரு வாயமர்நா
டாவின்முலைப் பாலளித்த தாயர்பெயர்—மேவுநாட்
கார்த்திகைதோ றுந்தணிகைக் கந்தனைச்சென் றேத்தினவர்க்
கார்த்திவென் பேரின்ப மாங்கு. (எச)

ஆங்கோர் கனிக்கா முன் யானைமுக னோடிகலித்
தாங்கோதை மஞ்ஞை தனைக்கடவி—நீங்காத
வண்டம் பலவு மரைக்கணஞ்சூழ் தோனில
கண்டன்மகன் வாழ்வுதணி கை. (எரு)

தணிகைவரை யைச்சூழுந் தாணற்றா ணேரே
பணிகை யழகியகை பாடு—மணிநாவே
நன்று நினைக்குமன நன்மனங்கா ணுங்கண்ணன் கண்
டென்னார் செவிநற் செவி. (எசு)

செவிவாய்கண் மூக்குடலாய்ச் செப்புபொறி யைந்தி
னவிவாய் மனனே சென்றந்தோ—கவிவாய்ந்த
கோடரஞ்சூ ழுந்தணிகைக் குன்றுறையுங் கொற்றவனை
நாடரணாய் வாரா னமன். (எஎ)

நமரங்காள் வம்மின்க ளும்போய்த்தணிகைக்
குமரன்றாள்வீழ்ந்து குறைகூறிற்—குமரனருள்
செய்து நமதுகுறை தீராதிருந்தானே
லெய்தும் பழியவனுக் கின்று. (எஅ)

இன்றியமையா தெவர்க்குந் தணிகைவரைக்
குன்றுறையுஞ் சேயோன் குரைகழல்கண்—மன்ற
வதனாலதனை யருச்சிக்க வேண்டும்
புதுநீர் மலர்கொண்டு போந்து. (எகூ)

போந்து நமைக் கூற்றம் பிடித்திடரைச் செய்யாமு
னுந்தகமோர் கைக்கொண்ட நாயகனைக்—காந்துந்
தணிகைவரை மீதுறையுஞ் சண்முகனை நாளும்
பிணியகல வாயாரப் பேசு. (அ0)

பேசுந்த ணிகைப் பெருமான் பெரும்புகழே
வீசுந்திருப் புகழாய் வீறியதே—யேசுமற்றை
விண்ணோர் புகழ்சிறிதாய் மேவுஞ் சிறப்புமுன
நண்ணுது நாளு நவிந்து. (அக)

நலியும்பிறவி நடுக்கடலுள் வீழ்ந்து
மெலியுஞ்சிறியேனை மேவா—யொலிசெய்
தருவித்திரடா ழருந் தணிகை வெற்பா
பொருவில் கருணை பொழிந்து. (அஉ)

பொழிந்தார்கள் கற்பகத்தின் பூமாரி விண்ணோ
ரழிந்தா ரழியா வசுரர்—மொழிந்தார்
கருப்பைப்பு காத்தணிகைக் காங்கெயன் கைவேலாற்
பொருப்பைப் பிளந்தெறிந்த போது. (அங)

போதன் சிரத்திற் பொறியான் றணிகைவரை
நாத னமதுசிர நான்கினையு—மோதிக்
கரத்தாற் புடைத்தருளுங் கந்தனடியானென்
றுரத்தான் மனத்தா லுணர்ந்து. (அச)

உணர்ந்தார்க ணெஞ்சத்தி னுள்ளே யொளிருந்
தணந்தார்க ணெஞ்சந் தணக்கும்—பணந்தாழும்
பாந்தளெனக் காந்தள் பருதியைத்தீண் டுந்தணிகை
சார்ந்தகும ரேசனிரு தாள். (அரு)

தாளிற் சதங்கையொடு தண்டை கலகலெனத்
தோளிற்கடப்பந் தொடையசைய—நாளுமணி
வேயீன் றுளிர்தணிகை வெற்பயாங் கெய்திடினு
நாயேற்கு முன்னே நட. (அசு)

நடந்தேன் றணிகைவரை நாதனைச்சென் றேத்திக்
கடந்தே னனுபவக் காட்டைக்—கிடந்தே
னிறவாத வீட்டி விருமூ வெழுத்து
மறவாம லென்மனத்தே வைத்து. (அஎ)

வைத்தலைவேல் முத்தலைவேல் வாழ்தணிகை மால்வரையான்
கைத்தலைவேல் தானவரைக் காய்ந்திடுவே—லத்தலைவேல்
கண்டா னெனதுளத்திற் கண்டானி லானேட்டங்
கொண்டான் றன்னூரைக் குறித்து. (அஅ)

குறியிலே னல்ல குணமிலேன் மெய்ம்மை
நெறியிலே னன்னெறியி னிற்கு—மறிவிலே
னாயினே னாயினே னாதலறிந் தென்னுளத்தே
மேயினன் றென்றணிகை வேள். (அகூ)

வேளுக் கபயமவன் வேலுக் கபயமிரு
தாளுக் கபயந் தணிகையான்—றோளுக்
கபயமவன் வள்ளிதெய்வ யானையெழின் மஞ்ஞைக்
கபய மபய மபயம். (கூ0)

அபயவர தங்கண்டே னாறிருதோள் கண்டேன்
உபயபதங் கண்டுளத் தள்ளூறுஞ்—சபையடியார்
மேவுந் தணிகைவரை வித்தகனுக் காளானேன்
சாவும் பிறப்புந் தவிர்ந்து. (கூக)

தவிர்ந்தேன் பிறவி தனைத்தணிகை வெற்பி
லிவர்ந்தேன் பருதிபன் னிரண்டு—மவிர்ந்தோ
ருருக்கொண்டா லென்ன வொளிர்மேனிச் செவ்வே
ளிருக்கண்டே னுள்ளந் தெளிந்து. (கூஉ)

தெளிநீரின் மொக்குளெனச் சேர்ந்தவினை யாக்கை
விளிநீர்மை கண்டிதனை விட்டு—வளிநீர்தீ
மண்வான் மதியரியான் மாவடிவா னைத்தணிகைப்
பண்பானை வாயாற் பழிச்சு. (கூங)

பழியும் பிணியும் படுமுடலென் றேனு
மழியு மழியு மழியு—மொழியுமிது
வென்னென் றிராம விதற்குமுன மேதணிகை
மன்னனைச் சார்ந்தேகொள் வாம். (கூச)

வரங்கொண்டார் தென்றணிகை வள்ளலைச் சென்றேத்தி
யரனயன்மா னந்திவிசும் பாள்வோன்—சுரர்முனிவர்
நாரதன்சே டன்றமிழ்செய் நன்முனிவன் வாசுகிவண்
பாரதி யிராமனிவர் பண்டு. (கூரு)

பண்டே துடங்கியுனைப் பாவித்து நிற்பேனைக்
கண்டே யுனது கடைக் கண்பாராய்—வண்டேறும்
பூமருவுங் கல்லாரப் பூஞ்சுனைக ளேசெறிந்த
காமர்தணி கைக்காங் கயா. (கூசு)

கையர் கயவர் கரவர் படிற் றொழுக்கர்
பொய்யரிவர் நட்பென்றும் பூணுதே—செய்யமணி
கான்றிருடங் காது கதிர்செய் தணிகைவரை
மான்றிருடன் றுள்சேர் மதித்து. (கூஎ)

மதிக்குந் திறலுடைய மாசூர பன்மன்
பதிக்கண் வளங்கள் பலவுந்—துதிக்குந்
திருத்தணி கையிற் செறித்துச் சீபூரணப்பே
ரிருத்தினுன் வைவே லிறை. (கூஅ)

இறையைத் தணிகைவரை யேந்தலையோர் நான்கு
மறைசொற் பொருளையன்பர் வாழ்வைப்—பொறையின்
மறந்திருந்தும் வேலோனை வாழ்ந்திடுமா பெற்றேன்
பிறந்திறந்தும் யான்பெற்ற பேறு. (கூகூ)

பேறுதரு மாமயிலோன் பேரின்ப மாந்தணிகை
யாறு முடியோ னறுமுகவன்—சீறடியைச்
சார்ந்தாரைச் சார்ந்தாரைச் சார்ந்தாரைச் சார்ந்தாரைச்
சேர்ந்தாரைச் சேருந் திரு. (கoo)

தணிகை அந்தாதி-முற்றிற்று.

வெண்பா வந்தாதி வியன்றணிகை வேலவற்கு
பண்பாந் தமிழ்நூறும் பாவலர்மு—னண்பாக
வோதினுன் கச்சியப்ப வொண்முனிவன்றுள் பணியு
நீதியாங் கந்தப்ப னே.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

ஆறுவது

தணிகை கலம்பகம்.

வெண்பா.

நலம்பகமுன்னுன் குடைய நற்றணிகை வேலோன்
கலம்பகத்தைப் பாடவழி காட்டுஞ்-சிலம்பகஞ்சேர்
வாலிபத்தி கண்டெதிர்ந்தோர் வன்மைதந்தோன் மைந்தனென்றும்
வாலிபத்தன் வாலிபத்தன் வந்து.

நீர்கொண்ட சடைமுடியோ னெற்றிவிழிகளிற் பிறந்து
சீர்கொண்ட சரவணத்தின் செங்கமல மிசைவளர்ந்து
கார்த்திகையின் முலைப்பாலுங் கவுரிமுலைப் பாலுமுண்டு
ஆர்த்ததிரைக் கடலிடைச்சென் றசுரர் குலங்சளைத் துலைத்து
தேவர்சிறைதனைமீட்டுத் தெய்வ மடப் பிடிமணந்து
மூவர்தொழுந் திருத்தணிகை முதுகிரியி லெழுஞ் சுடரே.

இவைமூன்றுந் தரவு.

தீராத பவப்பிணியின் றிருக்கனைத்து நீகடைக்கண்
பாராதபோ தொருவர் பாற்றுவது தானுண்டோ
வேராரும் பயிர்வாட்டும் வெங்கோடை விசும்பின்மழை
நீராரப் பெயினன்றி நீங்கிடுமோ றெங்ஙனே
பூமிமுத லண்டமெலாம் பொருந்தியிடுஞ் சராசரங்கள்
நீமனத்தி லொருநிமிட நினைக்க வளர்ந்தோங்கிடுமே
காமருவும் புனற்கரையிற் கருவுயிர்த்துச் சேய்மையுறு
மாமைதன் பார்ப்பைக் கருதினன்றியது வளராதே
தருமங்கள் பலசெயினுந் தவந்தான மிகச்செயினு
முருகென்று மொழிந்திலரேல் முத்திநலமிழந்தவரே
பிரமன்சங் கரன்மாயன் பினுந்தேவர் யார்க்குமுனை
குருவென்று நான்மறையுங் கூசாமற் கூப்பிடுமே.

இவையாறுந் தாழிசை.

உலகொரு நொடியினில் வலம்வரு மயிலினை
யலைகட லொடுமலை கெடவிடு மயிலினை
மணிகணிக் கணிலென வறைதரு கழலினை
பணிமணி வெயில்விரி பலகிரி மருவினை
யடியொடு நகமுடி வறிவரு மருவினை
பொடியணி யடியவர் புகழ்தரு முருவினை.

இவையாறடியராகம்.

குன்றுதோறுடல் பரங்குன் றலைவாயே ரகஞ்சீர்
துன்றுபழமுதிர் சோலை தொகுமாவி னன்குடியாய்த்
தானவரை வேரறுத்துச் சயந்தனுறு துயர்நீக்கி
வானவரைப் புரந்துசசி மங்கிலியந் தந்தளித்தோய்
நாரணன் வாசவன்பரம னுண்முகனுல் வெலற்கரிய
சூரனுட றுணித்துமயில் சூட்டுவாரணஞ் செய்தோய்
பொருகாற்றி லலைசருகிற் பூதமிடர்செயுங் கீரன்
முருகாற்றுப் படையியம்ப முன்வந்து தோன்றினையே
மடமுனிந்து செந்தமிழை வளர்த்து மலையத்திருந்த
குடமுனிக்குப் பேரின்பங் கொடுத்தது நின்றிருவடியே
கருப்புகழாம் பிறசமையக் கதைகேளா தனுதினமுன்
றிருப்புகழை யுரைப்போர்க்குச் சித்தியெட்டு மெளிதாமே.

இவ்வையாறுமிருமடித்தாழிசை.

மாலைநீந்துநீ வேலையேந்துநீ வாழ்வதாக்குநீ தாழ்வுபோக்குநீ
மறைகளாயினை குறைகள்போயினை வனகிலாவினை புனமுலாவினை
மதிநிறுத்தினை துதிபொறுத்தனை மலமறுத்தனை நலமுறுத்தினை.

(இவையெட்டுமெம்போதரங்கம்-எனவாங்கு)

தனிச்சொல்.

தொண்டர்கள் புகழ்தரு சுப்பிரமணிய
மண்டிலமதிமுக வள்ளிநாயக
யுன்றிருவடியை யுளந்தனிலிருத்திப்
பன்மலர்தூவிப் பணிகுவன்யானே.

இறந்தும்பிறந்து மிருவினைக்கயிற்றில்
யாப்புறுமுடலினு சையைத்துறந்து
மன்பொடுகெழீஇ இன்னருள்புரிந்தும்
மேலாம்வாழ்வுபெற்றவர் காலாற்பணிப்பதென்
கைகளாற் செயவே. (௧)

இதுசூரிதகம்.

வெண்பா.

வேதாகமங்கள் மிருதிபுரா ணங்களெல்லாம்
தாதாவென்னுந்தணிகைச் சண்முகவா—வர்தா
பணிகடம்பை யஞ்சும் பரவைநிதம் பத்தாட்
கணிகடம்பை நீங்கு மலர். (௨)

கட்டளைக்கலித்துறை.

அலரம்பையேந்து மனங்கற்கு மைத்துனராந் தணிகை
இலரம்பை மைந்தர்க்குத் தூதுசெல்லாம விரும்பொழிலிற்
பலரம்பையின் கனிமாங்க னிகோதிடும் பைங்கிளியே
நலரம்பையா மெங்க ணங்கையும்வாடு வணன்னெஞ்சமே. (௩)

கழிநெடில் விருத்தம்.

நெஞ்சகமுருக்கும் வஞ்சியர் களப நெடுமுலை யணைதர நினையே
னின்றிருத் தணிகை மலையணைதரற்கு நித்தலும் நினைத்திடல் வேண்டும்
வஞ்சகம் புரியு மவரலங்கார வறும்புகழ் வேண்டிலேன் வேண்டும்
வரம்பெறு மருண கிரிநினை முன்னாள் வழுத்தலங்காரமும் புகழுந்
தஞ்சகப்படைப்பின் றருக்கினு லணைந்துன் றாமரை மலர்ப்பதம் பணியாச்
சதுமுகன்சிரங்கள் குழிந்திடப் புடைத்துச் சகமெலா நொடியினிற் படைத்து
மஞ்சகஞ் சூழும் வேங்கட வரையின் வந்தகலாதுவீற் றிருந்து
வள்ளியோனுகி யுள்ளினோர்க் கருளும் வள்ளலே வள்ளிநா யகனே. (௪)

நெடில் விருத்தம்.

நாயகனுகி நீயிருந்திடவு நாயக னிலாத வேசையர்போற்
றாயகட்டுதித்து மரித்திடுந் தேவர் தம்மையான் விரும்பிடத் தகுமோ
சாயகந்துரக்கும் வேடர்கற்புயத்திற் றமதுகட் சாயகந் துரந்து
தோயகமுருக்கு மறத்தியர்பாடல் தொகுந்தணி காசலச் சுடரே. (௫)

நெடில் விருத்தம்.

சுடருருமகத்திரு வேலையுமாறுபோ
விடரிலரினைப்பணிந் தேத்துவோர்தமக்
குடலுயிர்விரைமல ருரையதன்பொருட்
டொடர்பினெங்கணு முருந்தணிகைத்தோன்றலே. (௬)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

தோன்றிய வகையுங்காயந் துலைந்திடு வகையுமாவி
மூன்றெனு மலத்தினாலே முழுவதும் யானென்றெண்ணிக்
கான்றசோ றெனவிடுத்தி காதலை யுலகத்தென்று
னேன்றசீர்த் தணிகைவெற்பி னெழில் பெறு குமரவேளே. (எ)

கழிநெடில் விருத்தம்.

வேளின்கருப்புச் சிலைமலரே வேதனெழுதுந் தலைப்பொறியே
மீளிநமன்கைப் பாசமே வேறுவேறு நீங்களெனை
நாளுந்துயர்செய் தலைத்தீர்கள் நான்போய்த்தணிகை வரையிலிவர்ந்
தாளும்பெருமான் றிருமுன்ன ரறைவே னெனைவிட் டகல்வீரே. (அ)

நெடில்விருத்தம்.

வீரவாகுவைமுதலிய வொன்பது வீரர்க்கு முன்றோன்றல்
பேரவாகுவையூர்ந் திடுகரிமுகப் பிள்ளைக்குப் பின்றோன்றல்
ஆரவாகுவையி ரண்டிறோ டிரண்டிறோ னருட்டணிகையி னெஞ்சே
சேரவாகுவை யாம்பழி நீங்கிநற் சிவகதி பெறலாமே. (௯)

மறம்விருத்தம்.

மேலாமரசன்றூத னெனவிளம்பு மொருவ யாந்தணிகை
வேடன் றனக்குவள்ளி தனைவிரும்பிக்கொடுத்த வேடர்காண்
மாலாயெங்கள் குலமகளை வதுவை பேசநினை விடுத்த
மன்னன்குரு பத்தினியுடனே மருவுந்தூர்த்தன் றன்குலமோ
சாலாமடந்தை யுருவாகித் தாழ்ந்தகா விலா முடவன்
றன்னைக்கூடி யொருகுரங்கு தலைப்பெற் றெடுத்தோன் சிறுகுலமோ
வேலாமகத்தி லொருவீர னீரந்துறைந்த கருமுடையோ
னிழிபாங்குலமோ வெருவாம லெய்ம்பாய் தியங்கி மயங்காதே. (௧௦)

நெடில்விருத்தம்.

காதலா லொருமயிலிற் களித்தேறுந் தணிகைவரைக் கந்தன்யார்க்கு
நாதனே யெனத்தெளிந்த வருணகிரிநாதனுமுன் னவின்றபாவை
யோதுவார் திருப்புகழென் றுலகினுள்ளோ ரதற்குநிகருண்டோமற்றைச்
சாதலார் விண்ணவர்க டம்புகழைத் திருப்புகழாய்ச் சாற்றிடாரே. (௧௧)

ஐஞ்சீரடிவிருத்தம்.

சாற்றுங்கோள் தென்றணிகையில் வேலோன்சரணத்தைப்
போற்றுங்கோள் புதுமாமலரிட்டுப் புகழ்மின்கள்
பாற்றுங்கோள் நும்பாலினடைந்தார் பசிநோயை
மாற்றுங்கோ ளுலகத்தினிமேலாடு மனமன்றே. (௧௨)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

அன்றுநில மன்றுபுன லன்றுகன லன்றுவளி யன்றுவெளி யன்று நவகோள்
துன்றுபுல னன்றுபொறி யன்றுமன மன்றுடரு வன்றுமுயி ரன்று துகடீர்
குன்றுதொறு நின்றுசுரர் சென்றுதொழ வந்தவுணர் குன்றவயி லொன்றுவிடுநீ
தென்றணிகை யங்கிரியி னன்றுபர மன்செவி திருந்தமொழி கின்றபொருளே.

வெண்பா.

பொருளுங் குலமும் புவியும் புகழும்
அருளுமழகு மறிவுந்—தெருளுந்
தணிகையா யன்பருளந் தங்குவாய் வைவே
லணிகையா யென்பவர்க்கே யாம். (௧௪)

(தலைவி துன்பந் தலைவற்குப் பாங்கி யுரைத்தல்.)

கட்டளைக்கலித்துறை.

ஆங்கலைக்குங் கலைக்குஞ் சம்பராரியடு கணைக்குங்
கோங்கலைக்குங்கலையத் தனத்தாளச்சங் கொண்டுவிடப்
போங்கலைக்குங்கலைக்கும் கணக்கில்லைப் பொருப்பர்கைவிற்
றூங்கலைக்குங்கலை மான்பாய்தணிகைச் சயிலத்தனே. (௧௫)

சந்தவிருத்தம்.

சயிலமோடியுந் தாழ்சடைநீடியும்
பயிலுமாதவத் தாற்பயனுண்டுகொல்
மயிலுஞ்சேவலும் வாழ்தணிகைப்பரன்
செயலதியாவுமெனத் தெளியார்கட்கே. (௧௬)

தாழிசைவிருத்தம்.

கேடிறுத்தொண் டெனக்களித்தான் கிளத்தென்சொலைத் தேனெனக்களித்தா
னுங்குருவாம் படிக்குவந்தா னுலாம்பதவி தரற்கு வந்தான்
நீடுந்தணிகைக் கருமயில னீங்கா தணிகைப் பொருமயிலன்
பாடற்கிசைந்து நடிப்பாரே படர்நோய் வாய்மண் ணடிப்பாரே. (கஎ)

கலித்துறை ஐயம்.

பாரோ வமருலகோ மலரோ மலையோ பணிக
ளூரோ விடந்தெரிந் தோதற்கரிது வெய்யோன் கடவுந்
தேரோடும் வீதித் தணிகையஞ் சாரற் செறிபொழில்வாய்
காரோ குழலயிற் கண்ணே வெனநிற்கும் காரிகைக்கே. (கஅ)

குறுங்கழினெடில்விருத்தம்.

காரிகையா ரெதிர்நோக்க மயிலாடக் கல்லருவி முழவங்காட்டப்
பேரிகைபோன் முகிலார்க்குந் தணிகையாய் நீயிவரப் பெற்றிடாயேற்
றூரிகையா லெழுதருநின் னூர்தியினுங் கடிதுலகைத் துருவியோடிச்
சாரிகையா டனத்திரியு மெனதுமனப் பரிமாவைத் தடுப்பார்யாரே. (கக)

வெண்பா

யார்கொ லுலகெல்லா மிமைக்குமுனஞ் சூழ்ந்திட்டான்
யார்கொ லழியாச்சூ ரவியட்டான்—யார்கொல்
வனக்குறவர் சூழ்தணிகை வாழ்வானவனே
யெனக்குறவு தாய்தந்தை யே. (உ0)

கலித்துறை.

தந்தனந்தந்தன மென்றிசைபாடச் சலசமுகைத்
தந்தனந்தந்தன மானூர்நடஞ்செய் தணிகைவெற்பிற்
றந்தனந்தந்தனமுங் கண்டிலாக் கந்தர்தாளெனக்கே
தந்தனந்தந்தனமென்று ரினியொரு தாழ்வில்லையே. (உக)

அளவடிவிருத்தம்.

இல்லையும்பொருளையு மெமதென்றெண் ணுவீர்
வல்லைவந்திடர்செயு மறலிக்கென்செய்வீர்
செல்லையொன்றிய மீதிட்டணிகைச்செல்வனை
யொல்லைவந்தனை செயாவுலகின்மாந்தரே. (உஉ)

அம்மானை.

மாந்தருடன் விண்ணோர் வணங்குந் தணிகாசலனூர்
போந்துதலை யோட்டிலிரப் போன்மகன்கா ணம்மானே
போந்துதலை யோட்டிலிரப் போன்மகனே யாமாகில்
காந்திவிடு மாடகப்பொற் காசுண்டோ வம்மானே
கல்லார வெற்படைந்தால் காசறிதோ வம்மானே. (உ௩)

நேரடி வெள்ளைவிருத்தம்.

வெறிவிலக்கு.

மானைத்துடரா வொருவன்கொலைதா
னெனப்பகையம் புலியேயினிநீர்
கோனைத்தணிகா புரியிற்குலவுந்
தேனைக்கொணரீர் சிதையுந்துயரே. (உ௪)

வெண்பா.

துயரம்படையாவென் றேகையிடத்தேவண்
டயரம்படையாம லாள்வா - யுயரு
மணிகாசலம்புழலை வள்ளிமணவாளா
தணிகாசலத்துறை வேந்தா. (உ௫)

காலம்.

கழினெடில்விருத்தம்.

தாதுவளர் கொன்றையலர் தூற்றுங்காலந்
தமைநினைக்கப் பிறருமலர் தூற்றுங்காலங்
கோதுபட மாமதியு முருக்குங்காலங்
குலவியவிண் மாமதியு முருக்குங்காலம்
பாதகவேள் வாங்கியவிற் கணம்பெய்காலம்
பைங்குவளை யாகியவிற் கணம்பெய்காலம்
மாதணிகை யிறையகல மயலாங்காலம்
வண்டணிகை யிறையகல மயலாங்காலம். (உ௬)

இடையூறுகிளத்தல்.

கலித்துறை.

காலிலையாம்பணி காலுமணித்தணி காசலத்தின்
பாலிலையாமிடைப் பாவைநல்லாயல்குற் பாற்கடன்மே
லாலிலைமீதுவை குந்தனங் காட்டினை யாங்கதற்கு
மேலிலையாங்கை லாயத்திருச்சை விளக்குகவே. (உ௭)

முடுகுவிருத்தம்.

விளக்கினொளிக்கு விருப்புறுவிட்டின்
வளத்தினயற்பெண் வனப்பைநினைத்தே
யிளைத்துநிலத்தி னிறக்கவழக்கோ
களித்ததிருத்தணி கைப்பதியானே. (உஅ)

ஆசிரியவிருத்தம்.

பதியேபிரமம் பசுநீயே பாசமுடலாம் பாசத்தா
லுதியாமரியா வுழல்கின்ற யொருவிப் பாசம்பதியாக
மதிநீயென்று மழியாத வகையீதென் றாரணங்க
முதியேபெருகுந் தணிகைவரைத் தோன்று ஞானசூரியனே. (உகூ)

பாகனொடுகூறல்.

கலித்துறை.

சூரியன்றேர்ப்பரி பாகனுன் றண்மைக்குத் தோற்றனனென்
றியாருமறிதரப் பங்கனென் றேசுவன் யான்வலவ
நாரியின்கண்ணம்பு தூவத்தணிகை நன்னாட்டிலிந்தக்
கார்விரைந் தோடுமுன் றேர்விரைந்தோடக் கடாவிடினே. (௩௦)

வறுங்களநாடிமறுகல்.

எண்சீர்விருத்தம்.

கடாவுமணிப்பொற் கவண்சுழற்றிக்காவற் புனத்தாலோ வென்னும்
படாமென்முலையார் வாய்க்குரலும்பைந் தாட்டினையின் காய்க்குரலும்
விடார்துகவர்ந்து தணிகையிற்போய் மீளுந்தொழிலே மிகுங்கிளிகா
ளுடாதுண்ணுத விவளொடெங்காத் துறைந்தாரெங்கே மறைந்தாரே. (௩க)

வண்டுவிடுதூது.

வெண்பா.

மறையாகமங்கடொழு மன்னன் றணிகைக்
கிறையாகமின்றணைய வேண்டுந்—துறையாகச்
செந்தேனுண்ணுந்தேனே சென்றேதூ தங்கவனைத்
தந்தேனென் றலளிநீ தான். (௩உ)

இடைச்சியைப்பழித்தல்.

கலிப்பா.

தானந்தானென்றெவருஞ் சாற்றுதணிகைக்கிரிமேல்
வானந்தானென்னுமிடை வல்லியிடைமெல்லியலே
மோனந்தாஞகாதுன் மோர்க்குடம்பின்பாகவிலை
நீனந்தாதேசொ லினீர்க்குடமுன்னும்விலையே. (௯௯)

நெடில்விருத்தம்.

விலையிலாமணி மேவுந்திருத்தணி
மலையினுன்றனை வஞ்சர்தந்நோயெலாந்
துலையில்யாந்தொழு வோம்பின்பென்பார்கட
லலையிலாப்பொழு தாடநின்றூர்களே. (௯௪)

விருத்தம். இரதவாதம்.

கள்ளுலாம் பூங்குவளை முப்போது முப்போதுங் கயத்துணும்
விள்ளுமால் வரைத்தணிகை யிறைக்கடிமைச் சித்தர்யாம் மெய்யாய்க்கேணீ
கொள்ளிபோற் சுடும்பசிக்குக் கூழொருகை வாசப்பா குவலையத்தி
லுள்ளநீள் வரையனைத்து முருக்குகைசேர் கனகமெனவுரைப்போநாமே.(௯௫)

தழைகொடுவிஞதலிற் றலைவி கையுறையேற்றமை
பாங்கிதலைமகற்குரைத்தல்.

வெண்பா.

உரைத்தா ஞயிரெனவே யொற்றிஞள் கண்ணில்
வரைத்தாமெனு முலைமேல் வைத்தா-ளரைத்துருட்டித்
தின்ஞளிதன்றிச் செயாததிலைத் தென்றணிகை
மன்ஞநின் பூந்தழை யெம்மான். (௯௬)

நேரடிவிருத்தம்-ஊசல்.

மானவரும்வானவரும் வணங்கிப் போற்ற
வாமுதவுந் தணிகைவரை வள்ளல்கூறும்
ஞானமறக்கலமிவரா வுயிர்கள் யாவும்
நடோறுநனிவிரும்பித் தாஞ்செய் கின்ற
வீனமுறு மிருவினையாந் திரைகள்வீச
விவ்வாறுபவக்கடலூ டலைவ ரென்னப்
பானலன விழிமடவீ ரிரண்டுபாலும்
பாங்கியர்க ணின்றூட்ட வாடிரூசல். (௯௭)

கழிக்கரைப்புலம்பல்.

மடக்குத்தாழிசைவிருத்தம்.

ஊசலஞ்சல மனத்தியே மிகவுமூசலஞ்சல மனத்தியே
யொருவிலஞ்செய்கரும்பெண்ணேயே மதனொருவிலஞ்செய்கரும்பெண்ணேயே
வாசம் வீழ்ந்தமலைத் தென்றலே யிடையின் வாசம் வீழ்ந்த மலைத்தென்றலே
வளைமுன் போக்கிய திருக்கையே கழலும் வளைமுன் போக்கிய திருக்கையே
பாசமாங் கொடிய நெய்தலே புணரும் பாசமாங்கொடிய நெய்தலே
பார்ப்பி னுண்டரு மினுரையே யினியென்பார்ப்பினுண்டரு மினுரையே
காசரும்பிய வம்புன்னையே பிறர்சொல் காசரும்பிய வம்புன்னையே
கந்தனோ டிவரத் தணிகையே விரகங் கந்தனோடிவரத் தணிகையே. (௯அ)

குறுங்கழினெடில்விருத்தம்.

தணிகையென் றொருகாலோதிற் சாலோகபதவி யெய்துந்
தணிகையென் றிருகாலோதிற் சாமீப பதவிசாருந்
தணிகையென் றுரைக்கின் முக்காற் சாரூப நண்ணுஞ் செவ்வேள்
தணிகையென் றுரைக்கினாற் காற் சாயுச்சிய மடைவர் தாமே. (௯௯)

அறுசீரடிவிருத்தம்.

தாங்குமயில் வாகனமோ வுமைகுறங்கோ கந்தமா தனமோநீமை
நீங்குமுறை யின்சிரமோ வல்லிபடர் தினைப்புனமோ நிலமீதின்னு
மோங்கிவளர் பன்னகமோ வென்னகந்தா னென்னுளுமொழியா துற்றாய்
தேங்குபுனற் சடைமுடியோ னளித்ததிருத் தணிகைவரைத் தேவர்தேவே. ()

கலித்துறை.

தேவேந்திரனுதவுந் தெய்வயானைத் திருக்கணவ
கோவேந்திரவிமுடி சேர்தணிகைக் குமரவொரு
மாவேந்திரமென வல்வினையாலிங்ஙன் வந்துதித்துச்
சாவேந்திரமென நின்றிருநாமத்தைச் சாற்றிலமே. (சக)

புயவகுப்பு.

இலகாரமுத்தினொடு மன்னியொளிர்கின்றன
விசைநீடியெத்திசையு நண்ணிவசைசிந்தின
பலதானவக்கொடியர் வென்னிடமுனிந்தன
பயினுகுநற்புலவர் பன்னுகவியொன்றின

மலர்நீலமுப்பொழுது முன்னுறவணிந்தன
மகமேருவெற்புமுத லெங்ககமுமஞ்சின
தலமேழிரட்டியுறு மன்னவர்பணிந்தன
தணிகாசலக்கடவுள் மன்னிருபுயங்களே. (சஉ)

மேகத்தோடுகூறல்.

நெடில்விருத்தம்.

புயலினங்கா ளென்மீது பழியிலையா தலினுமக்குப் புகன்றேன்முன்னர்
வயலினமார் தணிகையைச்சூழ் முல்லையினீ ரெனக்குமுன மருவுவீரேற்
றுயருறுமோர் கொடியிடையாற் பலமினும்போ மிருவில்லாற் றலையுமோர்வில்
பயமுறுமோ ரிரண்டம்பா னீர்கொடுபோ மம்பெல்லாம் பறிபோமன்றே. ()

வேல்விருத்தம்.

அன்றுசுரர்வாதனை தவிர்க்கு மசுரர்குலம் வேரறவடர்க்குங்
குன்றுபொடி யாம்படிதுளைக்குங் குகையுட்படுங் கீரனைவிடுக்கு
மென்று மடியாருளத்திருக்கு மிரவி சதகோடியிற் சிறக்கு
மன்றல்கமழுந் திருத்தணிகை வரதன் குடங்கைத் தனிவேலே. (சச)

வெண்பா.

வேலேந்துங் கையான் வியன்றணிகை யண்ணலிரு
காலேந்துங் கைகளே கைகளவ—னாலேந்து
நன்னாவே நாவவனை நாடுமனமே மனமென்
றன்னான் மறைபகரு மால். (சரு)

அகவல்.

மாலயன் றொழுதிடு மாலயம்பலவினு
மேவிய சிவனமர் வெள்ளிமால் வரையினும்
மந்தமாரு தந்தவழ் கந்தமா தனமுங்
கருப்பரங் குன்றிடு திருப்பரங் குன்றமும்
கந்திலம் படுபணைச் செந்திலம் பதியுந்
தாவினன் குடியுறு மாவினன் குடியும்
மருவே ரகங்கொளுந் திருவே ரகமுந்
துன்றுதோ ருடல்செய் குன்றுதோ ருடலு
மழைமுதிர் சோலைசூழ் பழமுதிர் சோலையு
மணிகையார்ந் தருவிதாழ் தணிகைமால் வரையு

நற்றுள வரையினும் வாழ்தரு முருக
வீறு மதிநிக ராறு முகவ
மூறிதழ்க் கமல நேரா திருவிழிப்
பன்னிரு வரைநிகர் பன்னிரு புயவ
கன்னியரிருவர் கலந்தணை மார்ப
வறுசமை யத்தரு முறுசமை யத்த
தேவ தேவநின் றிருவடி பணிகுவன்
குழற்சை வலமுங் குலவுகட்கு வளையுந்
திருமுகக் கமலமுஞ் செவ்வாய்க் குமுதமுந்
துணைச்செவி வள்ளையுந் துவரிதழ்ப் பவளமுங்
கந்தரச் சங்கமுங் கவின்றபன் முத்தமு
முந்தியஞ் சுழியு மொளிர்தன வெற்பு
மருகிடைக் கொடியு மல்குற்பை நாகமு
முழந்தா ளலவனு முன்கால் வராலும்
பஞ்சடி யாமையும் பரந்திடு மாத
ரழகெனு மினியமெய் யாங்கட லழுந்தி
யிருவினைத் திரைகள் பொருதழித் தலைப்ப
விரகக் கொடுவெளி யரிதெழுந் தெறியக்
காமன் விடுங்கணைக் கராவுமங் காப்பத்
திகைத்திடு வேனைநின் செங்கையாற் பற்றி
யெடுத்தருட் புணைசேர்த் திகலற நடாத்தி
யக்கடற்கே செலு மாற்றொடு புணரிய
விக்கரைமருவா தென்னைநா தாந்தமெ
னக்கரை மேல்விடுத் தாளுஅ
மெய்க்கமலக் கழல் வீடுதந் தருளே. (சுசு)

கலித்துறை.

அருளார்கலி யளித்தென்னை மின்னூர் கருப்பாசயத்தி
னிருளார்கலி தவிர்த்தாளுந் தணிகை யிறைவர்தந்தே
ருருளார்கலித் ததவரும் வந்தார்தந்த வும்பன்மிசைப்
பொருளார் கல்யாணமுஞ் செய்வதுண்டாகமர் பூங்கொடியே. (சுஎ)

அராவடி விருத்தம்.

கொடிக்குரம்பையி லுற்றுளுங் குயிற்குரல் கொடிக்குண்டாமோ
மிடிக்குடம்பான வென்னுண் மேவினுநினையான் காணென்
கடிக்குடங் கைசேர்நெல்லிக் கனியின்ஞா னத்தைவேணி
முடிக்குட் முனிவன்காதின் மொழிதிருத் தணிகைவேந்தே. (சுஅ)

நெடில்விருத்தம்.

வேந்தராக்கும் வறிஞோரை விண்ணோராக்கு மண்ணோரை
சாந்தராக்குஞ் சினத்தோரைத் தவத்தோராக்கு மவத்தோரை
காந்தமீர்க்கு மிரும்பெனவென் கருத்தையடியா ரடிக்கூட்டுஞ்
சேர்ந்தவாழ்க்கைத் திருத்தணிகைத் தேவனணியுந் திருப்பூச்சே. (சகூ)

தாழிசைவிருத்தம்.

பூசலையுற்றாய் சங்கணியற்றாய் பொறியற்றாய்
வாசமுமற்றா யன்னமுமற்றா மரைமொட்டே
யாசிலெழுத்தாறூர் தணிகைப்பாலமர் வேட்டுப்
பாசறையுற்றா ராசையுனக்கோ பகராயே. (ருo)

சந்தக்குறள்விருத்தம்.

பகலோ டிரவற்ற விடந்தனைப் பாவியேன்கண்
டிகலார் மலமற்றிருக்கும் வகையென்று சொல்லா
சகமூரு மென்னெஞ்சப் பரியொடு தாவின்மஞ்ஞை
ககமூர் தணிகைக் குறமாதினைக் கள்ளியானே. (ருக)

கழிநெடில்விருத்தம்.

கள்ளியின்மலரார் கிள்ளிமே லணிவார்
காஞ்சிரங் கனியையார் நுகர்வார்
கரும்பெனத்தழைபேய்க் கரும்பையார் கறிப்பார்
கருங்கட னீரையார் குடிப்பா
ருள்ளினங் கவைபோல் வெள்ளிபொன்மலையா
யோங்குறத் தாங்கிவாழ்ந் திடினு
முற்றவர்க்குதவா வுலோபர்தந் திருவை
யுலகிடத் தெவர்விரும் பிடுவார்
கொள்ளியின்மலரு மள்ளிதழ்க் காந்தட்
குலங்களை யருக்கனு மதியுங்
கோளரா வினமென் றஞ்சிநாடோறுங்
குலவரை யருகிலே நடக்குந்
தெள்ளியதணிகைப் பதியினி லடைந்தோர்
தேடியே காசெலா நொடியிற்
றெட்டியே பறித்தோர் பட்டிமண்டபத்திற்
சேர்த்திடுஞ் செட்டியா னவனே. (ருஉ)

கலித்துறை.

யானே யவனவன் யானே யெனக்கொண் டிருந்தமவன்
ருனேபன் மாயங்கள் செய்தே யொளிக்கிற் றடுப்பவர்யார்
மாநேய மாகிய நெஞ்சே தியங்கி மயங்குவதென்
கானேய் கடம்பன் றணிகாசலன் செயல் கண்டனமே. (௫௩)

கடைத்திருதுவிருத்தம்.

கண்டமலே பயந்தாரும் பண்டமலே பயந்தாருங்
கருந்திணேமா வேற்ருரும் வருந்திணேமா வேற்ருருந்
தண்டலேயா ருஞரும் விண்டலேயா ருஞருந்
தானவர்நா டளியாரும் வானவர்நா டளியாருங்
கொண்டகல் லாரத்தாரும் விண்டகல் லாரத்தாருங்
குலவுமுக மாருரும் புலவுமுக மாருரும்
புண்டரும் மயிலாரும் மெண்டரும் மயிலாரும்
பொருத்தணிகை வரையாருந் திருத்தணிகை வரையாரே. (௫௪)

வெண்பா

வரையாய் தணிகை வரையா யிவளேப்
புரையாகு நீயிரவிற் போந்தாற்—கரைகாணு
மின்னிடையும் பொய்யென்பர் வில்வேடர் சேமித்த
வென்னிடையும் பொய்யென்ப ரே. (௫௫)

வாமம்விருத்தம்.

பொய்யிலறு சமையங்கட் கிறையா னென்னப்
பொருந்தாறு முகம்படைத்த தணிகை வேந்தன்
கையிலகு சத்தி சமயத்திற் கேற்குங்
கள்ளுடன் மாங்கிசமெனவே கருதி யன்றே
செய்யசிவன் றிருப்பனங்கா டகலா தற்ருன்
திருமாலுங் குடமுகந்தான் மதன்மீ னேற்ரு
ணயனெடு புரந்தரன்வா ரணம் வளர்த்தா
ரயனுமரைப் பங்கயமேல் விழைவுற் ருனே. (௫௬)

கொற்றி.

நேடில் விருத்தம்.

உற்றவருக்கரு ணற்றணி கைப்பதி யூடேகு
மற்றிவள் கொங்கை நகக்குறியும் பிறைவகிரும்போ

னெற்றியிடுந் திருநாமமு நீலிநெடுஞ் சூலங்
கொற்றியெனுந் திருநாமமு நீலிகொளும்பேரே. (ருஎ)

பி ச் சி ய ா ர்.

சிந்தடிவிருத்தம்.

பேர்பெருந் தணிகைப் பொருப் பிச்சியார்
பெண்களேச நடாத்திடும் பிச்சியா
ரேர்கொள்வீ டெங்குமேற் பர்பதத்தையே
யிசையுங் கஞ்சமிவர்தம் பதத்தையே
வார்தருங் குழலா மஞ்சுவர்க்கமே
வந்தணைந்தவர்க்கா மஞ்சு வர்க்கமே
சீர்கொள்பூதி மெய்யென்றுந் தரிப்பரே
செப்பும் வேடங்கள் மற்றுந் தரிப்பரே. (ருஅ)

கழிநெடில்விருத்தம்.

தசித்தசக்கரத்தையேவ தனதுமார்ம தாணியாய்ப்
பொருத்திமாய னோடவன்று பொருதுதாருகன்றலை
யரைக்கணத்திலற்றுவீழ வங்கைவே லெறிந்தவன்
திருத்தணிப் பொருப்பினின்ற தேவனெங்கடேவனே. (ருகூ)

சிந்தடிவிருத்தம்.

தேவராலுந் திருத்தணி கேசனைப்
பூவராலடி போற்றிப் பணிகலாப்
பாவராலைப் படுகரும் பென்னவே
யாவர்மாதர்த மல்குற் புழைக்கணே. (சுo)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

புழைக்கை யானையோர் பார்வையாக்கிமுன்
போதவே விடுத் தாதரத்துடன்
றழைத்தகான் மனும்வல்லி யங்குசத்
தானமா விரண்டணையக் கண்டுவந்
திழைத்த மாதவத் தெய்வயானைசே
ரெழிற்புயங்களாந் தறியிற்பூட்டினுன்
மழைக்கணங்களார் தணிகை வேடனுண்
மைத்திறத்தையார் புகல வல்லரே. (சுக)

கழிநெடில்விருத்தம்.

வல்லைவரு மொருமாவி லரைமாவின் மேலிருகால் வைத்தான் மற்றுஞ்
சொல்லுமறை மாவையமர் முந்திரிகை மேல்வைத்தான் றேகையென்றும்
வெல்லுறுங்குக் குடமென்று மாங்கதற்குப் பெயர்புனைந்தான் விரும்பிவாழு
மில்லமென தகமுமறை முடியுமெழிற் றணிகையுமா யிடங்கொண்டானே. ()

வண்டோச்சிமருங்கணைதல்.

கலித்துறை.

கொண்டலுலாவுந் தணிகாசலன்பதங் கூறலர்போல்
வண்டர்களேயொரு காரிகையோதி மயங்குகின்றீர்
துண்டமதா மெல்லினவல்லினந் தலைச்சொல்லுவதென்
கண்டமதாகு மிடையினநீர்தலைக் கண்ணுறினே. (கூக)

சந்தவிருத்தம்.

கண்ணிலார்களறுவரோர் கயத்தைநாடுமாறுபோ
லெண்ணிலாறுசமயர்தாமு மென்கொனின்னை யுணர்வதே
வெண்ணிலா முடித்தவேணி விமலனாளித்திடும்
பண்ணுலாவு தணிகையம் பதிக்குள்வாழு முருகனே. (கூச)

நெடில்விருத்தம்.

முருகனென்று தினைப்புனத்தில் முதிர்கூன்கிழவ னாகினையே
மொழியுமநாதி சைவனென்று முன்னோர்கொக்கை மடித்தனையே
பரமன்மைந்த னென்றுகடற் பள்ளிமருக னாகினையே
பரையின்முலைப்பா லுண்டுபின்னும் பன்மீன்முலைப்பா லுண்டனையே
குருவென்றிருந்தும் வானவர்தங் குருவின்மொழியன் றுகந்தனையே
குலமாந்தெய்வ யானையன்றிக் குறமாதினையு மணந்தனையே
தருவதன்றி யேற்றறியா தவனிகழுநீ ரேற்றனையே
தக்கதோவிங் குனக்கிவைசொற் றணிகாசலத்தி லறுமுகனே. (கூ௫)

தாழிசைவிருத்தம்.

அறுமுகந்தனி லொருமுகந்தனை யடியனேற்குற வாக்கிடீ
ரம்பகம்பனி ரண்டிலொன்றிலென் றனைவங்கெட நோக்கிடீர்
வெறிகொள்பன்னிரு கையிலொன்றிலென் வெம்பவக்கடல் தடுத்திடீர்
விளங்குமாறுசெவ் வாயிலொன்றினில் வீடுசேர்மொழி கொடுத்திடீர்

செறியுமாறிரு செவியிலொன்றிலென் செய்தியாவையுங் கேட்டிடீர்
செய்யமார்பமோ ராறிலொன்றிலென் செந்தமிழ்த்தொடை பூட்டிடீர்
தறுகண்வேடர்களுதவுமின்கொடி தனமுமன்பர்கள் மனமுநீள்
தணிகையங்கிரி முடியுநண்பு தழைத்தசெங்கல்வ ராயரே. (கூகூ)

தலைவன் கற்சுரத்தெளிமை செப்பல்.

கலித்துறை.

செங்கற்சுடிகை யராவிருபாலுந் திருவிளக்காய்
கங்குற் பொழுதிற்தக் கற்சுரநீந்தினன் கன்னியிடைச்
சிங்கத்தைச் சாய்க்குமுலை யானைகடுணை செய்திடமா
தங்கத்தைச்சாய்க் குமரிவாழ் தணிகையஞ் சாரலினே. (கூஎ)

வெண்பா.

சார்ந்தாரைச் செல்வந் தணவா தருளுமன்பு
தீர்ந்தாரை நல்குரவிற் சேர்விக்குஞ்—சேர்ந்தாரைத்
தாழ்வெய்த வொட்டாத் தணிகாசலத்தி லென்றும்
வாழ்தெய்வ சிகா மணி. (கூஅ)

குறள்விருத்தம்.

மணிகாசலருந் தணிகாசலம்வாழ்
வணிகாசலமோ துணிகாசலரே. (கூகூ)

வண்ணவிருத்தம்.

காசலருந் தணிகேசர் திருப்புகழ் கட்டுரை செய்திடுநாள்
வாசவன் முற்பிற தேவர்கடாளுறும் வல்லிபொடித்ததலா
னீசவரக்க ரெனுங்கருங் கானக நீறுகலந்ததுநாம்
பேசினவிப்பொழு தேழ்பிறவிக்கடல் பேரறவற்றிடுமே. (எ0)

வெண்பா.

வற்றாச்சுனையில் மலராதபைங்கழுநீர்
குற்றாதணியுங் குமரேசா—கற்றோர்கள்
போற்றுந்தணிகைப் பொருப்பா வென்றீவினைகள்
மாற்றும் வகையோது வாய். (எக)

சிந்துவிருத்தம்.

வாயுன்புகழே துதித்திடவு மனதுன்வடிவே நினைத்திடவுந்
தூயநின்ருள் கரந்தொழவுந் துணைத்தாள் கோயில்வலம்வரவு
நீயிங்கிவையே யெனக் கருள்வாய் நிலம்பொன்மாதர் வேண்டிலன்யான்
காயுங்கதிர்கான் மணியருவி கறங்குந்தணிகைப் பெருமானே. (எஉ)

விருத்தம்.

பெரியகுன்ற மட்டுநெஞ்சென் கரியகுன்ற மட்டிலாய்ப்
பிறழும்வேல் பிடித்துமென்றன் பிறவிவேலை நீக்கிடாய்
வரியும்வே தனைத்தடுத்து மாரன்வேதனைத் தடாய்
வணிகனென்றிருந்து மென்னுள் மருவுகாசை மாற்றிலாய்
அரியுமஞ்ச வரனுமஞ்ச வயனுமஞ்ச வும்பரோ
டண்டர்கோனு மஞ்சவண்ட மாயிரத்தோ டெட்டினுந்
திரியும்வஞ்சவாணையே செலுத்துசூர னஞ்சமுன்
சிறிதுகண்கள் கடைசிவந்த தென்றணிகைக் குமரனே. (எங)

கழிநெடில்விருத்தம்.

குமராதிருமான் மருகாமுருகா கொடியோரைச்
சமராடியமா மயிலாவயிலா தணிகேசா
அமராபதிகா வலவா தொலைவா மலமென்றே
நமர்காளுரையீர் நலமார்கதிநாம் பெறலாமே. (எச)

நெடில்விருத்தம்.

பெற்ருலுமினியொருவ ரனைத்தணிகைவரையகத்தே பெறவும்வேண்டு
முற்ருலுமருந்தவங்க ளவ்வரைக்கேயுறல்வேண்டு முயர்ந்தகல்வி
கற்ருலுமுமதுதிருப் புகழமுதேநாடோறுங் கற்கவேண்டுஞ்
செத்தாலுமிவ்வுடல மத்தலமீதுறவேண்டுஞ் சேர்ந்தனுரே. (எரு)

வெண்பா.

சேர்ந்தவிரலுகிராற் செவ்வழியாழ் வாசித்துப்
போந்திச்சைகள்பேசும் பொய்ப்பாணு—நாந்தரைமேன்
மட்கலமொப்பாயினும் வண்டணிகை யூரற்குப்
பொற்கல மொப்பார்க்கே புகல். (எசு)

கலித்துறை.

புகலாயிரவும் பகலுந்தணிகைப் பொருப்பிலெழும்
பகலாயிரமன்ன சேயோன் புகழையிப்பாழ் வயிற்றுக்
கிகலாயிரந்திரந் தெய்ப்பது நீங்கில யென்றுநல்லோர்
நகலாயிரங்கவு நாணமுறு மெந்தநாளு நெஞ்சே. (௭௭)

விருத்தம்.

நாளேபிரம மென்பாரு நானேபிரம மென்பாருங்
கோளேபிரம மென்பாருங் குணமேபிரம மென்பாருந்
தாளேயூழைப் பிரமமெனச் சாற்றுவோருந் தணிகைவரை
வேளேபிரம மென்னமல் வீணேபிறப்பி லுழல்வாரே. (௭௮)

தாழிசைவிருத்தம்.

உழலுமொரு கொக்கையட் டோர்கொக்கடியி லிருந்தா
ரொருமயிலை யிவர்ந்ததன்றிச் சேவலைக்கைப் பிடித்தார்
அழகியசெம் படன்மகனு யாலவாய் நின்று
ராரலின்பா லாசைகொண்டோர் பொய்கையிடத் திருந்தார்
குழவியெனப் பொலிந்து குறிஞ்சிக் கிழவனுனூர்
கொடுவேங்கை யாகியொரு குறமானைப் புணர்ந்தார்
தழையுடுக்கும் வேடரொடு மலைகடொறுஞ் சரித்தார்
சாற்றில்வசை யாந்தணிகைச் சண்முகர் தஞ்செயலே. (௭௯)

வெண்பா.

தஞ்செயலே யாவுமெனச் சாற்றித்தணிகையிறை
நஞ்செயலைப் போக்கி நலமளித்தான்—நெஞ்சமே
என்னே வுலகத்தில் யானெனதென் றேயின்னு
மன்னே கிடந்தழிகு வாய். (௮௦)

விருத்தம்.

ஆயவென்னுளமாங் கோயிலின்மருவு மருட்டணி காசலவமரர்
நாயகசிரமோ ராறுடையார்க்கு நற்சிரமைந்தினே னுயரில்
தூயவன்னவனில் நாற்சிரமுடைய சுருதிவானவனுயர் குவளல்
மாயையாருலகத் தோர்சிரத்தவரு மற்றவர்க்குயர்ச்சி யாகுவரே. (௮௧)

சந்தவிருத்தம்.

ஆகுவாகனனே டொருமாங்கனிக் கன்றம ராடியநா
ளேகநாயக னிவ்வுலகைச்சுழன் றிக்கணமுன் வருவோர்க்
கீகுவேன்கனி யென்னலுமே மயிலேறி யிமைப்பொழுதில்
வேகமாய்வரு நின்கழறந்தருள் மெய்த்தணிகா சலனே. (௮௨)

மூடுதவிருத்தம்.

காசிகாஞ்சிமுத லாந்தலங்சண்மிகு காதல்கொண்டு நடமேசெயு
மீசனுர்கயிலை வாசனுர்நகையி லெழில்கொண்முப்புர மழிந்ததால்
தேசுலாந்தணிகை வாசனுர் முருகர் செய்யவாயிலிள முறுவலான்
மாசுலாவியிடு மெனது முப்புரமும் வலியழிந்திமையின் மாயுமே. (அங)

சந்தவிருத்தம்.

மேகஞ்சூழ் தணிகாசலர் வீதிமேவுமதங்கிதன்
பாகிஞகிய செஞ்சொலாற் பண்மறந்தனர் விஞ்சைய
ராகுமாடலிஞனட மரம்பை தப்பினள்சக்கர
வாகமாமுலையாற்றுற வைத்துறந்தனர் முனிவரே. (அச)

தாழிசைவிருத்தம்.

முனிவோர்தொழுந் தணிகாசலர் முன்பேகுது மென்றே
மொழிந்தே யெழுந்தனனங்கதன் முன்பேவினை மலைதா
னினியேதா ணயில்கொன்றிடு மென்றேயழிந்ததுவா
லிவ்வாறு பிறப்பாங்கட லேழுங் கிழிந்ததுபின்
ஞனிமூல மலச்சூர்மா மோங்குங்கிளை யுடனே
யொடிந்தேவிழுந் ததுமற்றதற் கொருநற்றுணை யாகுந்
தனிமாயையின் வலிசிந்தின நமர்கா.ளவனகரிற்
றங்காதலி னடைவார்செயல் சாற்றற் கெளிதாமே. (அரு)

குறள்விருத்தம்.

தாமதங்க டவிர்ந்துநின்-ஞமமென்றுநவின்றிடற்
கோமெனும்பொரு ளோதிடா-யேமுறுந்தணிகேசனே (அசு)

வெண்பா.

நேற்றிருந்தாரின்றைக்கு நீருருரென்னுமறம்
பார்த்துமுடன் மீதாசைப்பட்டாயே-தூர்த்தநெஞ்சே
யென்றுதணிகேச னிருகழற்கன் பாகுவையோ
நின்றெனக்குச் சற்றுரைசெய் நீ. (அஎ)

அளவடிவிருத்தம்.

நீயுமொருவிண்மகளை மணம்புரிந்த செயலறிந்தே னின்பிதாமுன்
போயொருவிண் மகளைமணம் புரிந்ததனலன்றிப் பொருப்பரீன்ற
நாயகியாம் வல்லிதனை மணந்தனைநீ யவனுமொருநகமதாமென்
றுயைமணம்புரிதலிஞற் றந்தையைப்போ லுனக்குமிரு தாரம்வாய்ந்த
தாயராறுமீன்முலையுண் டொருகுளத்தில் வளர்தணிகை யமரரேறே. (அஅ)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

ஏறுகிமாத ரெழில்கண்டு கூடு மிடமெங்கு நாடியுழலா
வேறுகி யுன்ற னடியாரினத்தை விழையேனை யாள்வதிலையோ
மாறுகிமந்தி மரமேறியந்தி மதிவாங்கி யோங்குபலவின்
ஞுறூர்பழங்கள் சுளைகின் றருந்து தணிகாசலத்தி னிறையே. (அகூ)

கலித்துறை.

கடக்குஞ்சரகிக ரென்மனதண்டங் கடந்திமைப்பி
னடக்குஞ்சரமென நில்லாநிறுத்தவு நானறியே
னடக்குஞ்சரச மெனக்குரையாய் புகழட்டதிக்கு
நடக்குஞ்சரவண மன்னுதணிகை நன்னாட்டினனே. (கூ0)

சித்து.

நெடில்விருத்தம்.

நாட்டருநீள மலைகளைப் பிசைந்து நுகர்ந்திடுவோம்
நன்றெழு வாரியுங் கரகம்பெய்து குடித்திடுவோம்
நீடுமெழுவகை லோகங்களைத் தூக்கி நிறுப்போம்
நிலத்தையுமோ ரடியாக்கி நிலாக்கலையைத் தரிப்போம்
பாடுறு வேதனைக் கமலக்கண்ண னுக்கிடுவோம்
பண்ணரியைப் பரியாகப் படைப்போமிவ் வுலகில்
தேடருஞ்சீர்த் தணிகைவரைச் செவ்வே டன்னருளால்
சிவனைநொடித் தான்மலையிற் றெளிவிப்போ நாமே. (கூக)

கழிநெடில்விருத்தம்.

தெளியாப்புனலைத் தேற்றுவித்தாற் றெளியவுரைக்கு மாறதுபோல்
விளியாதெனைச்சூ ழாணவத்தை விளியக்கடைக்கண் சிறிதளித்தான்
வளியாருலக மூன்றினுந்தன் மகிமைமுகிழ்ப்பவைகறுெ று
நளியார்குவளை மூன்றலரு நகத்தான்றணிகை யகத்தானே. (கூஉ)

அளவடிவிருத்தம்.

அகமலர விழியிரண்டு மருவிசொரி தரநினது
முகமலரோ மூவிரண்டு மொழிந்துருகும் படியருளாய்
நகமலருங் கயிலைதனை நற்கீரற் கன்றளித்துச்
சகமலரும் புகழ்படைத்த தணிகைவரைக் குருபரனே. (கூங)

நெடில்விருத்தம்.

குருபரனீ தாருகனை யடுதலினுற் சக்கரங்கைக் கொண்டான் மாயன்
வரமுறுமோர் வெண்கரியை யளித்ததனுற் பெண்கரியை வலாரி யீந்தான்
பிரமனைமுன் சிறைசெயலாற் பரமனுந்தாழ்ந் துபதேசம் பெற்று னின்போ
லொருவருமே ரிலைநினக்குத் திரிகூட மாந்தணிகை யோங்க லானே. (கூச)

கலித்துறை.

ஓங்காரத்திற் பிறர்நீங்கைகாளு முரைத் தெனது
நீங்காயிரமுங் காந்தேனை யாண்டனன் றென்றணிகை
நீங்காதவேல னிஃதறிந் தென்றனை நீடுலகிற்
பாங்கார் குறத்தித் திருடனென்றேசும் பயனறிந்தே. (௯௫)

சிந்தடிவிருத்தம்.

பயன்பெறு மூவுலகினிலா வழகுற்றாலும்
பரமனுதற் கட்டியா லருவமானாய்
நயந்திடுசாபங் கருப்புப் பூவம்பேந்தி
நாண்மிகுத்த வண்டார்குண மடுத்துநின்றாய்
யுயர்ந்துபிடித் திரேந்துவச மீனமாகி
யுறுபடைபெண் கூட்டமதா மதனுனீதான்
வியந்ததிருத் தணிகைவரைச் செவ்வேளைப்போல்
மேலாகாய் வேளெனும்பேர் படைத்துமாதோ. (௯௬)

வெண்பா.

மாதரையு மாதரையு மாதரையும் வேண்டிநும்போ
லாதரையும் பாடு மவப்புலவீர்—பூதரையாள்
சேயாந் தணிகைவரைச் செவ்வேளைப் பாடிலென்று
மாயாத செல்வமருள் வான். (௯௭)

கலித்துறை.

வானமளந்தது மாயோன்றிருவடி மாயனுந்தித்
தானமளந்தது நான்முகன்சேவடித் தாழ்புவிபோ
மேனமளந்தது வெள்ளிவெற்பேனடி யேனல்வளர்
கானமளந்தது தென்றணிகாசலன் காலடியே. (௯௮)

மருட்பா.

அடிவண்டறை பயிலுமங்கணி மைக்குப்பூ
முடிவண்டறை குழலின் மொய்க்கும் வடிவரிழல்
காட்மொத லிற்றணிகை
நாட்டில் வாழ்தரு நங்கைமற்றிவளே. (௯௯)

நெடில்விருத்தம்.

ஏறும்புகழ்சேர் தென்றணிகைக் கோனிருதாளுங்
கூறும்பெரியோர் சேவடிநெஞ்சு குறித்திட்டோர்
வீறுங்கமலத் தந்தணனறியா வீடெய்தி
நீறும்படிதீ வினையினகன்றிடு நீராரே. (௧00)

தணிகை கலம்பகம்-முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

ஏழாவது

தணிகை மயில்பத்து.

வட்டக்கலாப மயிலே வந்தென் பழவினைதீர்த்து
வெட்டவெளியிலென்னை விடுத்துச்சும்மா விருவென்றோன்
றுட்டக்கிரவுஞ்ச வெற்பைச் சூரனைவே ரறமாய்த்தோன்
சட்டப்புழுகணி மெய்யன் றணிகேசனை நீகொண்டுவாராய். (க)

நஞ்சுசீ பெ லியு மரவை நடுங்கப்புடைக்கு மயிலே
கஞ்சக்கிழவன் சிரத்திற் கைவிரலாற் குட்டுமையன்
பஞ்சிற்படு நெருப்பென்னப் பாவங்களைத் தவிர்த்தாண்டோன்
றஞ்சத் தணிகையில்வாழுஞ் சதுரனைநீ கொண்டுவாராய். (உ)

நீலக்கலாபமயிலே நினைப்பவ ருள்ளத்தில் வாழுங்
கோலக்குறத்தி மணாளன் குமரனமரர்கணாதன்
சீலச்சிலம்பணிபாதன் சேவற்கொடிவலங் கொண்டோன்
வேலுக்கிறைவன் றணிகை விசாகனைமேற் கொண்டுவாராய். (ங)

வன்னக் கலாபமயிலே மாயமலப் பிணிநீக்கித்
தன்னையளித் தென்னைவாங்குஞ் சற்குருவா முருகோனை
முன்னைப் பழமறைகாணா முதல்வனை விண்ணவர்கோனைக்
கொன்னைத்தணி கையின்மேவுங் குமரனைநீ கொண்டுவாராய். (ச)

குன்றிற்சிறை விரித்தாடிக் குலாவுங் கலாபமயிலே
மன்றிற்சிறந் தினிதாடும் வரதனளித்தருள் செல்வன்
மன்றற்குறத்திக் கிசைந்த மணாளன்றணிகையில் வாழும்
வென்றித்தனியிலைவேல் விமலனைநீ கொண்டுவாராய். (ரு)

தேரிற்பொலியுங் கலாபச் சிறைவிரித் தாடுமயிலே
பாரிற்றடுத் தென்னையாண்டு பங்கயச்சேவடிகாட்டுங்
கூரிற் பொலிந்திடுஞ் செவ்வேற் கொற்றவ னற்றணிகேசன்
றூரிற் பொலிந்தகடப்பந் தாரவனைக் கொண்டுவாராய். (சு)

அண்டச் சுவரினுக்கப்பா லரைக்கணத் தோடி யுலாவுஞ்
சண்டக்கலாப மயிலே தாயிற்சிறந் தென்னையாண்டோன்
றெண்டருக் காரமுதன்ன சுந்தரன்ஞானவி நோதன்
கொண்டற்றணிகையில் வாழுங் குருபரனைக்கொண்டுவாராய். (எ)

தூவியந்தோகைமயிலே சொல்லுவன் யானென்று கேண்மோ
பாவியருள் ளெனின்மிக்கோர் பாரிடை யாவருமில்லை
கூவிவலியவந்தாளுங் கொள்கை யெங்கோவென்று கேட்போங்
காவியந்தண் கிரிமேய காங்கேயனைக் கொண்டுவாராய். (அ)

மேகத்தைக்கண்டு சிறகை விரித்து நடிக்குமயிலே
சோகப்பிறப்பை யறுப்பான் றுதித்துப்பணியுமெனக்குத்
தேகத்தைபொய் யெனக்காட்டிச் சிதம்பர மாக்கிவைத்தோனைப்
போகத்தணிகை யில்வாழும் புனிதனைக்கொண் டோடிவாராய். (கூ)

வண்ணப்பிணி முகமென்பேன் மஞ்ஞையென்பேன் மயிலென்பேன்
கண்ணிற் பொலிந்தசிகண்டி கலாபிம யூரமுமென்பேன்
பண்ணிற் சிறந்தவுமலி பசுந்தோகை யென்றும்பணிவேன்
அண்ணற்றணிகையில் வாழும் அறுமுகனைக் கொண்டுவாராய். (கo)

தணிகை மயில்பத்து-முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

எட்டாவது

தணிகை சேவல்பத்து.

செஞ்சூட்டு மிருசிறையும் பொற்பதா யுகிருமுடைச் சேவலேநீ
பஞ்சூட்டுந் தழலெனவென் பவந்தொலைத்துப் பரகதிதந் தாளவின்று
மஞ்சூட்டு மழைதவழு மதிற்றணிகை வரைவாழு மன்னன்றன்னைக்
குஞ்சூட்டும் பெடைமணந்த மயிலேறும் பெருமானைக் கூவுவாயே. (க)

என்றுமுனக் கடிமையென முறியெழுதித் தருகுவனீ தியம்பக்கேண்மோ
துன்றுசிறைச் சேவலெனுங் குக்குடமே யெழுபிறவி தொறுநீங்கானை
மன்றினடித் திடுமொருவன் மகனாகி யுபதேசம் வழங்கினானைக்
குன்றிலுயர் தணிகைவரைக் கோமானை வரவொருக்காற் கூவுவாயே. (உ)

புறத்திருளை யகற்றுதற்குப் புணரியெழுஞ் சூரியனைப் புலரிக்காலைச்
சிறக்குமிரு சிறையடித்துத் தினந்தினமு மழைத்துலவுஞ் சேவலேநான்
றுறப்பரிய வகத்திருளைத் தொலைப்பதற்கு நீயொருக்காற் சுடர்வேலானைக்
குறத்தியணை யுந்தணிகை வருஞான சூரியனைக் கூவுவாயே. (௩)

அண்டமெலா முட்டையென விருசிறையி னுள்ளடக்கி யபயங்காத்துத்
திண்டிறல்சே ரவுணர்குலஞ் சிதையவிடிக் குரல்காட்டுஞ் சேவலேகேள்
பண்டையவா மலமறுத்து நலமுறுத்தி யெனையாண்ட பாலனீலக்
கொண்டலுலா வுந்தணிகைக் குருநாத னிங்குவரக் கூவுவாயே. (௪)

யாமங்க டொறுந்துயிலு மனிதர்கடம் வாணாள்வீ ணாயிற்றென்று
சேமங்கொள் சிறையடித்துக் கூகூ கூவென்னுஞ் சேவலேகேள்
காமங்கை மிக்கொருநாண் விடியளவும் விழிதுயிலாக் கணக்கீதென்னே
கோமங்கை வள்ளிபுணர் தணிகையா னிங்குவரக் கூவுவாயே. (௫)

திக்கரிக்குந் தானவரைச் செயங்கொளுஞ் சேவற்கொடியே திருமால்போற்று
நக்கருக்கு முமையாட்கு மொருமகனாய் வருமிளைய நாதன்றன்னை
யக்கரிக்கு மிக்கரிக்கு மருமகனை வள்ளிதெய்வ யானைகோனை
கொக்கரிக்குங் கொக்கரிக்குந் தணிகைவரை வேலோனைக் கூவுவாயே. (சு)

சோதிடங்கள்பொய்ப்பினுநின் றாமொழிபொய்யாதெனவே சொல்வர்நல்லோர்
தீதறவோர் காலிருகான் முக்காலுற் கான்யாமந் தெரியச்சொல்வாய்
ஆதலினா லுனக்குரைப்பே னுண்டலைச்சே வற்கொடியே யறுமீனுருங்
கோதையர்பா லுனுந்தணிகைக் கோமானை யிங்குவரக் கூவுவாயே. (எ)

துண்டத்தா லுரங்கிழித்துத் தானவர்செங் குடலினைமேற் சூடலேபோற்
கண்டத்தா ருன்குலவுஞ் செஞ்சூட்டுச் சேவலொன்று கரைவல்கேண்மோ
அண்டத்தார் வையகத்தா ரரவுறையும் பாதலத்தா ரகலாதேத்துங்
கொண்டற்று ரகைகுலவுந் தணிகையினை யோன்வரநீ கூவுவாயே. (அ)

தாரகையெல் லாக்கொறித்துச் சமுத்திரநீ ரறக்குடித்துச் சமரில்வந்து
சேரவுணர் படவிடிநேர் குரல்காட்டுஞ் சேவலொன்று செப்பக்கேண்மோ
கீரனுரை யுடனருணை கிரிநாதன் றுதியின்மிகு கேண்மையானைக்
கூரயில்வேற் கரத்தானைத் தணிகைவரை யானைவரக் கூவுவாயே. (கூ)

வந்திப்பேனனுதினமும் வாழ்த்திடுவே னுனதுதிரு வடிவைநாளுஞ்
சிந்திப்பேன் முப்பொழுதுஞ் சேவிப்பேன் செஞ்சூட்டுச் சேவலேகேள்
பந்திப்பே னெனதுவலி பாரென்னு மாணவமாம் பகைவிண்டோடக்
கொந்திற்றேன் பொழிசாரற் றணிகைவரை யான்வரநீ கூவுவாயே. (கo)

தணிகை சேவல்பத்து—முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

ஒன்பதாவது

தணிகைவேல்பத்து.

பேராவினையின்றிரையெறியும் பிறவிக்கடல்வற்றிடச்சுவற்றி
யாராமாயைத்திரைபுணரா வமுதக்கடலினழுத்தியிடாய்
போராரவுணக்கடலொடுநீர்ப் புணரியேழு மறவுறிஞ்சி
யேரார்தணிகைப்பெருமான்கை யிருந்தஞானச்சுடர்வேலே. (க)

நீங்காமாயைப்பொருள்பலவு நெருங்கும்பிறவிக்கிரிசாடி
யோங்காரத்துள்ளொளிக்கிரிமே லுயர்ஞானத்தின்முடியிருத்தாய்
வாங்காமாயம்பலபுரிந்த வஞ்சக்கிரவுஞ்சந்துளைத்துப்
பாங்கார்தணிகைப்பெருமான்கைப் பயிலுஞானச்சுடர்வேலே. (உ)

மூலமலவேர்மேல்போக்கி முளைத்தபவமாமரந்துளைத்துச்
சீலவமலமரக்கோட்டிற் செறியுஞானத்தேனருத்தாய்
கோலமருவும்புறக்கடலிற் குலவுஞ்சூர்மாமரந்தடிந்து
நீலவரையினிளையோன்கை நின்றஞானச்சுடர்வேலே. (ங)

கானப்பிறவிவேர்முழுதுங் களைந்தன்னருளேர்கொண்டுழுது
ஞானக்கரும்பைமனப்புலத்தி னட்டிவிளையும்படிபாராய்
வானத்திறையைக்குடியேற்றி வானோர்சிறையெலாந்தவிர்த்து
மோனத்தணிகைப்பெருமான்கை முடுகுஞானச்சுடர்வேலே. (ச)

காமவெகுளிமயக்கமெனுங் கடியோர்வாழுமுப்புரத்தி
னமருபக்கிரியையற நாயேன்பிறவிநோய்தவிர்ப்பாய்
தீமையரக்கர்மூவரொடு சேரும்புரங்கடமையழித்துப்
பூமன்றணிகைப்பெருமான்கைப் பொலியுஞானச்சுடர்வேலே. (ரு)

மலவேதனையுமடித்துடல மருவாவழியுங்காட்டிப்பின்
னலவேதத்தின்சிரப்பொருளை நாயேற்கருளுநாளுளதோ
வலர்வேதனையும்புடைத்துலக மாக்குந்தொழிலுங்கைக்கொண்டு
பொலமார்தணிகையமர்ந்தான்கைப் பொலியுஞானச்சுடர்வேலே. (சு)

சூழுநரம்புசெந்தசைதோல் சுக்கிலமூளையெலும்புதிர
மாழுமெய்யைப்பொய்யெனக்கா ணகண்டஞானந்தனையளிப்பாய்
தாழுமலையும்பிளந்தவற்றிற் றங்குமசுரனுரம்பிளந்து
வாழுந்தணிகைப்பெருமான்கை மருவுஞானச்சுடர்வேலே. (எ)

அஞ்ஞானத்தின்வசமாகி யழியும்பிறவிதனையகன்று
மெய்ஞ்ஞானத்தின்மயமாகும் வீட்டிற்குலவுநாளுளதோ
பொய்ஞ்ஞானத்தின்வயத்திருள்சேர் பூதப்படையைவெளிப்படுத்தி
மைஞ்ஞானத்தைப்புனைதணிகை வரதன்குடங்கையமர்வேலே. (அ)

ஐம்பூதத்தாலாகியதோ ராக்கைக்குகையுட்படுமுயிர்தான்
கம்பூதத்திற்செயும்வினையாற் கடுகுந்துயர்தீர்த்தருள்புரிவாய்
வெம்பூதத்தைத்தடிந்துகை மேவும்புலவன்றனைப்புரந்து
செம்பூதரமாந்தணிகையமர் செவ்வேள்கரத்திற்சேர்வேலே. (கூ)

விச்சாரசுத்தமாயையினில் விளையுஞானக்கிரியையொடு
நச்சாரிச்சாசத்தியினு னணுகும்பிறவித்துயர்களைவா
யிச்சாஞானக்கிரியையுமூ விலையாய்ப்படைத்துக்கதிர்பரப்பி
மைச்சார்ந்தொழுகுந்தணிகைவரை வள்ளன்மலர்க்கைத்தனிவேலே. (கo)

தணிகை வேல்பத்து-முற்றிற்று.

கணபதிதுணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

பத்தாவது

தணிகைசீர்பாதப்பத்து.

புல்லாகி மரமாகிப் புழுக்களாகிப்
புள்ளாகி விலங்காகிப் பூதமாகிக்
கல்லாகித் தானவர்வா னவருமாகிக்
காசினியின் மனிதருமாய்க் கலங்குந்தீயேன்
சொல்லாகிப் பொருளாகி விரைப்பூவாகிச்
சுடராகி யொளியாகி யனைத்துமாகி
யில்லாகித் தணிகைவரை யிருந்தான்பாத
மெண்ணினேன் பேரின்ப நண்ணினேனே. (க)

மண்ணாசை பொன்னாசை மக்களாசை
வயதாசை வடிவாசை மணியினாசை
பெண்ணாசை மனையாசை யுலகையாளும்
பேராசை கொண்டுபிறந் திறக்குந்தீயேன்
விண்ணாசைப் படுந்தேவர் பகையைச்சாடி
விண்ணுலக மளித்தருளும் விசாகன்வீணைப்
பண்ணாசைப் படுந்தணிகைக் குமரன்பாதம்
பாவித்தே னென்பிறப்பைக் கோவித்தேனே. (உ)

வார்படைத்த முலைமடவார் கலவிக்கள்ளின்
மயல்படைத்து நோய்படைத்து வருந்திநாளு
மூர்படைத்த தெருக்கடொறு முழலுந்தீயே
னுருப்படைத்த சராசரங்க ளுறைந்துவாழப்
பார்படைத்து விண்படைத்துச் சேடனுறங்கும்
பாதலமும் படைத்தெவையும் படைத்துக்காக்குஞ்
சீர்படைத்த தணிகைவரை மேயோன்பாதஞ்
சிந்தித்தே னைம்புலனும் பந்தித்தேனே. (௩)

செப்பெழுது முலைமடவார் கலவிக்கள்ளைத்
திருடரைப்போற் றினந்தினமு மறைத்துமாந்தி
யொப்பெழுதும் படமேந்தி மடன்மாவேறி
யோயாது தெருக்கடொறு முழலுந்தீயே
னெப்பொழுதும் வள்ளிதெய்வ யானைமாத
ரிருபுறமு மகலாத விறைவனீல
முப்பொழுது மலர்காவி வரையான்பாத
மொழிந்திட்டேன் சஞ்சிதத்தை யொழிந்திட்டேனே. (ச)

பாலேசொல் வேயேதோள் பவளமேவாய்
பங்கயமே முகமரவின் படமேயல்குல்
சேலேகண் ணெனவுரைத்து மடநல்லார்தஞ்
சிற்றின்பப் பித்தேறித் திரியுந்தீயேன்
வேலேவிக் கொக்கைமயில் சேவலாக்கி
மேலேறிக் கைப்பிடித்த விசாகன்வேத
நூலோதுந் தணிகைவரை மேயோன்பாத
நோக்கினேன் கூற்றுவனைத் தாக்கினேனே. (ரு)

பேய்த்தேரை நீரெனுமான் கணமேபோலப்
பேதையர்சிற் றின்பே பேரின்பமென்று
வாய்த்தேனைப் பருகியறி வழிந்துநல்ல
வழியறியாத் தூர்த்தரொடு மருவுந்தீயேன்
காய்த்தேனற் கதிர்விளையும் புனத்துவேடக்
கன்னிவள்ளி திருவேளைக் காரநாளும்
போய்த்தேவர் தொழுந்தணிகை மேயான்பாதம்
புல்லினே ணவத்தைக் கல்லினேனே. (சு)

உய்யாத பாதகங்கள் செய்துகாமக்
குழன்றுமனோ வாக்குடலம் வேறாய்நன்மை
செய்யாத மூடரொடுங் கூடிமாதர்
செயிதழ்வா யமுதுண்டு திரியுந்தீயே
னையாது மன்னுயிரைப் புரப்பானெண்ணி
நாடோறு முப்பொழுது நறியநீலம்
பொய்யாது மலர்தணிகை யமர்ந்தான்பாதம்
போற்றினே னேடணையை மாற்றினேனே. (எ)

தேனூரு மலரயனார் படைப்புமீற்றிற்
சித்திரகுந்தன் கணக்குந் தினங்கடோறு
மூனூரு முயிர்வாங்குங் கலவிமாத
ருருவமுங்கண் டுளநடுங்கி யுழலுந்தீயேன்
மீனூருங் கொக்கெனவே யமரர்தம்மை
மிகுகொலைசெய் திடுமவுணக் குழுவைச்சாய்த்தோன்
வானூருந் தணிகைவரை யிறைவன்பாதம்
வாழ்த்தினேன் றீவினைபைத் தாழ்த்தினேனே. (அ)

ஈயாதமுழுமூட ரிடத்திற் சென்றே
யிந்திரரே யென்றுபல பொய்யுங்கூறி
யேயாது சாண்வயிற்றுக் கிரையுந்தேடி
யேந்திழையா ருருவினைக்கண் டுழலுந்தீயே
னோயாது தயிருடன்பால் வெண்ணெய்தாழு
மொளித்துண்டு கட்டுண்டோன் மருகனென்று
மாயாத புகழ்த்தணிகை வள்ளல்பாதம்
வணங்கினே னன்பரொடு மிணங்கினேனே. (கூ)

வாட்டடங்கண் சிறிதுநகை சிறிதுமின்னூர்
வாயினிதழ் சிறிதுமுலை சிறிதுமையைக்
கூட்டியன குழல்சிறிது மாகினாளுங்
கொள்ளைகொள வறிவுபறி கொடுக்குந்தீயேன்
காட்டில்வளர் தினைகாத்துக் கிளியையோப்புங்
கன்னிதனைச் சேரநார் வடிவங்கொண்டோ
னூட்டுபுகழ்த் தணிகைவரை முருகன்பாத
நாடினேன் முத்திநெறி கூடினேனே. (க0)

தணிகை சீர்பாதப்பத்து-முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

பதினோராவது

தணிகைமலைப்பத்து.

பங்கயாதனன்மால்வாசவன்முதலாம் பண்ணவர்க்கிடுக்கணேபுரியுஞ்
சிங்கமாமுகத்தன்கசமுகன்சூரன் சிரமறுத்தவனுறையிடந்தான்
மங்குனேர்வேடமகளிருமரம்பை மாதருமுவந்தினிதாடுங்
கங்கைநேர்சுனைகள்பற்பலமருவுங் கைலைநேர்தணிகைமால்வரையே. (க)

வஞ்சமேபுரியுமாயையாலவுணன் வளர்தருகிரவுஞ்சவரையி
னெஞ்சமேபிளந்தநெட்டிலைவேலோ னெடுஞ்சினந்தவிர்ந்தநல்லிடந்தான்
றஞ்சநீயென்றுவாணியோடணுகித் தண்சுனையொன்றகழ்ந்திட்டுக்
கஞ்சமேந்துறையுநான்முகன்போற்றுங் கைலைநேர்தணிகைமால்வரையே. (உ)

ஆயிரத்தொட்டெட்டெனுமண்ட மளித்தடலொருவராலழியாச்
சூரனைத்தடிந்தசெயிலைவேலோன் சுடுசினந்தணிந்தநல்லிடந்தான்
மீயுயர்தருவினறுமலரளித்து வேடர்கைவேங்கைமாமலரைக்
காயயில்வேற்கண்ணரம்பையர்வாங்குங் கைலைநேர்தணிகைமால்வரையே. (ங)

வியங்கெழுபூதப்படையொடுநடந்து வேலைசூழ்மயேந்திரமழித்துச்
சயங்கெழுதேவர்சிறையெலாந்தவிர்த்த சரவணபவனமரிடந்தான்
வயங்கெழுவிஞ்சைமாதரார்வீணை வழங்குமின்னிசைகள்கேட்டுவந்து
கயங்கெழுபிடியோடுறங்குறுஞ்சாரற் கைலைநேர்தணிகைமால்வரையே. (ச)

மாவுருவெடுத்துப்பெரும்புறக்கடலின் மறைந்திடுஞ்சூரரங்கிழித்துச்
சேவலுமயிலுமாக்கியமுருகன் சினந்தவிர்ந்துறையுநல்லிடந்தான்
மூவுருவெடுத்தவொருபரம்பொருள்போன் முத்தலைச்சிகரியாயோங்கிக்
காவுருவெடுத்தசந்தனமகில்சூழ் கைலைநேர்தணிகைமால்வரையே. (ரு)

மந்தரமனையகாத்திரம்படைத்த வல்லைவாளசுரரைத்தாக்கி
யந்தரத்தமரர்செல்வமீந்தருளு மறுமுகன்சினந்தவரிடந்தான்
சுந்தரமுருகன்றனைமனமிருத்திச் சுழுமுனைதனில்வளியடக்கிக்
கந்தரந்தொறுமாமுனிவரர்தவஞ்செய் கைலைநேர்தணிகைமால்வரையே. (௬)

மன்னியவண்டமனைத்தினுஞ்சென்று மலையொடுகடலெனவருஞ்சூர்
தன்னொடீரிருநாள்பொருதழித்திட்ட சடானனன்சினந்தவிரிடந்தான்
தின்னியபுனத்தில்வருங்கிளியோப்புந் தெறுசினவேட்டுவக்குலஞ்சேர்
கன்னியர்கவண்கல்கற்பகமலைக்குங் கைலைநேர்தணிமால்வரையே. (௭)

சூரனையவுணக்கடலினைவெய்ய துயர்செயுமாயையினிருளைக்
கீரனைக்கொடுபோம்பூதத்தையடுவேற் கிரீசன்வெஞ்சினந்தவிரிடந்தான்
ரூரகைக்கணத்தினொளிரும்வேய்மணியுஞ் சந்தனமரமுங்குங்குமமுங்
காரகிற்றுணியுடவான்றிழியருவிக் கைலைநேர்தணிகைமால்வரையே. (௮)

எரிவிழித்தோன்றியெரியினுற்சென்றே யெரிமுலையுண்டெரியுதித்த
வருடைமீதேறியுலகினைவலங்கொண் மன்னவன்சினந்தவிரிடந்தான்
குருமுலைக்குவமையெனவரச்சினவிக் குறத்தியர்கிம்புரிப்பூண்செய்
கரிமருப்புலக்கையாத்தினைகுற்றுங் கைலைநேர்தணிகைமால்வரையே. (௯)

வீரரொன்பதின்மர்தலைவரோரிலக்கர் வெள்ளமீராயிரமென்னுஞ்
சாரதரொடுஞ்சென்றவுணரையழித்தசண்முகன்சினந்தவிரிடந்தான்
பாரிலெந்நாளுமதிசயம்பயப்பப் பஞ்சுனைதன்னின்முப்பொழுதுங்
கார்நறுநீலமலர்ந்தெழில்காட்டுங்கைலைநேர் தணிகைமால்மாலவரையே. (௧௦)

தணிகை மலைப்பத்து-முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருத்தணிகைச் சந்நிதிமுறை.

பனிரண்டாவது

தணிகையுலா.

காப்பு-வெண்பா.

நிலாவுலாவுஞ்சீர் நிகழுந்தணிகை
மலையுலாவொன்று வகுப்பாம்—அலகிலாப்
பாபச்சகாயருள்ம் பாயாதமும்மதஞ்சே
ராபச்சகாயனருளால்.

விண்ணுலாவுந்தணிகை வெற்புலாவுங்குமரன்
பண்ணுலாவொன்றடியேன்பாடுதற்குப்—பெண்ணுலா
மெய்யானனத்தனத்தன் விண்ணவர்கோன்போற்றுநெடுங்
கையானனத்தனத்தன் காப்பு.

புராணவரலாறு.

கண்ணிகள்.

௧. நீர்பூத்த மேக நிறத்தவனும் வேதாவு
மேர்பூத்த வாயிரங்கண் ணிந்திரனுஞ் - சீர்பூத்த
முப்பத்துமுக்கோடி தேவர்முதலானவரு
மப்புற்றசூரபன்மற் கஞ்சியே - யொப்பற்ற
வெள்ளிவரையணைந்து வேண்டி முறையிடலு
முள்ளி யிறைவ னுமைமணத்தை - நள்ளியபின்
ஆறுநு தல்விழியி லாறு பொறிதாலு
மாறு பொறியுமெழுந் தண்ட மெலாம் - வீறியிட

விண்ணவர்கண் டஞ்சி விமலன் றனக்குரைப்பக்
கண்ணுதலுந் தீயினொடு காற்றிறையை - நண்ணுமிந்த
வெம்பொறியைக் கங்கை வியனீர் விடுதிரென
நம்பியவர் கங்கை நதியில்விடச் - செம்பொறிகள்
அக்கங்கை மாநீ ரனைத்து முறுஞ்சியிடப்
புக்கங்கையி லேந்திப் போர்துவகை - மிக்கநதி
சேலார் சரவணங்கள் சேர்ந்திமைய மால்வரையின்
பாலார் சரவணத்தின் பாலுய்ப்ப - மேலாரும்
ஆறுபொறி களுமோ ராறுமக வுருவாய்
வீறியமு திமெய் வேலைதனிற் - கூறவிண்ணோர்
கார்த்திகையாம் பெண்கள் கசிந்துமுலைப் பாலூட்டி
வார்த்து மதுப்பூமேல் வளர்த்திடலுந் - தீர்த்தனுடன்
அம்மை மழவிடைமே லாங்கணையப் பாலகரும்
விம்மியழுங் குரலை மென்செவிகேட் - டம்மையிவை
யென்குழவி யாமா றியம்புகென வெம்பெருமா
னின்குழலி கைக்கொளென நேரோடி - மின்கெழுமு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
நையா முலைப்பால் நயந்தருத்தி - மெய்யான
தேவனொடு மால்விடைமேற் சென்று கயிலைதனில்
மேவி மகிழ்ந்திருக்கும் வேலைதனிற் - றேவரொடுஞ்
சங்கரனை யேத்தித் தனைப்பணியா தேவழிக்கொள்
பங்கயனைச் சென்னி படப்புடைத்து - மங்கச்
சிறையிட்டுச் சிட்டி திதியிலைய மூன்று
முறையிற் பலநாண் முடிப்பக் - கறைமிடற்றோன்
வேதன் சிறையை விடுத்தியென வோமெனுஞ்சொ
லோதும் பொருட்டெரியா னாங்கென்ன - வாதி
யுனக்குத் தெரிந்திடுமே லோதெனலு மத்த
மெனக்குத் தெரியு முறையின்றித் - தனித்தியம்ப
வொண்ணா தெனநீ யுரைத்தருளு மாகமச்சீ
ரெண்ணா யெனப்பணியு மீசனுக்குப் - பண்ணார்
பிரணவத்தி னுண்மைநிலை பேசியிசை ஞானப்
புரணவித்தை வல்லமுனி பொற்பார் - காரணமொடு
செய்யுமகத் தெழுந்த செச்சைதனைக் கைப்பிடித்து
வெய்ய வெறிநேறி விளையாடித் - துய்யசெம்பொன்
மேருமுத லாமுலகை மேல்கீழாச் செய்யவிண்ணோ
ராருநடுங்கி யப்பயமெனச் - சோருமுல
கெல்லா முனம்போ லியற்றி யரக்கர்குல்
மெல்லா மறுக்க விசைந்தெழுந்து - கல்லார்

உமையாள் சிலம்பில் வருமொன்ப தின்மரெங்க
டமையா வெனப்பணிந்து சார - வெமையாளு
மோரிலக்க மாக வுரைக்கும் படைத்தலைவர்
சீரிலக்க மாயருகிற் சேர்ந்திறைஞ்சப் - போரிலக்கா
மீரா யிரவெள்ள மென்றுரைக்கும் பூதகணஞ்
சோராம லெம்மருங்குஞ் சூழ்ந்துவரத் - தேரேறிச்
சம்புவிடை கொடுப்பத் தண்கயிலை வெற்பொருவி
யம்புவியின் மேருவின்றென் பாலணுகி - வம்புபுரி
தாருகனைப் புள்ளின் றனிப்பெயர்கொள் வெற்பினொடும்
பேருகவை வேலாற் பெரிதழித்துக் - காரிருளிற்
தேவகிரி மருவித் தேவர்செயும் பூசைகொண்டு
பாவலர்சொல் சேனுபதியாகிப் - பூவிற்
றிருச்சேய் நல்லூரிற் சிவபூசை செய்து
வரச்சு ரம்வடிவேல் வாங்கிப் - பரித்திமையோர்
தங்குருவு மந்திரியாய்ச் சார்ந்து கொடுஞ்சூர்வரமும்
பொங்குருவுந் தீங்கும் புகன்றுரைப்ப - வங்கதனைச்
சற்றுமறியா தவர்போற் றன்செவியி லேதேக்கி
மற்று மனுநீதி வழுவாது - முற்றுணர்ந்து
செந்தூ ரிருந்து செயவீர வாகுவினை
முந்தூருந் தூதாக முன்னனுப்பி - நந்தூரும்
வாரிதியில் வீர மகேந்திரத்திற் சென்றவுணர்
தேரிவுளி தானைகரி சேனையெலாம் - போரில்
அழித்தவுண ரோடு மழியாத சூரைக்
கிழித்திருபுள் ளாக்கியும்பர் கேதம் - ஒழித்தருளி
வீரமகேந் திரத்தை வீரையிறை யாலழித்து
வாரமக வானளித்த வானுதலை - நேரே
மணந்து கொடுஞ்சூரை வதைத்த சினமெல்லாந்
தணந்த செருத்தணிகை சார்ந்தோன் - பணிந்தோர்
கணிகந் தவம்புரிந்த கண்ணுதலோன் முன்னோர்
மணிகுண் டலமசைய வந்தோன் - துணிவுடைய
நந்திநதி யொன்றழைத்து நற்குகையில் யோகிருந்து
வந்து பணிய வரமளித்தோன் - சந்த
மலையக் குறுமுனிவன் வந்திக்க ஞான
நிலையைச் செவியுரைத்த நித்தன் - கலையுணர்ந்த
சத்த முனிவர் தவத்துக்கு வந்துபர
முத்தி யளித்த முதற்குரவன் - பத்தியுடன்
விண்டு தவம்புரிந்து வேண்டி முறையிடலும்
வண்டி கிரியீந்த மணிமார்பன் - பண்டுசிரந்

தாக்கும் பிரமன் றவம்புரியக் கண்டுலகை
யாக்கும் படைப்பளித்த வாறுமுகன் - பூக்களுறு
மிந்திரநீ லோற்பலந் தந்தேத்தும் புரந்தரனுக்
கந்தரநா டாளு மரசளித்தோன் - வந்திரவி
தன்குலத்தி லேபிறந்த தாசரதிச் செவியில்
மின்குலவு ஞானம் விரித்துரைத்தோன் - பொன்குலவு
சேடனொடு வாசுகியுஞ் சேர்ந்து தவம்புரிய
வோடியவர்க் கருளு மும்பர்பிரான் - பீடுபெறு
தேவர் முனிவர்பெருஞ் சித்தரெவ ரும்பணிய
மாவரங்கண் முன்னம் வழங்கினோன் - நாவின்மகள்
பூசித்து முப்பொழுதும் போற்றி வணங்கிடலு
மாசித்தி வாழ்வருளும் வண்மையான் - வாசித்த
தந்திரியாழ் நாரதனுஞ் சார்ந்து தவம்புரிய
வந்துரிய தோழமையால் வாழ்வித்தோ - னுந்த
வகோர னெனும் பெயர்கொ ளந்தணன்மெய்நீங்கா
விகாரந் தனைத்துரந்த வேலன் - சகோரம்
பலமருவு மிந்துவெனப் பாங்கியர்க ளுப்பண்
ணலமருவும் வேடர்குல நங்கை - நிலமருவு
செந்தினை காக்கும்புனத்திற் சென்றுமடப் பாவையுத
வுந்தினைமா வுந்தேனு முண்டிதண்மேல் - வந்து
விருத்தக் கிழவனுய் வேங்கையாய் வேட
ரொருத்த ரறியா தொளித்து - வருத்தமுற்றேன்
தண்ணீ ரளித்தியெனத் தண்சுனையைக் காட்டியிதி
லுண்ணீ ரெனப்புனலை யுண்டதற்பின் - பெண்ணீர்மை
கண்டு தரியாமற் காரிகையே பூவையே
யொண்டொடியே தெள்ளமுதே யோதிமமே - வண்டுபடர்
வல்லிக் கொடியே மயிலே குயிலினமே
கொல்லிச் சிலம்பியுங்கை கூப்பியிடு - மெல்லியலே
வேய்த்தேனைத் தந்தென் விடாய்தணித்தாய் கோவையிதழ்
வாய்த்தேனைத் தந்தென் மயல்தீர்ப்பாய் - வாய்த்தசுனைப்
பச்சிளநீர்காட்டிப் பசிதணித்தாய் பூங்கனகக்
கச்சிளநீர் தந்து விரகந்தவிர்ப்பா - யிச்சையுடன்
இவ்வேளை யேயென் றிணையடியிற் றாழ்ந்திடலு
மவ்வேளை கோவித் தவணடப்ப - செவ்வேளும்
முன்னவனை வெங்கரியாய் முன்புவரக் காட்டுதலு
மன்னவளு மஞ்சி யணைத்திடலும் - பின்னவனுங்
காளையாய்த் தன்னுருவங் காட்டியவண் மருவிக்
கோளையார் சீறூர்க் குடிசையிற்போய் - வாளையார்

கண்ணுளே வேட்டுவர்கள் காஞ்சம னள்ளிருளி
னண்ணூர் தொழும்புயமே னன்கேந்தி - யெண்ணுத்
திருடனைப்போற் கானிற் றிருடிவர வேட
முருட்ரெலாங் கண்டு முனிந்து - கருடனொடு
மாறுகொளும் பாம்பினம்போன் மாய வணங்கழலுந்
தேறி யவர்சோகந் தெளிவித்து - வீறிவளர்
கல்லார வெற்பணைந்து கல்யாணஞ் செய்தவா
மெல்லார்க்கு மீந்தருளு மெம்பெருமான் - வில்லாருஞ்
சூரன் கொடுபோஞ் சுரர்வள மெலாங்கொணர்ந்து
சேருமணி நீலவரை சேர்வித்து - யாருஞ்சொல்
சீபூரண கிரியாய்ச் செய்தோன் சராசரத்து
மாபூ ரணமாக வாழிறைவன் - நீபன்
திருநந்தி யாறதனிற் சென்றாடி னோர்க்குத்
திருநந்தி வீறவருள் செய்வோன் - பெருகுஞ்
சிவகங்கை தன்னைத் தெரிசித்தோர் தம்மைச்
சிவகங்கை யானுலகஞ் சேர்ப்போ - னவமார்
சரவண தீர்த்தத்திலெவர் சார்ந்தாடி னாலும்
வரவணல மீந்தருளும் வள்ளல் - பரவு
பிரமசுனை மூழ்கும் பெற்றியோர்க் கென்றும்
பிரமபதமளிக்கும் பெம்மான் - வரமுதவு
விண்டு சுனைப்படிந்த மெய்யடியார் யாவருக்கும்
விண்டு பதவியருள் மெய்த்தேவன் - குண்டுபடு
மிந்திர தீர்த்தங்கண்டோர் யாவருக்கு மேலான
விந்திர போகங்கொடுக்கு மெங்கோமான் - சந்ததமுஞ்
சத்த முனிவர் தருஞ்சுனையே மூழ்ம்படிந்தோர்
சித்தமுற மெய்ஞ்ஞானந் தேர்விப்பான் - சுத்தன்
அகத்தியதீர்த் தம்படிந்தோர்க் கன்றே யவர்த
மகத்திருளைப் போக்கு மமலன் - மகத்துவஞ்சேர்
வாசுகி தீர்த்தம்படிந்து வந்திப்போர் யாவரையு
மாசுகியாய் வாழ வரந்தருவான் - பூசைபுரி
சேட தீர்த்தம் படிந்தோர் தேசம் புரந்திடவி
சேட பலமுதவுஞ் சீராளன் - பாடமரும்
சித்திக் குகையதனைச் சேவிப்போர்க் கட்டமா
சித்திப் பயனுதவுஞ் செங்கடம்பன் - முத்திதருந்
திங்கடொறுங் கார்த்திகைநாட் சென்றுபணி வோரெவர்க்குஞ்
சங்கமருக் கன்னந் தருவோர்க்கு - மங்குறொடு
மண்டபங்க ளம்பலங்கண் மாமதில்நள் கோபுரங்கள்
தண்டலைகள் கூபஞ் சமைப்போர்க்கும் - புண்டரிக

வோடைமட மாலயங்க ளோங்குதிரு வாபரண
மாடை மணியூர்தி யமைப்போர்க்குந் - தேடரிய
காலைவிழா வுச்சிக் கடும்பகலிற் பூசைவிழா
மாலைவிழாக் கட்டளைகள் வைப்போர்க்குஞ் - சோலைவிழா
கார்த்திகையிற் கார்த்திகைநாள் கற்பூர தீபவிழா
வார்த்திகை மிக்கேபுரியு மன்பினர்க்குங் - கீர்த்தி
பராவி மயில்கோழி பசுவெருது தந்து
விராவிப் பணிவோர்க்கு மேன்மேற் - றராதலஞ்சேர்
இன்ப மறம்பொருள்வீ டென்னுமிவை நான்கருளித்
துன்பங் களைவிலக்குஞ் சோதியா - னின்பப்
புழுகணியு மேனியின்மேற் பூச்சுந் திருப்பூச்
செழுபிறவி தீர்மருந்தென் றீவான் - செழுமலரோன்
கல்லார மாமலையான் கற்பகத்தா னேத்துதிருக்
கல்லார மாமலையான் கற்பகத்தான் - செல்லார்
பரங்குன் றலைவாயான் பாலனல்லார் தேக
பரங்குன் றலைவாயான் பாலன் - வரங்கொடுரு
வேரகத்தா னெண்ணு வினன்குடியா னெப்பொழுது
மேரகத்தா னெண்ணு வினன்குடியா - னேரா
ரகங்குன்று தோறுட லானு னெனதென்
னகங்குன்று தோறுட லானுன் - மகந்துன்று
சோலைமலை யாதரித்த சுந்தரத்தா னென்பிறவி
வேலைமலை யாதரித்த வேதாந்தன் - சாலப்
பருவேங் கடமுலையார் பாடலுறு தோங்குந்
திருவேங் கடமலைவாழ் சீல - னுருவாம்
இருக்கந்த மாதனமா யெய்ந்ததுபோ லென்றுந்
திருக்கந்த மாதனஞ்சேர் செல்வன் - உருக்கி
முதிர்காமத் தான்மயங்கு மூடருளஞ் சேராக்
கதிர்காமத்தான் வடிவேற் கந்தன் - மதியாத
சூரா விசாகத்தான் றேரென்றும் விசாகத்தா
னோரா விசாகத்தா னேகத்தான் - சீராருங்
காந்தந் தனிலுறையே காந்தன் பலவிதவு
காந்தன் வலாரிமகள் காந்தன் - காந்துமணி
வள்ளிக்கிரியினுன் வள்ளிக் குழியிலெழும்
வள்ளிக் கிசைந்தருளும் வள்ளியான் - றுள்ளு
மயிலா னயிலான் மையிலா னையிலான்
மயிலா னையிலான் மையிலா - னுயிலான்
திருமான் மருகன் றிருமான் மருகன்
உருமான் மகவான் மருகன் - பெருமான்

உருவ னருவ னுபய னபயன்
முருகன் முருகன் முருகன் - ஒருவனுமை
சேயானன் றீயவர்க்குச் சேயானன் றன்னுருவஞ்
சேயானன் றன்பெயருஞ் சேயானன் - றீயானன்
விண்ணானா னீர்கால் விதுவிரவி யாருயிராய்
மண்ணானா னண்டவகுப்பான் - பண்ணானன்
கால மிடந்திக்குக் கடும்பக விராவானன்
மேலமருந் தத்துவத்தின் மேலானன் - கோலுந்
தனுகரண போகமுயிர் சாரும் புவனம்
வினைபகுதி பந்தமொடு வீடாய்ப் - பினுமுலகை
ஆக்கிப் புரந்தழிக்கு மம்மூவரானி யருள்
தேக்கிப்பே ரின்பமருள் சிற்சொரூப - னாக்கி
உலகை வலமாய்நொடியி லோடிவருந் தண்டை
கலகலெனும் பொற்சதங்கைக் காலன் - றிலகநுத
லோராறுமா முகத்தா னோராறு சென்னியினு
னீராறு கண்செவிகை யேந்தினன் - ஓராறு
செவ்வாய் மலருடையான் செச்சையணி மார்புடையா
னெவ்வாத காலாயுதக் கொடியான் - றவ்வாத
வாறுசமையத்தா னுறெழுத் தானண்ட ரெலாங்
கூறுசமையம் பார்த்துக் கும்பிடுவான் - றேறு
சுருதிபல வாகமநூற் றோன்று மிதிகாச
மிருதிபுராணந் தொடரா மெய்யன் - கருதுங்
குறிஞ்சிக் கிழவன் குலாவும் வருடத்
துறுஞ்சித்திரைத் திருநாளும்பர் - புறஞ்சுற்ற
ஆழிக்கொடியா துயர்ந்த கொடிக் கம்பத்திற்
கோழிக் கொடியேற்றிக் கொண்டதற்பி - னாழிற்
குமாரதந்திரப் படியே கொண்டருளிப் பூசை
விமானமுதல் வாகனங்கண் மீதே - தமாதரொடு
வீதியுலாப் போந்து விளையாடு நாளொருநாள்
சோதியுலா மாணிக்கத் தூணிரையின் - மீது
பவளத்தின் போதிகைமேற் பச்சைமணித் தூலந்
திவளுற்ற பொற்பலகை சேர்த்துத் - தவள
மணிக்கொடுங்கை வைத்து வளர் பளிங்கின்பித்தி
துணித்தமலர் மாலை தூக்கிப் - பிணித்ததிரு
மண்டபத்தில்வந்து மடங்கற் றவிசேறி
விண்டலத்துச் சூரியன்போல் வீற்றிருந்து - பண்டு
மருவுபொறி யாய்ச்சிவற்றும் வண்கங்கை மாநீர்
திருவுரு விற்காலுந் திறம்போல் - மருவுமலர்

இந்திரதீர்த்தங் குடத்தி லேந்திமறை யவர்கண்
மந்திரத்தினோடு மகிழ்ந் தாட்டிச் - சந்திரனை
கஉ0. நூற்றுச் சமைந்தனைய நொய்ய திருவொற்றாடை
யாற்றிரு மெய்யீர மகற்றியே - போற்றும்
பருதிமிசை மேகம் படிந்ததெனக் கார்க
ளொருவடவையைச் சூழ்ந்த தொப்பப் - பொருவின்மக
மேருவின் மேற்கங்குல் விரிந்ததெனத் தந்தைகரி
யீருரியைத்தான் போர்த் திருந்ததென - வூரும்
மயில் நீலச்சாயை வளைந்த தெனநீலம்
பயிரூது மேற்படிந்த தென்ன - வியல்பார்க்கும்
பூமாதர் கண்கள் புதைந்ததென வண்டினங்கள்
பூமேனி யென்றணைந்த பொற்பென்ன - நாமேவு
செவ்வேளாய்நின்ற திறத்தை யொருவி யொரு
மைவேளாய் வேடங்கொண் மாட்சியென - நைவேள்
அழகு கவர்ந்தசெம்பொ னாகமெலாம் பச்சைப்
புழுகு கமழ்ந்தொழுகப் பூசி - யிழிவில்
கடி சூத்திரத்திற் கௌபீனஞ் சாத்திப்
படியேழும் விற்குமெழிற் பட்டை - யிடைசேர்த்தி
யம்மூவர்க் காசானென் றுய்ந்துகுறு யிட்டதுபோற்
செம்மார்பின் முப்புரிநூல் சேர்த்தணிந்திட் - டிம்மாதர்
மோகா விகாரத்தின் மூழ்கி மயங்கியிட
வேகாசந் தோண்மே லிசைவித்து - வாகான
கஙுO. வாறுதலை மீது மாறுதலை யானுதற்கண்
வேறு பொறிபடர்ந்து மின்னுதல்போல் - பேறுபெறும்
உம்பர்பிரான் பூசை யுஞற்றி யுவந்தளித்த
செம்பொன் மணிமகுடஞ் சேர்வித்துப் - பம்புகதிர்
முந்நான்கு சூரியரு முந்நான்கு வெற்புறல்போன்
முந்நான்கு தோண்மீது மோர்ந்தசைய - முந்நான்கு
செஞ்செவியின் மாணிக்கஞ் சேர்மகர குண்டலங்க
ளஞ்செவிய தாக வலங்கரித்து - நஞ்சுநுகர்
தந்தைநுதற் செங்கண் டநயனுத லுற்றனபோற்
செந்திலத மிந்துநுதற் றீட்டியே - சந்ததமு
மாயூர நாதனென வாசுகிதங் கிட்டமணிக்
கேயூரம் பொற்றோட் கிரிக்கிசைத்துத் - தேயாது
போர்புரிந்த சூரனுடல் போக்கும் படைக்கரத்திற்
கார்புரிந்த நீலமணிக் காப்பணிந்து - நீர்பரந்த
வண்டத் தானத்திருக்கு மாரன்முலைப் பாலுண்ட
கண்டத் தானத்திற் கடுஞ்சூரன் - சண்டைதனில்

அஞ்சு நவக்கிரக மண்டி யொளித்ததெனத்
துஞ்சு நவரத்னத் தொடைபுனைந்து - நெஞ்சதனில்
ஆரன் முலைப் பாலிறங்க வங்கைகொடு தைவரல்போ
லார வடமசைய வாங்கணிந்து - தாருகனை
யட்டரியின் சக்கரத்தை யாகத் தணிந்திருந்த
திட்டமெனப் பொற்பதக்கஞ் சேரவணிந் - திட்டமருள்
கல்லார வெற்பனெனக் கல்லார மாலையொடு
கல்லார மாலைபல கைபுனைந்து - மெல்லாரச்
செச்சை புனைந்த திருமார்பி னீபமொடு
செச்சை மலர்மாலிகையுஞ் சேர்த்தணிந்து - கச்சிறுக்கி
வட்டுடையிற் குற்றுடைவாள் வண்மைபெறச் செருகிப்
பட்டுடையின் மேலுதர பந்தனமுங் - கட்டி
வலது கணைக்காலில் வயங்கு கழல்வீரஞ்
சொலுவது போலார்ப்பத் தொடுத்துக் - குலவுமறை
நான்கும் தனித்தனியே நண்ணித் துதித்திடல்போல்
வான்குலவு தண்டை மணிச்சதங்கை - கான்குலவு
சாம்பூ னதத்தடர்பொற் சங்கிலிபொன் னூபுரந்தாட்
பூம்பூ னதமாகப் பூட்டியே - யோம்பும்
பிரணவத்தின் முப்பொருளும் பேதா பேதத்தாற்
பரிணமித்து வீற்றிருக்கும் பண்போல் - கிரண
மருவாசிகைக் கூந்தன் மாதரொடுங் கூடித்
திருவாசி கையிடையே சேர்ந்து - மருவாரும்
ஆறு சுவையமுத மாறுமனு வாலளிப்ப
ஆறுமலர் வாய்கடொறு மாங்கருந்தி - நூறியிடும்
தக்கோல மேல மிலவங்கஞ் சாதிக்காய்
கற்பூரஞ் சுண்ண மடைக் காய்நுகர்ந்து - பொற்பார்
பகலிடை முப்போதுமலர் பைங்கழுநீர்ப் போதைத்
திகழும் வலச்செவிமேற் சேர்ப்ப - மகிழ்வால்
அனற்றுப தீபவா ராதனையுங் கண்டு
தனைத்தானே ரென்றுலகஞ் சாற்றும் - நுனித்தபொருள்
தன்னையறி வித்திடல்போற் றன்சாயை மின்சாயை
தன்னை நிகராடி தனிற்பார்த்துப் - பன்னுதிரு
நாவி லெழுதலன்றி நற்பனையி னேட்டெழுதாப்
பூவிலெழு மந்தணர்சொற் பொற்கவியும் - மூவரெனும்
சம்பந்தரப்பர் சடைய னருள் சுந்தரனு
ரெம்பந்தநீங்க வெடுத் தியம்புஞ் - செம்பந்தத்
தேவாரத் தோடு திருவாத வூரர்புகல்
மாவார மானதிரு வாசகமும் - நாவாரச்

சித்தர் புகன்ற திருவிசைப்பா வும்புகழ்ந்து
பத்தியுட ேனாதுதிருப் பல்லாண்டுஞ் - சத்தி
பதிந்த முனிவருக்குப் பண்பார் கயிலை
வதிந்த சனக்குமர வள்ளல் - முதிர்ந்ததவஞ்
செய்யுந் தலமிதுவே செப்பவரி தாமிதன்சீ
ரைய மிலையென் றதன்பெருமை - மையலறத்
தேற்றிவிடை கொடுப்பச் சென்றுதவஞ் செய்தவர்கள்
போற்றுந் தணிகைப் புராணமுடன் - சாற்றும்
அருணகிரி நாத னறைந்த பதினா
யிரகவிதை யென்றுலகில் யாரு - முரைபுகலுந்
தெய்வத் திருப்புகழுஞ் செஞ்செவிகள் பன்னிரண்டி
னெய்தத் தனிக்கேட் டெழுந்தருளி - வையிலைவேல்
அத்திர தேவைக்காவ லாம்பரிசு முன்னேவிச்
சித்திரநே ரானவிரு தேவியரோ - டொத்து
மடைப் பள்ளியாக மருவியிடுஞ் சாலை
படைப்பள்ளி கொள்ளறையும் பார்த்து - கடைப்பள்ளி
யானைமுகன் றெந்தி யசைய முனநடப்பக்
கான முகவீணை கனிந்திசைக்கும் ஞான
முனிப்பாங்கன் கைலாகு முன்கொடுப்ப நீதி
யுனிப்பாங்கர் மந்திரிதாழ்ந் தோத - வினிப்பான
வொன்பதின்மர் தம்பியர்க ளோங்கியவாள் கேடகமு
மென்கரங் கொண்டேயருகின் மேவிவர - வன்புருவா
நந்திமுனி யோரேழு நன்முனிவர் செந்தமிழைத்
தந்தமுனி யங்கை தலைகூப்பக் - கந்தரனு
பூதியலங்காரம் புகழ்வகுப் பந்தாதி கரத்
தோதுகிளி யாயிருந்த வுத்தமனு - மாதிமுரு
காற்றுப் படையியம்பி யங்கமுறு வெங்குட்ட
மாற்றிச் சுனைமுழுகு வண்கவியுந் - தோற்றியென்பேர்
முட்டையென வைத்து முதிர்சுரத்தைப் பாடுகெனத்
திட்டமுட னோர்வெண்பாச் செய்தோனுங் - கிட்டிவரப்
பூசுரரு முப்போதும் பூசைபுரி யாதிசைவ
மாசுரரும் வீர மகேசுரரு - மீசுரரும்
முன்னு மிருபுறமு மொய்த்து நெருங்கியிட
வன்னவரை வீரவா கண்ணனுமே - தன்னிருகை
வெள்ளித் தடியால் விலக்கியிட வாலயத்தி
னுள்ளிற் றிருவலமா யுற்றதற்பின் - புள்ளிப்
பசும்பொற் றசும்புநிரை பாயொளியான் மேகம்
விசும்பிற் பசும்பொ னிறமேவ - அசும்புபுனற்

சந்திரகாந் தந்தமைத்த சாளரத்தி னூடேகு
மிந்திரவி யென்றுநில வென்றுரைப்ப - வந்தாஞ்சேர்
நீலக்கொடியி னிழல் பாயுந் தாரகைகள்
நீலமலர் வான்பூத்து நின்றதென - மேலாரும்
மாணிக்கத் தூணொளியால் வாறுறு பூநாறுஞ்
சோணத் திருநதியாய்த் தோன்றுமெழில் - பூணுந்
திருக்கோ புரவாயில் சென்று புறம்போந்து
பெருக்கோதைக் கங்கைப் பிராட்டி - யிருக்கோது
கஅ0. மைந்தன் வெயிலில் வருந்தாமல் வானிழலாம்
விந்தையென வெண்குடைகள் மேனிழற்ற - அந்நதி
செங்கை யிரண்டாற் றிருமேனி தைவரல்போற்
பொங்கு கவரி புடையிரட்டத் - துங்கமயில்
கண்டுதலை நடுக்குங் கட்செவிகள் போலவளி
மண்டுறு சாந்தாற்றி மருங்கசைப்பத் - தண்டினுக்குக்
காவற் கொடியான் கடிதுமுனஞ் செல்வனெனச்
சேவற்கொடி முனம்போய்ச் சேணளப்பக் - காவுற்ற
பொன்மலர்கள் வானோர் பொழிய முனிவர்குழாஞ்
சொன்மலர்க ளுவாற் சொரிந்துதொழப் - பன்மலரும்
ஏனோர் சொரிய விசைதேவ துந்துமியுங்
கானாரும் வேடர் கருந்துடியும் - ஆனாத
கல்லரி சச்சரி தண்ணுமை கைச்சதி
மல்லரி துத்தரி மத்தளி - சில்லரி
ஆகுளி பேரிகை யானகம் வார்குழல்
காகுளி தாரைகள் காகளம் - நாகம்
முரசு திமிலை முருடு முழவு
பரசு பதலை படகம் - கரடியுடன்
மேகத் திடிபோல் விரியுங் கனைகடல்போ
லேகத்துவமா யெழுந் தார்ப்ப - வேகத்திற்
ககூ0. றானவரை முன்னந் தடிந்தமுரு கோன்வந்தான்
வானவரைக் காத்திடுஞ்சீ மான்வந்தான் - தானதன்மஞ்
செய்யாதவ ரிடத்திற் சேராதவன் வந்தான்
மையர்று நீலமலை யான்வந்தான் - நெய்யாரும்
வேலாயுதன் வந்தான் வென்றிக்கொடி படைத்த
காலாயுதத் திருக்கை யான்வந்தான் - மாலாகி
வந்தாரை வாழ்விக்கும் வள்ளற் குகன்வந்தான்
மந்தாகினிக்கு மகன் வந்தான் - தொந்தாருஞ்
செச்சைத் தொடைபுனைந்த செவ்வே ளிதோவந்தான்
பச்சை மயிலேறும் பரன்வந்தான் - வச்சிரத்தின்

கோமான் மகட்கிசைந்த கோமான்வந் தான்குறவர்
பூமான் றனைப்புணர்பூ மான்வந்தான் - பூமேல்வாழ்
வேதனிரு காலில் விலங்கிட்டவன் வந்தான்
சூதமெறிசுந் தரன் வந்தான் - போதம்
மருவு தணிகேசன் வந்தான் வந்தானென்று
விரவு திருச்சின்னம் விளம்ப - வரமுதவும்
ஐங்கரனு மூடிகவே லாகமலே மாதினொடு
சங்கரனு மால்விடைமேற் றானேறப் - பொங்கரவப்
பள்ளி கருடன்மிசை பாய்ந்தேற நான்முகனும்
வெள்ளிய வன்ன மிசையேற - வுள்ளுங்
கருங்காரி யானை கசிந்தேறச் சூலத்
திருங்காரி ஞாளி மிசையேற - மருங்காரும்
வச்சிரத்தோன் வெண்கரியின் மஞ்சேறக் காந்துசுடி
கைச்சிரத்தோ னுட்டிற் களித்தேறப் - பச்சிரத்தம்
உண்ணுங் கொடுங்கூற் றுவங்கெதருமைப் போத்தேற
வெண்ணு நிருதி யெழிற்சிவிகை - நண்ணியிட
நீரிறையுங் காற்றிறையு நீள்வான் மகரத்து
மோரிரலைக் கண்ணு முவந்தேறப் - பேரிறைவன்
தோழனுட னீசானன் றன்னுமலர்ப் புட்பகத்துங்
கோழிழருத்தின் மீதுங் குனித்தேறக் - கேழலரி
வெண்மதியம் போற்றேர் விமானமிசை யேறத்
தண்முனிவ ரோரேழு சப்பிரத்தின் - கண்ணமரக்
காளியெருமைக் கடாவிலுகந் தேறிட வெண்
டோளிவயச் சிங்கத்தின் றேரேற - நீளொளிய
பொன்னின் வரையடியிற் பூந்தட்டோ வாதித்தர்
பன்னிருவர் பன்னிரண்டு பண்டியோ - துன்னி
நெடுமால் பலவுருவாய் நின்றநிலை தானோ
படுநீலத் தூணிரையின் பந்தி - கடியாருங்
கற்பகமோ தூண்மேற் கவிகிடுகு கூவிரந்தான்
பொற்பகஞ்சேர் மின்கொடியோ பொன்கொடிகள் - அற்புதஞ்சேர்
தேவருண வமுதஞ் சேர்த்துவைத்த பொற்குடமோ
மாவருணத் தேர்மீது வைத்தகுடந் - தாவருணன்
றூண்டும் பரியோ தொடங்கும் பசும்புரவி
மாண்ட வநந்தனொடு வாசுகியோ - நீண்டவடம்
என்ன வுவமை யியம்பு மணித்தேர்மேற்
கன்னியருந் தாமுங் கலந்தேறிக் - கின்னாரும்
சித்த வித்யாதரருஞ் சேர்கருட காந்தருவ
ரித்தியரு மொய்த்து நெருங்கிவர - மெத்தும்

இரண்டா யிரவெள்ள மென்றுரைக்கும் பூதர்
திரண்டாயிர முகமாய்ச் செல்ல - முரண்டாவும்
நூறுயிரமாய் நுவலும் படைத் தலைவர்
வேறுயுதங்க ளொடு மேவிவரப் - பேறுன
விண்ணோ ரொருபால் விரவி வடமீர்ப்ப
மண்ணோ ரொருபால் வடமீர்ப்பப் - பண்ணூர்
நரம்பினிசைப் படியே நாடகத்திற் கேற்ற
வரம்பை முதனல்வ ரெதிராட - நிரம்பும்
அகிற்றூமம் சாம்பிராணி யாவி சரற்கால
முகிற்றூமம் போற்றிசைகள் மூடச் - செகச்சோதிக்
காடை விளக்குங் கருப்பூர தீபமும்பொன்
னாடை விளக்கு மணிவிளக்கு - நீடும்
பருதி விளக்கம் பகல்விளக்க தாகத்
தூரகதத்தை வாயுவிறை தூண்டத் - திருமறுகிற்

குழாங்கள்.

செல்ல வயன்மால் திருநாட்டுப் பூவைமார்
கல்லவிர் செஞ்சூட்டுரகக் கன்னிமார் - நல்லிசையாழ்
கந்தருவ நாட்டுறையுங் காரிகையார் மேருமுடி
நந்துருவ நாட்டிலுறை நங்கைமார் - முந்துருவ
விஞ்சையர் நாட்டிற்கிசைந்த மின்னு னெழிலியக்கர்
தஞ்சயநாட் டிற்சிறந்த தையலார் - கொஞ்சும்
அளகா புரிவாழு மாயிழையா ரின்ப
முளகாவிற் பொற்கொடிநே ரொப்பாம் - இளையார்
மலையார் முலையார் மலையார் முலையா
ரலையார் முலையா ரவிர்பூ - கிலையார்
உருவிழா தெய்தி யுலகுலாப் போந்தோன்
றிருவிழாக் காணத் திரண்டு - கருவிழா
வேதாவைக் குட்டி விலங்கிருகா லிட்டதென்ன
வோதா வெனத்திரண்ட வோதிமமோ - நீதானே
நாமுற்ற சூதத்தை நன்றழித்த தென்னென்று
தாமுற்றுஞ் சூழ்குயிலின் றன்னினமோ - காமுற்று
வாழு மொருதெய்வ மடப்பிடிபோல் வந்தணையச்
சூழும் பிடிக்குலத்தின் றோற்றமோ - தாழும்
புனமான் மருகன் புனையெழிலைக் காண
வனமானை லாஞ்செறிந்த மாண்போ - தினமானம்

முப்போதும் பைங்குவளை முப்போதும் வீசுமணந்
தப்பாது சூழளியின் சங்கமோ - வெப்போதும்
நம்மினத்தி லொன்றாரு நாயகனைக் கண்டணைவோம்
வம்மி னெனக்கூடு மயிலினமோ - அம்மதிபோற்
றேயாத வாறுமுகத் திங்களைக்கண் டோடிவரும்
வீயாநிலா மூக்கி லெல்லினமோ - மாயாப்
புகழோது மோர்கிளியைப் போலெமையுங் காத்தா
லிகழ்வே தெனக்கிளிக ளெல்லா - மகிழ்வாகிச்
சேர்ந்த திறமோ திருப்புயங்க ளாம்வரைமேற்
சார்ந்து படரக்கொடிக டாங்குழுமி - வார்ந்தெழுந்த
சீரோமை வேளழிந்தான் செவ்வே ளிவனெனச்சூழ்
காரோதி வாய்ந்தகருங் கட்படையோ - நேராகு
மென்னநிலைத் தேர்மே லேழுநிலைக் கோபுரமேல்
வன்னமணி வாகனமா மண்டபமேல் - உன்னதஞ்சேர்
மேலைத் திருமதின்மேல் வெண்பளிங்கு மாளிகைமேல்
காலைத் தருநீலக் கற்படிமேல் - மாலைதொடர்
பூங்கா வணத்திற் புதுநிலா முற்றத்தி
லோங்கா வணத்தி லுயர்கிரியிற் - பாங்கான
உசO. அம்பலத்திற் குளிகையி லாடரங்கிற் பாடரங்கில்
வம்பலருஞ் செய்குன்றில் வந்தேறி - யும்பர்பிரான்
ஸ்ரீரூ மணிக்குறங்குஞ் சண்முகமும் பன்னிரண்டு
தோளுங் கடம்புந் துவரிதழும் - நீளும்
கருணைபொழி பன்னிரண்டு கண்ணுஞ் செவியு
மருணமணிக் குண்டல மீராறுங் - கிரணமுறு
கையா றிரண்டுங் கடம்பணிமுந் நூன்மார்பும்
வையாருஞ் செங்கை வடிவேலுந் - துய்யாருஞ்
செம்பட் டுடையுந் தெரிசித்தார் மன்மதன்பூ
வம்பட் டுடையுமன மாயெழுந்து - கும்பிட்டு
யாதுங் கொடாதவரே யாயிடினு மம்பொன்மலர்த்
தாதுடையார் தம்புறம்போய்ச் சார்ந்துவிடார் - ஆதுலர்கள்
என்னு முறைபோ லெழுந்தெழுந்து வண்டினங்க
டுன்னு மலர்க்குழன்மேற் சூழ்ந்திரைப்ப - பன்னிருகை
சேர்ந்த னுருவைத் தினகரனென் றஞ்சி யிருள்
சோர்ந்ததுபோல் வார்குழல்பின் சோர்ந்தலைய - வேந்தன்
புயவரைகண் மீதேறப் பொங்குங் கரிபோற்
குயவரைகண் மார்பிற் குலுங்க - வியவரெலாம்
மாகலைகள் வல்லவனை வாழ்த்தி வியந்திடல்போல்
மேகலைகள் சத்தம் விரவியிடக் - கேகயனைக்

உரு0. கட்டி யணேமினெனக் கைகளுக்குச் சொல்லுவபோ
விட்ட வளேக ளினிதொலிப்ப - வட்டநிலத்
தெம்பெயர்கொள் வெற்பிற் கிறைபாற் செலுஞ்செலுமென்
றம்பரி புரங்காலி லார்ப்பரிக்க - செம்பொன்மணித்
தேரெதிரே யோடிவந்து தெண்டனிட்டார் மஞ்ஞையெலாங்
காரெதிரே கண்டதெனக் காதலித்தார் - யாரெதிரே
யொப்பாவா ரிங்கிவர்க்கென் றேதுவார் பொன்வளேகள்
கைப்பாவா தென்று கழறுவார் - குப்பாவை
கொண்டாள் கலேயென்பார் கோதைவடி வேலர்தமை
பெண்டாள் கிலாரென்று பேசுவார் - கண்டாளோ
மாயக் குறத்தி மயல்மருந்திட் டாளோநங்
காயக் குறத்திக்கார் காணென்பார் - சேயோன்
மலேயை மறைத்து வளர்புதர்போற் றுத்தி
முலேயை மறைத்தே மூடிற்றென்பார் சிலேயையொரு
பெண்ணுக்கு மாயன் பெருமருக ரேயுடம்பைப்
புண்ணுக்கும் காமத்தீ பொல்லாதே - விண்ணுக்கும்
வண்டணிகை மேல்வாழ் வணிகரே சோர்ந்தொழுகும்
வண்டணிகை யேறும் வகையுரையீர் - வெண்டமருங்
கொன்றைக் குழலுக்குங் கொல்லேற்றின் மாமணிக்கு
மின்றைக் குழலுமெமக் கருளீர் - துன்றுவஞ்சக்
உசு0. கொக்கை யிரண்டாய்ப்பிளந்தீர் கூவுகுயில் வாழுமிந்தக்
கொக்கையிரண்டாய் பிளந்தாற் குற்றமோ - மிக்க
கொலேயசத்தின் வீறடக்கிக் கொண்டீரெம் மேற்பாய்
மலேயசத்தின் வீறடக்க மாட்டீர் - தலேயடித்துக்
கோவேதனே யடக்குங் கொற்றவரே மைத்துனனெய்
பூவேதனே யடக்கப் போகாதோ - தூவேலால்
அன்றுகடனீ ரனேத்துஞ் சுவற்றி விட்டீர்
இன்றுஞ் சுவறவயி லேவிடீர் - நன்றுதெய்வ
யானேயணே யாகத்த ரானீரே யெங்கண்முலே
யானேயணே யாகத்த ரானீரே - கானிற்
குறமானே நீர்புணரக் கும்பிட்டீ ரெங்கண்
மறமானே நீர்புணர வந்தீர் - திறமான
ஆறுதலேயுடையீ ரன்போ டெமைப் பணிந்தாற்
றேறுதலே யெமக்குச் செப்பிடீர் - கூறும்
இருமாதரை யாள்வீ ரின்றுநுமை வேண்டி
வருமாதரை யாள மாட்டீர் - குருவாரும்
நீலத்தாற் பேரின்ப வேயரல்லாற் சிற்றின்பக்
கோலத்தீர் தாமணேயக் கூடாதோ - மாலேக்

கடம்பணியா மார்பிலெமைக் காதலித்துக் கூடு
மிடம்பணியா தேக லியல்போ - தொடர்ந்த
உஎ0. வெமக்கல்ல வாவென் றிசைத்திடு ரென்பார்
தமக்குள்ளே தாம்புக லவ தானார் - கமைத்தவத்தால்
விண்ணி லொருத்தியின்ப மேவியிடப் பாலுற்றாள்
மண்ணி லொருத்தி மகாதவசு - பண்ணி
வலத்திருந்தா ளாதலினிம் மண்மாதரே பெண்
ணலத்துயர்ந்தார் வெற்றிநம தென்பார் - நிலைத்ததவஞ்

பேதைப்பருவம்.

செய்யகிலோ மன்றென்பார் செய்யகிற்பா மின்றென்பார்
மையலுரை பற்பலசொல் மங்கையருள் - ஐயசிலர்
டாரா ருனையென்பார் பார்த்தா லெனையென்பார்
சீரார் துறவறத்தைச் சேர்ந்தவர்போ - லோரார்
கலைதுறந்தார் பூமறந்தார் காவலெனு நாணி
னிலைதுறந்தா ரையறிவு நீத்தார் - விலைசிறந்த
சங்கந் துறந்தார் சடையாங் குழல்விரித்தா
ரங்கமெலா முத்தணிநீ றாயினார் - அங்கவன்கைச்
சத்திதிங் தொத்தவினை சார்ந்து பரிபாக
முத்தியறிந்தோ மெனவாய் மூடினார் - குற்றியென
நின்றார் பரவசமாய் நீலமயிலோ னுருவத்
தொன்றாகி னாரிவரு ளோர்பேதை - மன்றல்புரி
மாரன் சிலைக்காய் வளரு மிளங்கரும்பு
சாரிக்கா காதவிள நற்சுரும்பு - நாரியிடை
உஅ0. பூட்டற்கிணங்காத பூந்தாமரை யரும்பு
வாட்டு குடைக்காகா மதிக்குழவி - யீட்டுபுகழ்
கூறவிரு தூதாத கோகிலத்தின் மென்பிள்ளை
யேறு பரியாகா விளங்கிள்ளை - வீறுமதன்
தேருக் கிசையாத தென்றற் சிறுகொழுந்து
மார்பிற் புனையா மருக்கொழுந்து - வீரியவேள்
வெற்றிக் கொடிக்காகா மென்பூங் கொடிக்குருத்து
பற்றியவாட் டுமையிலாப் பார்வையாள் - மற்றவன்பால்
நெஞ்சுளிருந்தே குதினேர்மை யெலாங் கற்பனைபோல்
வஞ்சமுலை மேற்றோன்றா மார்பினாள் - அஞ்சப்
பெடை போலநடையிலாப் பெட்டை யிளவன்ன
மிடையே யவனுருவ மென்பாள் - படைமதனன்

ஊருங் கரியாக வோங்கிருளைக் கூந்தலென
வாரிமுடிக்க வருந்து வாள் - காரின்
ஒழிந்துமுளைக்கு மயிலொண் முருந்தை யொப்ப
விழுந்து முளைத்திடு வெண்பல்லாள் - தழைந்தொளிர்விண்
டாரகைவெண் மல்லிகைப்பூத் தான்பறித்துத் தாருமெனச்
சீரியதாய் மார்பாற் சிணுங்குவாள் - சீரியகண்
ணுடிமதியைப் பிடித்தென் னங்கையிற்றந் தாயில்லை
யேடீ சிழற்பாவை யென்றழுவாள் - வேடன்
விதிரசத்தைக் காணுத மென்கனிவாய் முத்த
மதிரசத்தை யீயு மனைக்கீவாள் - சிதரிசேர்
கண்ணென்று பார்க்கவிரு கையொன்று செய்யமொழிப்
பண்ணென்று பேசும் பருவத்தாள் - விண்ணென்று
மின்னற் சிறுகொடிபோல் மேனியாள் பாலொழுகுங்
கன்னற் குதலைக் கனிவாயாள் - வின்னுதலாள்
பூமேல் நடந்தறியாப் பொற்பதத்தா ளன்னையர்சொல்
நாமேல் நடக்கும் நடையினுள் - மாமாயக்
கள்ள மறியாக் கருத்தினுள் காமசர
மெள்ளவும் பாயா வியல்பினுள் - எள்ளா
தடிக்கடி சிற்றுடை யவிழ்ந்தவிழ்ந்து வீழ
வெடுத்தெடுத்துக் கையா லிறுகப் - பிடித்திரண்டு
காலிற் சதங்கை கலகலெனக் கைவளைக
ளாலிக்கப் பேதையரோ டாங்கணுகி - நீலவரைச்
சாரலுறு நீலமணி தன்னலடுப் பமைத்து
வேர லரிசிகரி வெண்கோட்டால் - பேரறைமேற்
குற்றி யிளம்வேயின் கொழுங்கணுகும் பாளையெனு
முற்றிசிறைய முகந் தெடுத்துப் - பற்றியிரு
கையாற் கொழித்துக் கரியுண் விளங்கனியின்
மெய்யாங் குழிசிசிறை வேய்த்தேனுட் - பெய்யா
வகிலின் விறகடுக்கி யங்காந்த காந்தண்
முகிழெனுஞ் செந்தீவளர மூட்டி - மிகவுமுதிர்
காய்க்குரவம் பாவைதனைக் கல்யாண மாப்பிளையாய்
வாய்ப்புறவே வைத்து மலர்சூட்டித் - தேய்த்தசெச்சை
பூசித்திரு மார்பிற் பொய்தன்மக ளிர்பலரு
நேசித்துச் சோபனங்க ணேரிருந்து - வாசித்துத்
தாலிகட்டும் வேளையிலே தண்டை சிலம்பசைய
மாலைகட்டு நீபமலர் மார்பசைய - மாலளித்த
மாத ரிருவர் மருங்கசைய வாதபரைக்
காதுமணிக் குண்டலஞ்சேர் காதசையச் - சோதியொளிர்

வாகுவலை யத்தோள் வரையசைய நீலநிற
மாகு வலயங்காதில் வாய்ந்தசையச் - சேகின்
மருத்தணிகா சலத்தான் மன்னுசனை வீறுந்
திருத்தணிகா சலத்தான் றேர்வர் - தொருப்படலுஞ்
செஞ்செவிலித் தாய்மார் திருமுன் பணிவித்தார்
தஞ்சுவலி னேற்றியெதிர் தாமணைந்தா - ரெஞ்செவிலி
யாரென்று ளித்தேரி லன்னமே செட்டியிவன்
பேரன்று ளப்பொழுதப் பேதையுந்தான் - சீரொன்று
செட்டியே யாமாகிற் றின்னவவலோடு கன்னற்
கட்டிவாங்கிக் கொடென்று கண்பிசைந்தாள் - பட்டிவள்ளி
௬௧௦. கைவளைய லேற்றியிரு காலில் வளைந்தேற்றி
மைவளையு நெஞ்ச மயலேற்றி - வெய்ய
விருட்டு விடியாமுன் னினத்தவர் காணுமற்
றிருட்டு வியாபாரஞ் செய்செட்டி - வெருட்டியொரு
வேடுவனு யோர்புலவன் வெண்பாவைக் கைக்கொண்டு
கோடு திரியுங் குறச்செட்டி - பாடாநற்
கீரனைப் பூதத்தாற் கிரிக்குகையுட் கற்சிறைசெய்
தோராரிய பாவை யுகந்தணைந்து - கீரனுக்கு
வீட்வெழி காட்டியிடும் வேளாண்மை யாஞ்செட்டி
யாட்டிலுவந் தேறுமன்ன தானசெட்டி - யீட்டுபுகழ்
தேவேந்திரன் மகள்பாற் சிந்தைகுடி கொண்டசெட்டி
நாவேந்தர்க் கேயின்ப நல்குசெட்டி - பூவேந்திக்
கண்டு பணிபவர்தங் காசுபறிக்குஞ் செட்டி
பண்டறுவ ருட்டுதன பாலசெட்டி - தொண்டர்
மதுரையிற் சொக்கப்பசெட்டி மைந்த னிளஞ்செட்டி
குதிரை மயிலாங் குமரசெட்டி - சதிருடனே
சீவபா வைக்கியஞ் செய்திடுகந் தப்பசெட்டி
மூவர் வணங்கு முருகப்பசெட்டி - பாவனைக்கும்
அப்பாலுக் கப்பாலா மாறுமுக செட்டியிவன்
தப்பாமற் கண்டாலுன் றன்னைவிடான் - இப்போதெம்
௬௨௦. வீட்டி லவல்வெல்லம் வேணதுண்டு வாவெனச்சீ
ராட்டி யணைமா ரகம்புகுந்தார் - பூட்டியவில்
நாணை யறுத்துமத னற்கரும்பைத் தன்னுருப்போற்
காணத் தெரியாமற் காப்புறுத்தான் - பூணவன்றேர்
அவ்வீதி நீங்கி யடுத்த தயல்வீதி
யிவ்வீ தியிலோ ரெழிற்சிறுமி - யவ்வீதி

பெதும்பைப் பருவம்.

பேதைக்கு மூத்தாள் பெதும்பைப் பருவத்தாள்
காதைப் பொருவுங் கயல்விழியாள் - மீதுவரும்
மங்கைக் கிளையாள் மலர்மா தெழிற்கிளையாள்
செங்கைக் கிளையாள் செழுங்கிளையாள் - இங்கிதங்கள்
பேசு மொழியாள் பிரசமணந் தாதுபொதி
வாச முகையின் வளமொழியாள் - ஊசற்
குதம்பை யணியுங்காதாள் கோலமு நீங்காதாள்
நிதம்ப மணியு நெடுங்காதாள் - இதம்பெருகு
காமக் கலவிநலங் காரிகையார் பேசுதொறுஞ்
சேமச் செவிநிறையத் தேக்கிடுவாள் - பூமுடிக்க
வெட்டா மயிரோ டெதிர்ப்பைக் கவரிமயிர்
கட்டா முடித்த கருங்குழலாள் - கட்டிளஞர்
திட்டிப்பார் வைக்கணிக்குட் சிக்கினதுஞ் சிக்காது
மெட்டிப்பார்க் கத்தலைமே லேய்ந்ததெனக் - கொட்டைப்பாக்
கென்னமத னுடுருஞ்சு தென்னவிணைக் கோங்கரும்பீ
தென்ன வுரந்தோன்று மிளமுலையாள் - அன்னையர்கள்
கற்றுக் கொடுத்ததன்றிக் கற்பனையொன்றுந் தெரியா
ளெற்றுக்குஞ் சற்றேநா ணெய்துவாள் - பொற்றொடியீர்
பூவம்பு வாட்டுவது பொய்யோ மெய்யோவென்பாள்
மாவம்பு கொண்டமுலை வம்பணிவாள் - நாவம்பு
பன்னுமிளங் காளையர்கள் பார்வையளி யிதழ்த்தேன்
துன்னுதரம் பார்க்குந் துவர்வாயாள் - வண்ணக்
குயிலொடுமொ ருகவெதிர் கூவுவாள் சாரல்
மயிலொடு மாறுய்நடிக்கு மாண்பாள் - பயிலுமிள
வன்னத்தைப் போல்நடத்தற் காதரிப்பா ளன்னையர்கள்
சொன்னத்தைப் பைங்கிளிக்குச் சொல்லுவாள் - சொன்னமணிக்
குன்றத்தி லேறுங் குலமயில்போற் செம்பொனிற்செய்
குன்றத்தி லேறிக் குயிற்றுமணி - மன்றத்தில்
வந்திருந்து பூவையர்கள் வாரிதி சூழுந்தீவிற்
தந்தமணிக் கழங்கேழ் தந்திடலு - முந்தியவள்
ஒன்றென்று நாளு முலகோர் வினைதீர்க்க
நன்று வருந்தி நதிபாடி - யென்றும்
இரண்டென்று வள்ளிதெய்வ யானைமணஞ் செய்யுந்
திரண்டவிழா விரண்டுஞ் செப்பி - தெருண்டவர்சொல்
மூன்றென்று நாடோறு முப்போது முப்போது
தோன்றுமணி நீலமலர் சொல்லியபின் - தேன்றுளும்ப

நான்கென்று வானவர்கள் நாளும் வலம்புரியு
நான்கு பிரகாரவியல் நன்கியம்பிக் - கான்குலவு
மைந்தென்று வீராட்ட காசன் றிருமுகங்க
ளைந்து நிலையு மறிந்தியம்பிச் - சந்ததமும்
ஆறென் றனுதினமு மன்பர்செபஞ் செய்துகரை
யேறு மெழுத்தாறு மினிதுரைத்துக் - கூறரிய
வேழென்று சத்த விருடிக ளுண்டாக்கியிடு
மேழுசுனையி னெழி லியம்பித் - தாழுங்
குழலாடக் கைவளைகள் கூடவிரைந் தாடக்
கழலாடிப் பாடியிடுங் காலை - யழலாடி
மைந்தனந்த னிந்தனந்தன் வந்தனஞ் செயுஞ்சுகந்தன்
தந்தனந்த முந்தெரிந்த சந்தனந்தன் - கந்தன்
அரிகூடச் சாரலுறு மானையுங் கொர்ச்சிக்குந்
திரிகூடச் சாரலுறுந் தேவன் - வரிகூடு
மிந்தீ வரத்தா னிருந்தீ வரத்தார்க்கு
வந்தீ வரத்தான் வரத்தான்றேர் - முந்தோடித்
தெண்டனிட்டா ளண்ணல் திருவழ கெலாம்பார்த்தாள்
மண்டனிட்டா பாவ மயலகற்றும் - புண்டரிகக்
கைக்கிளியைப் பார்த்துவெகு காதலுட னன்னைமீர்
இக்கிளியைத் தாரு மெனக்கென்றாள் - அக்கிளிதான்
வில்லிபுத்தூ ரான்செவியின் மேலிரிவாள் பூட்டியன்று
வல்லபத்தின் வாதுவென்று வந்ததுகாண் - பல்லவையுண்
மற்றொருவன் வாதுவென்று வான்பாரி சாதப்பூக்
குற்றமற மண்மேற் கொணர்ந்ததுகாண் - வெற்றிப்
பிரபுட தேவக்குரிசில் பேணி யெதிர்காண
முருகன் மயில்மேல் முடுகி - வரவழைத்து
வந்ததுகாண் செவ்வேள் வரிசையலங் காரமுற்றுந்
தந்ததுகாண் பேரின்பஞ் சார்ந்ததுகாண் - எந்தைபிரான்
முத்தித் திருவென்னு முன்பதினா றாயிரமாம்
பத்தித் திருப்புகழைப் பாடுங்காண் - சித்தியெட்டுங்
கற்றதுகா ணந்தம்மைக் கண்ணுலும் பாராம
லுற்றதுகாண் சிற்றின்பத் தோருறவு - மற்றதுகாண்
நாமுரைக்கும் வார்த்தைகளை நற்செவி கேளாதிருக்கும்
ஓமுரைக்கும் பூதியுங்கண் டேற்றிருக்குந் - தோமுரைக்கு
மற்றைக் கிளிபோல் வசப்படா தென்றுரைத்துப்
பற்றிக் கொடுபோனார் பாவைதனைக் - சொற்றவனுங்
கண்டு முறுவலித்தாற் போலக் கதிர்த்தேரைத்
தண்டிற் செலுத்தினார் சம்பானைப் - பண்டுவலி

சாய்த்த மதவேளுந் தன்கிளித்தே ரைத்தூண்டிக்
கோத்தமல ரேவாமற் கொண்டணைந்தான் - மீத்தெருவில்

மங்கைப் பருவம்.

மற்றொருத்தி மங்கை வயதுபதி னொன்றுடையாள்
கற்றொருத்திக் கோதுங் கலையுணர்ந்தா - ளுற்றிளைஞர்
நோக்குங் குறிப்புணர்ந்து நோய்கொண் டலையவெதிர்
தாக்கும் விடப்பார்வை தானறிந்தாள் - வீக்கியிடும்
வீணை யவசுரமாய் விட்டு நலிந்ததென்றுங்
கோணமலைத் தேன்புளிப்புக் கொண்டதென்றுங் - காணுங்
கனியி னிரதங் கலக்க மூறுமென்று
மினியமுதம் பால்விளர்த்த தென்றும் - பனியிரதக்
கன்னலுங் கோதாமென்றுங் கற்றவர்க ளிம்மங்கைச்
சொன்னல மொப்பில்லையெனுஞ் சொல்லுடையாள் - வன்னவிதழ்க்
கோவைக் கனியாயங் கொள்ளா திருப்பதிந்தப்
பூவைக் கனியாயம் போலுமெனச் - சேவைசெயுங்
காமா துரகரெலாங் கட்டுரைக்குஞ் செவ்வதரப்
பூமாதுர கபடம் போனிதம்ப - மாமாது
மட்டிற் சிறந்த மலருமிளை ஞோருயிருங்
கட்டிச் செருகுங் கருங்குழலாள் - வெட்டியெறி
வட்டுக் குவமைதனை மாற்றிவளர் தாமரையின்
மொட்டுக்கு நேரா முலையினாள் - கொட்டுதுடி
மின்னம் பிடியெனவே மேவுகொடி மெல்லிடையா
ளன்னம் பிடியெனவே யாநடையாள் - கன்னியர்க்காம்
நாணு மடமுமன்னை நல்குபயிர்ப் பச்சமும்போற்
பூணு மகலாமற் பூண்டிருப்பாள் - வாணிலவைக்
கட்டிப் பிடித்ததுபோற் கையில் மணிப்பந்தை
முட்டிப் பிடித்திளைஞர் மொய்த்துவர - மட்டவிழ்பூஞ்
சந்தனப்பூங் காவகத்திற் றுயத் துடனேகித்
தந்தனத்தைத் தாங்குமிடை தள்ளாட - வந்தனங்கள்
கண்டு வெருண்டோடக் காரளகஞ் சோர்ந்துமலர்
வண்டு கழங்கின் மகிழ்ந்தாடத் தண்டாள
முத்து வுடமாட முன்கை வளையாட
நத்துவட பத்திரமு நன்காடத் - தத்துநுதல்
வேராட மையெழுது மென்கழுநீ ராடவள்ளைச்
சீராடு குண்டலங்கள் சேர்ந்தாடத் - தாராடத்
தண்டை சிலம்பு சதங்கை புலம்பியிடப்
புண்டரம் விண்டு புறம்புக - வொண்டளிர்

ஆக மசைந்திட வார மழிந்திட
மேகலை யம்புவி மீதுற - வேகிய
முந்தடி கொண்டு முடுக்கி விடுத்தெதிர்
பிந்தடி கொண்டு பிடித்தெறிந்து - பந்தடிக்கத்
தோழிமார்கண்டு துணுக்கென் றெழுந்திருந்து
வாழி மடவனமே மாமயிலே - யேழையே
கொங்கைக் குறும்பகையைக் கொண்டாய் கரத்ததுநின்
சிங்கவிடைக் கிடுக்கண் செய்யாதோ - தங்கியநின்
பல்லுக்குத் தோற்றமுத்தின் பந்தைப் பிடித்தடித்தால்
வல்லுக்குத் தோற்றவிடை வாடாதோ - செல்லைநிகர்
கொண்டைக்குத் தோற்ற கொடும்பந்தை நீயடித்தால்
அண்ட நடுவையஞ் ராக்காதோ - வொண்டொடிநின்
மென்குதிக்குத் தோற்று விளங்குமணிப் பந்தடித்தால்
மின்குதிக்கு நுண்ணிடையை வீட்டாதோ - நன்குதிக்கும்
பொன்னே யமையுமெனும் போதிலொரு மானளித்த
மின்னேயம் பூண்டவடி வேலனார் - நன்னேய
மூலாத் திரியாய் முதிர்நல்ல காத்திரியார்
மாலாத் திரியார் மனந்திரியார் - நீல
மயில்வா கனத்தார் மலர்வாணி கொங்கை
பயில்வா கனத்தார் பணியுஞ் - சயிலேசர்
மாலைக்கடம் பணிவார் வள்ளியிரு தாமரைப்பூங்
காலைக்கடம் பணிவார் காங்கேயர் சால
வெறியாட்டி லேறும் விருப்புடையார் வீர
மறியாட்டி லேறிவருவார் - குறிகாட்டும்
வெற்றிமணித் தேர்மேன் மேவுதலும் பூங்கரத்திற்
பற்றுமணிப் பந்தெறிந்து பாங்கியருஞ் - சுற்றிவரச்
சென்று ளெதிரேகித் தெண்டனிட்டா ளாங்கெழுந்து
நின்றாள் திருவுருவை நேர்பட்டாள் ஒன்றாச்
சமயமொரு மூவிரண்டுந் தத்த நெறிநிற்க
வமையமுக தாமரையோ ராறும் - நமதுயிர்சூழ்
பன்னிரண்டு வேதனையும் பாற்றுமருட் பார்வைதரும்
பன்னிரண்டு செய்யவிதழ்ப் பங்கயமுஞ் - சொன்னிறைந்த
அன்புதருஞ் சாத்திரங்க ளாறுமறை யவர்க்கு
முன்புகலுஞ் செங்கமல மூவிரண்டும் - மன்பதைகட்
கேயிதங்கள் செய்யா விருளரக்கரைத் துணித்த
வாயுதங்க ளேந்து கஞ்ச மாறிரண்டு - மாயுதத்தாற்
சிந்தித் தவுணர்தமைச் செற்ற சினக்கனலைசே
ருந்திக் கமலமெனு மோர்மலரும் - கந்திக்குஞ்

சீர்பூத்த வேடச் சிறுமிவளருங் குறிச்சி
யூர்பூத்த புண்டரிக மோரிரண்டும் - பாரா
முருக ரிளமை முருகுண்டான் கஞ்சம்
வெருவமத னெஞ்சழுத்தி விட்டான் - பரவசமாய்
மெய்மறந்து சோர்ந்து விழுந்தா ணிலமீது
பொய்மறந்த தாய்மார் புகலுவார் - கைமறந்து
வள்ளியிரு தாள்பணிந்த மாய மறியேமோ
நள்ளி மகவானளித்த நாரிதனை - யுள்ளி
யரக்கரொடும் போர்செய் தலுத்தறி யோமோ
யிரக்கமிலா தேயறங்க ளெல்லாங் - காக்குமது
சூதன் மருகனென்று சொல்வதறி வோம்பாவை
தூதன் மகனென்று துணிந்திடுவோம் - காதற்
றிருப்பழனி வெற்பதனிற் சேர்ந்துகொண்டு ஞாலத்
திருக்குமிள மங்கையரை யெல்லாம் - விருப்பமுடன்
போதச் சிறையெடுத்தல் போதாம லெங்களிள
மாதைச் சிறையெடுக்க வந்தீரோ - சூதா
யிகலினோர் பொன்னை யிரவிலிட்டீர் கன்னம்
பகலிலே கன்னமிடல் பாங்கோ - புகலரிய
காமமுளை தோன்றுவெங் காதலிக்கு நீர்வந்திங்
கேமமயல் விளைத்திட் டேகுவீர் - சேமமுறும்
தேரை நிறுத்தீர் செழுங்கடைக்கண் வைத்தவட
னேரை நிறுத்தீரெனுமளவில் - நாரியரைப்
பாரா தவர்போலப் பார்த்துப் பசும்புரவித்
தேரா தவர்போற் றெருவகன்றார் பார்மீது
தன்காலால் வந்தமங்கை தாய்காலாற் சென்றுமனை
யின்கா விலங்குமஞ்சத் தேகிடந்தாள் - தென்காலுஞ்
சந்தனத்தைப் பூசுமுலை தைவரலும் நெஞ்சழுங்கி
யிந்தனத்தை நீற்றுநெருப் பீதென்றாள் - வெந்தனத்திற்
பன்னீரை வார்க்குமிளம் பாங்கியரைப் பார்த்தையோ
வெந்நீரை யேனிறைத்தீர் மேலென்றாள் முந்நீர்
ஒலியுங் குயிலி னொலியு முயரம்
புலியும் புலியாம் புதுமை - யொலிவளையீர்
இன்றறிந்தே னென்றாள் என்றறிந்தீர் நீரென்றாள்
அன்றறிந்தாள் காமத் தருந்துயரம் - பின்றொருத்தி

மடந்தைப் பருவம்.

வேத மொருமூன்றின் விளங்குமிடை வேதத்தி
னோதுகின்ற காண்டங்க ளோரேழின் - ஓதுநடுக்

காண்டமென வேழ்பருவக் காரிகையார் தம்முளெழின்
மாண்ட விடைப்பருவ மாமடந்தை - வேண்டியய
னிம்மடந்தை யைப்பார்த் தெழிலார் திலோத்தமையா
மம்மடந்தை தன்னையு முண்டாக்கினு - னிம்மடந்தை
பார்வைவலியான் மதனும் பங்கயன் முன்னும்புலவர்க்
கார்வமய னீங்கா தளித்திட்டான் - சீர்வடபாற்
பொன்மலை மேலூரும் புயலனைய கூந்தலாள்
தென்மலைமே லூர்பிறைபோற் சேர்நுதலாள் - நன்மைதரும்
கல்லார வெற்பிலுறை கார்வேடர் கைப்பிடித்த
வில்லார் கரும்புருவ மென்கொடியாள் - சொல்லாரும்
இந்திர தீர்த்தத்தி லெழுநீலம் போல்விழியாள்
நந்தவனப் பூங்குமிழ்நேர் நாசியாள் - நந்தி
மடுவினலர் செவ்வாம்பல் வாயாள் பைஞ்சாரல்
படுகழையின் முத்தென வெண்பல்லாள் - இடபன்
சிவகங்கை தீர்த்தமுறுஞ் செந்தா மரைபோ
லவிர்கின்ற செய்ய வதனத்தாள் - தவநண்பின்
நாரதனுர் யாழிலெழு நல்லிசைய வெல்லிசையாள்
ஏரிபடர் வள்ளை யெழிற்காதாள் - நீர்குலவும்
விண்டு சுனைத்தவழும் வெண்பணில மாங்கழுத்தாள்
மண்டியவேலன் செறுவின் வாழ்க்கைநேர் - தண்புயத்தாள்
தீனெறி யெந்நாளுந் தண்ணீர்பா யேழ்சுனையின்
மாநேமிப் புள்ளின் வளர்முலையாள் - தேனுர்
வராகபுரத் தாலிலைமேல் மாயவன்போற் பண்டி
விராவுமயி ரொழுங்கார் மின்னுள் - பராவுங்
கடம்பவனத் திற்றிரியுங் காமருபின் பார்வை
மடங்க லனையவிடை வாய்ந்தாள் - விடங்குலவு
நாகர் சுனைக்கரைவாழ் நாகநிக ரல்குலாள்
நாகர்சுனைத் திரிகைந் நாகத்தின் - மோகத்
துதிக்கை நிகருந் துடையாள் தமிழை
விதிக்குமுனிப் பூஞ்சுனைவீழ் ஞெண்டின் - மதிக்குமுழந்
தாளாள் சரவணத்தீர்த் தத்துவரா லென்னதுணைத்
தாளாணல் லான்குளத்துத் தண்ணீரின் - மேலாகுங்
கச்சபத்துக் கொப்பாகுங் கஞ்சமல ரடியாள்
வச்சபத்தி ஞன்காய் வருமுலகை - யிச்சையிற்செய்
போதன் சுனையிற் பொருந்துமனம் போல்நடையாள்
நாதன் மயில்போலு நல்லியலாள் - மாதரொடு
மேனிலா முற்றத்து வீற்றிருப்ப வோரண்கு
பானிலாக் கண்ணுடி பாரென்றுள் - வேனிலான்

வின்னரி யோர்பால் நெகிழ்த்தி விடுத்ததெனப்
பின்ளு ரிருங்கூந்தல் பின்னியொரு - நன்னரி
மாலைபுனைந்து மருங்கில்விலை யில்லாப்பொற்
சேலை புனைந்து திருநுதலின் - மேலை
மதிக்குமறு வுண்டிந்த மாதினெழில் கண்டோர்
மதிக்குமறு வுண்டெனுஞ்சொல் வாய்ப்பத் - துதிக்குமெழிற்
கத்தூரிப் பொட்டணிந்து கண்ணில்விட மூட்டுதல்போல்
மைத்தூரி கைக்கோலால் மையெழுதி - முத்தாரும்
மூக்கணியுங் காதணியு முன்கைவளையுங் கழுத்திற்
றேக்கணியு மாரச் செறிவித்துத் - தாக்கும்
புகர்முகங்கொள் யானையெனப் பொற்சுணங்கு பூத்துத்
திகழ்முலையி னிற்களபஞ் சேர்த்திப் - புகழுமதன்
கையிற் கயலுங் கரும்புஞ் சரமைந்துந்
தொய்யிற் கிசையத் தொகுத்தெழுதி - நையிடையிற்
காஞ்சி பருமம் கலாபம் விரிசிகைகாற்
பூஞ்சிலம்பு மார்ப்பப் புனைந்துதொழ - வாஞ்சையுடன்
தன்னழகைக் கண்டு தருக்கி மனமகிழ்ந்து
மின்னனையா ரோடெழுந்து வெற்பிவர்ந்து - சொன்னமதில்
மேல்வீதியிற் குணபால் வீறுமணி வாயிலைத்தென்
கால்வீதி யிதென்று கண்டுவந்து - நால்வீதி
சூழுஞ் சரவணத்தின் றூய்நீரைப் பார்த்தடியார்
வாழுமடங்கள் வளம்பார்த்துத் - தாழ்மயின்மா
வையாளி மேட்டின் வளம்பார்த்து வீரட்டத்
தையா னனன்வா ழகம்பார்த்துப் - பொய்யாத
ஓங்காரத் துண்மை யுரைக்குஞ்சாமி நாதனென்று
நீங்காதமரு நிலைபார்த்துப் - பாங்காரும்
மால்வீர ராகவனூர் வண்டளியும் பார்த்துவிழிச்
சேல்வீர காளிநிலை சேவித்து - நூல்வாய்ந்த
தென்கோ புரவாயில் சென்றுமலர் மாதின்
மன்பேர் குலவும் வரைபார்த்து - முன்பாரும்
நீலச்சுனையி னிலவி யெழும் பைங்குவளைக்
கோலமரைப் பார்த்துக் கும்பிட்டு - வேலர்திருக்
கல்யாண மண்டபமுங் கண்டுபல வாகனங்கள்
செல்யாணர் மண்டபத்தைச் சேவித்து - வெல்யானைக்
காவேரி ராசன் கனகமணி மாளிகையின்
பாவே ரியல்பனைத்தும் பார்த்ததன்பின் - பூவேரி
மன்னுங் குடவாயில் வந்திருந்து செங்கழுநீர்
துன்னு மலைமுகனைச் சூழ்ந்திறைஞ்சிப் - பன்னலஞ்சேர்

விண்டு சுனைபார்த்து வெய்யமணி நாகசுனை
கண்டுசித்தர் வாழ்குகையுங் கண்டெழுந்து - வண்டலவும்
நாரததீர்த் தம்பார்த்து நன்மலயக் கும்பமுனிச்
சீரணவு தீர்த்தந் தெரிசித்துச் - சாரலுறும்
வேடுபெறி மண்டபத்தின் விம்மித மெலாம்பார்த்துக்
கோடுசெறி நல்லான் குளம்பார்த்து - நீடும்
வடகோ புரவாயில் வந்தணுகி ஞாலம்
படையோதி மன்சிகரி பார்த்துப் - புடைசூழுந்
தத்துவ சாரமெனச் சாற்று நதிபார்த்து
மத்தூர்ச் சிலையின் வளம்பார்த்துச் - சுத்த
வகத்தியனே ராண்டுதவ மாற்று மிடம்பார்த்து
மகத்துவஞ்சே ராலயத்துண் மன்னி - யிகப்பில்
ஒருஞான சத்திதரா னுற்றவிடம் பார்த்துத்
திருஞான மிச்சையெனச் சேரும் - இருமாதர்
சசுO. கோவில் வளம்பார்த்துக் குமாரலிங்கம் பார்த்தெவர்க்குங்
காவலெனு மாபத் சகாயனுறுங் - கோவிலையுங்
கண்டுநவ வீரருறுங் கற்றளியும் பார்த்துவலங்
கொண்டுகொடிக் கம்பநிலைக் குஞ்சரமுங் - கண்டுவந்து
நன்றா யிருந்ததிந்த நன்மலையென் றுளெதிரே
தன்றாயரு மணைந்து சாற்றுவார் - முன்றேவர்
சேர்மான் றவஞ்செய்த கொற்றமலை யிதன்சீர்
நாமா னுரைக்கநெடு நாள்வேண்டும் - பூமானே
யீசன் றவம்புரிந்த திவ்வரைக்கீ ழல்லாமற்
காசிமுதற் சேதுவரை கண்டதுண்டோ - வாச
மலரோன் சிறைதவிர்ந்து வாழ்வு பெற்றதிந்த
மலையே யலாது மலையுண்டோ - நிலமீது
சூரன் கொடுபோஞ் சுரர்வள மெலாங்கொடுத்த
வீரன் சினந்தவிர்ந்த வெற்பிதுவே - மாரனுக்குத்
தந்தை தவம்புரிந்து தத்துவத்தை நன்கறிந்த
திந்தமலை யல்லான்மற் றெங்கணுண்டு - சிந்தனைசெய்
சத்த முனிவர் தவம்புரிந்து மேலான
நித்தியத்தைப் பெற்றதுமிந் நீள்வரையே - பத்தியுடன்
கும்பமுனி வேலோனைக் கும்பிட்டுச் செந்தமிழைக்
கம்பமறக் கற்றதுமிக் கல்லகமே - வம்புபெறு
சஎO. செங்கழுநீர் முப்போதுஞ் சீர்சால் கலியுகத்தி
லிங்கழகாய்ப் பூப்பதுவு மிம்மலையே - மங்கைக்
குறத்திதவ முன்புரிந்த கொள்கையினுற் சேயில்
லறத்தினியல் வாய்ந்த திதுவன்றோ - புறத்தெவர்கட்

வேட்ட மாமளித்து வெய்ய பிணியனைத்து
மோட்டுமலை யீதென் றுரைப்பளவில் - ஈட்டும்
பிறவிக் கினியான் பெயரா தருள்வான்
றுறவிக் கினியான் றுலையான் - இறைவி
மலையா டருமத்தன் வாழ்வுதரு மத்தன்
மலையா டருமத்தன் மத்தர் - தலைமேவு
மீசனயன் மாற்கருள வெண்ணித் தணிகைமலை
வாசனயன் மாற்கருள மன்னினன் - மோசக்
கிரவுஞ்ச மங்கழித்தான் கேடி லசுரர்
விரவுஞ்ச மங்கழித்தான் விண்டோய் - இரதமிசை
வந்தா னெதிர்போய் மடந்தை பணிந்தெழுந்தாள்
செந்தா மரைநேர் திருமுகமுங் - கொந்தாரு
மாலைக் கடம்பணியு மார்பும் வரைத்தோளும்
சேலைப் பொரும்விழியால் சேவித்தாள் - கோலமதன்
ஐங்கணையி லோரிரண்டை யானைமுலை மேற்பாயுஞ்
சிங்கமென வேவத் திகைத்திட்டாள் - தங்கும்
மடநாண மச்ச மருவும் பயிர்ப்பு
முடனேக வாசைநோ யுற்றாள் - இடமாகப்
புள்ளிருக்கும் வேளூர்ப் புரக்கும் வைத்தியருக்
குள்ளிருக்கு முத்துக் குமாரரே - யெள்ளிருக்கும்
எண்ணெயைப்போ லெங்கு மிருப்பவரே காமசுரம்
வெண்ணெயைப் போலேயுருக்கி விட்டதுகாண் - பண்ணும்
பரிகாரஞ் செய்யீர் பசும்புண்ணில் மார
னெரிகார மிட்டதுபோ லெய்தான் - சரமாரி
கைதொட்டுப் பார்த்திடீர் கண்ணால் முகம்பாரீர்
மெய்தொட்டுப் பார்த்திடீர் வீண்போமோ - மைதொட்
டொருமாத் திரைதா னுரையீர் கனிவாய்
தருமாத் திரைத்தேனுந் தாரீர் - பொருமாற்றல்
தென்காற்றுச் சங்கையுட னீண்டி யலைக்குமிதை
நன்காற்றும் பூதி நயந்திடீர் - மின்காலும்
பூரணசந் த்ரோதயத்தாற் பொங்கு முடல்விளர்ப்பைச்
சீரணவு லேகியத்தாற் றீர்த்திடீர் - கூர்மயனோய்
தீர்ந்தால் வெகுமதிகள் செய்குவன்செவ் வாயமுத
மார்ந்தாலெம் பொற்குடமும் மங்கையதே - சேர்ந்து
படுக்கப் பொருந்தினல் பாரு மதனூருங்
கொடுக்கத் தகுமென்று கூற - வடுக்கற்
பெருமான் றுலையணைக்கும் பெற்றிபோற் றேர்மேல்
திருமான் மகளிரொடுஞ் சென்றான் - ஒருமான்

பயந்தாள் விழுந்தாள் பதைத்தா ளுயிர்த்தாள்
அயர்ந்தா ளனைமா ரறிந்து - வியந்துரைப்பார்
முந்நீரின்முத்தளித்த மொய்குழற்குக் கைம்மாறு
வெந்நீ ரளித்ததென்ன வேலவரே - பன்னீரோ
பெண்ணுக்குப் பேயும் பெரிது மிரங்குமுன்றன்
கண்ணுக்கெம் பூவை கசப்பாச்சே - நண்ணும்
வயித்தியனார் மைந்தரென்று வந்தடைந்தாற் பின்னும்
பயித்தியமே செய்வதுதான் பண்போ - சயித்தியந்நீர்
அக்கினி குமாரகந்தா வன்பினிற்கூ டென்பாளுக்
கிக்கினி குமாரகத்தை யேன்புரிந்தீர் - திக்குமகிழ்
பைங்கழுநீ ரோடையொன்று பற்றும லெம்மடந்தை
யிங்கழுநீ ரோடைகளு மிட்டீரே - செங்கழுநீ
ராங்குவளை வெற்பென்ப தல்லாலிவள்கரத்தி
னீங்குவளை வெற்பாக்கி நின்றீரே - யோங்கியண்டந்
தாமயிலின் றோகைத் தனிநிறம்போல் யாம்பயந்த
மாமயிலையுங் கருக வைத்தீரே - பூமிதனிற்
காஞ்சியணி மாவடியைக் கண்டீ ரிவளிடைவீழ்
காஞ்சியணி மாவடியுங் கண்டீரே - பூஞ்சிகைசேர்
ருoo. மாலாழி மாமுகன்பால் வாங்கினீ ரிங்கிவடன்
காலாழி வாங்குங் கருத்தானீர் - பாலாழி
யன்ன புகழ்படைத்தீ ராகாது பெண்பழியிங்
கென்னவுரைத் தேகினா ரிம்மடந்தை - தன்னகத்திற்
சற்றே துயின்று தனித்தெழுந்து தோழியரை
யுற்றே முகம்பார்த் துரைத்திடுவாள் - பொற்றொடியீர்
என்கனவி லேயொருவ ரெய்தினா ரங்கவரைப்
புண்கணகற் றீரென்று போற்றிசைத்தேன் - நன்கவருஞ்
சந்திர மண்டலத்திற் றூவியகோ வைக்கனியும்
மந்தர தாமன்ரயு மல்லாமற் - சுந்தரஞ்சேர்
வாழை யிரண்டடியில் வைத்திடுசெந் தேன்கூடு
மாழைமொழி யாயுதவ வல்லையேல் - ஏழையுன்றன்
மையனோய் தீரும் வகைபுணர்ப்ப னென்றுரைத்தார்
தையனல்லீ ரக்கணமே தான்விழித்தேன் - ஐயமறச்
செப்பீ ரிதன்பொருளைச் சிந்தை தெரிந்தெனவு
மப்பேதைய ரதனை யாராய்ந்து - தப்பாமல்
ஓதுவார் வாயிதழு மொண்முலையு மல்குலுமே
காதுசேர் தாழ்குழையாய் காணென்றார் - தாதுசேர்
செச்சைக் கணியாருஞ் சேர்ந்துன்னைக் கூடியிடு
மிச்சைக் கணியரா யெய்திடுவார் - நிச்சயமே

தேறி யிருத்தியெனச் செப்பினு ரங்கவரு
மாறியிருந்தா ளருந்துயரம் - வேறொருத்தி

அரிவைப் பருவம்.

காரரிவை குந்தலத்துங் கட்செவிவை குந்தலத்து
மோரரிவை குந்தலத்து மொப்பிலாச் - சீரரிவை
யுண்டால் மயக்க முறுமதுப்போ லாதிளைஞர்
கண்டால் மயக்குங் களிநறவம் - விண்டோய்
இடையாலும் யாழி னிசையாலு மன்ன
நடையாலும் பார்வை நயனக் - கடையாலும்
புன்முறுவ லாலும் பொருவே விளைஞருயிர்
வன்மை கவர வருங்கூற்றம் - வின்மைபெறுங்
காமன் கலைக்குக் கனிந்த வலங்காரஞ்
சேம வனிதையர்க்கோர் சிங்காரம் - தாமக்
கருங்குழலாள் சொற்குழலாள் காமந்தால் மாந்தர்
மருங்குழலாள் பாங்கியொடு மன்றல் - தரும்பொழில்வாய்
புக்காள்வெண் பற்கிணையாம் பூமுல்லை யைத்தளைந்து
மைக்கா ரளகத்தின் மாட்டினாள் - மெய்க்காகாப்
பிண்டித் தளிர்பறித்துப் பெய்தாள் புவிமீது
மண்டி மிதித்தாள் மலர்ப்பதத்தால் - கெண்டைவிழிக்
கொவ்வாத மாவடுவை யொண்கரத்தி னற்பறித்துக்
கவ்வாக் கறியாக் கனிந்துமிழ்ந்தாள் - செவ்வான
நாசிக் கிணையாகா நற்சண் பகமலரை
வீசுங் குழைக்காதின் மேல்வைத்தாள் - நேசித்த
செங்கரத்துக் கொவ்வாத செங்காந்தளைப் பிடுங்கி
யங்காற்றும் பாம்பெனநின் றூட்டினாள் - கொங்கைக்குத்
தோற்ற விளநீரைத் தொட்டுப் பறித்துடைத்துச்
சீற்றமறக் குடித்துத் தேக்கெறிந்தாள் - தாற்றினிளம்
வூசக் கமுகை வளைத்தேறு மாதவியி
னூசற் கொடிமே லுவந்தேறி - வீசுங்
கலாப மயில்போலக் காவி னுழைந்தாடிக்
குலாவும் பொழுதிலன்பு கொண்டோர்க் - கெலாமுதவுஞ்
சிந்தா மணியாஞ் சிலப்பதிகாரம் படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான் - நந்தா
வளையா புரிதருவான் வாசவனுக் கீந்தான்
றிளையாத குண்டல கேசிக்கும் - வளையாழி
நீருண்டான் காதலிகழு மகத்தியத்தா
னேருண்ட தொல்காப் பியமுவந்தான் - சீருண்ட

சிற்றதி காரங்களெலாந் தேவர் முதலாக
வுற்றவதி காரிகளுக் கோர்ந்தளித்தான் - முற்றுலகாள்
பேரதிகா ரந்தனைத்தான் பேணுந் திருத்தணிகை
யூரதிகா ரன்றேர்வந் துற்றிடலுங் - காரிகையும்
௫௩௦. நன்னூ லிடையைய நண்ணிப் பணிந்தெழுந்து
முன்னூ லுரையகல மோகித்தாள் - பன்னூலும்
மோதாதுணரு முயர்புலவீர் மெய்யி னுயிர்
போதாதிருக்கப் புணர்ப்ப துண்டோ - தாதாரும்
ஆய்தங் குறுகி யரையாத் திரையினுடல்
தேய்ந்த தென்விதியோ செப்பிடீர் - வாய்தமிழ்ச்சேர்ந்
தேனு முயிரளவா யேய்ந்த வுடலளவும்
மாறியழிந்த வகை யென்னோ - கூறிடீர்
வல்லினத்து ளோரிரண்டு மற்றை மருங்கான
மெல்லினத்துக் கேபகையாய் விட்டதென்னோ - புல்லொருசார்
அல்வழியும் வேற்றுமையே யாகி மதிமருட்டுஞ்
சொல்வழி வாராததென்ன சூட்சியோ - நல்ல
வியற்கைக் குயின்மொழிதா னென்னோ மிகுத்த
செயற்கைக் கொழிபதனைச் செப்பீர் - பயிற்சிபெரு
நேமி நாதத்தா னிலைதெரியாச் சொற்புணர்ச்சி
காமர்நன்னூற் சூத்திரத்தாற் காட்டிடீர் - சேமமுறு
செவ்வேழ மெய்க்குமுனஞ் சேர்ந்து தடவாமென்கை
யொவ்வா வியல்பென்கை யோதிடீர் - தவ்வாத
நானிலத்து ளைந்திணையா நண்ணிய பூவம்பாலே
தானடுத்துச் செய்மயக்கந் தானறுப்பீர் - வானடுத்துச்
௫௪௦. சிறுபொழு தைந்துந் திவசந் தொறும்புணரு
மாறுபொழு தாக்கில்வகை யாயிடுமோ - கூறுகிலீர்
என்னு வினயினு னென்னு விநாயனுர்
முன்னுவி வந்த முருகேசர் - நன்னுவி
பூசுந் திருமேனிப் பூச்சின் மணமிவண்மேல்
வீசியுரை வீசாமல் மேலகன்றார் - தேசிகராய்த்
தாதைக்குத் தொன்னூ றனிப்பொருள் சொற்றாரிந்தப்
பேதைக்குச் சின்னூலைப் பேசுவரோ - சோதித்
தருவமத னெய்யு மசோக மலராக
மிருவமதனக் கவலை யுற்றான் - தெரிவை

தெரிவைப் பருவம்.

அவளொருத்தி வேளுக் கடங்காப் படையாய்த்
தவரை வனத்தே ட்டுஞ் சமர்த்தி - நவவீரர்

ஓரிலக்கர் பூதவெள்ள முட்புகலும் வெற்பறிவு
சோர மயக்குமிருள் சோர்குழலாள் - தாருகனுர்
வெஞ்சிலைக்கை யற்றுவிழ வீட்டுஞ் சரங்கொளுவுஞ்
செஞ்சிலை நேராகுந் திருநுதலாள் - கஞ்ச
மலரென்று பள்ளிகொளு மாறுமணி நீல
மலரென்று மார்பணியு மாறும் - இலைகூர்
அயிலென்று கையேந்து மாறு மொருமாமி
யியலொன்று மானினமி தென்றும் மயிலிறைவ
னென்னும் விழியா னிளையோன் பிதாமகியென்
றெண்ண விளங்கு மிருதோளாள் - அண்ணறிருக்
குன்றுதோ ளுடலுக்குக் கூடிலை மான்மதஞ்சேர்
குன்ற மிரண்டென்னுங் குவிமுலையாள் - குன்றிறைவன்
கோடலொடு வெட்சிமயிற் கோலமெனும் பொற்றொடிக்கை
நீடுநிறஞ் சாயலுறு நேரிழையாள் - வேடர்நண்பன்
நீலமயிற் பீலியொன்ற நீங்கிநின்ற தன்மையெனுங்
கோல மயிரொழுங்கு கூர்வயிற்றாள் - வேலனன்று
சூரொடும்போய் நாகதலந் துன்னியம ராடியெழு
மோர்பிலமீ தென்றுபுக ழுந்தியாள் - சூரனெதிர்
ஊருமணித் தேரிதென வோங்குமிடைப் பொற்கொடியோ
ரேரம்பை வாய்ந்தவல்கு லொண்டொடியாள் - நாரியரும்
ஆணு யுருவெடுக்க வாசைகொளு மேனியெழிற்
பூணாரம் பூண்ட புதுமையாள் - சேணுருங்
காவிச் சுனையருகிற் கல்யாண மண்டபத்தி
லாவிக் கினியாரோ டாங்கணுகிச் - சேவிக்கும்
பாடினிகை யாழைப் பறிந்துமடி மேலிருத்தி
மாடகத்தை வார்முலைமேல் வைத்திறுக்கிச் - சூடகக்கை
யங்குலியி னீளுகிரா லாய்ந்தநரம் பைத்தெறித்துத்
தங்கு சுரமேழுந் தனிபெழுப்பிப் - பொங்கு
மிசையாற் சராசரங்க ளெல்லா முருக
வசையாத பாடினிகேட் டஞ்ச - விசையாரும்
பண்ணொருபத் தெட்டினையும் பண்ணமரப் பாடியபின்
றண்ணளியாற் பாங்கி தனைநோக்கிப் - பெண்ணரசே
பங்கயங்க டோறுமிரு பான விதழவிழ்ந்து
செங்குமுதந் தோறுமிளந் திங்களெனத் - தங்கியொளிர்
செஞ்சங் கினைச்சூழ்ந்த செங்கடம்பு செச்சைநிறம்
விஞ்சம் புயமலைகண் மீதசைய - வஞ்சநடை
சென்றுவர்வாய் வல்லிசெறிந்ததெய்வ யானைதுளைந்
துர்தி யருசெழிபு முட்குழிந்து - தொந்தி

மடிப்பின் படிவாய்ந்து வாமத்தும் பார்கைக்
கடிக்கொள் வரான்மேவு கணைக்காலும் - படைத்துச்
சிலம்படியின் மன்னியன்பர் சிந்தைகுடி கொண்டு
நலம்படரும் பேரின்ப நல்கி - யிலங்குமெழிற்
சிற்பநூ லொத்தொழுங்கிற் சேருமிந்திர நீலமணிப்
பொற்பு மலங்காரப் பூமணமு - மற்புதமுந்
தன்னே ரிலாதசர வணதீர்த்த மொன்று
நன்னீர்த் தணிகையிலே நண்ணியிடு - மன்னீரிற்
சங்க மிடறொலிப்பச் சக்கரவாகங் குழையப்
பைங்கழுநீர் செங்கழுநீர்ப் பண்புபெறத் - துங்கவிதழ்ச்
ருஎ0. செம்பவளம் வெண்பவளச் சீர்சால் நிறமெய்த
வம்பவிழும் சைவலந்தோள் வந்தசையக் - கொம்பரிடை
வல்லி துவள மலர்க்கைக் குருகிரைப்ப
வல்குற் பைநாக மசைந்தாட - வில்லினுதல்
வேராடக் காதில் விளங்கு குழையாட
நீராட வாதோழி நீயென்றாள் - நேரிழையே
கங்கைக்குண் முற்றொன்றுங் கந்தச் சரவணநீ
பெங்கட் கியையா தியையுமனக் - கங்கதனிற்
றோய்குதிநீ யென்றுரைப்பத் தோகா யெனதுகுறிப்
பாய்குதி நீதானென் றமர்காலைத் - தாய்குதிக்கும்
புச்சைமயிற் பரியான் பன்னூலுங் காண்பரியா
னச்சைப் பரியா னளப்பரியான் - பிச்சம்
புனைபொற் குடையான் புகழ்மிக் குடையான்
குனிவிற் குடையான் குடையான் - இனிய
கதிவா யவியான் கடம்பா டவியான்
றிதிவா யவியான் செவியான் - மதிவாய்ந்த
கானகத்தான் வள்ளியுறுங் கானகத்தான் வீணைமுனிக்
கானகத்தான் றென்றணிகைக் கானகத்தான் - வானகத்தால்
பொற்றேரைக் கண்டெதிர்போய்ப் பூவை தொழுதுகுகன்
முற்றேரைக் கண்ணுன் முகந்துண்டாள் - கற்றோள்வாழ்
ருஅ0. இந்திர நீலோற்பலமே வென்னு யெனதுமுக
சந்திர நீலோற்பலம்போல் தான்கலுழ்வாய் - அந்திபகல்
மேனி கருகி விழிதுயிலாய் மன்மதன்போர்க்
கானிபடு மென்றனைப்போ லாயினாய் - வேனிலுக்கும்
பங்கப் படுவாய் பகலு மலர்பூண்டாய்
திங்களைக்கண் டும்பயத்தைச் சேர்கின்றாய் - யங்கசனார்
கொல்லும் படிநின்றாய் கூர்தென்ற லாற்றாழுந்தாய்
புல்லி யகலப் பொலிவிழந்தாய் - கல்லெனவே

வீசுமலைக் கலைந்தாய் மென்கொங்கை யார்நிதலை
வாசம் புனைந்தாய் வளைமருவாய் - பாசமாய்
புணர்ந்தாயன மிறங்காய் பூந்தோட் டணியுந்
தணந்தாய் தணந்தோர்த னிமை - புணர்ந்தாய்கொல்
கந்தவேளாகங் கலந்து மணந்தாய் தணந்தேன்
சிந்தைபோல் வாடுந் திறமுனக்கேன் - வந்தெனக்குச்
சொல்லா யெனவினவுந் தோகைமேற் - சித்தசனுங்
கல்லார மல்லாக் கணைதெறித்தான் - கல்லாருஞ்
சோரரிவைமீது சொரிந்தார் மின்றெ ரிளையோன்
றோகன் றதப்பாற் றெருவீதி பேரிளம்பெண்

பேரிளம்பருவம்.

ஆணிலழகா மனக்கனைப்போற் பெண்ணிலெழில்
பூணிமதி ரூபப் பொற்கொடியாள் - காணும்
அணிகட் கழகினையுண் டாக்குமவை யவத்தாள்
மணிகட் கழகுகைகை வாய்ந்தாள் - குணமிகுந்த
பூமகளைக் கூத்தாட்டும் பூவையர்கள் பூவரச
ளுமகட்குக் காவியங்க ணன்குரைப்பாள் - காமருஞ்சவு
சுந்தரிக்குமேலாந் துரைத்த னத்தாள் பூவாளி
பைந்தொடிக்குங் காமரசப் பண்புரைப்பாள் - இந்திரவி
மீதெழுந்த குன்றனைத்தும் வென்று குறுமுனியாற்
பாதலத்தி லுற்ற பறம்பினையு - மீதலஞ்சேர்
வாசவனார் கைக்கிசைந்த வச்சிரத்தைக் கண்டுதிரை
வீசுகடலிற் படிந்த வெற்பினையும் - காசினிக்கீ
மூற்றுப் பொருதுவெலற் குந்திப் பிலவழிபு
மற்றைவழி யாகிதம்ப மாகடலும் - சற்றிறங்கிப்
பார்க்கத் தலைவணங்கும் பான்மையெனச் சாய்ந்துமணி
வார்க்கச் சறுத்த வனமுலையாள் - கார்க்குவளை
யூடற் காங்காது மம்பொன்முடித் தெற்றியிற்போய்த்
தேடற் கருமணிச் சிங்காதனத்திற் - சேடியர்கள்
முத்துதொழ வீற்றிருந்து முற்றுமுண ரோவியனைத்
தந்திடன வொருத்தி தந்திடலும் - வந்துதொழு
மேவியனைக் கண்டுகிழி யொன்றிலுல கேரழுன்
மேவு புயவலியின் மிக்கவராய் - மூவர்தொழும்
தேசிகராய்ப் பொன்னிறங்கொள் தேசினரா யுலகைடைகல்
வ[illegible]கொத வலி ராப் - யாசகர்க்கு

வீசுங் கொடையினராய் வெய்ய கலியுகத்திற்
பேசி வரங்கொடுக்கும் பெற்றியராய் - நேசந்
துறவா தவராய்த் துவிதவினை நோய்கொண்
டிறவா தவராகி யென்றும் - பிறவாத
நித்தியராய் நாற்பயனு நேரி லொருங்குதவுஞ்
சத்தியராய் மும்மலத்தின் சார்பிலரா - யித்தலத்திற்
பேரரசு கீர்த்திப் பிரதாப முள்ளவராய்ப்
போரரசர் கண்டுதொழும் பொற்பினரா - யாரொருவர்
உள்ளக் கருத்துமுண ருத்தமரா யுன்னுமன்பர்
கொள்ளக் கருணைபுரி கொற்றவராய் - வெள்ளலிலாச்
செல்வச் செருக்கினராய்ச் சீரொழுக்க முள்ளவராய்
கல்விக் கடல்கடந்த காவலராய்ச் - சொல்லுமனு
நீதி பொறுமை நிலைமை யறிவடக்க
மோதி மகிமைசால் புள்ளவராய்ச் - சோதித்து
யாருநிக ரில்லாவோ ராடவரை நீயெழுதி
நேருதியென் றுளவனு நேர்வணங்கிக் - கூறும்
அறிவாலுங் கல்வி யளவாலுஞ் சிறப்புச்
செறிவாலு மாராய்ந்து தேடி - மறியாரு
சுகo. மானின் மருமகன் வடிவனைத்துங் கண்டெழுதித்
தேனின் மொழியாள்கைச் சென்றளிப்பத் - தாநகையுங்
கண்டு மகிழ்ந்தென்றன் கருத்தின் படியெழுதிக்
கொண்டுவந்தா யென்றவனைக் கொண்டாடி - யொண்டொடியச்
சிற்பனுக்கு வேண்டுந் திரவியமும் பொற்றுகிலும்
பொற்பணியு மீந்து புறம்போக்கி - நற்கிழியில்
வாய்ந்த முருகர் வடிவழகைச் சிந்தித்துச்
சாந்தம் விபூதியெனத் தானணிந்திட் டேந்துமெழில்
வள்ளைச் செவிக்கணியாய் மன்னுந் திருப்புகழைக்
கிள்ளைக் கிசைப்பவனைக் கேட்டுவந்து - வள்ளிபுணர்
கந்தனுருக் காண்பதுவே கண்ணுக் கணியென்று
நந்தலில்சேய் நாமமே நாவணியென் - றெந்தையெதிர்
கூப்புவதே செங்கையணி கோலமென்றுங் கண்டிகையை
வாய்ப்பதுவே கொங்கையணி மாண்பென்றுந் - தோப்பமர்த
நீலச் சிலம்பதனை நித்தலுஞ்சூழ்ந் தெய்துவதே
காலிற் சிலம்பணியுங் காட்சியென்றும் - வேலர்
அலங்காரத் துட்பொருளை யாய்வதுவே தேகங்
கலங்கா வலங்கார மென்று - மிலங்குகந்த
நந்தாதி மேலசை யாவதுயிர்த் தோழிகேட்டு
நந்தாதி மேலான நட்பென்றுஞ் - சந்தமுரு

காற்றுப் படையே யனங்க னடுபோரை
மாற்றுப் படையாகி வைகுமென்றுந் - தோற்றும்
அனுபூதி யைம்பதுமே யாருயிர் பேரின்ப
வனுபூதி நல்கு மணியென்று - மனமீதி
லுன்னும் பொழுதி லுயருக் கயிலேகிகர்
மன்னியொ ளிர்கந்த மாதனமுங் - கன்னியுமை
யங்கைவிர லிற்றேன்றி யன்னையுமாய்ச் சோதரியாய்த்
திங்களணிவோன் சடைவாழ் சேணதியுஞ் - சங்கணிந்த
செங்கண் மாலான சிவமுனிக்கு மான்பிணைபால்
மங்கைவள்ளி தோன்றி வளர்நாடும் - பைங்குவளை
மூன்றுதி னங்கடொறு மொய்த்தபகற் போதுசுனை
தோன்று மதிசயஞ்சேர் தொன்னகரு - வென்றரக்கர்
கட்சிதனை வேலாற் களைந்தா னிரைகவர்ந்து
வெட்சிப் பெயர்படைத்த தென்றூரும் - பட்சியெனு
மேவும்பெயர் கொண்டு மேதினியெலா நொடியிற்
றாவிவரு மஞ்ஞைத் தனிப்பரியு - மாவினுயிர்
கண்ணிமையிற் போக்கிக் கடவுட்பிடி மணந்து
விண்ணிற் பவனிருவரும் வெண்கரியும் - கண்ணன்
கொடிக்கு மலர்வேதன் கொடிக்கும் வலாரி
கொடிக்கு மிசைநல்கு கொடியும் - படிக்குமுருக்
கட்புலனிற் றேற்றுங் காசினியிற் பூசுரர்க
ளுட்புலனிற் கற்றறையு மொண்முரசுந் - தட்பமலர்
மேவதன் படைப்பகற்றி மீட்டும் படைத்துலகிற்
றீதகலவே நடத்துஞ் செங்கோலும் - பேதமற
வோதுந் தசாங்க முடையான் மணிநெடுந்தேர்
போதரலுந் துன்னெனவே புக்கிறைஞ்சிச் - சோதியெழில்
பாதாதி கேச பரியந்தம் பார்த்துமுரு
காதாதி யாகக் கடம்பென்றாள் - வாதாபி
சீரணமென் றோன்செவியிற் சேர்ந்தகனி வாயிதழென்
வாரசெவியில் வைத்துரைக்க மாட்டாயோ - மார்பதனிற்
சந்தனத்தைப் பூசுமிரு தையலார் தந்தனம்போ
லெந்தனமுஞ் சேரி விழிவாமோ - வந்தாதின்
மீளுட்டுங் காமநோய் வீட்டினையின் றோர்கொடியின்
மீளுட்டுங் காமநோய் வீட்டிடாய் - நாளுடு
நாகமாம் பின்னை நயந்துணர்ந்தா லுன்னையறி
மோகப்பாஞ் சாலருக்குள் முன்மொழிவேன் - சோகப்பூத்
தைத்தாவி சோராமுன் சார்ந்தவருக் கஞ்சலெனுங்
கைத்தலமே யிணையக் கண்டிலேன் - எய்த்தேன்

துயிலைத் தடுத்தவிராத் தோன்றி னிரியேறு
மயிலைத் தடுத் திழுக்க வல்லேன் - கயிலைபிறை
கூச0. மைந்தனீ யானாலும் வந்தகனிவாய் முத்தந்
தந்தனையேற் செவ்விளநீர் தானளிப்பேன் - கந்தனெனும்
நாமம்படைத்து நயந்தெனைக் கூடாத கன்றால்
எம்பெருமா னந்துணுக கேலாதே - சேமத்
தணிகைத் தலமமர்ந்தாய் தண்மே னிலையா
டணிகைத் தலமகல்வ தாமோ - கிணியமுலைக்
காம்பு சுவைத்தால் கசக்குமோ யாரேனும்
வேம்பு சுவைத்தால் வெறுக்காதே - மேம்படுசீர்
கந்துபரியா சகத்தை நல்கென்றாள் புன்முறுவல்
தந்துபரி யாசகஞ்செய் தன்மையற்போற் - சிந்தை
தளரும் விரகச் சலதிபடி வித்துக்
குளவணயல் வீதி கழிக் கொண்டான் - களப
முலைமாத ரோரெழுவர் மோகிப்ப வென்று
முலவாச் செய் வந்தா னுலா.

ஆஉ பருவம் எ-க்கு கண்ணிகள் - கூ௱சஎ.

தணிகை யுலா - முற்றிற்று.

திருத்தணிகைச் சந்நிதி முறை முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.